T.N.L.A. [illegible]

V.33 no.1 [illegible]

D
[illegible]
[illegible]
163979

வெளியீடு 26-10-1990 Issued 26-10-1990

19 ஜூன் 93
சென்னை-600009.
AL
1102

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, மே 4, 1990 - தொகுதி 32 - எண் 1
Friday, the 4th May, 1990-Volume 32-No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat, Fort St. George
Madras-600 009

விலை ரூ. 3.00] [Price Rs. 3-00

143979

சென்னை 600 00

உள்ளடக்கம்.

4—5—1990


| | பக்கங்கள். |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | iii—v |
| Personnel of the Government of Tamil Nadu. | vi—viii |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள். | ix—x |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி). | xi—xxiv |
| 1. தகவல் கோரல்— | |
| காவல்துறை மானியக் கோரிக்கை தொடர்புடைய ஆய்வுரையில் 101-வது பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு வாசகம் குறித்து. | 1—13 |
| 2. அறிக்கை அளித்தல்— | 6 |
| சட்ட விதிகள் ஆய்வுக் குழு. | |
| 3. சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)— | 8 |
| மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன் வடிவு, 1990. | |
| 4. மானியக் கோரிக்கைகள், 1990-91-விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி. | 13—128 |
| (அ) கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வைத் துறை—தொடர்ச்சி. | |
| (ஆ) கோரிக்கை எண் 1—காவல் துறை—தொடர்ச்சி. | |

(இ) கோரிக்கை எண் 16—தீயணைப்புப் பணிகள்—தொடர்ச்சி.

| | | |
|---|---|---|
| திரு. எஸ். காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி. | | 13—18 |
| திரு. ஆஸ்கார் சி. நிக்லி | .. | 19—23 |
| திரு. பி.எச். பாண்டியன் | .. | 23—30 |
| திரு. எம். அப்துல் லத்தீப் | .. | 30—45 |
| திரு. உ. ரா. வரதராசன் | .. | 45—61 |
| திரு. குமரி அனந்தன் | .. | 61—82 |
| மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி | | 33—126 |

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள். 129



## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

ஆளுநர் திரு. பி. சி. அலெக்சாண்டர்.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

| | |
|---|---|
| 1. முதலமைச்சர் .. | மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், காவல், நிதி, திட்டம், தொழில்கள், வணிக வரிகள், பிற்பட்டோர் நலம், இலஞ்ச ஒழிப்பு, மதுவிலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் உள்பட) மற்றும் ஆயத்துறை. |
| 2. கல்வி அமைச்சர் | மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : கல்வி (தொழில் நுட்பக் கல்வி உள்பட) ஆட்சி மொழி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், தமிழ் பண்பாடு, விளையாட்டு மற்றும் இளைஞர் அணி, முன்னாள் இராணுவத்தினர் மற்றும் தொல்பொருள் இயல். |
| 3. சட்ட அமைச்சர் .. | மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள்—அளவைகள் பற்றிச் சட்டம் இயற்றுதல், கம்பெனிகள் பதிவு, கடன் நிவாரணம் (கடன் வழங்கல், சீட்டு, நிதி இவைபற்றி சட்டம் இயற்றல் உள்பட) மற்றும் வக்ஃப். |
| 4. வருவாய்த்துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளர்கள், மாவட்டத் துணை ஆட்சியாளர், ஆவணப் பதிவுத் துறை மற்றும் முத்திரைச் சட்டம். |

| | |
|---|---|
| 5. போக்குவரத்துத் துறை அமைச்சர். | **மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** போக்குவரத்து, அரசுடமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள் மற்றும் வீட்டு வசதி. |
| 6. அறநிலையத் துறை அமைச்சர். | **மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி :** அறநிலையத் துறை, சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், வனங்கள் மற்றும் சின்கோனா. |
| 7. ஊரக வளர்ச்சி—உள்ளாட்சித்துறை அமைச்சர். | **மாண்புமிகு திரு. கோ. சி. மணி :** நகராட்சிகள், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், மற்றும் கிராமப்புறக் கடன் சம்பந்தப்பட்டவை. |
| 8. உணவு—கூட்டுறவுத் துறை அமைச்சர். | **மாண்புமிகு திரு. பொன். முத்து ராமலிங்கம் :** உணவு, விலைவாசிக்கட்டுப்பாடு மற்றும் நுகர் பொருள் வழங்கல் கூட்டுறவு மற்றும் புள்ளி விவரங்கள். |
| 9. வேளாண்மைத்துறை அமைச்சர். | **மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் :** வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மைப் பொறியியல் மற்றும் வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (ஒன்றிய, மாவட்ட, பிரதம, கூட்டிணைப்பு அமைப்புகள் உள்பட) மற்றும் உணவு உற்பத்தி. |
| 10. பொதுப்பணித்துறை அமைச்சர். | **மாண்புமிகு திரு. துரைமுருகன் :** பொதுப்பணிகள், சிறு பாசனம் (சிறப்பு சிறு பாசனம் உள்பட), திட்டப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் மின்சாரம். |
| 11. சமூக நலம்-ஊரகத் தொழிற்துறை அமைச்சர். | **மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் :** சமூக நலம் (குழந்தைகள், மகளிர் நலம் உள்பட பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், சீர்திருத்த நிர்வாகம், சத்துணவு, ஊரகத் தொழில்கள் (கிராம, குடிசை சிறு தொழில்கள் உள்பட) கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம். |



| | |
|---|---|
| 12. ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர். | **மாண்புமிகு டாக்டர் எ. இராம கிருஷ்ணன் :** ஆதி திராவிடர் நலம், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் பிணைத் தொழிலாளர். |
| 13. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர். | **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :** மக்கள் நல்வாழ்வு மருந்துகள், குடிநீர் வாரியம் மற்றும் சுற்றுச் சூழல் மாசு கட்டுப்படுத்தல். |
| 14. செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர். | **மாண்புமிகு திரு. கே. என். நேரு :** செய்திமற்றும் விளம்பரம், திரைப் படத் தொழில் நுட்பவியல், திரைப்படச் சட்டம், தொழிலாளர், மக்கள் தொகை, கணக்குக் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, வெளிநாடுவாழ் இந்தியர்கள் அகதிகள் மற்றும் வெளியேற்றப் பட்டவர்கள், இரும்பு எஃகு கட்டுப்பாடு, அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, எழுதுப்பொருள் அச்சுத் துறை, அரசு அச்சகம் மற்றும் பால்வளம். |
| 15. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர். | **மாண்புமிகு டாக்டர் க. சந்திர சேகரன் :** கால்நடை பராமரிப்பு, மீனளம் மற்றும் மீனள வளர்ச்சிக் கழகம். |
| 16. கைத்தறி-நகர்ப்புற மேம்பாட்டுத் துறை அமைச்சர். | **மாண்புமிகு திரு. ச. தங்கவேலு :** கைத்தறி, நெசவாலைகள், நகர அமைப்பு, நகர்ப்புற மேம்பாடு, இடவசதிக் கட்டுப்பாடு மற்றும் குடிசை மாற்று வாரியம். |
| முதலமைச்சரின் ஆட்சி மன்றச் செயலர். | **திரு. எல். கணேசன்.** |

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

## GOVERNOR OF TAMIL NADU: THIRU P.C. ALEXANDER

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

| | |
|---|---|
| 1. Chief Minister .. .. | The Hon. Dr. M. KARUNANIDHI: Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Police, Finance, Planning, Industries, Commercial Taxes, Backward Classes, Prevention of Corruption, Prohibition including grant of Liquor Permits and Excise. |
| 2. Minister for Education | The Hon. Dr. K. ANBAZHAGAN: Education including Technical Education, Official Language, Legislature, Elections, Electronics, Science and Technology, Tamil Culture, Sports and Youth Service Corps, Ex-Servicemen and Archaeology. |
| 3. Minister for Law .. | The Hon. Thiru S. J. SADIQ-PASHA: Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money lending and Legislation on Chits and Wakf. |
| 4. Minister for Revenue .. | The Hon. Thiru Nanjil K. MANOHARAN: Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration and Stamp Act. |
| 5. Minister for Transport .. | The Hon. Thiru M. KANNAPPAN: Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports and Housing. |



| | |
|---|---|
| 6. Minister for Hindu Religious and Charitable Endowments. | The Hon. Thiru K. P. KANDASAMY: Hindu Religious and Charitable Endowments, Tourism, Tourism Development Corporation, Forest and Cinchona. |
| 7. Minister for Rural Development and Local Administration. | The Hon, Thiru KO. SI. MANI: Municipal Administration, Rural Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness. |
| 8. Minister for Food and Co-operation. | The Hon. Thiru Pon. MUTHURAMALINGAM: Food, Price Control and Civil Supplies, Co-operation and Statistics. |
| 9. Minister for Agriculture .. | The Hon. Thiru VEERAPANDI S. ARUMUGAM: Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering and Service Co-operative Societies at the Block, District and Apex Level including the Federation and Food Production. |
| 10. Minister for Public Works .. | The Hon. Thiru DURAIMURUGAN: Public Works, Minor Irrigation including Special Minor Irrigation, Programme Works, Highways and Electricity. |
| 11. Minister for Social Welfare and Rural Industries. | The Hon. Thirumathi. SUBBULAKSHMI JAGADISAN: Social Welfare including Children and Women's Welfare, Beggers Home, Orphanages, Correctional Administration, Nutritious Noon Meals, Rural Industries including Village, Cottage and Small Industries, Khadi Board Bhoodan and Gramadan, |

| | |
|---|---|
| 12. Minister for Adi-Dravidar Welfare. | **The Hon. Dr. E. RAMAKRISHNAN :** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour. |
| 13. Minister for Public Health | **The Hon. Dr. K. PONMUDI alias DEIVASIGAMANI :** Public Health, Medicines, Water Board and Environmental Pollution Control. |
| 14. Minister for Information and Labour. | **The Hon. Thiru K. N. NEHRU** Information and Publicity Film Technology, Cinematograph Act, Labour, Census Employment and Training, Indian Overseas, Refugees and Evacuees, Iron and Steel Control, Newsprint control, Stationery and Printing and Government Press and Milk. |
| 15. Minister for Animal Husbandry. | **The Hon. Dr. K. CHANDRASEKARAN ;** Animal Husbandry, Fisheries and Fisheries Development Corporation. |
| 16. Minister for Handlooms and Urban Development. | **The Hon. Thiru S. THANGAVELU :** Handlooms, Textiles, Town Planning, Urban Development Accommodation Control and Slum Clearance Board. |
| Parliamentary Secretary to Chief Minister. | Thiru. L. GANESAN |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

### பேரவைத் தலைவர்.

மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க் குடிமகன்.

### பேரவைத் துணைத் தலைவர்.

திரு. வீ. பெ. துரைசாமி.

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல் :

திரு. அ. லெ. சுப்பிரமணியன்.

திரு. பெ. சு. திருவேங்கடம்.

திரு. இரா. மோகன்.

திரு. கே. கே. எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்

திரு. குமரி அனந்தன்.

திரு. உ. ரா. வரதராசன்.

### செயலாளர்.

திரு. சி. கு. இராமசாமி,

### பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

(அகர வரிசைப்படி).

| | |
|---|---|
| டில்லிதுரை, திரு. த.ப., பி.எஸ்சி., பி.எல். | இணைச் செயலாளர். |
| ஜானகிராமன். திரு. செ.சு., பி.ஏ., பி.எல். | இணைச் செயலாளர். |

| | |
|---|---|
| இராசமாணிக்கம், திரு. பெ., பி.ஏ., பி.எல். | துணைச் செயலாளர் (பதிப்பாளர்). |
| இராமச்சந்திரன், திரு. ஆர்.கே., பி.ஏ., பி.எல். | துணைச் செயலாளர். |
| சுவாமிநாதன், திரு. ச., எம்.ஏ., .. | துணைச் செயலாளர். (பதிப்பாளர்). |
| ரெஜினால்ட் ஜான், திரு. ஜே., பி.ஏ., .. | துணைச் செயலாளர். |
| கோவிந்தராஜன், திரு. ஆர். .. | குழு அலுவலர். |
| அப்துல் சத்தார், திரு. ஜெ., பி.ஏ., பி.எல்., | சார்புச் செயலாளர். |
| இராசாராமன், திரு. பி. பி.ஏ., பி.எல்., .. | சார்புச் செயலாளர். |
| கேசவராம், திரு. சு., பி.ஏ., .. | சார்புச் செயலாளர். |
| சந்திரசேகரன், திரு. ஆர்., பி.ஏ., | சார்புச் செயலாளர். |
| சாலமன் ஜெயபால், திரு. டி., பி.எஸ்சி., பி.எல்., .. | சார்புச் செயலாளர். |
| சுந்தரராஜன், திரு. கா. கெ., பி.ஏ., பி.ஜி.எல்., | சார்புச் செயலாளர். |
| முனீர் உன்னிசா. திருமதி, பி.எஸ்சி. | சார்புச் செயலாளர். |
| ராஜேந்திரன், திரு. பி.சி., பி.ஏ., | சார்புச் செயலாளர் |
| ஜான், திரு. வ.சா., பி.ஏ., .. | சார்புச் செயலாளர். |
| ஜேக்கப் ஆர்தர், திரு. தா., பி.ஏ., பி.எல்., .. | சார்புச் செயலாளர். |
| ஜோசப், திரு. மா. கு., பி.ஏ. .. | சார்புச் செயலாளர். |
| வெங்கட்டராமன், திரு. கோ. .. | பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர். |
| அரங்கநாதன், திரு. சு., பி.ஏ., பி.எல், .. | தலைமை நிருபர் (குழுக்கள்) |
| ஜெயதேவ், திரு. பி.சி. .. .. | தலைமை நிருபர். |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

### உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| **'அ'** | |
| 1. அங்கமுத்து, திரு. கே. .. | உளுந்தூர்பேட்டை (செ.வ.). |
| 2. அசேன், திரு. ஜெ. .. | இராணிப்பேட்டை. |
| 3. அண்ணாதுரை, திரு. கா. .. | பட்டுக்கோட்டை. |
| 4. அண்ணாதுரை, டாக்டர், கே. | வரகூர் (செ.வ.) |
| 5. அண்ணாநம்பி, திரு. ஆர். | அவிநாசி. (செ.வ.) |
| 6. அண்ணாமலை, திரு. எம். | அரூர் (செ.வ.) |
| 7. அதியமான், திரு. ஆ. .. | சேடப்பட்டி. |
| 8. அப்துல்சமத், திரு. பா. .. | வாணியம்பாடி. |
| 9. அப்துல் லத்தீப், திரு. எம். .. | சேப்பாக்கம் |
| 10. அர்ஜுனன், திரு. கே. .. | தாரமங்கலம். |
| 11. அழகர்சாமி, திரு. சோ. .. | கோவில்பட்டி. |
| 12. அழகுவேலு, திரு. ச. .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 13. அறிவழகன், திரு. ஆ. .. | கிருஷ்ணராயபுரம். (செ.வ.). |
| 14. அன்பழகன், டாக்டர் க. .. | அண்ணா நகர். |
| 15. அன்பழகன், திரு. வ. .. | செய்யாறு. |
| 16. அன்பில் பொய்யாமொழி, திரு. | திருச்சிராப்பள்ளி-2. |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| **'ஆ'** | |
| 17. ஆசையன், திரு. பெ. .. | ஆண்டிபட்டி. |
| 18. ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம். |
| 19. ஆறுமுகம், திரு. த. .. | அரியலூர். |
| 20. ஆறுமுகம், திரு. வீரபாண்டி சோ. | சேலம்-2. |
| **'இ'** | |
| 21. இரகுமான்கான், திரு. அ. .. | பூங்கா நகர். |
| 22. இராசமாணிக்கம், திரு. இரெ. | குத்தாலம். |
| 23. இராசமாணிக்கம், திரு. க. வெ. வீ. .. | மேலூர் |
| 24. இராசன், திரு. வி. பி. .. | ராஜபாளையம் (செ.வ.) |
| 25. இராசு, திரு. வி. கே. .. | அரக்கோணம் (செ.வ.) |
| 26. இராசு, திரு. வெ. .. | குளத்தூர் (செ.வ.) |
| 27. இராசேந்திரன், திரு. அ. .. | போளூர். |
| 28. இராதா, திரு. எஸ். ஆர். | மதுரை கிழக்கு. |
| 29. இராதாகிருஷ்ணன், திரு. டி. | சோழவந்தான். |
| 30. இராமகிருஷ்ணன், டாக்டர் எ. | அச்சரபாக்கம் (செ.வ.) |
| 31. இராமகிருஷ்ணன், திரு. நா. | கம்பம் |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| **'இ'—தொடர்ச்சி.** | |
| 32. இராமச்சந்திரன், திரு. எம். | திருவோணம். |
| 33. இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். .. | விளாத்திகுளம். |
| 34. இராமச்சந்திரன், திரு. ந. | செஞ்சி. |
| 35. இராமசாமி, திரு. ஏ. எம். | ஆத்தூர். |
| 36. இராமசாமி, திரு. கே. வி. .. | கரூர். |
| 37. இராமசாமி, திரு. வி. .. | திருச்செங்கோடு. |
| 38. இராமசாமி, திரு. கே. ஆர். | திருவாடானை. |
| 39. இராமநாதன், திரு. மு. .. | கோவை மேற்கு. |
| 40. இராமலிங்கம், திரு. செ. | திருவிடைமருதூர். |
| 41. இராஜேந்திரன், திரு. கே. ஆர். | பர்கூர். |
| 42. இராஜேந்திரன், திரு. பி. வி. | வேதாரண்யம். |
| 43. இளம்வழுதி, திரு. .. | எழும்பூர் (செ.வ.) |
| **"ஈ"** | |
| 44. ஈஸ்வரன், திரு. ஆர். .. | வாசுதேவநல்லூர் (செ.வ.) |
| **"உ"** | |
| 45. உகம்சந்த், திரு. எஸ். டி. | மதுராந்தகம். |
| 46. உதயசூரியன், திரு. தா. .. | சின்னசேலம். |
| 47. உபயதுல்லா, திரு. எஸ். என். எம். | தஞ்சாவூர். |
| **"ஏ"** | |
| 48. ஏகாம்பர ரெட்டி, திரு. ஏ. | பள்ளிபட்டு. |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| ''க'' | |
| 49. கண்ணப்பன், திரு. மு. ... | பல்லயம். |
| 50. கண்ணன், திரு. எஸ். பி. .. | அணைக்கட்டு. |
| 51. கணபதி, திரு. என். .. | மயிலாப்பூர். |
| 52. கணேசமூர்த்தி, திரு. என். | குறிஞ்சிப்பாடி. |
| 53. கணேசமூர்த்தி, திரு. ஏ. .. | மொடக்குறிச்சி. |
| 54. கணேசன், திரு. எல். .. | ஒரத்தநாடு. |
| 55. கணேசன், திரு. க. சொ. .. | ஜெயங்கொண்டம். |
| 56. கணேசன், திரு. சா. .. | தியாகராய நகர். |
| 57. கணேசன், திரு. வே. .. | மங்களூர் (செ.வ.). |
| 58. கந்தசாமி, திரு. கே. .. | கிணத்துக்கடவு. |
| 59. கந்தசாமி, திரு. கே. பி. | திருச்செந்தூர். |
| 60. கரீம், திரு. எம். கே. .. | கடலூர். |
| 61. கருணாநிதி, டாக்டர். மு. | துறைமுகம். |
| 62. கருப்பசாமி, திரு. எஸ். எஸ். | சாத்தூர். |
| 63. கருப்பையா மூப்பனார், திரு. ஜி. | பாபநாசம். |
| 64. கண்ணையன், திரு. க. .. | [illegible] |
| 65. கஜபதி, திரு. டி. ஆர். .. | ஆற்காடு. |
| 66. காஞ்சனா, டாக்டர் க. .. | கிருஷ்ணகிரி. |
| 67. காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி, திரு. எஸ். | முதுகுளத்தூர். |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 'க'—தொடர்ச்சி | |
| 68. காளியப்பன், திரு. பி. .. | ஒட்டன்சத்திரம். |
| 69. கிருஷ்ணமூர்த்தி, டாக்டர். து. | சிதம்பரம். |
| 70. கிருஷ்ணன், திரு. சி. .. | ஓமலூர். |
| 71. குணசேகரன், திரு. எஸ். | தலைவாசல் (செ.வ.) |
| 72. குமரி அனந்தன், திரு. .. | சாத்தான்குளம். |
| 73. குருநாதன், திரு. சு. .. | பாளையங்கோட்டை. |
| 74. குருமூர்த்தி, ஜி. ஜி. .. | பவானி |
| 75. கோதண்டம், திரு. ஏ. .. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 76. கோபாலகிருஷ்ணன், திரு. வெ. | மேட்டுப்பாளையம். |
| 77. கோவிந்தசாமி, திரு. சி. .. | திருப்பூர். |
| 78. கோவிந்தசாமி, திரு. வி. சி. .. | காவேரிப்பட்டினம் |
| 79. கோவிந்தராஜன், திரு. சி. | நெல்லிக்குப்பம். |
| 80. கோவிந்தன், திரு. வெ. .. | பேரணாம்பட்டு (செ.வ.). |
| ''ச'' | |
| 81. சண்முகம், திரு. சி. .. | ஆலந்தூர். |
| 82. சந்திரசேகர், திரு. வி. பி. .. | பொள்ளாச்சி. |
| 83. சந்திரசேகரன், டாக்டர் க. | ஆலங்குடி. |
| 84. சம்சுதீன் என்கிற கதிரவன், திரு. .. | கடையநல்லூர். |
| 85. சம்பத், திரு. ஏ. ஜி. .. | முகையூர். |
| 86. சற்குணம், திருமதி எஸ். பி. | இராதாகிருஷ்ணன் நகர். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |

'ச'—தொடர்ச்சி.

| | |
|---|---|
| 87. சாதிக்பாட்சா, திரு. எஸ்.ஜே. | உடுமலைப்பேட்டை. |
| 88. சாந்தகுமாரி, டாக்டர் த. | தாராபுரம்(செ.வ.) |
| 89. சாமிநாதன், திரு. இரா. .. | திருமங்கலம். |
| 90. சிங்காரம், திரு. ஆர். .. | பேராவூரணி. |
| 91. சிவசுப்பிரமணியன், திரு. சா. | ஆண்டிமடம். |
| 92. சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். | பனைமரத்துப்பட்டி. |
| 93. சின்னக்குழந்தை, திரு. மு... | பெரணமல்லூர். |
| 94. சிவலோகம், திரு. எஸ். | புவனகிரி. |
| 95. சின்னசாமி, திரு. கே. .. | சேந்தமங்கலம். (ஆ.வா.) |
| 96. சின்னசாமி, திரு. ரா. .. | தர்மபுரி. |
| 97. சின்னசாமி, திரு. வி.கே. .. | பவானிசாகர். |
| 98. சீரங்கன், திரு. எம். .. | மேட்டூர். |
| 99. சீனிவாசன், திரு. பெ. .. | சிவகாசி. |
| 100. சுந்தர், திரு. கே. .. | உத்திரமேரூர். |
| 101. சுந்தரதாஸ், திரு. மா. .. | விளவன்கோடு. |
| 102. சுந்தரம், திரு. க. .. | பொன்னேரி(செ.வ.) |
| 103. சுந்தரம், திரு. கே. ஆர். | குடியாத்தம். |
| 104. சுந்தரம், திரு. ப. .. | திருப்பத்தூர் |
| 105. சுந்தரராஜ், டாக்டர் எஸ். | பரமக்குடி(செ.வ.) |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |

'ச'—தொடர்ச்சி

| | |
|---|---|
| 106. சுப்பிரமணிய பிள்ளை, திரு. கே. | கன்னியாகுமரி. |
| 107. சுப்பிரமணியம், திரு. தூ.க. | சத்தியமங்கலம். |
| 108. சுப்பிரமணியன், திரு. அ.லெ. .. | திருநெல்வேலி. |
| 109. சுப்பிரமணியன், திரு. வே. நா. | பெருந்துறை. |
| 110. சுப்பு, திரு. ஏ. .. | ராசிபுரம். |
| 111. சுப்புலட்சுமி செகதீசன் திருமதி. .. | ஈரோடு. |
| 112. சுப்பையா, திரு. ஆலவயல். .. | திருமயம். |
| 113. செங்குட்டுவன், திரு. ஏ... | மயிலாடுதுறை. |
| 114. செங்கை சிவம், திரு. .. | பெரம்பூர்(செ.வ.) |
| 115. செங்கோட்டையன், திரு. கே.ஏ. | கோபிச்செட்டிபாளையம் |
| 116. சேட்டு, திரு. எம். .. | செங்கம்(செ.வ.) |
| 117. சொக்கர், திரு. ரா. .. | விருதுநகர். |
| 118. சௌந்திரபாண்டியன், திரு. ந. .. | சமயநல்லூர்(செ.வ.) |

"ட"

| | |
|---|---|
| 119. டேனியல்ராஜ், திரு. எஸ். | ஸ்ரீவைகுண்டம். |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| **"த"** | |
| 120. தங்கபாண்டியன், திரு. வெ. | அருப்புக்கோட்டை. |
| 121. தங்கம், திரு. அ. .. | ஸ்ரீவில்லிபுத்தூர். |
| 122. தங்கராஜன், திரு. எஸ். ஏ. .. | திண்டுக்கல். |
| 123. தங்கராஜு, திரு. ஏ. .. | காட்டுமன்னார்கோயில் (செ.வ.). |
| 124. தங்கவேல், திரு. எம். .. | முசிறி. |
| 125. தங்கவேல், திரு. என். .. | குன்னூர் (செ.வ.) |
| 126. தங்கவேலு, திரு. ச. .. | சங்கரநாயனார்கோவில் (செ.வ.). |
| 127. தம்புசாமி, திரு. வி. .. | திருவாரூர்(செ.வ.) |
| 128. தமிழ்க்குடிமகன், முனைவர், மு. .. | இளையான்குடி. |
| 129. தமிழ்மணி, திரு. வீ. .. | செங்கல்பட்டு. |
| 130. தயாளன், திரு. ஏ.சி. .. | ஆரணி. |
| 131. தனபாலன், திரு. கே. ஆர். ஜி. .. | சேலம்-1. |
| 132. தனராஜ், டாக்டர் வி. .. | வந்தவாசி (செ.வ.) |
| 133. திருநாவுக்கரசு, திரு. எஸ். .. | அறந்தாங்கி. |
| 134. திருமூர்த்தி, டாக்டர், து. .. | திருப்போரூர்(செ.வ.) |
| 135. திருவேங்கடம், திரு. பெ. சு. .. | கலசப்பாக்கம். |
| 136. துரை சந்திரசேகரன், திரு. .. | திருவையாறு. |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| **'த'—தொடர்ச்சி.** | |
| 137. துரைசாமி, திரு. வி.பெ. .. | நாமக்கல் (செ.வ.) |
| 138. துரைபாண்டியன், டாக்டர் பெ. .. | மானாமதுரை (செ.வ.) |
| 139. துரைமுருகன், திரு. .. | காட்பாடி. |
| 140. துரை ராமசாமி, திரு. .. | வெள்ளக்கோவில். |
| 141. தென்னரசு, திரு. எஸ். எஸ். .. | திருப்பத்தூர். |
| 142. தேவராஜ், திரு. வி.எம். .. | வேலூர். |
| **"ந"** | |
| 143. நஞ்சப்பன், திரு. ந. .. | பெண்ணாகரம். |
| 144. நடராசன், திரு. ஆ. .. | பேரூர். |
| 145. நடராசன், திரு. பொ. .. | திருத்தணி. |
| 146. நடேசன், திரு. எகால் மு. | ரிஷிவந்தியம். |
| 147. நடேசன், திரு. ஆர். .. | திருவட்டாறு. |
| 148. நந்தகோபாலகிருட்டிணன், டாக்டர். கோ. | பண்ருட்டி. |
| 149. நாராயணன், திரு. ராம. .. | காரைக்குடி. |
| 150. நூர்முகமது, திரு. செ. .. | பத்மநாபபுரம். |
| 151. நேரு, திரு. கே. என். .. | லால்குடி. |
| **"ப"** | |
| 152. பஞ்சாட்சரம், திரு. ஆர். | மேல்மலையனூர் |
| 153. பழனிச்சாமி, திரு. டி.கே. | திருவொற்றியூர். |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயரும். |
|---|---|---|
| (1) | | (2) |
| | 'ப'—தொடர்ச்சி | |
| 154. பழனிச்சாமி, திரு. ஜி. | .. | திருத்துறைப்பூண்டி (செ.வ.). |
| 155. பழனிசுவாமி, திரு. க. | .. | எடப்பாடி. |
| 156. பழனிவேல், திரு. என். | .. | பழனி (செ.வ.). |
| 157. பன்னீர்செல்வம், டாக்டர் மா. | .. | சீர்காழி (செ.வ.) |
| 158. பாண்டியன், திரு. பி.எச். | .. | சேரன்மாதேவி. |
| 159. பாப்பா உமாநாத், திருமதி | .. | திருவரம்பூர். |
| 160. பாப்பாசுந்தரம், திரு. அ. | .. | குளித்தலை. |
| 161. பால்ராஜ், திரு. சோ. | .. | மதுரை - மத்திய |
| 162. பாலசுப்பிரமணியன், திரு. அ.வே. | .. | திருநாவலூர். |
| 163. பாலசுப்பிரமணியம், திரு. எஸ். ஆர். | .. | பொங்கலூர். |
| 164. பாலையா, திரு. ஆ. | .. | கொளச்சல். |
| 165. பிச்சாண்டி, திரு. கே. | .. | திருவண்ணாமலை. |
| 166. பிச்சைமுத்து, திரு. ரெ. | .. | பெரம்பலூர்(செ.வ.) |
| 167. பீட்டர் ஆல்போன்ஸ், திரு. சா. | .. | தென்காசி |
| 168. புகழேந்தி, திரு. இ. | .. | கடலூர். |
| 169. பூவராகன், திரு. கோ. | .. | விருத்தாசலம். |
| 170. பெரியசாமி, திரு. என். | .. | தூத்துக்குடி. |
| 171. பெரியசாமி, திரு. ஐ. | .. | ஆத்தூர். |
| 172. பெரியசாமி, திரு. வே. | .. | அந்தியூர் (செ.வ.) |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| (1) | | (2) |
| | 'ப'—தொடர்ச்சி. | |
| 173. பெரியண்ணன், திரு. அ. | .. | புதுக்கோட்டை. |
| 174. பெருமாள், திரு. செ. | .. | ஏற்காடு (ஆ. வா.) |
| 175. பொன்முடி, திரு. டி. | .. | தண்டராம்பட்டு. |
| 176. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி, டாக்டர் க. | .. | விழுப்புரம். |
| 177. பொன். முத்துராமலிங்கம், திரு. | | மதுரை - மேற்கு. |
| 178. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். | .. | நிலக்கோட்டை (செ.வ.) |
| 179. பொன்னுசாமி, பேராசிரியர், க. | .. | மருங்காபுரி. |
| 180. பொன்னுபிள்ளை, திரு. ஜி. | .. | தேனி. |
| | ''ம'' | |
| 181. மகேந்திரன், திரு. ஆர். | .. | நாட்ராம்பள்ளி. |
| 182. மணி, திரு. ஆச்சியூர் எம். | .. | நாங்குநேரி. |
| 183. மணி, திரு. கே. ஏ. | .. | கபிலர்மலை. |
| 184. மணி, திரு. கோ.சி. | .. | கும்பகோணம். |
| 185. மணிமாறன், திரு. மா. | .. | நன்னிலம்,(செ.வ.) |
| 186. மதிவாணன், திரு. இரா. | .. | ராயபுரம். |
| 187. மலர்மன்னன், திரு. அ. | .. | திருச்சிராப்பள்ளி-1. |
| 188. மனோகரன், திரு. நாஞ்சில் கி. | .. | திருவல்லிக்கேணி. |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயரும். (2) |
|---|---|---|
| | **'ப'—தொடர்ச்சி** | |
| 154. | பழனிச்சாமி, திரு. ஜி. .. | திருத்துறைப்பூண்டி (செ.வ.). |
| 155. | பழனிசுவாமி, திரு. க. .. | எடப்பாடி. |
| 156. | பழனிவேல், திரு. என். .. | பழனி (செ.வ.). |
| 157. | பன்னீர்செல்வம், டாக்டர் மா. .. | சீர்காழி (செ.வ.) |
| 158. | பாண்டியன், திரு. பி.எச். .. | சேரன்மாதேவி. |
| 159. | பாப்பா உமாநாத், திருமதி .. | திருவரம்பூர். |
| 160. | பாப்பாசுந்தரம், திரு. அ. .. | குளித்தலை. |
| 161. | பால்ராஜ், திரு. சோ. .. | மதுரை - மத்திய |
| 162. | பாலசுப்பிரமணியன், திரு. அ.வே. .. | திருநாவலூர். |
| 163. | பாலசுப்பிரமணியம், திரு. எஸ். ஆர். .. | பொங்கலூர். |
| 164. | பாலையா, திரு. ஆ. .. | கொளச்சல். |
| 165. | பிச்சாண்டி, திரு. கே. .. | திருவண்ணாமலை. |
| 166. | பிச்சைமுத்து, திரு. ரெ. .. | பெரம்பலூர் (செ.வ.) |
| 167. | பீட்டர் ஆல்போன்ஸ், திரு. சா. .. | தென்காசி |
| 168. | புகழேந்தி, திரு. இ. .. | கடலூர். |
| 169. | பூவராகன், திரு. கோ. .. | விருத்தாசலம். |
| 170. | பெரியசாமி, திரு. என். .. | தூத்துக்குடி. |
| 171. | பெரியசாமி, திரு. ஐ. .. | ஆத்தூர். |
| 172. | பெரியசாமி, திரு. வே. .. | அந்தியூர் (செ.வ.) |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| | **'ப'—தொடர்ச்சி.** | |
| 173. | பெரியண்ணன், திரு. அ. .. | புதுக்கோட்டை. |
| 174. | பெருமாள், திரு. செ. .. | ஏற்காடு (ஆ. வா.) |
| 175. | பொன்முடி, திரு. டி. .. | தண்டராம்பட்டு. |
| 176. | பொன்முடி என்கிற தெய்வசிகாமணி, டாக்டர் க. .. | விழுப்புரம். |
| 177. | பொன். முத்துராமலிங்கம், திரு. | மதுரை - மேற்கு. |
| 178. | பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். .. | நிலக்கோட்டை (செ.வ.) |
| 179. | பொன்னுசாமி, பேராசிரியர், க. .. | மருங்காபுரி. |
| 180. | பொன்னுபிள்ளை, திரு. ஜி. .. | தேனி. |
| | **"ம"** | |
| 181. | மகேந்திரன், திரு. ஆர். .. | நாட்ராம்பள்ளி. |
| 182. | மணி, திரு. ஆச்சியூர் எம். .. | நாங்குநேரி. |
| 183. | மணி, திரு. கே. ஏ. .. | கபிலர்மலை. |
| 184. | மணி, திரு. கோ.சி. .. | கும்பகோணம். |
| 185. | மணிமாறன், திரு. மா. .. | நன்னிலம், (செ.வ.) |
| 186. | மதிவாணன், திரு. இரா. .. | ராயபுரம். |
| 187. | மலர்மன்னன், திரு. அ. .. | திருச்சிராப்பள்ளி-1. |
| 188. | மனோகரன், திரு. நாஞ்சில் கி. .. | திருவல்லிக்கேணி. |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 'ம'—தொடர்ச்சி. | |
| 189. மனோகரன், திரு. பா. | சிவகங்கை. |
| 190. மாசிலாமணி, டாக்டர் சி. ரா. | திண்டிவனம். |
| 191. மாசிலாமணி, திரு. தி. ரா. | பூந்தமல்லி. |
| 192. மாதப்பன், திரு. கொ. | பாலக்கோடு. |
| 193. மாரப்பன், திரு. பி. .. | காங்கேயம். |
| 194. மாரிமுத்து, திரு. அ. .. | வானூர் (செ.வ.) |
| 195. முகமது சித்திக், திரு. எம். | பூம்புகார். |
| 196. முத்துசாமி, திரு. ப. .. | வேடசந்தூர். |
| 197. முத்தையன், திரு. எம். | சங்கராபுரம். |
| 198. முத்தையா, திரு. எம். .. | ஒட்டப்பிடாரம் (செ.வ.). |
| 199. முருகேசன், திரு. பொ. .. | காஞ்சிபுரம். |
| 200. முல்லைவேந்தன், திரு. வ. | மொரப்பூர். |
| 201. முனிரத்தினம், திரு. ஆ. மு. | சோளிங்கர். |
| 202. முனிரத்தினம், திரு. எஸ். ஆர். .. | திருவள்ளூர். |
| 203. மூக்கன், திரு. ஆர். .. | உப்பிலியாபுரம் (ஆ.வா.). |
| 204. மூக்கையா, திரு. எல். .. | பெரியகுளம். |
| 205. மோகன், திரு. இரா. .. | சிங்காநல்லூர். |
| 206. மோசஸ், டாக்டர் எம். .. | நாகர்கோவில். |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| "ய" | |
| 207. யசோதா செல்லப்பா, திருமதி. | வலங்கைமான் (செ.வ.) |
| "ர" | |
| 208. ரமணி, திரு. கே. .. | கோவை (கிழக்கு). |
| 209. ரமணிநல்லதம்பி, திருமதி. .. | ராதாபுரம். |
| 210. ரவி அருணன், திரு. கே. .. | அம்பாசமுத்திரம். |
| 211. ராமச்சந்திர ரெட்டி, திரு. ந. .. | ஓசூர். |
| 212. ராமச்சந்திரன், திரு. கே. .. | மன்னார்குடி. |
| 213. ராமச்சந்திரன், திரு. சி. .. | திருப்பரங்குன்றம். |
| 214. ராமசாமி, திரு. மெஞ்சனூர் ப. .. | அரவக்குறிச்சி. |
| 215. ராமசுப்பு, திரு. எஸ். எஸ். | ஆலங்குளம். |
| 216. ராஜு திரு. எச். எம். .. | உதகமண்டலம். |
| 217. ராஜேந்திரன், திரு. எம். எஸ். கே. | இராமநாதபுரம். |
| "ல" | |
| 218. லட்சுமி, திருமதி பி. .. | வால்பாறை (செ.வ.) |
| "வ" | |
| 219. வரதராஜன், திரு. ஆர். .. | சங்கரி (செ.வ.) |
| 220. வரதராசன், திரு. உ. ரா. | வில்லிவாக்கம். |
| 221. வல்லரசு, திரு. பி. என். .. | உசிலம்பட்டி. |
| 222. விஜயராகவன், திரு. பொன். .. | கிள்ளியூர். |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| **'வ' தொடர்ச்சி.** | |
| 223. விஜயேந்திரையா, திரு. டி. சி. | தளி. |
| 224. வீராசாமி, திரு. ஆற்காடு நா. | புரசைவாக்கம். |
| 225. வீரையன், திரு. கோ. .. | நாகப்பட்டினம். |
| 226. வெங்கடாசலம், திரு. பெ. | வீரபாண்டி. |
| 227. வெங்கடேஸ்வர தீட்சிதர், திரு. ஒய். | ஸ்ரீரங்கம். |
| 228. வெள்ளிங்கிரி, திரு. யூ.கே. | தொண்டாமுத்தூர். |
| 229. வேணு, திரு. கி. .. | கும்மிடிப்பூண்டி. |
| 230. வைத்தியலிங்கம், திரு. மீ. அ. .. | தாம்பரம். |
| **''ஸ''** | |
| 231. ஸ்டாலின், திரு. மு.க. .. | ஆயிரம்விளக்கு. |
| **''ஜ''** | |
| 232. ஜெயலலிதா, செல்வி ஜெ. | போடிநாயக்கனூர். |
| **''ஹ''** | |
| 233. ஹமீது இப்ராகிம், திரு. அ.மு. | கடலாடி. |
| **''ஸ்ரீ''** | |
| 234. ஸ்ரீதர், திரு. ஆர்.எஸ். .. | சைதாப்பேட்டை. |
| 235. ஆஸ்கார், சி. நிக்லி, திரு. | நியமன உறுப்பினர். |

**பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமைபெற்றவர் :**

| | |
|---|---|
| திரு. கு. அழகிரிசாமி .. | தலைமை வழக்கறிஞர். |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

**சித்திரை 21, பிரமோதூத—திருவள்ளுவர் ஆண்டு 2021—1990 மே 4, வெள்ளிக்கிழமை.**

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில். காலை 9.00 மணியளவில் பேரவை கூடியது.

### மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க் கொளி''.

கொடை, அருள், செங்கோல், தளர்ந்த குடிகளைக் காத்தல் ஆகிய நான்கும் உடைய அரசன், அரசர்க்கெல்லாம் விளக்குப்போன்றவன்.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

### 1. தகவல் கோரல்.

**காவல்துறை மானியக் கோரிக்கை தொடர்புடைய ஆய்வுரையில் 101-வது பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு வாசகம் குறித்து.**

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் சட்டமன்றத்தில் நாங்கள் வெளி நடப்புச் செய்ததற்குப் பின்னால், நீங்கள் எங்களை வெளியேற்றி அதற்குப் பின்னால், ஒரு நாள் எங்களை சட்டமன்ற நடவடிக்கைகளிலிருந்து நீக்கி வைத்தீர்கள். ஒரு பேரவைத் தலைவர் என்ற முறையில் நீங்கள் இடுகிற உத்தரவை நாங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டியவர்கள் என்பதை நாங்கள் மறுக்க வில்லை. ஆனால், ஜனநாயகத்திலே இருக்கிற எங்களுடைய

உரிமைகளை, நாங்கள் விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை. அதனாலே, நீங்கள் எங்களை வெளியேற்றிய நேரத்தில நேற்றைக்கு பத்திரிக்கைகளில் அந்த செய்தி வருகிற நேரத்தில பல்வேறு விதமான செய்திகள் வந்தாலும் கூட, தன்னாட்சி பெற்ற டி.வி. என்று சொல்கிற நிலை வருகிற டி.வி. நிலையத்தார், ஏதோ எதிர்க்கட்சித் தலைவர் வெளியேற்றப்பட்டார் என்ற செய்தியே வரக்கூடாது என்ற அளவில், அ.தி.மு.க.-வைச் சேர்ந்த அத்தனை பேரும் வெளியேற்றப்பட்டார்கள் என்ற செய்தியை—ஏதோ, இந்த அரசை அவர்கள்தான் காப்பாற்றுவது போல, டி.வி. நிலையம் செய்து வெளியிடுவதும், இப்படிப்பட்ட தவறான செய்தியை வெளியிலே பரப்பி, எங்கள் மீது மக்களிடத்திலே ஒரு களங்கத்தை உண்டாக்க வேண்டுமென்ற முயற்சியில், இன்றைக்கு டி.வி.யும், மற்ற நிலைகளும் ஈடுபடுகின்றன. ஆனால், மாண்புமிகு தலைவர் அவர்களே, நாங்கள் உங்களைக் கேட்டுக்கொள்ள விரும்புவது, இன்றைக்கு காவல்துறை மானியத்தில், நாம் விவாதிப்பதற்கு பல முக்கியமான பிரச்சினைகள் இருக்கின்றன. நாங்கள் எடுத்துச் சொல்ல வேண்டிய விவகாரங்கள் நிறைய இருக்கின்றன. ஆனாலும், நேற்றைக்கு நாங்கள் இங்கு குறிப்பிட்டுக் கூறியதைப் போல, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய காவல்துறை ஆய்வுரையில் 101-வது பத்தியில், அவர்கள் குறிப்பிட்டிருக்கிற அந்த விவகாரத்தை எடுத்து விட வேண்டுமென்று, அல்லது மாற்றிவிட வேண்டுமென்று நாங்கள் வற்புறுத்தினோம். ஆனால், என்ன காரணத்திற்காகவோ முதலமைச்சர் அவர்கள் நேற்றைக்கு ஏற்றுக்கொள்ளவில்லை. நான், இன்றைக்கும் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். காவல்துறையிலே உள்ள நிலைகளைப் பரிசீலிப்பதற்கும், நாங்கள் விவாதங்களிலே எங்களுடைய கருத்துக்களைச் சொல்கிற வாய்ப்பை நீங்கள் உருவாக்குகின்ற வகையிலே, ஜனநாயகத்திலே எங்களுக்கு இருக்கிற உரிமையை நீங்கள் வழங்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். 101 ஆவது பத்தியிலே குறிப்பிட்டிருக்கிற ஜான் பாண்டியன் அவர்கள்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒன்றைக் கவனிக்க வேண்டும். இன்று நீங்கள்தான் தொகுப்புரை வழங்கப் போகிறீர்கள், உங்களுடைய கட்சியின் சார்பில், கடைசியாகத் தொகுத்து வழங்கப் போகிற உரிமை உங்களுக்கு முழுமையாக உண்டு. உங்களுக்குத் தேவையான நேரத்தை முழுமையாக எடுத்துக்கொண்டு, இது தொடர்பான செய்தியை நீங்கள் ஆணித்தரமாக எடுத்து வைப்பதற்கு உங்களுக்கு முழு ஜனநாயக உரிமை உண்டு. எனவே, இப்போது இந்தப் பிரச்சினையை இந்த அளவோடு நிறுத்தி, நீங்கள் கடைசியாகத் தொகுப்புரை வழங்கும்போது என்னென்ன



விரும்புகிறீர்களோ அவற்றை ஆணித்தரமாக எடுத்து வைப்பதற்கு வாய்ப்பு உங்களுக்குக் கண்டிப்பாக உண்டு என்பதை உறுதி செய்து, அவையினுடைய முறையான பேச்சாளர்கள் தொடர்ந்து பேசுவதற்கு, நீங்கள் வாய்ப்பளிப்பீர்கள் என்று நம்புகிறேன்.

**திரு. எஸ். ஆர். இராதா :** நீங்கள் சொல்கிற தீர்ப்பை ஏற்றுக்கொள்ளக் கடமைப்பட்டவன். ஆனால், இந்த ஆய்வுரையிலே, இது பதிவாகியிருக்கிறது என்றால், இங்கு என்னதான் விவாதித்தாலும் கூட, இது முதலமைச்சர் அவர்களுடைய கருத்து—அரசாங்கத்தினுடைய கருத்து என்று வந்து விடும். அதனால், நான் இன்றைக்குச் சொல்கிறேன், ஜான் பாண்டியன் மீது போடப்பட்ட வழக்கு அப்படியே இருக்கிறது........

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்பொழுது, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒன்றைக் கவனிக்க வேண்டும். இன்று, ''நேரம் இல்லா நேரம்'' என்பது கிடையாது; நேரடியாக விவாதத்திற்குத்தான் வருகிறோம். வினா நேரமும் இல்லை என்பது உங்களுக்குத் தெரியும். எனவே, அப்படிப்பட்ட நிலையில், நீங்கள் எது பேச விரும்பினாலும், உங்களுடைய தொகுப்புரையில் பேசலாம், உங்களுக்கு முழு உரிமையுண்டு. ஆனால், நீங்கள் இதை எடுத்த எடுப்பிலேயே ஒரு பிரச்சினையாகக் கிளப்பி- இது நேற்றே கிளப்பப்பட்டு, அதற்கு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லி, எல்லோரும் அந்தப் பிரச்சினைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்த பிறகும் — மீண்டும் இப்போது முன்அனுமதியின்றிப் பேசுவதை அனுமதிக்கமுடியாது.

9-05 மணி

**திரு. எஸ். ஆர். இராதா :** எங்களுடைய கோரிக்கையை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏனென்றால், இது ஆய்வுரையிலே பதிவாகிவிட்டது என்று சொன்னால், தமிழ்நாடு அரசாங்கத்தினுடைய முதலமைச்சர், காவல் துறையைக் கையிலே வைத்திருக்கிற முதலமைச்சர் இந்த ஆய்வுரையில் இந்தக் கருத்தை ஏற்றுக் கொண்டார் என்று வந்துவிட்டால், ஆயிரம் விவாதங்கள் நடத்தி, பேசி நாளைக்கு அவர்கள் எடுத்துக்கொள்கிறேன் என்று சொன்னால், விவாதம்தான் நிற்குமே தவிர, கடைசியிலே இந்த 101-வது பிரிவிலே இருக்கிற, பத்தியிலே இருக்கிற கருத்துக்கள் அப்படியே அடங்கிவிடும். எனவே, இதற்காகத் தான் நான் வாதாடுகிறேன். நீதி விசாரணையில்.............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, இல்லை. இது தொடர்பாக நேற்றே பேசி இந்தப் பிரச்சினைக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டிருக்கிறது. எனவே, நீங்கள் அன்புகூர்ந்து அமர்ந்து உங்களுடைய தொகுப்புரையில் உங்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்கலாம். அதற்கு முழு வாய்ப்பும், முழு உரிமையும் உண்டு, ஒத்துழைப்பீர்கள் என்று நம்புகிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒத்துழைப்பதற்குத் தயாராக இருக்கிறேன். நான் ஒத்துழைப்பதற்காகத்தான் இங்கே இருக்கிறேன். வேறு வழியே இல்லை. நான் நிச்சயமாக ஒத்துழைப்பேன். ஆனால் என்னுடைய கருத்து, இந்த 101-வது பத்தியில் இந்த அரசாங்கத்தினுடைய கருத்து, முதலமைச்சருடைய கருத்து என்று வந்துவிட்டால் நாளைக்கு நீதி விசாரணையிலே இருக்கிற வழக்கு, நீதிமன்றத்திலே இருக்கிற வழக்கு இரண்டையும், இங்கே போடுகிற இந்தக் கருத்தைத்தான் ஏற்றுக்கொள்வார்களே தவிர, நீதிமன்றத்திலே நாளைக்கு ஜான் பாண்டியன் வழக்கில், ஜான் பாண்டியன் சொன்னாரோ, இல்லையோ, சொன்னார் என்றுதான் வரும். ஆனால், இதே போல் நீதிவிசாரணை நடக்கிறது. நீதி விசாரணை இன்னும் முடியவில்லை. நீதி விசாரணை வருகின்ற நேரத்தில் இது வந்தால்.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதே செய்திகளை நீங்கள் உங்கள் தொகுப்புரையில் சொல்லலாம். அதற்கு மட்டும்தான் என்னால் அனுமதிக்க முடியும்.

திரு. எஸ். ஆர். இராதா : தயவுசெய்து பேரவைத் தலைவர் அவர்களே, திரும்பத் திரும்ப நான் வற்புறுத்துவதற்குக் காரணம், நீங்கள் சொல்கின்ற அந்தக் கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். நாங்கள் எவ்வளவுதான் பேசினாலும், முதலமைச்சருடைய ஆய்வுரை என்று வந்த நேரத்தில், இந்த ஆய்வுரையிலே வந்து விடுமானால் நிச்சயமாக அதுதான் அரசாங்கக் கருத்து என்று வரும். நாளைக்கு நீதி விசாரணைத் தீர்ப்பு இதையொட்டித்தான் இருக்கும், நீதிமன்ற விசாரணைத் தீர்ப்பு.............

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அந்தக் குறிப்பில் அவர் குறிப்பிடுகின்ற, அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் எந்த வகையிலே இழிவுபடுத்தப் பட்டிருக்கிறார் என்பதை அவர் விளக்க வேண்டும். அவர் ஏதோ நீதி விசாரணையை வைத்துக்கொண்டு, யாருக்காக வாதாடுகிறார் என்று எனக்குப் புரியவில்லை. எம்.எல்.ஏ. வைப் பற்றி அவதூறாகப் பேசியதற்காக வாதாடுகிறாரா? அல்லது பேசப்பட்ட எம்.எல்.ஏ-வுக்காக வாதாடுகிறாரா என்று எனக்குப் புரியவில்லை.





திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு தலைவர் அவர்களே, பேசியவர் ஜான் பாண்டியன் என்பவர், ஒரு சமுதாயத்தினுடைய தலைவர். பேசுகிறவர் என்ன பேசினார் என்பது நமக்குத் தெரியாது. பேசினார் என்பதனாலே அவர் மீது வழக்கு மன்றத்திலே வழக்கு நடந்து கொண்டு இருக்கிறது. அந்த வழக்கிலே என்ன ஆகப் போகிறது முடிவு, தீர்ப்பு என்பது நமக்குத் தெரியாது. ஆனால் அவர் பேசினார் என்பது இந்த சட்டமன்றத்தினுடைய, முதலமைச்சருடைய ஆய்வுரையிலே, காவல் துறையைக் கையிலே வைத்திருக்கிற முதலமைச்சருடைய ஆய்வுரையிலே ஜான் பாண்டியன் பேசினார் என்பது இங்கே பதிவாகிறது. பதிவாகிற அந்த வரலாற்றில் யாரைப் பற்றி வருகிறதென்றால் எங்களுடைய பொதுச் செயலாளர் புரட்சித் தலைவி அவர்களைப் பற்றித் தவறாக இங்கே ஒரு கருத்தை ஏற்படுத்தி, அவர் கவனிக்கவில்லை, அதனாலே கலவரம் வந்தது, அவர் இருந்திருந்தால் அந்தக் கலவரத்தைத் தவிர்த்திருக்கலாம் என்றால்.............

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அந்த நபர் அப்படிப் பேசியது உண்மை. அதைப் போலீசார் தங்களுடைய ஆய்வு அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள், நண்பர் எதிர்க்கட்சித் தலைவர் இங்கே அமர்ந்து விவாதத்திலே ஈடுபடுவாரேயானால், கடைசியாக நான் பேசும் போது, கடந்த காலத்தில் அ.தி.மு.க. ஆட்சியில் எத்தனை ஆய்வு அறிக்கைகளில், எந்தெந்த எம்.எல்.ஏ.-க்கள் பெயர்கள், இப்படியெல்லாம் குறிப்பிடப்பட்டிருக்கின்றன என்பதை நான் எடுத்துக் காட்டத் தயாராக இருக்கிறேன். அதுவரையிலே அவர் பொறுமையைக் கடைப்பிடித்து, இறுதியாக அவரும் பேசி, என்னுடைய பதிலுரையைக் கேட்டால், எத்தனை எம்.எல்.ஏ-க்களுடைய பெயர்கள், எத்தனை ஆய்வு அறிக்கைகளில் கடந்த கால ஆட்சியில் குறிப்பிடப்பட்டு இருக்கின்றன என்பதை என்னால் எடுத்துக்காட்ட முடியும்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆய்வுரையிலே எம்.எல்.ஏ-க்கள் பெயர், நீதி விசாரணையிலே இருக்கிற வழக்கிலே வந்திருக்காது. இது நீதி விசாரணையிலே இருக்கிறது. (குறுக்கீடு). இதிலே ஜான் பாண்டியனுடைய........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வந்திருக்காது என்று சொல்வதைவிட, முடிவுரையின்போது முதல்வர் அவர்கள் தெரிவித்த பிறகு நீங்கள் இது தொடர்பான கருத்தைத் தெரிவிப்பதுதான் சரியாக இருக்கும். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே, உங்களுடைய அன்பான கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். நீங்கள்

கடைசியில் தொகுப்புரை வழங்கும்போது உங்களுடைய கருத்துக்களைச் சொல்லலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் மீண்டும், மீண்டும் சொல்ல வேண்டிய தேவையை நீங்கள் உருவாக்கமாட்டீர்கள் என்று நான் நம்புகிறேன். இப்போது நீங்கள் அமர்ந்து வாதங்களைக் கேட்டு, கடைசியில் உங்கள் வாதத்தைத் தொகுப்புரை செய்ய ஒத்துழைப்பீர்கள் என்று நம்புகிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் சொல்வதற்காக மிகுந்த நன்றியோடு இருக்கிறேன். தொகுப்புரையிலே இருக்கின்ற கருத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று நீங்கள் திரும்பத் திரும்ப வற்புறுத்துவது சரியல்ல. தொகுப்புரையிலே, ஆய்வுரையிலே வந்துவிட்டால், நான் என்னுடைய கருத்தில், அரசாங்கம்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைத் தலைவர் சொல்வது சரியல்ல என்று சொன்ன பிறகு நான் உங்களை அனுமதிக்க முடியாது. அடுத்து, சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கையை மாண்புமிகு திரு. வீ. பெ. துரைசாமி, பேரவைத் துணைத் தலைவர் அவைக்கு அளிப்பார். (குறுக்கீடுகள்).

## 2. அறிக்கை அளித்தல்.

### சட்ட விதிகள் ஆய்வுக் குழு.

மாண்புமிகு திரு. வீ. பெ. துரைசாமி : (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989-90ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் ஆறாவது (ஒன்பதாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன். (குறுக்கீடுகள்)

## 1. தகவல் கோரல்— தொடர்ச்சி.

**காவல் துறை மானியக் கோரிக்கை தொடர்புடைய ஆய்வுரையில்101-வது பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு வாசகம் குறித்து—தொடர்ச்சி.**



திரு. எஸ். ஆர். இராதா : இந்த நிலையை சட்டமன்றத்திலே இப்படி உருவாக்குவதென்பது ஜனநாயகத்திலே இருக்கின்ற வழிமுறைகளிலே சரியான ஒன்றல்ல. எனவே, ஜனநாயகத்திலே நீங்கள் அனுமதிக்க வேண்டிய ஒன்று என்றவகையில்,

9-10 மணி

இந்தப் பிரச்சினை என்பது ஒரு அத்தியாவசியமான; எங்களுடைய உயிர்ப்பிரச்சினையாக நாங்கள கருதுகிறோம். எனவே, இந்தப் பிரச்சினையில் ஒரு முடிவுக்கு வராமல், நீங்கள் அடுத்த பிரச்சினைக்குப் போவது என்பது, நீங்கள் ஜனநாயகத்தினுடைய குரல் வளையை ஒருவகையிலே எப்படியோ நெரிக்கிறீர்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.......................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஜனநாயம் என்றால் என்ன என்று எல்லோருக்கும் தெரியும். (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர் ஒரு விதியைச் சொல்லி விட்டால், விதிக்குட்பட்டு நடக்க வேண்டியது, ஜனநாயகத்தில் கடமையும் கூட. பேரவையில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருக்குத் தெரியும். (குறுக்கீடுகள்) இதைக் கண்டிப்பாக அனுமதிக்க முடியாது. இதற்கும், ஜனநாயகத்திற்கும் சம்பந்தம் கிடையாது. குரல் வளையை நெரிப்பது என்று சொன்னால், யார் யார் நெரிக்கிறார்கள் என்று பட்டியல் போடப்பட்டிருக்கிறது; எல்லோருடைய கைவசமும் அது இருக்கிறது. எனவே, இப்போது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் உட்காரப் போகிறாரா, இல்லையா? (குறுக்கீடுகள்.)

திரு. எஸ். ஆர். இராதா : எங்களுடைய கருத்துக்களை வலியுறுத்தி, அதை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை ஏற்றுக் கொள்ள இயலாது. இப்போது அவை நடவடிக்கைகள் முறைப்படி தொடங்கும்; நீங்கள் தொகுப்புரையில் உங்களுடைய கருத்துக்களை முழுமையாகச் சொல்லலாம். (குறுக்கீடுகள்) இதுதான் என்னுடைய தீர்ப்பு. இதற்குமேல் வேறு எந்த வரிகளையும் என்னிடம் எதிர்பார்க்க முடியாது. (குறுக்கீடுகள்).

திரு. எஸ். ஆர். இராதா : தீர்ப்பை ஆட்சேபிக்கிறோம் என்று சொல்வதை விட, இந்தத் தீர்ப்பை ஏற்றுக் கொள்ள இயலாத நிலையில் இருக்கிறோம். இந்த ஆய்வுரையில், அரசாங்கத்தினுடைய கருத்தாக ஏற்றுக்கொள்ள............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தீர்ப்பை ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்றால், அடுத்த முடிவுக்கு வாருங்கள், (கூச்சல்-குழப்பம்)

3. சட்ட முன்வடிவு. (அறிமுகம் செய்தல்.)

மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு, 1990.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது, அரசினர் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்தல். மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன்.

''1990 ஆம் ஆண்டு, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.'' (குறுக்கீடுகள்)

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு, பேரவைமுன் அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது. (குறுக்கீடுகள்)

1. தகவல் கோரல்—தொடர்ச்சி.

காவல்துறை மானியக் கோரிக்கை தொடர்புடைய ஆய்வுரையில் 101-வது பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏருவாசகம் குறித்து (தொடர்ச்சி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவர் அமராவிட்டால், அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக் கிறீர்கள்; ஒழுங்கீனம் நடக்கிறது என்ற நிலையில் முடிவு எடுக்க வேண்டியிருக்கும். (கூச்சல், குழப்பம்)அனைவரும் அமர்ந்துவிட வேண்டும். இது என்னுடைய அன்பான வேண்டுகோள். ஒத்துழைப்பீர்கள் என்ற நம்பிக்கையோடு சொல்கிறேன். அனை வரும் அமர்ந்து விடுங்கள். (குறுக்கீடுகள்).

திரு. எஸ். ஆர். இராதா : உரிமையை மறுக்கிறீர்கள் என்று............(கூச்சல், குழப்பம்).



மாண்புமிகு பேரவைத் தலைவர் : உரிமையை எல்லாம் நாங்கள் மறுக்க வில்லை. நிறையப் பேசிக் கொண்டுதான் இருக்கிறீர்கள். ஒவ்வொரு நாளும், காலையில் வந்து, 2 தடவை, 3 தடவை, 5 தடவை என்று ஜனநாயகத்தின் குரல் வளையை நன்றாகத்தான் பிடித்து அமுக்கிக் கொண்டிருக்கிறோம். இப்போது, நீங்கள் உட்கார முடியுமா? முடியாதா?

திரு. எஸ். ஆர். இராதா : கேலி செய்யாதீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இங்கு கேலி செய்வது நானா, நீங்களா என்பதைப்பற்றி வெளியிலே பட்டிமன்றம் வைத்துக் கொள்ளலாம். இப்போது நீங்கள் உட்காரப் போகி றீர்களா? இல்லையா? (கூச்சல், குழப்பம்). உங்களுக்கு என்னைவிட நிறைய திறமை இருக்கிறது; மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவருக்கு இல்லாத திறமையா? அடேயப்பா! இப்போது நீங்கள் உட்கார முடியுமா? முடியாதா? (குறுக்கீடுகள்). கடைசியாகச் சொல்கிறேன். நீங்கள் இப்போது உட்கார வில்லையென்றால், நான் உங்களை வெளியேற்ற வேண்டியிருக் கும். ஏனென்றால், உங்கள் பேச்சும் பதிவாகியிருக்கிறது; மாண்புமிகு முதலமைச்சருடைய பேச்சும் பதிவாகியிருக்கிறது. அதுவே, உங்களுக்குப் போதுமானதாக இருக்கும். எனவே, உங்களுடைய மறுப்பை நீங்கள் தெரிவித்து விட்டீர்கள்; நீங்கள் அமர்ந்து விடலாம். (கூச்சல், குழப்பம்).

திரு. எஸ். ஆர். இராதா மற்றும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அனைத்து உறுப்பினர்களும் அவை யிலிருந்து வெளியேறுமாறு ஆணையிடுகிறேன். (குறுக்கீடுகள்) Marshall, இவர்கள் எல்லோரையும் வெளியேற்றுங்கள். (குறுக்கீடுகள்).

(அ. இ. அ. தி.மு.க. உறுப்பினர்கள் பேரவையிலிருந்து வெளி யேற்றப்பட்டனர்.)

(9-15 மணி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு: வெளியேற்றப்பட்ட அனைத்திந்திய அண்ணா தி.மு.க. உறுப்பினர்கள் இன்று முழுவதும் அவை நடவடிக்கைகளில் கலந்து கொள்ள இயலாது. மானியக் கோரிக்கையின் மீது இன்று விவாதத்தைத் தொடங்கி வைப்பவர், திரு. எஸ். காதர்பாட்ஷா என்கிற வெள்ளைச்சாமி. (குறுக்கீடு) திரு. குமரி அனந்தன்.

**திரு. குமரி அனந்தன்** : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, நமது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு முதலவர் அவர்களும, தாஙகளும் இப்போது நடத்துய வாதப்பிரதி வாதங்களிலே நான் கலநதுகொள்ளவில்லை. ஆனால மனதுக்கு மிகுந்த வேதனை அளிககின்ற வகையில்தான் இங்கே அமர்ந்து கொண்டிருநதேன். இப்போது நான் விடுககின்ற ஒரு வேண்டுகோள், அவாகள ஒரு வகையாலே உணர்ச்சி வசப்படுகின்ற ஒரு சூழ்நிலை, அவர்களுடைய தலைவரைப் பற்றி இருககின்ற காரணததினாலே, நமது முதலவா அவர்கள் மிக அழகாகச் சொன்னார்கள். பல எம.எல்.ஏ.-ககளை இதற்கு முன்பு சொன்னதைப்பற்றி நான் குறிப்புகள் தர இயலும் என்று சொன்னார்கள். ஆனால கட்சியினுடைய தலைவராக அவர் இருக்கிற காரணத்தினாலே அவர்கள அதை ஏற்றுககொள்ளவில்லை. ஆனால் இப்போது வெளிநடப்பு என்பது நடந்திருக்கிறது. (குறுக்கீடு) வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள்—மன்னிக்க வேண்டும—வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். ஆனால் வெளியேற்றப்பட்டவர்கள் இந்த முககியமான துறையிலே பேசுவதற்கு வாய்ப்பு அளிக்கின்ற வகையில், நான் மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, உங்களுடைய தீர்ப்புக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன். நேற்று முழுவதும் அவர்கள் விவாதத்திலே கலந்துகொள்ள முடியவில்லை. பிரதான எதிர்க்கட்சியாக இருக்கின்ற காரணத்தினாலே, அவர்கள் உணர்ச்சி வசப்படுகின்ற ஒரு குறிப்பாக அவர்களுடைய பார்வையிலே அது இருக்கின்ற காரணத்தினாலே அவர்கள் இன்று வெளியேற்றப்படுகிற சூழ்நிலை இருந்தாலும் கூட, இன்று முழுவதும் அவை நடவடிக்கைகளிலே அவர்கள் கலநது கொள்ளக்கூடாது என்பதற்குப் பதிலாக, அவர்கள் கலந்து கொள்ளலாம் என்று இதனை, இந்தத் தீர்ப்பை வழங்குவீர்களானால், ஜனநாயகத்திற்கு உகந்ததாக இருக்கும் என்று நான் கருதுகிறேன் (குறுக்கீடு).

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அவர்கள் வைத்த கோரிக்கையைப் பற்றி என்னுடைய கருத்தைச் சொல்வதற்கு முன்பு, நான் காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவரிடத்திலே ஒன்றைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். இதுபோன்ற குறிப்புக்கள் காவல்துறையினுடைய ஆய்வுரையில், ஒரு கலவரம், ஒரு தகராறு, ஒரு துப்பாக்கிப் பிரயோகம் இவைகளெல்லாம் நடைபெறுகிற நேரத்தில், அது எப்படி ஆரம்பமாயிற்று என்று அவர்கள் ஆய்வு செய்து, காவல் துறையினர் தங்களுடைய கருத்துக்களை வைக்கிறார்கள். அதை எதிர்க்கட்சியினர் எதிர்த்துப் பேசுவதும், அந்த ஆய்வுரையின் அடிப்படையிலே, அதற்கு ஆளுங்கட்சியின் சார்பில் விளக்கங்கள் கூறுவதும் இந்த அவையிலே கடந்த காலத்திலே நீண்டகாலமாக நடைபெற்று வருகின்ற முறையாகும். இன்னும்



[டாக்டர் மு. கருணாநிதி]

ஒன்றைச் சொல்ல வேண்டுமேயானால், 1980-ஆம் ஆண்டு, அ.தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்டபோது, அ.தி.மு.க.வினர், மார்க்சிஸ்டு கட்சியினர், இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியினர் இவர்களெல்லாம் ஒரு பெரிய ஊர்வலம் நடத்தினார்கள். அந்த ஊர்வலத்தில் அண்ணா சாலையில் ஒரு போலீஸ் நிலையத்திலே சில பேர் புகுந்தார்கள். துப்பாக்கிகளை எடுத்துக்கொண்டு போனார்கள். அது அப்போது வந்த செய்தி. பிறகு முதலமைச்சராக நண்பர் எம்.ஜி.ஆர். வந்த பிறகு, இங்கே ஆய்வறிக்கை வைக்கப்பட்டது.

அந்த ஆய்வறிக்கையில் இப்படி இவர்களெல்லாம், மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி, அ.தி.மு.க., இவர்களெல்லாம் ஊர்வலம் நடத்தினார்கள். அவர்கள் போலீஸ் ஸ்டேஷனிலே புகுந்து அண்ணாசாலையில் துப்பாக்கிகளையெல்லாம் தூக்கிக்கொண்டு போனார்கள் என்றே இருந்தது. ஆய்வறிக்கையிலே அப்படியே இருந்தது. எம்.ஜி.ஆருடைய காலத்திலே அந்த ஆய்வறிக்கை வைக்கப்பட்டது. நான் எழுந்து அப்போது கேட்டேன், இவர்களெல்லாம் சமூக விரோதிகள் என்று கூறப்பட்டிருக்கிறது. இதிலே அப்படி சொல்லி இருக்கிறீர்கள். ஆனால் சமூக விரோதிகள் 217 பேரோ, 317 பேரோ, அவர்களையெல்லாம் ஏற்கெனவே நீங்கள் விடுதலை செய்து அறிக்கை விட்டிருக்கிறீர்களே, ஆய்வு அறிக்கைக்கும் அவர்களை விடுதலை செய்ததற்கும் முரண்பாடு இருக்கிறதே என்று கேட்டேன். அப்போது எம்.ஜி.ஆர். சொன்னார், ஆய்வு அறிக்கைக்கும், ஆளுங்கட்சியின் கருத்துக்கும் சம்பந்தமில்லை, ஆய்வு அறிக்கையை நாமும் ஆய்வு செய்யலாம் என்று எம்.ஜி.ஆர். அவர்கள் அன்றைக்குச் சொன்னார்கள். அதை விட இது பெரிதா என்பதை நம்முடைய இலக்கியச் செல்வர் எனக்கு உணர்த்த வேண்டும்.

அதுமாத்திரமல்ல. இதிலே அவர்கள் குறிப்பிடுகின்ற, ஜெயலலிதாவைப் பற்றி என்ன குறை சொல்லப்பட்டிருக்கிறது? ஜெயலலிதா அந்தக் கலவரத்தைத் தூண்டினார் என்று இருக்கிறதா? இல்லை. இன்னும் சொல்லப்போனால், அந்தப் படிப்பவர்கள் யாருக்குமே புரியாது. மீனாட்சிபுரத்திலே பேசிய ஒரு நபர், அந்த ஊரைச் சேர்ந்த சட்டமன்றப் பேரவை உறுப்பினர் அங்கு நடைபெற்ற கொலையைப் பற்றி அக்கறை செலுத்தவில்லை என்று பேசினார் என்று தான் இருக்கிறது. பல பேருக்கு மீனாட்சிபுரம் என்ன தொகுதி என்று கூடத் தெரியாது. அவர்கள் சொன்ன பிறகுதான், போடித் தொகுதி, அதிலே குறிப்பிடப்பட்ட எம்.எல்.ஏ., ஜெயலலிதா என்று எல்லாம் தெரியும். அவர்கள் சொன்ன பிறகுதான் தெரியும்.

அதுமாத்திரமல்ல. இப்படி பல எம்.எல்.ஏ.-க்களுடைய பெயர்கள், 1981—82-ஆம் ஆண்டிலிருந்து இந்த அவையிலே வைக்கப்பட்ட பல்வேறு குறிப்பேடுகளிலே, ஆய்வுரைகளிலே

[டாக்டர் மு. கருணாநிதி]

இடம் பெற்றிருக்கின்றன. எனவே, இது தவறு அல்ல. அதைப் பற்றி அவர்கள் பேசலாம். 'இது தவறு, அந்த நபர் அங்கே கூட்டத்திலே பேசியதே தவறு, எங்களுடைய எம்.எல்.ஏ, அந்தக் கொலையிலே அக்கறை செலுத்தினார். வேண்டுமென்றே அவர் இப்படிப் பேசியிருக்கிறார்' என்றெல்லாம் கூட அவர்கள் பேசலாம்.

அடுத்தது, இப்போது அவர்கள் மீண்டும் வந்து கலந்து கொள்ள வேண்டும் என்று சொன்னார்கள். நீங்களே பார்த்தீர்கள். நம்முடைய சபாநாயகர் அவர்கள், எத்தனை முறை அவர்களுக்கு அன்பான வேண்டுகோள் விடுத்தார் என்பதை நீங்களே இங்கு கவனித்தீர்கள். இப்போதும் நான் சொல்கின்றேன். அவர்கள் மீண்டும் வந்து இந்தப் பிரச்சினையைக் கிளப்பாமல், விவாதத்திலே கலந்துகொண்டு, இறுதியாக அவர்கள் பேசும் போது அதைக் குறிப்பிட்டு, அதற்கு விளக்கம் தருகிற வரையிலே காத்திருப்பார்களா ? அந்த உறுதியை நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் தருவாரா ?

(9-20 மணி.)

**திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, முதல்வர் அவர்கள் சொன்ன கருத்து என்னை நோக்கி விடுக்கப்பட்ட கருத்து என்றால் அது ஒருவருக்கொருவர் உதவியாக இருந்து இந்த அவையை நடத்த வேண்டும் என்பதற்காகத்தானே தவிர, வேறொன்றும் இல்லை. எனவே, அனுமதிப்பார்களேயானால் நான் அவர்களிடம் பேசியதற்குப் பிறகு அந்த உறுதி மொழியைப் பெற்று என்னால் சொல்ல இயலுமா என்பதை நான் சொல்கிறேன், அதற்கு எனக்கு அனுமதி தரவேண்டுமென்று மாண்புமிகு சபாநாயகர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, தீர்ப்பை மீறி நான் சொல்வதாக தயவுசெய்து எடுத்துக்கொள்ளக் கூடாது, நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அந்த உறுதி மொழியைப் பெற்றுத் தந்து, இங்கு வந்து அதனை அறிவிப்பாரேயானால், அதற்குப் பிறகு அவர்கள் இன்றைய நிகழ்ச்சிகளிலே, வாதங்களிலே கலந்து கொள்ளச் செய்கின்ற அந்த முறையை தாங்கள் பின்பற்றலாம் என்று தங்களுக்குப் பரிந்துரை செய்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் எப்பொழுதுமே மக்களாட்சி மாண்புகளை மதிப்பவன், எனவே, இலக்கியச் செல்வர் கூறிய கருத்துக்களையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள்



(பேரவைத் தலைவர்)

தந்த விளக்கத்தினையும் ஏற்று அவர் வெளியிலே சென்று அவர்களை அழைத்து வந்து, இந்த அவையின் நடவடிக்கைகள் சீராகவும் சிறப்பாகவும் செம்மையாகவும் நடப்பதற்கு உதவி செய்வார் என்றால், என்னுடைய தீர்ப்பை நான் உடனடியாக மாற்றி அவர்களை அனுமதிப்பதற்கு நான் தயார், இலக்கியச் செல்வர் இப்பொழுது நடைபோடலாம்.

**திரு. குமரி அனந்தன் :** நன்றி.

## 4. மானியக் கோரிக்கைகள், 1990-91—விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண். 2—மாநில ஆயத்தீர்வைத் துறை—தொடர்ச்சி.

(ஆ) கோரிக்கை எண். 15—காவல்துறை—தொடர்ச்சி.

(இ) கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள்—தொடர்ச்சி.

***திரு. எஸ். காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் நம்முடைய பேரவையில் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களால் தாக்கல் செய்யப்பட்ட மானியக் கோரிக்கைகள், ஆயத் தீர்வை, காவல் துறை, தீயணைப்புத் துறை மூன்று மானியக் கோரிக்கைகளை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். நம்முடைய தமிழ் நாட்டிலுள்ள காவல் துறை உலக நாடுகளிலே 'ஸ்காட்லாண்டு யார்டு' (Scotland yard)க்கு அடுத்தபடியாக உலகத்திலேயே சிறப்புமிகு காவல் துறை தமிழக காவல் துறை என்பதை இன்றையதினம் உலக நாடுகள் அத்தனையும் ஒத்துக் கொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட சிறப்புமிகு இந்தக் காவல் துறையை நிர்வகித்து வருகின்ற மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள், பல திட்டங்களை இன்றையதினம் நாட்டுக்கும் காவல் துறைக்கும் வழங்கியிருப்பதை நான் மனதாரப் பாராட்டுகிறேன், சமீபகாலமாக நம்முடைய தமிழகத்தில் வேண்டப்படாத, விரும்பத்தகாத சில வகுப்புக் கலவரங்கள், சாதிக் கலவரங்கள் ஏற்படுகின்ற நிலைமையிருக்கின்றது. அப்படிப்பட்ட நேரங்களிலெல்லாம் நம்முடைய காவல் துறை மிகத் துரிதமாக, வேகமாக அந்த இடத்திற்கே காவல் துறையினுடைய தலைவர்களும் அதற்கு இருக்கக் கூடிய ஐ.ஜி.போன்ற பெரிய அதிகாரிகளும் அந்த இடத்திற்கே சென்று அந்த வகுப்புக் கலவரங்களை அமைதிப் படுத்துவதற்குத் தக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்திலே நான் ஒன்றை நினைவுபடுத்துவது என்னுடைய கடமையாகக் கருதுகிறேன், இதற்கு முன்னால் இருந்த

(திரு. எஸ். காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி)

ஆட்சிக் காலங்களிலே இப்படிப்பட்ட கலவரங்கள், ஆங்காங்கே சாதிக்கலவரங்கள், மதக் கலவரங்கள் நடந்த வரலாறு உண்டு. உதாரணமாக என்னுடைய இராமநாதபுரம் மாவட்டத்தில் 1957-ஆம் ஆண்டு வாக்கில் அப்பொழுது விரும்பப்படாத ஒரு சமுதாயக் கலவரம் அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக அங்கே உருவாக்கப்பட்ட காலக்கட்டங்களிலே, அன்றையதினம் காவல் துறை சரியாக .செயல்படாத காரணத்தினால், மதுரை, இப்பொழுது பிரிக்கப்பட்ட காமராஜர், இராமநாதபுரம் பசும்பொன் தேவர் திருமகனார் மாவட்டங்கள் முழுவதும் பரவி பலர் வீடுகளை இழந்த நிலைமையையும் பலர் உயிர்களை இழந்த நிலைமையையும் .பழைய வரலாறு இந்த நாட்டுக்கு எடுத்துக் காட்டுகிறது. அப்படிப்பட்ட நிலைமை முன்காலங் களிலேதான் இருந்தது. இன்றையதினம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் யாரோ ஒருவர் சட்டமன்ற உறுப்பினரைச் சொன்ன தற்காக அந்த அறிக்கையைக் கிழித்து இந்த சபையை அவமதித் தார்கள். ஒரு காலத்திலே நாங்கள் மதித்து வந்த எங்கள் தென் பாண்டி மண்டலத்திலே சீரும் சிறப்புமிகு தலைவராக விளங்கி வந்த எங்களுடைய தலைவர் திரு. முத்துராமலிங்கத் தேவர் அவர்களை அன்றையதினம் 1957 ஆம் ஆண்டு வாக்கிலே, அந்தக் கால காவல்துறை ஆய்வறிக்கையைப் பார்த்தால், அந்தக் கலவ ரங்கள் அத்தனைக்குமே அவர்தான் காரணம் என்று சொன்ன தோடு மட்டுமல்லாமல், நிரபராதியாக இருந்த பெரிய தலைவர் அரசியல் தலைவர், தேச விடுதலைக்காக 7 ஆண்டுக் காலம் சிறைவாசப்பட்ட நல்ல தலைவர், கொலை வழக்கிலே சேர்க்கப் பட்டும் கூட அவர் நிரபராதியாக நீதிமன்றத்திலே விடுவிக்கப் பட்டார். இப்படிப்பட்ட பழைய நிகழ்ச்சிகளை எல்லாம் இந்த நாட்டிலே நமக்கு வரலாறு தெரிவிக்கின்ற நிலையில் இன்றைய தினம் காவல் துறை மிக துரிதமாக எங்கே மதக் கலவரங்கள் நடந்தாலும் எங்கே வகுப்புக் கலவரங்கள் நடந்தாலும் அந்த இடத்தை விட்டு அடுத்த இடத்திற்கு பரவாத முறையில், அது சாத்தூர் கலவரமாக இருந்தாலும், அது இராஜபாளையமாக இருந்தாலும், அது போடி கலவரமாக இருந்தாலும், அது ஆம்பூர் கலவரமாக இருந்தாலும், அங்கேயே துரிதமாக நடவடிக்கை எடுத்து அமைதிப்படுத்துகிற சிறப்பினை நாம் காணுகிறோம். குறிப்பாக நம்முடைய காவல் துறையினுடைய தலைவர் அவர்கள் அந்த இடத்திற்கே சென்று தகுந்த ஆணைகளைப் பிறப்பித்து தமக்குத் தேவையான காவல் துறை அதிகாரிகளையும் அனுப்பி, அமைதியை உருவாக்குகிறார்கள். மிகப் பெரிய சிறப்பு நம் முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் எங்கே கலவரம் நடந்தா லும் அதனால் பாதிக்கப்பட்ட, உயிரிழந்த எந்த வகுப்பு மக்க ளாக இருந்தாலும் எந்த அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களுக்கு நிவாரணமாக உதவித் தொகை வழங்கி, ஆங்காங்கே பலவிதமான வசதிகளை வழங்கியிருக்கிற நிகழ்ச்சியை இன்றையதினம் நாடு பாராட்டிக் கொண்டிருக்கிறது.



(திரு. எஸ். காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி)

(9-25 மணி.)

போடி கலவரம் நடந்த காலத்தில் அது விரும்பத்தகாத கலவரமாக இருந்தாலும் இன்றையதினம் கூட்டுறவுத் துறை அமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு திரு. பொன். முத்துராம லிங்கம் அவர்களும் நம்முடைய கைத்தறித்துறை அமைச்சர் அவர்களும் பல நாட்கள் அங்கே முகாம் இட்டு அங்கே சமாதா னத்தை உருவாக்கி, அந்த இரண்டு பிரிவு மக்களுக்குமிடையே அமைதியை .உருவாக்கி பல நிவாரண வேலைகளை எல்லாம் செய்தார்கள். இதில் காவல் துறையைச் சார்ந்தவர்களுக்கும் மிகப் பெரிய சிறப்பு உண்டு என்பதை இந்த நாடு ஏற்றுக்கொண்டு இருக்கிறது. இராஜபாளையமாக இருந்தாலும், சாத்தூராக இருந்தாலும் அந்த இடத்திலே காவல்துறை அதிகாரி கள் முகாமிட்டு அங்கே ஒரு சில தினங்களிலே அமைதியை உருவாக்கியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட காவல் துறையைப் பாராட்டுவதை நம்முடைய கடமையாகக் கருது கிறேன். இந்த ஆட்சிக் காலத்திலேதான் கோவை, மதுரை போன்ற பெருநகரங்களுக்கு ஆணையரை நியமனம் செய்திருக் கின்ற மிகப்பெரிய சிறப்பு உண்டு. கோவையிலும் தமிழகத்தில் இரண்டாவது மாநகரமாக இருக்கின்ற மதுரை மாநகரத்திலேயும் ஆணையர் அலுவலகத்தை உருவாக்கிய முதலமைச்சர் அவர் களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன், என்னுடைய நன்றி யைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய ஆட்சி முன்னாலே 1971-லே இருந்த காலத்திலே தான் பெண் காவலர்கள் நியமிக்கப்பட்டனர். அந்தச் சிறப்பும் நம்முடைய கழக ஆட்சிக்கு உண்டு. கலவரமாக இருந்தாலும், குற்றங்கள் பல இழைத்த பெண்களை கைது செய்து நீதி மன்றத் திற்கு அழைத்துச் செல்வதாக இருந்தாலும், பெண் காவலரை நியமனம் செய்த பெருமை கழக ஆட்சிக்கு உண்டு, மாண்புமிகு முதலமைச்சருக்கு உண்டு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய காவல்துறை நவீன முறையிலே அது கம்ப்யூட்டராக இருந்தாலும், மற்ற விஞ்ஞான முறையாக இருந்தாலும் அல்லது கைரேகை போன்ற தடயங்களாக இருந்தாலும், கண்டுபிடிக்கின்ற மிகப் பெரிய சிறப்பும் பெற்றிருக்கிறது. பல குற்றங்களைக் கண்டுபிடித்து டிடெக்ஷனிலே மிகப்பெரிய வெற்றியைக் கண்டிருக் கிறார்கள். அப்படிப்பட்ட சிறப்பான காவல்துறையை இன்னும் பல நவீன முறைகளிலே இந்த நாட்டிலே நடைபெறுகின்ற குற்றங் களைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுப்பதற்கு—நம்முடைய மாநிலத்தில் பல இடங்களில் மோப்ப நாய்கள் இருந்தாலும் கூட இன்னும் அதிகமான அளவிற்கு மோப்ப நாய்கள் ஆங்காங்கு இருக்கக்கூடிய ஒரு ரேன்ஜ் மூலமாக உருவாக்க வேண்டுமென்று வேண்டுகோளை வைக்கின்றேன்,

(திரு. எஸ். காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி)

அந்த மோப்ப நாய்களுக்கு வாகனங்கள் தனியாக இல்லை என்று கருதுகிறேன். துரிதமாக தடயங்களைக் கண்டுபிடிப்பதற்கு வாகன வசதி இருந்தால்தான் அந்த இடத்திற்கு மோப்ப நாய்களை அழைத்துச் செல்வதற்கு வாய்ப்பு ஏற்படும். ஆகவே மோப்ப நாய்கள் ஒரு தலைமை இடத்திலே இருந்தாலும அல்லது மதுரை, கோயம்புத்தூர் போன்ற ஒரு மாநகரத்திலே இருந்தாலும் அந்த நாய்களுக்கு ஒரு தனி வாகனமும் அதை ஓட்டுவதற்கு ஒரு ஓட்டுநரும் இருக்க வேண்டும். இப்போது இருக்கின்ற முறையில் அந்த வாகனங் களுக்கு சேமப படையிலே இருக்கக்கூடிய ரிசர்வ் போலீஸ்—ஆர்ம்டு ரிசர்விலே இருக்கக்கூடிய டிரைவர்களைத் தான் பயன் படுத்துகிறார்கள். ஆகவே அவர்கள் வந்து பணியை ஏற்று அந்த வாகனத்தை எடுத்துச் செல்வதற்கு சற்று கால தாமதம் ஏற்படக் கூடும். ஆகவே இந்த வாகனத்திற்கு தனியாக டிரைவர்களை நியமிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பு ஏற்றிருந்த 1971 ஆம் ஆண்டிலேதான் இந்தப்போலீஸ் துறைக்கு ஒரு போலீஸ் கமிஷன் நியமித்தார்கள். அதன் மூலமாக பல சலுகைகள் காவல்துறைக்கு வழங்கினார்கள். இன்றையதினம் நம்முடைய முன்னாள் ஓய்வு பெற்ற தலை மைச் செயலாளர் சபாநாயகம் அவர்கள் தலைமையிலே 5 பேர் கொண்ட குழுவை ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆகவே காவல் துறையிலே உள்ளவர்கள் நல்ல பணியாற்றுகின்ற காரணத்தினாலே தங்களுடைய உயிரையும் பணயம் வைத்து இரவு, பகல் என்று பாராமல் இந்த நாட்டிற்காக உழைக்கின்ற நல்ல ஒரு இலாக்காவாக இருக்கின்ற காரணத்தாலே அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் அவர்களுடைய குடும் பங்களைக் காப்பாற்றுவதற்கும் நல்ல ஊதியங்களை உருவாக்கு வதற்கும் நல்ல ஒரு அறிக்கையைத் தரும் என்ற நம்பிக்கை நமக்கு இருக்கின்ற காரணத்தினாலே அந்த கமிஷனிலே வருகின்ற அந்த பரிந்துரைகளையெல்லாம் இந்த அரசு பரிசீ லிக்கும் என்ற நம்பிக்கை இருப்பதோடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அதை அனுதாபத்தோடு பரிசீலிக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அதைப்போலவே எனக்கு ஒரு கருத்து தென்படுகிறது. என் பணிவான கருத்து. அந்தக் கருத்தினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பரிசீலிக்க லாம் என்று கருதுகிறேன். இப்போது நம்முடைய தமிழகத்தில் காவல்துறைக்கு ஒரு டைரக்டர்-ஜெனரல் என்ற தலைவர் இருக் கிறார். 8 ஐ.ஜி.-க்கள் இருப்பதாக நம்முடைய ஆய்வு அறிக்கை யிலே சொல்லப்பட்டிருக்கிறது. 8 ஐ.ஜி.-க்களும் தலைமையிட மான சென்னை நகரத்திலே மட்டும்தான் இருக்கிறார்கள். ஆகவே ஒவ்வொரு துறைக்கும் ஒரு ஐ.ஜி., இருக்கக்கூடிய பெரிய



[திரு. எஸ். காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி]

அதிகாரிகள் எல்லாம் காவல்துறையிலே சென்னை நகரத்திலே இருக்கிறார்கள். ஆகவே இங்கேயிருந்து எந்தத் துறையாக இருந்தாலும் அது குற்றப் பிரிவாக இருந்தாலும்—அல்லது வனத்துறையாக இருந்தால் வனத்துறைக்குள்ள ஐ.ஜி., சட்டம் ஒழுங்குத் துறையாக இருந்தால் சட்டம்-ஒழுங்கு ஐ.ஜி., தெற்கே இருக்கின்ற கன்னியாகுமரியாக இருந்தாலும், நெல்லை கட்ட பொம்மன், இராமநாதபுரம் மாவட்டமாக இருந்தாலும், செல்ல வேண்டிய அந்த காலச் சுணக்கம் ஏற்படுகிறது. எனக்குத் தெரிந்த ஒரு கருத்து. இந்த ஐ.ஜி.-க்களுடைய ஜூரிஸ்டிக்ஷனை, எல்லைப் பகுதியை ஒவ்வொரு மண்டலமாக இரண்டு ரேஞ்சுக்கு ஒரு இடத்திலேயாவது அல்லது 2 டி.ஐ.ஜி.-க்களுக்கு ஒரு இடத்திலேயாவது இந்த ஐ.ஜி.-க்களை பிரிவினை செய்து

9-30 மணி.

இவர்களுடைய தலைமை இடத்தை மதுரை, கோவை, சேலம் அல்லது வட ஆற்காடு-அம்பேத்கார் போன்ற மாவட்டங்களில் பல பிரிவுகளை அமைத்து எல்லாத் துறையில் இருக்கக்கூடிய காவல் துறைப் பிரிவுகளை எல்லாம் அந்த ஒரு ஐ.ஜி.-யினுடைய நிர்வாகத்தின் கீழ் கொண்டு வந்தால் இதில் துரிதமாக நட வடிக்கை எடுப்பதற்கும் இன்னும் வேகமாக செயல்முறைகளைக் கையாள்வதற்கும் அங்கே இருக்கிற காவல் துறை மற்ற அதிகாரி களுக்கு தாக்கீதுகள் வழங்குவதற்கும் குறிப்பிட்ட இடத்திற்கு ஐ.ஜி. அவர்கள் உடனடியாகச் செல்வதற்கும் வாய்ப்பு ஏற்படும் என்ற கருத்தை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அது மிக பொருத்தமாக இருக்கும் என்று நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல், மதுரையினுடைய ஆணையர் அலுவலகம் இப்போது பழைய மாவட்ட காவல் துறை அலுவலகத்தில் இருப்ப தாக மீனாட்சி அம்மன் கோவிலுக்குப் பக்கத்தில் இருப்பதாகத் தெரிகிறது. எனவே என் பணிவான வேண்டுகோள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே நீங்கள் கமிஷனர் போட்டதை மதுரை மாநகர் மக்கள் மட்டும் அல்ல தென் பாண்டி மண்டலத் தில் உள்ள அத்தனைப் பேரும் பாராட்டுகிறார்கள். மதுரை மாநகரம் கோவில் ஸ்தலம் உள்ள இடம், அங்கே பல மாவட்டங் களிலிருந்து மக்கள் வந்து போகக் கூடிய வசதிகள் இருக்கின்றன. முன்னாள் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் இப்போது அண்ணா பேருந்து நிலையத்தின் பக்கத்தில் இருக்கிறது. அங்கே கள்ளர் ரெக்ல மேஷன் டெபுட்டி கலெக்டர் அலுவலகம் தான் இருக்கிறது. அந்த அலுவலகத்தை வேறு இடத்திற்கு மாற்றி விட்டு அந்த முன்னாள் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவல கத்திலே இந்த ஆணையர் அலுவலகத்தை ஏற்படுத்தினால்

[திரு. எஸ். காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி]

போக்குவரத்து வசதிகளும் பக்கத்தில் நீதிமன்றம், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், அதேபோல் ராசாசி அரசு மருத்துவமனை எல்லாமே பக்கத்தில் அமைந்து ஒரே இடத்திலே அத்தனை துணை ஆணையர்களும் நம்முடைய ஆணையர் அவர்களும் அங்கே பணியாற்றுவதற்கு வசதியாக இருக்கும். என்பதை எண்ணி மதுரையில் இருக்கிற முன்னாள் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு நம்முடைய கமிஷ்னர் அலுவலகத்தை மாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

காவலர்களுக்கு குடியிருப்பு வசதி மிக மிக குறைவாக இருக்கிறது. இந்த ஆய்வு அறிக்கையில் 80 சதவீதம் குடியிருப்பு வசதி வேண்டும் என்று அறிக்கையில் இருந்தாலும் அது 38.7 சதவீதம் தான் தமிழ் நாட்டில் நிறைவேற்றப்பட்டதாகத் தெரிகிறது. மதுரையிலே ஏற்கெனவே காவலர்களுடைய குடியிருப்புகள் இப்போது இடிக்கப்பட்டு தெற்கு வெளி வீதி பக்கத்தில் 5 ஏக்கர் 72 சென்ட் நிலத்தில் இப்போது பேருந்துகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருக்கிறது. அந்த இடத்திலே காவலர்களுக்கு குடியிருப்புகளைக் கட்டி இங்கே சென்னையில் மண்ணடியில் கட்டி இருப்பதைப் போல் கீழே ஒரு ஷாப்பிங் காம்பிளக்ஸ், வியாபாரக் கடைகளைக் கட்டிவிட்டு மல்ட்டி ஸ்டோரிடு பில்டிங் கட்டி இருக்கக்கூடிய முறையில் கடைகளையும், வீடுகளையும் கட்டி அங்கே காவலர்களுக்கு வீடுகளை உருவாக்கினால் அரசுக்கு ஓரளவுக்கு வருமானமும் வரும், அதே நேரத்தில் காவலர்களுக்கு குறிப்பிட்ட இடத்திலே குடியிருப்பதற்கு வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இறுதியாக என்னுடைய தொகுதி பற்றி ஒரு வேண்டுகோள். முதுகுளத்தூரில் நீண்ட நெடுங்காலமாக 57-ஆம் ஆண்டு வாக்கில் இருந்து வந்தது துணை கண்காணிப்பாளர் அலுவலகம். டி.எஸ்.பி அலுவலகம், முதுகுளத்தூரில் 25 ஆண்டு காலமாக இருந்ததை இப்போது கடந்த 85 அல்லது 86 ஆம் ஆண்டு வாக்கில் பரமக்குடிக்கு அந்த அலுவலகம் மாற்றப்பட்டிருக்கிறது. பரமக்குடியில் இருக்கும் அந்த அலுவலகத்தை மாற்ற வேண்டும் என்பது என்னுடைய கோரிக்கை அல்ல. முதுகுளத்தூரில் நீண்ட நெடுங்காலமாக இருந்த துணைக் கண்காணிப்பாளர் அலுவலகத்தை முதுகுளத்தூரில் உருவாக்கித்தருமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டு, அவர்கள் இதில் கருணை காட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.)



***Thiru Oscar C. Nigli.**—Hon'ble Speaker Sir, to-day we have the Demand on the Police, probably one of the most important Demands and I shall try to confine myself only to the Police, without going much into Excise and Fire Service, because of want of time and because the Hon'.ble Speaker has already forewarned me in advance. I am confident that the Home Department which is under the direct control of the Hon. Chief Minister will keep on improving the police record. The Chief Minister who has an open mind and who also takes quick decision and at the same time, has shown tremendous benevolence to the police force and has boosted the morale of the police force. For example, today an ordinary Grade I Constable gets Rs. 1,800 which is not a small achievement in the modern day concepts. I think this was never thought of—particularly the raising of the salary, when people have always been talking about corruption among the police officials and nobody thought of raising the salary of these people to a certain extent for reducing corruption. Along with this, we have a hard -working Home Secretary and of course, a very efficient Director General of Police. In this context I would like to congratulate the Government of Tamil Nadu for having made the appcintment of the D.G.P., the present D.G.P. purely on considerations of merit. This has boosted the morale of the police force (Cheers). I am sure he will continue to do so. There have been a number of welcome changes in this context. That is why I have been wondering. When an M.L.A. or any other person speaks on the phone, the senior Police Officer takes up the phone and says "So and so, Speaking" I would like to ask the Hon. the Chief Minister to have this practice followed in other Departments also. Even higher officials can take up the phone and say "I am so and so, Speaking" rather than, have the P.As. asking.
"நீங்கள் யார் ? எந்த தொகுதி ? எங்கிருந்து பேசுகிறீர்கள் ? எதற்காகப் பேசுகிறீர்கள் ?"
asking 101 questions before he finally gives the phone. Let it be straightaway answered by the officer "So and so Speaking". I think this will give us direct contact with the officer. If the D.G.P. can do it why can't everybody else do it ?

I also wish to make a statement here about the communal clashes—the communal clashes in Dharmapuri, Coimbatore West Bodinaickanoor, Ambur, Vellore, Qaide Milleth District, Rajapalayam, have all been handled well and extremely well by the Police, judging the caste considerations and communal considerations.

(9-35 மணி).

In this context, I want to make a statement. In one particular case, a communal clash, it was not just based on community. It first started

[Thiru Oscar C. Nigli]

off with illicit liquor. It started between one caste and another because of illicit liquor and it was, ultimately given the shape of a caste-problem. Now that the Hon. the Chief Minister has come forth with his new Prohibition policy, I think that the problem would be solved.

Now, I would also like to question some steps which the BJP is now taking in Tamil Nadu. Today, the BJP is unnecessarily interfering with the politics of Tamil Nadu. They even sent a representative to observe the clashes in Ambur. I would like to ask : what business these people have to send a representative to observe the situation, especially after a Peace Committee has been formed ? We can understand if it had been some other Party. But this Bharatiya Janata Party does not have any basis roots in Tamil Nadu. So, what business does this Party have to come and interfere and stir up communal problems within this peace-loving Tamil Nadu ? That is the question which I want to raise.

Now, I would like to move to another aspect of the Police Demand. In yesterday's "Indian Express", there was a write-up in which it is stated, "The work of the Police force is discussed in the Assembly during Police reviews ; but rarely do workable solutions emerge." I think the Government should give this piece of statement a great deal of thought. There should be some kind of a Review Committee which should take into consideration the suggestions of all the M.L.A.s and the points which are discussed in the Assembly.

The other aspect is with regard to the guns and other equipments. I think that the guns and equipments given to the Police force are something very pitiable. They still have only the .303 rifles. How can they control situations like communal riots ? I think that it is high time for us to give better arms, ammunition and other equipments to the Police force so that the Police personnel could work better and not work with the .303 rifles which were used in the 1961 War and many years before that.

The other aspect which I want to stress is with regard to the physical fitness of the Police personnel. I would like to request the senior Police officials to ensure that at least some minimum physical fitness is maintained at the level of Inspectors and Sub-Inspectors. In the Army, much importance is given to this. But, here, we very often find a Police Inspector who finds it difficult even to move. He is so fat. How can he run and get hold of somebody ? So, I feel that it is high time for us to have some strict enforcement of physical fitness. I find that IPS



[Thiru Oscar C. Nigli]

Officers even above the age of 55 years are in very good physical condition. Then, why can't an Inspector keep up a better physical condition. So, I request that the senior Police officers should take a look at this and see that the personnel in the lower levels, like Inspectors, keep up a better physical condition. Now, probably, they are eating too much. (Laughter). When I say 'eating' it means everything.

Next, I would like to say that the anti-corruption wing needs to be revitalised. Yesterday, one of the Hon. Members spoke about the Traffic Police. Very often, the accusation is only against the Traffic Police. They are the ones who take the maximum 'mamool' Besides, they take the 'mamool' mostly from the law-abiding citizens. The Law and Order Police personnel take 'mamool' from the not-so-law-abiding citizens. But, in the case of the Traffic Police, even an ordinary man riding a motor-cycle or driving a car is stopped and asked to pay money. It is only the law-abiding citizens who are often harassed by the Traffic Police officials.

As regards the behaviour of some of the Police officials, my experience in places like Coimbatore, Tiruchirappalli and Salem is that, from the level of Deputy Superintendent of Police down wards, the officilas think that they own the place. They behave like local Rajahs. Threrefore, adirective should be issued to the officials in the lower levels, from the rank of Deputy Superintendent of Police downwards, that they should ensure maximum courtesy to all M.L.A.s and other officials whom they are dealing with.

With regard to the Commissionerates which have been formed in Coimbatore and Madurai, I would request that—if it has not been —done already—the maximum powers may be given to those Police Commissioners just as it has been done in the case of the Police Commissioner at Madras. For example, in places like Coimbatore and Salem, the power to issue gun-licences now rests with the Collector. Why should the Collector or his Revenue Divisional Officer have that power ? Here after, let the Commissioner of Police have that power of issuing gun-licences because he is the competent authority.

As regards the annexation of five Police Stations, which were hitherto functioning in Chengal-Anna District, to the Madras City Police, I want to say that, at present, there are only three Deputy Commissioners, viz., North, South and Central.

[Thiru. Oscar C. Nigli]

9-40 மணி

I would even ask for one more D.C. for North, South, East and West so that more of these Police Stations are directly under the control of the ~~Deputy Commissioner~~ of Police (Law and Order). Pages 46 and 47 of the Police Review talk about the nine norms for the Police Force given by the Chief Minister. I am sure that if the Police Force really implements these nine norms, the Police Force will be one of the best in this country.

What is most striking was the immoral traffic and illicit liquor. These are the two areas where the Police Force often come under heavy fire. The service conditions of the Police Officials should be protected. For example a Criminal Case against a Lawyer was dropped. But the A.C., a Sub-Inspector and two P.Cs. were suspended. Why? It is because the bargaining power of the Police Force is not as strong as any other office like a Lawyer or a trade Union. I would say.... (Gonging of bell) I will finish. Please give me two more minutes. The bargaining power of the Police Force is not strong. Therefore the Police Officials are being exploited. Ultimately they get the suspension order for an act for which they are not directly responsible. There should be some reconsideration on this issue.

With regard to the Police Commission which is being headed by a retired I.A.S. Officer I would ask that in future if there is a Police Commission, it should be headed by a retired I.P.S. Officer, not a retired I.A.S. Officer. After all there are lot of brilliant I.P.S. Officers and I can name some of them. They are Mr. Arul, Mr. Stracey, Mr. Radhakrishnan and Mr. V. R. Lakshminarayanan. They are all brillinat I.P.S. Officers. Let them head the Police Commission. They are the best people and they have once worked in Police Department and they can understand the actual problems of the Police.

I would conclude with these few suggestions and hope that the overall morale of the Police is kept high and they have been doing their tremendous job very well in the past fourteen months. I would say that there has been no political victimisation and this is the only Government which has not victimised the Police Officials. This Government after comimg into power did not transfer all the Police Officers. If you take all the I.Gs. all of them are retained. Excepting one perhaps the D.I.G. Intelligence who was shifted, all of them are remaining in the same position, after the Commissioner of Police was promoted as D.G.P. Even during the President's Rule there was a complete transfer.

9-40 மணி



[Thiru, Oscar C. Nigli]

The Chief Minister has a lot of trust in these officials and I wish that these officials will keep up that trust and do well for the good name of the Government of Tamil Nadu.

**Mr. Speaker :** Thank you very much. Thiru P. H. Pandian.

திரு. பி. எச். பாண்டியன் : சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை மானியத்தில் என்னுடைய கருத்துக்களை வெளியிடுவதற்கு வாய்ப்புக் கொடுத்ததற்காக நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

காவல்துறையைப் பொறுத்தவரையில் சுதந்திரம் அடைந்த நாளிலிருந்து 9-வது சட்டப்பேரவையைக் கண்ட பிறகும் கூட ஒரு தரப்பில் பாராட்டுவது, இன்னொரு தரப்பில் எதிர்ப்பது என்பதை நாம் பார்த்துக்கொண்டு இருக்கிறோம். ஆனால் ஒரு அரசாங்கத்திற்கு காவல்துறை தான் முக்கியம். காவல் துறை இல்லாவிட்டால் ஒரு அரசாங்கமே கிடையாது. காவல் துறை சரியாக இயங்காவிட்டால் ஆட்சியே நிலையாக இல்லை என்பதுதான் அறிஞர்களுடைய கருத்து. நாம் எல்லாம் போலீஸ், போலீஸ் என்று சொல்கிறோமே அந்த வார்த்தையே கிரேக்க நாட்டிலிருந்து வந்தது. பி.ஓ.எல்.ஐ.சி. அதாவது போலீஸ் என்பது ஸ்டேட் என்ற பொருள் பட வெளியிட்டிருக்கிறார்கள். அதாவது ஒரு மாநிலத்திற்கு போலீஸ்தான் முக்கியம். காவல் துறை செயல் இழந்துவிட்டால் ஒரு மாநிலம் செயல் இழந்ததாகத்தான் நம்மால் கருதமுடியும். அதனால்தான் காவல் துறைக்கு அதிகமான அதிகாரத்தை இந்திய நடைமுறைச் சட்டத்தில் வழங்கி இருக்கிறார்கள். காவல் துறை அதிகாரிகள் நம்முடைய அரசாங்கம் சொல்லாமல் அவர்களே நேரடியாக அதிகாரத்தை கையில் எடுத்து இந்திய நடைமுறைச் சட்டத்தின் கீழ் 'காக்னிசபிள் அஃபன்ஸ்' யாராவது கமிட் பண்ணினால் அவர்களைக் கைது செய்யலாம். யாரையாவது வழக்கு குறித்து விசாரணை செய்யவேண்டுமானால் அவர்களை அழைத்துச் செல்லலாம். அப்படி வழக்கு விசாரணைக்காக அழைக்கும்போது திமிறினால் அவர்களை அடக்கலாம். By using force இது இந்திய நடைமுறைச்சட்டம் 46 கிளாஸ் 2. இப்படி முழுமையான அதிகாரத்தையெல்லாம் இந்திய நடைமுறைச் சட்டம் காவல்துறைக்கு வழங்கி இருக்கிறது. அந்த அதிகாரங்களில் **Under Section 23 of the Indian Police Act they have to carry out the lawful acts and orders of the Government and the Court.**

[திரு. பி. எச். பாண்டியன்]

9-45 மணி

என்றுதான் அவர்கள் எழுதியிருக்கிறார்கள். சட்டத்திற்
குட்பட்ட உத்தரவுகளை அவர்கள் அமுல்படுத்தவேண்டு
மென்று எழுதியிருக்கிறார்கள். அது தவிர, காவல் துறை
யுடைய அதிகாரம், இந்திய குற்றவியல் நடைமுறைச் சட்
டத்தினால் வரையறுக்கப்பட்டிருக்கிறது. ஆர்ட்டிகிள் 129,
130, 131, 132-ல் அவர்களுக்குப் பாதுகாப்பு கூட முழு
மையாக வழங்கியிருக்கிறார்கள். ஆனால் அப்படிப்பட்ட
காவல் துறை எதற்காக இன்னமும் விமரிசனத்திற்கு ஆளாகிக்
கொண்டிருக்கிறது என்பதை நாம் உணரவேண்டும். காவல்
துறையினர் தம்முடைய கடமைகளை நிறைவேற்றும்போது,
யாரையாவது தாக்க நேர்ந்தால் கூட, ஐ.பி.சி.
General exception 26/79-ல் அவர்களுக்குப் பாது
காப்புக் கொடுக்கப்படுகிறது. அது குற்றமே கிடையாது,
அந்தப் பாதுகாப்பையெல்லாம் அவர்கள் பெற்றிருக்கும்
போது, எப்படி அவர்கள் தன்னிச்சையாக செயல்பட
வேண்டுமென்பதை பல்வேறு அறிஞர்கள் வெளியிட்டு இருக்
கிறார்கள். "Goffray Marshall; 'Police must deploy independent
Judgements in exercising rights to disobey illegal commands'.

சில நேரங்களில் அவர்கள் சட்டத்திற்குப் புறம்பாக
ஏதாவது ஒரு ஏவுகணை சாதகமாக வருமானால்,
அதை நிறைவேற்ற வேண்டுமென்று வருமானால், அவர்கள்
அதை நிறைவேற்ற முடியாது என்று சொல்வதற்குக் கூட
அந்த அறிஞர் கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார். நம்
முடைய அரசியல் சட்ட விஞ்ஞானி A. V. DAISEY, quote
from Law of Constitution 10th Edition, Page 302. "...When a
soldier is put on trial on a charge of crime his
obedience to superior is not itself a defenee.."
அதாவது ஒருவேளை, ஐ. ஜி., ஒரு சப் இன்ஸ்பெக்டரைப்
பார்த்து இன்னாரைச் சுடு என்று சொன்னால், அவர் சுட்டு
விட்டு, தப்பித்துக் கொள்ளமுடியாது. அந்த அளவுக்கு தன்
னிச்சையாக அவர்கள் தங்கள் அதிகாரத்தைச் செலுத்து
வதற்கு நம்முடைய இந்திய நடைமுறைச் சட்டம் அவர்
களுக்கு வழிகாட்டுகிறது. அதிகாரத்தைக் கொடுக்கிறது.
ஆனால் எங்கு பார்த்தாலும், காவல்துறையில் ஒரு சிலர்—
ஒவ்வொரு துறையிலும் சிலபேர் தவறு செய்பவர்கள் இருப்
பதைப் போல, —இங்கும் ஒரு சிலர் மக்களுக்கு எதிராகச்
செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதனால்தான் பல்
வேறு உறுப்பினர்கள் கூட இங்கே பேசும்போது சில குற்றங்
களை எடுத்துச் சொன்னார்கள். ஆனால் நாம் காவல்
துறைக்கு, காவலர்களுக்கு கையில் ஆயுதங்கள் கொடுக்கி
றோம். லத்தியைக் கொடுக்கிறோம். சட்டம் சொல்கிறது

 [திரு. பி. எச். பாண்டியன்]

—கையில் துப்பாக்கியையும் கொடுக்கிறோம். ஏன் ? எங்காவது கலவரங்கள் ஏற்படும்போதோ, கலவரங்கள் வரும்போதோ அதை அடக்குவதற்கு. நாம் துப்பாக்கியை அவர்கள் கையில் கொடுத்துவிட்டு, லட்டியைக் கொடுத்துவிட்டு, ஒன்றும் செய்யாதே என்று சொல்லும்போதுதான் சில நேரங்களில் சில விவகாரங்கள் நம்மையும் மீறிச் சென்றுவிடுகின்றன.

நாம் ஒருவேளை காவல்துறை இப்படிச் செயல்படக்கூடாது. என்று எதிர்பார்ப்போமேயானால், நாம் அவர்களுடைய கையில் இருக்கும் லட்டியை சட்டத்தின் மூலம் எடுத்துவிடலாம். அவர்கள் கையில் இருக்கும் துப்பாக்கியை எடுத்துவிடவும் இந்திய நடைமுறைச் சட்டம் செக்ஷன் 33, 34 தெளிவாகச் சொல்லியிருக்கிறது. இந்த அரசாங்கம் இந்திய நடைமுறைச் சட்டத்தின் ஏதாவது ஒரு பிரிவை எடுக்கவேண்டுமென்று நினைத்தால், இந்த அரசாங்கமோ, அல்லது உயர்நீதி மன்றமோ அதை எடுத்துவிடலாம் என்று எழுதியிருக்கிறார்கள். ஆனால் நாம் அதை எடுக்கமுடியாது. காரணம், மக்களைப் பாதுகாக்க வேண்டும். மக்கள் இன்றைக்கு காவல்துறையை நம்பிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் உடைமையைப் பாதுகாக்க, அவர்கள் உயிரைப் பாதுகாக்க, காவல்துறைதான் இருக்கிறது. யாராவது தாக்கப்பட்டாலும், அப்படி தாக்கப்பட்டவர்கள் செல்கிற இடம் காவல் நிலையம்தான். அந்த அளவில் நம்முடைய மக்களுக்கு அந்தக் காவல் துறை மீது நம்பிக்கை இருக்கிறது. ஆனால் இந்த கொள்கைக் குறிப்பைப் படிக்கும்போது, போலீஸ் பப்ளிக் ரிலேஷன் என்று இருக்கிறது. அதை நான் வரவேற்கிறவன்தான்.

அடுத்து சந்தேகம். சஸ்பிஷன். யாரையாவது காவல் துறையினர் பார்த்தால் சந்தேகப்பட வேண்டிய அந்தக் கண்ணோட்டத்தை அவர்கள் இப்போது இழந்துவிட்டார்கள். வறுமைக் கோட்டுக்குக் கீழே இருப்பவர்களிடம் பழக வேண்டும். சமுதாயத்தின் மேல் தட்டில் இருப்பவர்களுடன் பழக வேண்டும். ஆனால் மேலே உள்ளவர்களுடன் பழகும்போது காவல்துறை செயல் இழந்துவிடுகிறது. போலீஸ்—பப்ளிக் ரிலேஷன் என்று கருதக் கூடிய அந்த தொடர்பு, வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கிற மக்களோடு இருக்க வேண்டும். மேலே இருக்கக்கூடியவர்களுடன் தொடர்பு கொள்ள வேண்டிய காரணத்தால்தான் அவர்களுக்கு சந்தேகப்படக்கூடிய கண்ணோட்டம் போகிறது. யாரையாவது பார்த்தால், யாராவது ஒரு நிகழ்ச்சியில்

கலந்து கொண்டால், இவர் எப்படி, ஏன் இப்படி வந்திருக்கிறார் என்று சந்தேகப்பட வேண்டும். அது அவர்களுடைய இன்டிபென்டன்ட் பவர். அந்த அளவுக்கு இன்றைக்கு சந்தேகக் கண்ணோட்டம் குறைந்து கொண்டிருக்கிறது. பெரிய பெரிய மனிதர்களைச் சந்தேகப் பார்வையோடு பார்த்துக் கொண்டே இருப்போமேயானால் இந்த நாட்டில் குற்றமே இருக்காது.

9-50 மணி.

சாதாரண சாமானிய மக்களை சந்தேக வழக்குகளில் கைது செய்வது குறித்து சென்ற ஆண்டு இதே காவல் துறை மானியத்திலே, ஆளுநர் உரையிலே நான் உரையாற்றியிருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அதை கேட்டிருக்கிறார்கள். அது குறித்து அரசாங்கம் உத்தரவு பிறப்பித்திருக்கும் என்று நான் நினைக்கிறேன். காவல் துறையினர் யாரையும் சந்தேக வழக்குகளில் கைது செய்யக் கூடாது என்று. காரணம், சாதாரண, சாமானிய மக்கள்தான் அதில் கைது செய்யப்படுகிறார்கள். ஆகவே, என்னைப் பொறுத்தவரையில் காவல் துறையின் செயல்பாட்டைப் பொறுத்தவரையில், நல்ல துறை, ஒருசிலரால், சில நேரங்களில் நல்ல நிலைக்கு அதை நடத்திச் செல்ல முடியாத நிலை இருந்து கொண்டிருக்கிறது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

மற்றொன்று, தடுப்புக் காவல் நடவடிக்கை. ஆண்டாண்டுக்காலம் எல்லா ஆளும் கட்சியினராலும், எதிர்க்கட்சிகளுக்கு எதிராகச் செயல்படக்கூடிய பாங்கு, இந்திய நடைமுறை சட்டம் 149 முதல் 153 வரை தடுப்பு நடவடிக்கை காவல் சட்டத்தின் கீழ் கைது செய்வது கூட அரசாங்கத்தின் ஒரு ஆயுதம்தான். இதை வைத்து அரசாங்கம் நிச்சயமாக சட்டம் ஒழுங்கை நிறைவேற்ற முடியும். ஆகவே, காவல் துறையினர் அரசாங்கத்திற்குப் பணியாளர்கள் அல்ல என்பது என்னுடைய கருத்து. அவர்கள் சட்டத்தின் பணியாளர்கள். They are the agents of law; they are the servants of law; they derive the powers only from law. அந்த அளவுக்கு காவல் துறையினர் தன்னிச்சையாக செயல்பட வேண்டும் என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே, ஆளுகின்ற கட்சியை, ஆட்சியாளர்களை உதறி தள்ள வேண்டுமென்று நான் சொல்லவில்லை. ஒரு அரசாங்கத்தின் பாதுகாப்பே காவல் துறைதான். அரசாங்கத்தின் உத்தரவை செயல்படுத்துவதும் காவல் துறைதான். நீதிமன்றத்தினுடைய உத்தரவை செயல்படுத்துவதும்



காவல் துறை தான். எல்லோரையும் பாதுகாப்பதும் காவல் துறைதான். ஆகவே தான் இந்தத் துறைக்கு இன்றைக்கு 200 கோடி ரூபாய்க்கு மேல் பணத்தை ஒதுக்கி, இந்த மானியக் கோரிக்கை மூலமாக இன்றைக்கு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். இன்னும் சொல்லப்போனால், பல்வேறு நேரங்களில் கடந்த ஓராண்டு காலமாக, திண்டுக்கல், இராஜபாளையம், ஸ்ரீவில்லிபுத்தூர், ஆம்பூர், போடி போன்ற பல்வேறு இடங்களில், சில கலவரங்கள் நடைபெற்றன. நாம் இன்றைக்கு இந்த ஜாதி கலவரங்களைப் பார்க்கின்றபோது, ஜாதியை பல பேர் தூண்டிவிட்டுக்கொண்டிருக்கிறார்கள். தேர்தல் நேரங்களிலே ஜாதி பிரிவினையைத் தூண்டி விடுகிற பல பேர் இருந்துகொண்டிருக்கிறார்கள். ஆகையினால்தான் நான் இங்கே சொல்வதெல்லாம், தேர்தல் நேரத்தில் இந்த ஜாதி தலை தூக்குகின்ற காரணத்தால்தான், தேர்தல் முடிந்ததற்கு பிறகு ஆட்சியில் இருக்கும்போதும் இந்த ஜாதிப் பிரச்சினை முடியாமல் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, என்னைப் பொறுத்த வரையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அன்றைக்கு இங்கே தெரிவித்ததுபோல, எல்லா தரப்பினரையும் அழைத்து சமாதான கமிட்டி வைத்து, நாட்டில் சமாதானத்தை உருவாக்க வேண்டுமென்ற வேண்டுகோளை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

சில நேரங்களில் அத்துமீறல் நடைபெறுகிறது. மதுரையில் சிவகாசி அருகே ஒரு பிணம் கிடந்தது. கொட்டாம்பட்டி அருகே ஒரு கார் டிரைவரைக் கொன்று அந்தக் காரை அங்கே விற்றிருக்கிறார்கள். அந்த அளவுக்கு தைரியம் வந்திருக்கிறது. சட்டத்தை மதிப்பதற்கு இன்றைக்கு. பயம் இல்லாத காரணத்தால் இதுபோன்ற கொலைகள் நடைபெற்றிருக்கின்றன. டாக்சியை வாடகைக்கு எடுப்பது, தென்காசியில் எடுத்தது அந்த டாக்சி. பிறகு வெளியே கொண்டு வருவது: திருடர்களும், வழிப்பறி பேர்வழிகளும் வழக்கமாக அதைத் தொழிலாகக் கொண்டுள்ளவர்கள், டாக்சி டிரைவரை இறங்கச் சொல்வது, பிறகு அவர்களைக் கொன்றுவிட்டு, பிறகு இந்த டாக்சிகளைக் குறைந்த விலைக்கு விற்றுவிடுவது. ஆகவே, இப்படி பல்வேறு கொலைகள் நடைபெற்றிருக்கின்றன.

அடுத்து, 68 சதவிகிதம் புலன் ஆய்வில் வெற்றிப் பெற்றிருப்பதாக அறிக்கையில் படித்தேன். நான் உண்மையில் அதைப் பாராட்டுகிறேன். இன்னும் அதிகமாக புலன் ஆய்வு சக்தியாக செயல்பட வேண்டும் என்ற வேண்டுகோளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. பி. எச். பாண்டியன்] [1990 மே 4

அடுத்து மீட்டர் சார்ஜ். ஆட்டோ டிரைவர்கள், டாக்சி டிரைவர்கள் மீட்டருக்கு அதிகமாக வாங்குகிறார்கள். அதைக் குறைக்க வேண்டுமென்று காவல் துறையினர் நடவடிக்கை எடுத்தார்கள், அந்த நேரத்தில் அவர்கள் அதை எதிர்த் தார்கள், அந்த ஆட்டோ மற்றும் டாக்சி டிரைவர்கள். இன்றைக்கு ஆட்டோ, டாக்சி தவிர வேறு எந்தத் தொழிலுக்கும் மீட்டர் கிடையாது. டாக்டர் தொழிலுக்கு மீட்டர் கிடையாது. வக்கீல் தொழிலுக்கு மீட்டர் கிடை யாது. ஆடிட்டர்களுக்கு மீட்டர் கிடையாது. கடைக்காரர் களுக்கு மீட்டர் கிடையாது. காய் கடைக்காரர்களுக்கு மீட்டர் கிடையாது. பாருங்கள். மீட்டர் இருக்கிற காரணத் தினால் அவர்களை நாம் வழக்குகளில் சிக்கவைத்து அவர்களைத் துன்புறுத்துவது உகந்தது அல்ல என்பது என்னுடைய தனிப் பட்ட கருத்து. காரணம், எல்லோருக்கும் கொஞ்சம் ஆசை உண்டு. கொஞ்சம் அதிகமாக வாங்கிக் கொள்ளலாம் என்று. அந்த அதிகம் வாங்குகின்ற சில நேரங்களில் இப்படிப் பட்ட பிரச்சினை வருகிறது. இது எல்லாத் துறைகளிலும் இருக்கிறது. அதாவது மீட்டர் இல்லாமல் எல்லோரும் பிழைப்பது வழக்கம். ஆகவே, அந்த உழைப்பவர்களை, நாம் மீட்டர் வைத்து கசக்கக் கூடாது என்ற வேண்டு கோளை இங்கே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

9-55 மணி.

எனக்குக் கூட வக்கீல் தொழிலைத் தொடங்கிய முதல் ஆண்டில் பீஸ் வாங்கத் தெரியாது. எப்படி வாங்குவது என்று யோசித்துக் கொண்டிருந்தேன். அந்த மாதத்திற்கான செலவைக் கூட்டி, ஒவ்வொருவரிடமும் வாங்கிக் கொண்டிருந் தேன். மீட்டர் இல்லாத காரணத்தால் எல்லாத் துறை களிலும் அவரவர்கள் தேவைக்கேற்ப வாங்குகிறார்கள். இந்த ஆட்டோ டிரைவர்கள் வீட்டுக்குச் செல்லும்போது குழந்தைகளுக்கு மிட்டாய் வாங்கிச் செல்ல வேண்டுமென்ற ஆசை. மனைவிக்கு ஏதாவது வாங்கிச் செல்ல வேண்டும் என்று ஆசை. இது எல்லாத் துறைகளிலும் இருக்கிறது அதனால் மீட்டர் உள்ள ஒரே துறையை துன்புறுத்துவானேன். வேறு எந்தத் துறைக்கும் மீட்டர் கிடையாது. அண்ணா நகரில் ஒரு கிலோ கத்தரிக்காய் 6 ரூபாய். 7 ரூபாய். ஆனால் கொத்தவால் சாவடியில் 2 ரூபாய்தான்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தீட்சிதர் அவர் களுக்குக் கண்டிப்பாக ஏதோ சொல்ல வேண்டுமென்ற நிலைமை.



1990 மே 4]

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபா நாயகர் அவர்களே, திரு. பாண்டியன் அவர்களுடைய சஜ ஷன் நன்றாகத்தான் இருக்கிறது. வக்கீல் தொழிலுக்கு ஏதாவது மீட்டர் உண்டா என்று அறிய விரும்புகிறேன். பெரிய வக்கீல் இவ்வளவு வாங்குகிறார்கள். சின்ன வக்கீல் இவ்வளவு வாங்குகிறார்கள் அதுவும் இல்லாமல் பேசுகிற வக்கீல்களும் நிறைய இருக்கிறார்கள். அதற்கு ஏதாவது கட்டுப்பாடு உண்டா? அதை விளக்க வேண்டும்.

திரு. பி. எச். பாண்டியன் : சிவில் வழக்குகளுக்கு மட்டும் இத்தனை பர்சன்டேஜ் என்று உண்டு. ஆனால் கிரிமினல் வழக்குகளில் குற்றவாளிகளின் வசதியைப் பொறுத்தது. பணக்காரன் சிக்கினால் சாதாரண ஜாமீனுக்கே 10,000 ரூபாய் வாங்கலாம். பணக்காரன் பெரிய வழக்கில் சிக்கினால் ஒரு லட்சம், 2 லட்சம் வாங்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு தீட்சிதர் அவர் களுக்கு, ஏதாவது வழக்கு ஏற்பட்டால், திரு. பி. எச். பாண்டியன் அவர்களிடம் போகும்போது யோசித்துப் போங் கள். (சிரிப்பு).

திரு. பி. எச். பாண்டியன் : ஆகவே கணக்கு வைப்பது கிடையாது. காரணம், கணக்கு வைத்தால் முழுமையாகச் சம்பாதித்தது போய்விடும். ஆகவேதான் சொல்கிறேன். மீட்டர் இல்லாத தொழில்கள் எல்லாம் இருக்கின்றன. ஆகவே இந்த உழைப்பாளிகளைக் கவனிக்க வேண்டும். பாதுகாக்க வேண்டுமென்ற வேண்டுகோளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னைப் பொறுத்தவரையில் காவல் துறை இன்றியமை யாத துறை, காவல் துறை நசுக்கப்படக்கூடாத துறை. ஆனால் அதில் சிலர் தவறு செய்கின்ற காரணத்தால், அந்தத் துறைக்கே ஆபத்து வருகிறது. அந்தத் துறையில் உள்ளவர் களை நாம் சரி செய்ய வேண்டும். அவ்வளவுதான். இந்தத் துறையைப் பொறுத்தவரையில் ஆய்வாளர்கள், சப்-இன்ஸ் பெக்டர்கள், கூட்டத்தைக் கூட்டிப் பேச வேண்டும். நீங்கள் மேலே மட்டும் பேசிவிட்டு கீழே வருவதில்லை. சாதாரண மக்களோடு தொடர்பு கொள்ளக்கூடியவர்கள் இன்ஸ்பெக் டர்கள், சப்-இன்ஸ்பெக்டர்கள், கான்ஸ்டேபிள்கள், அவர்களு டைய குறைகளைத் தீர்க்க வேண்டுமென்ற வேண்டுகோளை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களுக்குப் பல்வேறு வேண்டு கோள்கள் இருக்கின்றன. சென்ற ஆண்டுகூட நான் சில வேண்டுகோள்களைக் கொடுத்தேன். சிறப்புக் காவல் படைப்

பிரிவில் 10 ஆண்டுக்காலம் பணி புரிந்தவர்கள் ஒரு மாவட்டத்திலிருந்து இன்னொரு மாவட்டத்திற்கு செல்ல வேண்டுமென்று ஜி. ஓ. இருக்கிறது. சென்ற ஆண்டில் ஒரு உத்தரவு போட்டார்கள், நான் கொடுத்த உடனே. அதை 7 ஆண்டுக் காலமாகக் குறைக்கலாமென்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிச் சாதாரண காவல் துறை அதிகாரிகளை ஊக்குவிக்க வேண்டுமென்ற வேண்டுகோளைத் தெரிவித்து, காவல் துறை மானியத்தில் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பு கொடுத்தமைக்கு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. எம். அப்துல் லத்தீப் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, காவல் துறை நாட்டுக்கு இன்றியமையாத துறை என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இல்லை. இந்தத் துறை கண்ணியத்தோடும், மரியாதையோடும் நடக்க வேண்டுமென்பதில் அரசுக்கு இருக்கிற அக்கறைபோல மக்களுக்கும் உண்டு. இந்தியாவிலேயே தமிழ்நாடு காவல் துறை மிகச் சிறப்புக்குரிய துறை என்று இதுவரையிலே மக்கள் நம்பிக்கொண்டிருக்கிறார்கள். அந்த நம்பிக்கை வீணான நம்பிக்கை என்று கூடச் சொல்வதற்கில்லை. ஒரு சில ஆண்டுகளுக்கு முன்னால், 1977 வரையிலே கூட, ஒரே ஒரு துறைத் தலைவரைக் கொண்டு, இன்ஸ்பெக்டர்-ஜெனரல் ஆஃப் போலீஸ் என்ற ஒரு மேலதிகாரியைக் கொண்டு, இந்தத் துறை மிகச் செம்மையாக நடந்து வந்தது. இன்றைக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற கணக்குப்படி, இந்தத் துறையினுடைய மேலதிகாரி டைரக்டர்-ஜெனரல் ஆஃப் போலீஸ் என்ற முறையில் உயர்வு பெற்ற உயர் அதிகாரி ஒருவர் இருக்கிறார். அதே நேரத்தில் கொள்கைக் குறிப்பில் குறிப்பிட்டிருப்பதுபோல எட்டு இன்ஸ்பெக்டர்-ஜெனரல் ஆஃப் போலீஸ் இருக்கிறார்கள். எனவே துறையில் மேலும் செம்மை சேர்ந்திருக்க வேண்டும். அதற்கு மாறாக இன்றைக்குக் குற்றங்கள் மலிந்து விட்டிருக்கின்றன. அதிகாரிகளுடைய எண்ணிக்கை எப்படி அதிகமாக இருக்கின்றதோ அப்படியே குற்றங்களின் எண்ணிக்கையும் அதிகமாக இருக்கிறதென்று சொல்லக்கூடிய நிலை ஏற்புடைய நிலையல்ல. மிகவும் துர்ப்பாக்கியமான நிலை. இந்தத் துறையிலே சில மாற்றங்களைச் செய்வது ஏற்புடையதாக இருக்குமென்று நான் கருதுகிறேன். குறிப்பாக உள் துறைச் செயலாளர் அவர்கள், நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் ஐ. ஏ. எஸ். அதிகாரியாக இருந்து வருகிறார்.

10-00 மணி.

ஆனால், இந்தத் துறையினுடைய முக்கியத்துவம் கருதி வேறு சில மாநிலங்களில் உதாரணமாக ஆந்திர மாநிலத்தில் பிரின்சிபால் ஹோம் செக்ரடரி என்று சொல்லப்பட



கூடியவர் பிரதம உள்துறை செயலாளராகத் தொடர்ந்து பல ஆண்டுக்காலமாக ஒரு ஐ. பி. எஸ். அதிகாரிதான் இருந்து வருகிறார். கர்நாடக மாநிலத்திலே இணைச் செயலாளர் ஒருவர் (அடிஷனல் ஹோம் செக்ரடரி) ஐ.பி.எஸ். அதிகாரியாக இருந்து வருகிறார். இன்னும் சொல்லப் போனால் இன்றைக்கு இந்திய அளவிலே ஸ்பெஷல் ஹோம் செக்ரடரி என்கின்றவர், ஹோம் செக்ரடரியை விட அதிக அதிகாரம் பெற்றவராக, ஐ. பி. எஸ். அதிகாரியாக இருந்து வருகிறார். எனவே, உள் துறைக்கும், போலீஸ் துறைக்கும் ஒரு ஒருங்கிணைப்பு, உள்ள இணைப்பு, செயல்முறை ஒருங்கிணைப்பு—இவைகளை ஏற்படுத்துவதற்கு இந்த மாதிரியான ஒரு மாற்றம் தேவையா என்பதை அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அதுமட்டுமல்லாமல், இங்கு 8 ஐ. ஜி.க்கள் போட்டு இருக்கிறார்கள். இந்த நிலை துர்ப்பாக்கியமான நிலை. இன்றைக்கு ஏற்பட்ட நிலை, என்ன ஏற்பட்டது என்பதை எல்லாம் நான் அறிவேன்; நீங்களும் அறிவீர்கள். அதையெல்லாம் நான் இப்போது விவாதித்துக்கொண்டு இருக்க நேரம் இல்லை. குறைந்த நேரத்தில் இவைகளை எல்லாம் விவாதிப்பது சாத்தியமில்லை. ஆனால் அவர்களுக்கிடையே ஒருங்கிணைப்பு நிலை இருக்கிறதா என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஒரே அந்தஸ்தில் உள்ள 8 ஐ. ஜி.க்களிடையே ஒரே அந்தஸ்து உணர்வு இருக்கும் போது, ஒரேவிதமான அதிகாரம் இல்லை என்ற ஆதங்கம் அவர்களிடையே ஒருவருக்கு ஒருவர் இருக்குமானால் அந்தத் துறையிலே ஒருங்கிணைப்பு இருக்குமா என்பதைப் பற்றி நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். கீழ்மட்டத்தில் எப்படி இருந்தாலும் மேல் மட்டத்திலே ஒருங்கிணைப்பு இருப்பதாக நான் நினைக்கவில்லை. இதற்குக் காரணம், 8 ஐ.ஜிக்களைப் போட்டு, 8 ஐ. ஜிக்களுக்கும் லா-அண்டு ஆர்டர் என்பது ஏதோ மியூசிகல் சேர் என்பதைப் போல் லா-அண்டு ஆர்டர் சுற்றி சுற்றி வருகின்ற நிலை—அதைப் பார்க்கின்ற அளவுக்கு வந்து, அவர்கள் வேறு முக்கியமான, முக்கியம் அல்லாத துறைகளுக்கு ஐ. ஜி. ஆக நியமிக்கப்பட்டு, நீயும் ஐ. ஜி. நானும் ஐ. ஜி. என்ற ஒரு அந்தஸ்து இருந்து கொண்டு ஒருவருக்கு ஒருவர் ஒருங்கிணைப்பு நிலை இல்லை என்பதைப் போல் நான் உணர்கின்றேன். எனவே இதைக் குறித்து அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டும். எப்படி ஒருங்கிணைப்பு கொண்டு வர வேண்டும் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்பதோடு நான் நின்று விடுகிறேன். ஏனென்றால் வேறு விவகாரங்களுக்கு எல்லாம் நான் செல்ல விரும்பவில்லை. தயவுசெய்து அதைப் பற்றி சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அடுத்து, இந்தப் போலீஸ் துறையிலே மொத்தம் 67,097
நபர்கள் இருப்பதாக— —டைரக்டர்-ஜெனரல் ஆஃப் போலீ
சிலிருந்து கடைசி கான்ஸ்டேபிள் வரையிலே இருப்பதாக
சொல்லப்படுகிறது; குறிப்பு சொல்கிறது. குறிப்பாக இன்
றைக்கு நாட்டிலே ஏற்படுகிற கலவரங்கள் தயவுசெய்து குறிப்
பாக மதக் கலவரங்கள் ஏற்படும்போது போலீஸ் துறையிலே
இருக்கக்கூடியவர்கள் அவரவர்கள் சார்ந்துள்ள மத உணர்
வுக்கு ஏற்ப அளிக்கப்படுவது என்பது இன்றைக்கு ஒப்
புக் கொள்ளப்பட்டு இருக்கிற ஒரு உண்மை. எனவே இந்த
நிலையிலே——லால் பகதூர் சாஸ்திரி அவர்கள் இருந்த
போது 1965-ல் குறைந்த பட்சம் ஒவ்வொரு மாநிலத்திலே
யும், ஒரிசா மாநிலத்தில் 2 சதவீதம் முஸ்லீம்கள் தான்
இருந்தாலும், போலீஸ் துறையில் மட்டும் 10 சதவீதத்துக்குக்
குறையாமல் அவர்களுக்கு பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட
வேண்டும் என்று 1965 லேயே மத்திய அரசு எல்லா
மாநில அரசுகளையும் வேண்டிக் கொண்டு ஒரு குறிப்பு
அனுப்பி இருந்தது; ஆணையாகவே அது அனுப்பப்பட்டு
இருந்தது; ஆனால் அதை எந்த அளவுக்கு மாநில அரசுகள்
நிறைவேற்றி இருக்கின்றன என்பது தான் இன்றைக்குள்ள
ஒரு மிகப் பெரிய கேள்வி. அந்த மாநில அரசுகள் நிறை
வேற்றி இருக்கின்றனவா, நம்முடைய மாநில அரசு அதை
நிறைவேற்றி இருக்கின்றதா என்பது எல்லாம் கேள்விக்
குரியது. அது நிறைவேற்றப்படவேண்டும். நடைமுறைப்
படுத்தப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்வது எங்க
ளுடைய ஜீவாதார உரிமை. ஏனென்றால் மத்திய அரசே
அதை ஒப்புக் கொண்டு எல்லோருக்கும் தாக்கீது அனுப்பி
இருக்கும்போது அன்றைக்கு கூட நான் ஏற்கெனவே சட்ட
மன்றத்திலே 1978-லே அன்று இருந்த மாண்புமிகு முதலமைச்
சரிடத்திலே கேள்வி கேட்டேன். போலீஸ் துறையிலே
முஸ்லீம்களின் சதவீதம் என்ன என்று அன்று கேள்வி கேட்
கப்பட்டபோது 1.98 என்ற தகவல் தந்தார்கள் அன்றைய
முதலமைச்சர். அதிலே இருந்து தான் விவகாரமே கூட
அவருக்கும், எனக்கும் வளர்ந்தது. எனவே நான்
கேட்டுக்கொள்வது, தயவுசெய்து இன்றைக்கு இருக்கிற
சூழ்நிலையிலே போலீஸ் துறையிலே அதுவும் குறிப்பாக
வகுப்புக் கலவரங்கள் நடக்கின்ற எல்லா இடங்களுக்கும்
அனுப்பப்படுவதற்கு போலீஸ் துறையிலே ஒரு தனிப்
பிரிவு-ரையட் போலீஸ்' என்ற முறையிலே அந்த போலீஸ்
துறையிலே ஏற்படுத்தி அந்த ரையட் போலிசிலே குறைந்த
பட்சம் 25 சதவீதம் முஸ்லீம்களுக்கு கொடுக்கப்பட
வேண்டும்; பொதுவாக இருக்கிற அந்த போலீஸ் துறை
யிலே 10 சதவீதமாவது, அதற்குக் குறைவு இல்லாமல்
மத்திய அரசு ஆணைக்கு ஏற்ப கொடுக்கப்பட வேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன்.



10-05 மணி.

என்ன சதவீதம்? சதவீதத்தைக் கேட்டால் இன்றைக்கும் கூட இரண்டு சதவீதத்திற்கும் அதிகமாக இருககிறார்களா என்று தெரியவில்லை. தீட்சிதர் அவர்களைக் கேட்டால் அவர்கள் சொல்லுவார்கள். முஸ்லீம்கள் எல்லாம் நான்கு மனைவிகள் கட்டிக் கொள்கிறார்கள், நிறையப் பிள்ளைகளைப் பெற்றுக் கொள்கிறார்கள் என்பது அவர்களுடைய ஆதங்கம். அப்படி என்று சொன்னால், கடந்த 30, 40 ஆண்டுகளாக நாங்கள் அவ்வளவு மனைவிகளைக் கட்டிக் கொண்டு இவ்வளவு எண்ணிக்கை அதிகமாக இருந்தால் எவ்வளவு இனப்பெருக்கம் ஏற்பட்டு இருக்க வேண்டும்? ஒன்று இந்த மாதிரியான ஒரு குற்றச்சாட்டு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் அவையைக் கேட்கிறீர்களா? திரு. தீட்சிதரைக் கேட்கிறீர்களா?

திரு. எம். அப்துல் லத்தீப்: பொதுவாக அவையைக் கேட்கிறேன். தீட்சிதரைக் கேட்கின்ற அளவிற்கு நான் பெரிய மனிதனாக நினைக்கவில்லை என்னை. எனவே, அவர்கள் சொல்வார்கள். எனவே, நான் கேட்பது ஒன்று, எது உண்மை என்று நீங்கள் தெளிவாக்குங்கள். ஒன்று, எங்களுடைய எண்ணிக்கை அதிகமாகி விட்டதா? அல்லது எங்களுடைய எண்ணிக்கை குறைந்திருக்கிறதா? 30 வருடத்திற்கு முன்பு தமிழகத்திலே முஸ்லீம்களுடைய எண்ணிக்கை 6 சதவீதம் என்று அரசு சொன்னது, 30 வருஷத்திற்கு முன்பு. இப்பொழுது 30 வருடத்திற்குப் பிறகும் அதே 6 சதவீதமாகத்தான் இருந்து கொண்டு இருக்கிறது. நாங்கள் இனப் பெருக்கத்தைப் பெருக்கிக் கொள்வது உண்மையா? அல்லது இந்த 6 சதவீதம் 30 வருடமாக இருக்கிறதே அது உண்மையா என்பது தெளிவாக்கப்பட வேண்டும். யாரோ ஒரு வழக்கறிஞர் கேட்கும் கேள்விக்கு ஒரு பெண்மணி கோர்ட்டிலே வந்து....................

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: சபாநாயகர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும் இவர் சொல்கிறார். அகில இந்திய ரீதியிலே பர்சென்டேஜ், இந்துக்களின் பர்சென்டேஜ் கம்மி; முஸ்லீம்களின் பர்சென்டேஜ் ஜாஸ்தியாகிக் கொண்டிருக்கிறது, இனப்பெருக்கத்திலே மட்டும்.

திரு. எம். அப்துல் லத்தீப்: அந்த அளவிற்கு தீட்சிதர் இனப் பெருக்கத்தில் மட்டும்தான் அதிகம் இருக்கிறது என்கிறார். பொருளாதாரத்தில், அறிவிலே, ஆற்றலிலே இல்லை; சர்க்கார் உத்தியோகத்திற்கான வாய்ப்புகளிலே இல்லை.

எல்லாவற்றிற்கும் இல்லை. இனப்பெருக்கத்திலே மட்டும் அதிகமாகி இருக்கிறது என்ற உண்மையை ஒப்புக்கொண்டு பேசிய திட்சிதர் அவர்களை நான் பாராட்டுகிறேன். ஆனால் உண்மை நிலை அது அல்ல. நான் பத்திரிகைகளிலே கொடுக்கப் படுகின்ற குறிப்புகளைப் பார்த்தால் முஸ்லீம்கள்தான் அதிகமாகக் குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்கிறார்கள் என்ற குறிப்பு வருகிறது. நடுநிலையிலே இருக்கிற பத்திரிகைகளிலே, Inder Malhotra அண்மையிலே ஒரு கட்டுரை எழுதினார். அதிலே சொன்னார். "It is ironical that the people who once most forcefully opposed the measure, i.e. the Muslims, now opt more and more for Family Planning". என்று எழுதுகிறார். Statlstics-ஐக் கொடுத்து எழுதுகிறரர். இங்கே அந்த மாதிரி நான் போக விரும்பவில்லை. ஏனென்றால் சபாநாயகர் மணி அடித்து விடுவார். தாட்சண்யம் பார்க்க மாட்டார். எனவே, நான் உங்களைக் கேட்டுக் கொள்வது, தயவு செய்து நீங்கள் சொல்லுங்கள், எது சரி? 30 வருடத்திற்கு முன்பும் அதுதான். கோர்ட்டிலே நின்று ஒரு பெண்மணி சொன்னாராம். 20 வருடத்திற்கு முன்பு உங்களுடைய வயது என்ன என்று கேட்டால் 20 வயது என்று சொன்னாயே, இன்றைக்கு 20 வருடத்திற்குப் பிறகு கேள்வி கேட்டாலும், மறுபடியும் 20 வயது என்றுதான் சொல்கிறாயே என்று வக்கீல் கேட்டால், இல்லீங்க, நான் அன்றைக்கு ஒரு பேச்சு, இன்றைக்கு ஒரு பேச்சு பேசுவது இல்லை, என்றைக்குமே ஒரே பேச்சுதான் பேசுவேன் என்ற முறையிலே, இன்றைக்கு 30 வருடத்திற்கு முன்பு சொன்ன எண்ணிக்கையையே இன்றைக்கும் சொல்லிக் கொண்டு இருக்கிறீர்களே, நான் உங்களைக் கேட்கிறேன், குறிப்பாக மற்றத் துறைகளிலே எப்படியிருந்தாலும், காவல் துறையிலே தயவு செய்து, இன்று மாறி வருகிற சூழ்நிலையிலே, முஸ்லீம்களுக்கு அவர்களுடைய எண்ணிக்கைக்கு ஏற்ப தயவு செய்து நீங்கள் பிரதிநிதித்துவம் கொடுங்கள் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் குறிப்பைப் பார்க்கும்பொழுது, பட்டியலைக் கொடுத்திருக்கிறார்கள். இந்தப் பட்டியலைப் பார்க்கும்பொழுது நான் கேட்கிறேன். காவல் துறை, இவர்கள் பற்றியெல்லாம் கொடுத்திருக்கிற இதிலே காவல் துறைத் துணை இன்ஸ்பெக்டர்-ஜெனரல்கள் 21 பேர் இருக்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன். காவல்துறைக் கண்காணிப்பாளர்கள் 71 பேர். எவ்வளவு பேர் முஸ்லீம்கள் இருக்கிறார்கள்? நான் கேட்கிறேன், இவ்வளவு பட்டியலைக் கொடுத்திருக்கிறீர்களே, இந்தப் பட்டியலிலே எங்களுக்கு, எங்களுடைய ஜனத்தொகைக்கேற்பக் கொடுங்கள், அதற்கு மீறி ஒரு புள்ளி சதவீதம் கூட எங்களுக்கு வேண்டாம்,



எங்களுக்கு ஏற்ப கொடுங்கள். ஒரு சமூக நீதி என்று சொன்னால், அந்தச் சமூக நீதியின் அடிப்படையிலே நீங்கள் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, இந்த அரசு இன்றைக்குத் தன் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பிறகு ஒரு மரபை மாற்றியிருக்கிறது. குறிப்பாக 'Q' Branch 'K' Branch Intelligence, யெல்லாம் முஸ்லீம்கள் . . . . . . . . . . . . . . . . .

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** தலைவரவர்களே. . . . . . . . . . . . . . . . . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அம்மையார் ஒரு முக்கியமான பிரச்சினையைக் கேட்கிறார்கள்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** தலைவரவர்களே, முக்கியமான சங்கதி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தெரியும்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த மதத்தின் அடிப்படையிலே இப்படி எனக்குப் பிரதிநிதித்துவம் வேண்டுமென்று கேட்கிறார்கள் வரவேற்கிறேன். அதை வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால், இந்திய நாட்டில், இந்த நாட்டிலே தலை தலைமகன் ஜனாதிபதியாகவே ஒரு முஸ்லீம் பெரியவரை, ஒரு முஸ்லீம் உத்தமரை வைத்திருந்தோம் என்ற பெருமை இந்தியாவுக்கு உண்டு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதுவரைக்கும் எனக்குத் தலைமகன் வரைக்கும்தான் தெரியும். 'தலை தலைமகன்' என்று வேறே இருக்கிறதா?

**திரு. எம். அப்துல் லத்தீப் :** Excuse me for telling like that. **

* **திரு. சா. பீட்டர் அல்போன்ஸ் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ** என்று சொல்வதை வாபஸ் வாங்கிக் கொள்ள வேண்டும். அல்லது தாங்கள் இதை அவைக்குறிப்பிலேயிருந்து நீக்க வேண்டுமென்று நான் மிகப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

திரு. எம். அப்துல் லத்தீப் : அதைச் சொல்லவில்லை. I am not referring to it.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இருந்தாலும், அந்தத் தொடர் அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது.

திரு. எம். அப்துல் லத்தீப் : I am saying that**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்பட்டதைத் திருப்பிப் பேசக் கூடாது.

திரு. எம். அப்துல் லத்தீப் : சரி, சரி. நான் பேசவில்லை. விடுங்கள். பேசிப் பிரயோசனம் என்ன ? பேசிப் பிரயோசனம் இருந்தால்தான். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, இல்லை. ஒரு தடவை அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கி விட்டதை நீங்கள் திருப்பிப் பேசினால் நன்றாக இருக்காது. (குறுக்கீடு)

10-10 மணி.

திரு. எம். அப்துல் லத்தீப் : தலைவர் அவர்களே, நான் அதைப் பேசவில்லை. (குறுக்கீடு) I am not yielding Sit down. நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என் மூலமாகத்தான் சொல்கிறார். . . . (சிரிப்பு)

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, ஒரு மெம்பரை sit down என்று சொல்வது என்பது நியாயம் இல்லை. . . . . .

Thiru M. ABDUL LATHEEF: I was just talking about it generally. I am not referring to one person who was given the highest post. That is different. I am talking about the persons at the grass-root level. What is the representation given to them? I am not talking about a single person sitting in the top place. I am talking about the rightful and legitimate opportunities to the Muslims in general.

நான் அதைக் கேட்கவில்லை. ஒரு ஆளுக்கு கொடுத்து விடுவதால் பிராப்ளம் தீர்ந்து விடுகிறதா ? ஆகவே, நான்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



கேட்பது முஸ்லீம்களுக்கு பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டிய இடத்தில் கொடுக்க வேண்டும். நீங்கள் ஜனாதிபதியாக ஆக்குகிறீர்களா இல்லையா என்பது பற்றி எங்களுக்கு கவலை இல்லை.

ஆனால் நான் கேட்பது, முஸ்லீம்கள் வேலை செய்கிற இடங்களில் என்ன ஜனத்தொகையோ, அந்த ஜனத் தொகைக்கு ஏற்ப நீங்கள் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டும். அதைத்தான் நான் கேட்கிறேன். இன்னொன்று என்ன ஐதீகம் வைத்திருக்கிறார்கள் என்றால், வடாற்காடு மாவட் டத்திற்கு முஸ்லீம் எஸ். பி. போடக் கூடாது என்று. ஏன் போடக் கூடாது ? பழைய காலத்தில் காங்கிரஸ்காரர் களுடைய ஆட்சிக்காலத்தில் கொண்டு வந்த அந்த மரபு, வடாற்காடு மாவட்டத்திற்கு முஸ்லீம் எஸ். பி. போடக் கூடாது, முஸ்லீம் கலெக்டர் போடக்கூடாது, ஏன் போடக் கூடாது என்பதை நான் கேட்க விரும்புகிறேன். வடாற்காடு மாவட்டத்தில் தேசத் துரோகிகள் இருக்கிறார்களா ? யார் இருக்கிறார்கள் வடாற்காடு மாவட்டத்தில். . . .

திரு. குமரி அனந்தன் : தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டத்திற்கு, மற்ற மாவட்டத்திற்கு என்று குறிப்புகளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். அகில இந்தியாவிற்கு உள்துறை அமைச்சராகவே ஒரு இஸ்லாமியர் தான் இருக்கிறார்கள் என்பதைத். தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். அப்துல் லத்தீப் : அவரைக் குறித்து என்னென்ன நடந்து கொண்டிருக்கிறது என்பது எனக்குத் தெரியும். . .

திரு. ரா. சொக்கர் : தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டத்திற்கு முஸ்லீம் எஸ். பி. ஏன் போடக் கூடாது என்று இந்த அரசை குறை கூறுவதைப் போல பேசுகிறார். ஆனால் காவல் துறையில் இன்றைக்கு உளவுத் துறை தலைவராகவே முஸ்லீம் சமூகத்தைச் சார்ந்த அதிகாரிதான் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, எல்லா இடங்களிலும் இஸ்லாமிய சமூகத்தைச் சார்ந்தவர்களையே போட வேண்டு மென்றால் எப்படி முடியும் ? ஆகவே, போட்டவர்களை குறை சொல்லலாமா ? எப்படி பேசுகிறார்கள் என்று எங்களுக்கு புரியவில்லை.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : தலைவர் அவர்களே, கோபித்துக் கொள்ளக் கூடாது. இந்த நாட்டிலே 42 வருடத்தில் முதன்முதலாக ஹோம் மினிஸ்டர் பதவியை ஒரு முஸ்லீம் சமுதாயத்தைச் சார்ந்தவருக்கு கொடுத்திருக்கிறோம். ஹோம் மினிஸ்டர் பதவி என்பது சாமானிய பதவி இல்லை. இப்போது போலீஸ் என்றெல்லாம் பேசுகிறாரே, அந்த எல்லாவற்றையும் அவர் அடக்கலாம். எதை வேண்டுமானாலும் செய்யலாம். அப்படிப்பட்ட ஹோம் மினிஸ்டர், அப்புறம் மத்தியில் இன்னொரு அமைச்சர் அன்றைக்கு வந்து நம்முடைய முதலமைச்சர், தமிழினத் தலைவரோடு உட்கார்ந்து இருந்தார்கள். உத்தர பிரதேசத்திலிருந்து ஒரு மினிஸ்டர் வந்திருந்தார். அவரும் முஸ்லீம் தான். முஸ்லீமுக்கும் நமக்கும் ஏதோ தகராறு இருப்பதாக பேசுகிறார். இவர் பேசுவதைப் பார்த்தால், தகராறை இவர் இங்கிருந்து கிளப்பி விட்டு விடுவார் போல இருக்கிறது. தகராறே கிடையாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தீட்சித்ரோடு தகராறு இல்லாமல் பேச வேண்டுமென்று சொல்கிறார்.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : தலைவர் அவர்களே, இந்த அவையில் விவாதம தொடங்கியதிலிருந்து நான் கவனித்துக் கொண்டிருக்கிறேன். சில பெரிய போலீஸ் அதிகாரிகளை அவர் சார்ந்திருக்கிற ஜாதி, மதம் மூலம் பார்ப்பது தவறு. அப்படி நாம் பார்க்கிற பார்வை பத்திரிகை குறிப்புகளில் வருமானால், அந்த அதிகாரிகள் தங்கள் தகுதிகளால் வகித்துக் கொண்டிருக்கிற பதவிகள் மீது மக்கள் சந்தேகப்படக் கூடிய ஒரு நேர்க்கை நாமே தூண்டி விடுவதைப் போல ஒரு உணர்வு உண்டாகும். நம்முடைய மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்களை ஒரு சமூகத்திற்கு மட்டும் தலைவராக நாங்கள் நினைக்கவில்லை. அவர் இந்த தமிழ் நாடு முழுவதும் அறிந்த, அரசியல் விவரம் தெரிந்த ஒரு நல்ல தலைவர். அவர் பேசுகிறபோது, எல்லோருக்கும் பேசுவதைப்போல உணர்வை கொடுப்பார்களானால் நாங்கள் சந்தோஷப்படுவோம். அவர்கள் அப்படி பேசுகிற செய்திகள் பத்திரிகை குறிப்பில் வருமானால், சிறுபான்மை சமுதாய மக்கள் தான் பாதிக்கப்படுவார்கள் என்பதை தங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

திரு. எம். அப்துல் லத்தீப்: தலைவர் அவர்களே, நான் பேசியதன் நோக்கம் என்ன என்று நான் அறிவேன். இந்த அவை அறியும். ஆனால் தகராறுகளை வளர்க்கக் கூடிய சிந்தனைகளை துர்பாக்கிய நிலையில் சில பேர் இங்கே சொல்லி இருக்கிறார்கள். எல்லாருக்காகவும் பேசக்கூடியவன் நான். இன்றைக்கு யார் நீதிக்காக குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறார்களோ, அவர்



களுக்காக பேசுகிறேனே தவிர, யார் நீதிக்காக குரல் கொடுத்தாலும் பேசுகிறேன். எண்ணிக்கையின் அடிப்படையில் கணித்துப் பார்க்கும்போது, கடந்த பல ஆண்டு காலமாக அநீதிக்கு ஆளாக்கப்பட்டிருக்கிற ஒரு பிரிவைப் பற்றி பேசுகிறேனே தவிர, ஒரு மதத்திற்காகவோ அல்லது ஜாதிக்காகவோ நான் பேசவில்லை. எனவே, யார் அநீதிக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்களோ அவர்களைப் பற்றி நான் பேசிக் கொண்டிருக்கிறேன். ஒரு காலத்தில் சொல்வார்கள். ஆயிரம் ஆண்டுகளாக ஆண்ட சமுதாயம் என்று, இன்றைக்கு பஞ்சைகளாய், பராரைகளாய், ஏழைகளாய், பாழைகளாய், ஏசப்படக் கூடியவர்களாய், வேலை இல்லாதவர்களாய், பட்டினிகளாய் இருக்கக் கூடிய ஒரு சமுதாயத்தில் அவர்கள் இருப்பதற்கு கூட சரியான சூழ்நிலை இல்லாமல், அடக்கப்படும்போது, ஒடுக்கப்படும்போது, ஜாதிக் கலவரங்கள் தூண்டி விடப்படும்போது, அவர்களோடு இருந்து யார் அவர்களை காப்பாற்ற வேண்டுமோ, அவர்கள் கூட காப்பாற்றுவதற்கு மனம் இல்லாதவர்களாக அல்லது அராஜகத்தைத் தூண்டிவிடக் கூடியவர்களோடு இணைந்து கொள்ளக் கூடியவர்களாக ஒரு சூழ்நிலை இருக்குமானால், இந்தத் துறையில் பாதிக்கப்படக் கூடியவர்களுக்கு முறையான பிரதிநிதித்துவம் வேண்டுமென்று கேட்பது தவறு இல்லை.

10-15 மணி

இது ஏதோ ஒரு சமுதாயத்திற்காக கேட்பது என்பது கூட, அப்படிச் சொல்வது என்பது கூட முறையல்ல என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

உதாரணமாக இப்போது பல கலவரங்கள் நடந்திருக்கின்றன. வகுப்புக் கலவரங்கள் நடந்திருக்கின்றன. ஆனால் விகளத்தூரிலே இப்போது அண்மையிலே நடந்தது. அதைப் பற்றி நான் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்தேன். ஆனால் போலீஸ் துறை மானியம் விவாதத்திற்கு வருகிற காரணத்தால் அது எடுத்துக் கொள்ளப்பட வில்லை. அங்கே என்ன நடந்தது? எதற்காக இந்தக் கலவரம்? என்னிடத்திலே படங்கள் எல்லாம் இருக்கின்றன. முதலமைச்சர் அவர்கள் இதைப் பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். எல்லாப் படங்களும் இருக்கின்றன. எதற்காக இந்தக் கலவரம் நடந்தது? இந்தக் கலவரத்தைக் குறித்து மாவட்ட ஆட்சித் துறைத் தலைவர் அவர்கள் அங்கேயிருந்து. அவர்கள் விடுத்த அந்த அறிக்கை இருக்கிறதே, அது மிகவும் துர்பாக்கியமான அறிக்கை. அங்கே என்ன நடந்திருந்தாலும், அரசுக்குத் தெரிவிப்பதற்கு முந்தி, ஒரு அறிக்கையை பத்திரிகையிலே மாவட்ட ஆட்சித் தலைவர்

அவர்கள் அறிவிக்கிறார்கள். அது ஒருதலைப்பட்சமாக இருக்கிறது என்று சொன்னால், அவர்களிடத்திலேயிருந்து நாம் எப்படி நீதியைப் பார்க்க முடியும்? எப்படி நடந்ததாகவும் இருக்கட்டும். அதற்குள் நான் செல்ல விரும்பவில்லை. ஆனால் அங்கே நடந்த உண்மையைப் பற்றி, அரசு தகவல் கேட்டு அனுப்பியிருந்தால், அரசுக்குத் தெரிவிக்க வேண்டிய கருத்துக்களை எல்லாம், பத்திரிகையிலே விவாதம் செய்யக் கூடிய அளவிற்கு யாரோ ஒரு தாசில்தார் சொல்கிறார்களே எனபதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அறிக்கை விடுகிறார்கள் என்று சொன்னால், அது எந்த அளவிற்கு ஏற்புடையதாக இருக்கும் என்பது எனக்குத் தெரியவில்லை.

அதுமட்டுமல்ல, மதிலை உடைத்திருக்கிறார்கள், தயவு செய்து, இந்தப் படங்களை எல்லாம் பார்க்கும்படி நான் கேட்டுக் கொள்கிறேன், மதிலை உடைத்திருக்கிறார்கள். அங்கேயிருந்த திருமறை, முஸ்லிம்கள் உயிரினும் மேலாகக் கருதக்கூடிய திருக்குரானை எடுத்து காலிலே போட்டு மிதித்து அதை எரித்திருக்கிறார்கள். பல குரான்களை இப்படிச் செய்து இருக்கிறார்கள். அவ்வளவு பேர்களையும் அடித்து உதைத்து இருக்கிறார்கள். ஏழைகளுடைய வீடுகளை எரித்திருக்கிறார்கள். இவைகளை எல்லாம் கலெக்டர் அவர்கள் நேரடியாகப் போய்ப் பார்த்தாரா? எங்கோ ஒரு பக்கத்திலே இருந்த டி.பி.யிலே உட்கார்ந்து கொண்டு, தாசில்தாரிடத்திலே விவரம் கேட்டு, அந்த அறிக்கையை உள்துறைச் செயலாளருக்கு திருச்சியிலே கொடுக்கிறார்கள் என்று சொன்னால், அது எந்த அளவுக்கு ஏற்புடையது என்பதை நீங்கள் தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அது மட்டுமல்ல, அன்றைக்குப் பெருநாள், பெருநாள் அன்றைக்கு, முஸ்லீம்கள் என்ன தகராறு செய்வதற்காகவா பெருநாளைக் கொண்டாடுகிறார்கள்? அது ஒரு நல்ல நாள். மகிழ்ச்சிகரமான நாள். ஏற்கனவே நடந்து கொண்டிருந்த சில தகராறுகளை அடிப்படையாகக் கொண்டு, அன்றைக்கு வெளியூரிலே இருந்து, அதுவும் பசும்பலூரிலேயிருந்து, ராமராஜன் என்ற ஒரு ஆசிரியர் ஒரு பெரிய படையைத் திரட்டிக் கொண்டு வந்திருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் சேர்ந்து அங்கே ஒரு கலவரத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவர்களைப் பற்றி எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அது மட்டுமல்ல, கலவரம் நடந்து கொண்டிருக்கும்போது, அந்த ஊரிலே பக்கத்திலே இருக்கிற லப்பைக்குடிக் காட்டிலேயும் வெளிநாட்டுக்குப் போய் பணி செய்யக்கூடியவர்கள் நிறைய பேர்கள் இருக்கிறார்கள். துபாய் போன்ற அரபு நாடுகளுக்குச்



சென்று, போலீஸ்காரர்கள் வீடுகளிலே நுழைந்து என்ன வெளிநாட்டுப் பொருட்கள் இருக்கின்றன என்று அவர்களிடத்திலே பலாத்காரமாக பிடுங்கிக் கொண்டு போய், மூன்று வீடுகளிலேயிருந்து 144 சேலைகளை, பட்டாபிராமன் என்கிற ரகசியத் துறையைச் சேர்ந்த ஒரு இன்ஸ்பெக்டர் வந்து பறித்துச் சென்று இருக்கிறார்கள். டி.வி.யை எடுத்துக் கொண்டு போயிருக்கிறார்கள், வி.சி.ஆரை எடுத்துக் கொண்டு போயிருக்கிறார்கள். சேலைகளை எடுத்துக் கொண்டு போயிருக்கிறார்கள். வீட்டிலேயிருந்து வெளிநாட்டு சோப்பு, பவுடர் ஆகியவற்றைக்கூட, போலீஸ்காரர்கள், அதுவும் மிகவும் கேவலமாக, மிகவும் கடினமான மொழிகளைப் பயன்படுத்தி, அந்த முஸ்லீம்களையும் முஸ்லீம் பெண்களையும் உள்ளே நுழைந்து திட்டி, அவர்களை எல்லாம் அடக்கி ஒரு இடத்திலே உட்காரவைத்துவிட்டு—— எனக்கு ஒரு பெயர்தான் கிடைத்திருக்கிறது, பட்டாபிராமன் என்கிற சி.ஐ.டி. டிபார்ட்மெண்ட் சப்-இன்ஸ்பெக்டர், மற்ற பெயர்களை நான் சொல்ல விரும்பவில்லை—போலீஸ்காரர்கள் பொதுவாகச் செய்திருக்கிறார்கள். இப்போது தயவுசெய்து நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். இந்த சூழ்நிலையிலே எங்களுக்கு என்ன பாதுகாப்பு? இதைப் பற்றிப் பேசவேண்டாமா? பீட்டர் ஆல்போன்ஸ் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். என்னைப் பற்றி அவர்களுக்கும் தெரியும். அவர்களைப் பற்றி எனக்கும் தெரியும். நான் என்ன ஒரு குறிப்பிட்ட வகுப்புக்காக சொல்லிக் கொண்டிருப்பவனா? அதற்காக என்னை நான் பயன் படுத்திக் கொண்டிருப்பவனா? எங்கெங்கு அநீதி நடைபெறு கிறதோ, அவர்களுக்காக நான் பேசுகிறேனே தவிர, அநீதி நடைபெறுவது முஸ்லிம்களுக்கு என்ற காரணத்தாலே நான் பேசாமல் இருக்க வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார் களா? எனவே நான் தயவு செய்து முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வது, இங்கே தெளிவாக நான் முதலமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன், எங்களுடைய ஆழ்ந்த வருத்தத்தை நான் தெரிவித்துக் கொள்கிறேன். The conduct of the Collector is highly unfortunate, reprehensible, most abhorrent an1 detestable. இவ்வளவுதான் நான் சொல்ல முடியும். அந்த கலெக்டர் நடந்து கொண்ட முறை சரியல்ல.

**திரு. குமரி அனந்தன்:** மாண்புமிகு துணைச் சபாநாயகர் அவர்களே, உறுப்பினர் பீட்டர் ஆல்போன்ஸ் அவர்கள் சொன்ன திலுடைய நல்ல நோக்கத்தை நமது மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்கள் புரிந்து கொண்டிருப்பார்கள். நாம் இங்கே என்னவோ, பெரும்பான்மையோர்கள் சிறுபான்மையோர்களை அடக்கி வைத்து இருப்பதைப் போன்ற ஒரு எண்ணமோ அல்லது சிறுபான்மையோர்களுக்கு பாதுகாப்பு இல்லை என்று சொல்கிற

எண்ணமோ வருகிற வகையிலே நமது அப்துல் லத்தீப் அவர்கள் சொல்ல வேண்டுமா என்றுதான் அவர்கள் கேட்டார்கள். காரணம் என்னவென்று சொன்னால, அப்துல் லத்தீப் அவர்களைப் பொறுத்த வரையிலும் வேதங்களைப் பற்றிப் பேச வேண்டும் என்று சொன்னாலும், ஆற்றல் பெற்றவர், அனைவரைப் பற்றிப் பேசுவதற்கான ஆற்றலைப் பெற்றிருக்கிற காரணத்தாலே, எங்கெங்கு அநீதி நடந்தாலும், இங்கே பேச வேண்டியது தான். ஆனால் நீங்கள் சுட்டிக் காட்டுவது அத்தனையும் ஒரு குறிப்பிட்ட வகையிலே இருக்கிற காரணத்தாலே அப்படி ஒரு எண்ணம் பரவி, நம்முடைய நாட்டிலே இப்படிப் பட்ட எண்ணம் இல்லாத இடங்களிலே கூட, ஓஹோ, நம்முடைய ஆட்கள் பாதிக்கப்படுகிறார்களோ என்று சொல்கிற ஒரு எண்ணம், உணர்ச்சியைத் தூண்டுகிற வகையிலே வந்து விடக்கூடாது என்ற காரணத்தால்தான் எங்களுடைய உறுப்பினர் அவர்கள் சொன்னார்களே தவிர, வேறு எதுவும் இல்லை.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு லத்தீப் அவர்கள் கடுமை யான இந்தக் கலவரத்தைப் பற்றி விமர்சிக்கிறார்கள். நானும் அந்த ஜில்லாவைச் சேர்ந்தவன்தான். எனக்கும் பலவிதமான தகவல் வந்திருக்கிறது. அவர்களுக்கு எங்கிருந்தோ, தகவல் வந்து திருச்சியிலே இருந்து கலெக்டர் நேரிலே வந்து பார்க்கவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். லத்தீப் அவர்களும் நேரிலே பார்த்து இருக்கிறாரா? அவர்களுக்கு வந்த தகவலை வைத்துச் சொல்கிறார்கள். போட்டோ என்றால், தபாலிலேதான் வந்திருக்கும் நேற்று, அவர்கள் அங்கே போகவில்லை. அங்கே யிருந்து வந்த தகவலைக் கொண்டு அவர்கள் சொல்கிறார்கள். உறுப்பினர் என்ற முறையிலே தகவல் வந்திருக்கிறது. எனக்கும் தகவல் வந்திருக்கிறது. பீஸ் கமிட்டி அந்த இடத்திலே போகக் கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். அதிலே எல்லோரும் போகவில்லை. 4 பேர்கள் போயிருக்கலாம். இந்த 5 விரல்களும், ஒன்றாக இருக்கிறதா? 1,000 பேர்கள் போகும்போது, ஒரு 10, 50 பேர்கள் அங்கே போயிருக்கிறார்கள். தகராறு, அதுதான் ஆரம்பம். அதில் எல்லாமே உடைத்திருக்கிறார்கள். இந்தப் போட்டோவைக் கூட காலையிலே பார்த்தேன். அவர்களுடைய அந்த போட்டோவை நான் பார்த்தேன். நானே 30 நாட்களுக்கு முன்னாலே ரெபரன்ஸ் பண்ணியிருக்கிறேன். எங்கே ரெபர் பண்ணியிருக்கிறேன்? ரெவின்யூ டிபார்ட்மெண்ட், செக்ரட்டரி, அண்டர் செக்ரடரிகளிடம் போய், இந்த மாதிரி முளைத்திருக் கிறது, முதலிலே முளையிலே இதைக் கிள்ளி எறிய வேண்டும் என்று சொல்லியிருக்கிறேன். அவர்கள் மேலே, ரெவின்யூ டிபார்ட்மெண்ட், போலீஸ் டிபார்ட்மெண்ட் மேலே தவறுதல் சொல்ல முடியாது. ஆகையினாலே தவறுகள் நடந்திருக்கிறது.



இனிமேல் நடக்காமல் இருப்பதற்கு வழிசொல்ல வேண்டுமே தவிர, நடந்த தவறை ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டிருக்க லாமா? நம்முடைய லத்தீப் பாய் அவர்கள் ஐயராகப் பிறந்திருக்க வேண்டும், ஏன் என்றால், நமக்கு மேலே சரித்திரத்தை படித்து இருப்பவர்கள். ஆகையினாலே யாரும் அவர்களை மத தத்துவாதி என்று சொல்ல முடியாது. அப்படிப்பட்ட நம்முடைய அப்துல் லத்தீப் பாய் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

10-20 மணி

திரு. எம். அப்துல் லத்தீப்: நானும் அந்த நோக்கத்தோடு தான் பேசிக் கொண்டிருக்கிறேன். தயவுசெய்து அதை தவறான கண்ணோட்டத்தோடு பார்க்கக் கூடாது என்று கேட்டுக் கொள் கிறேன். என்னுடைய கடமை. எனக்கென்று ஒரு கடமை இருக்கிறது. நான் உட்கார்ந்திருக்கின்ற இடம், தூக்குகின்ற கொடி, நான் வகிக்கின்ற பொறுப்பு, இந்த பொறுப்பைத்தான் நான் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறேனே தவிர, யார் மீதும் காழ்ப்புணர்ச்சி இருந்தால் இந்த லத்தீப் லத்தீப்பாக இருக்க மாட்டான். அதைமட்டும் நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். எனவே தயவுசெய்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதைப் பற்றி சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உங்களுக்கு ஒதுக்கிய நேரம் முடிந்து விட்டது என்பதை நினைவுபடுத்து கிறேன்.

திரு. எம். அப்துல் லத்தீப்: இப்பொழுது தீயணைப்பு, தீயை அணைக்க வேண்டும், இப்போது (சிரிப்பு) தீயணைப்பு நிலையங்கள் சில இடங்களிலே வேண்டுமென்று ஏற்கெனவே கோரிக்கைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. நான் வாணியம்பாடி சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோதே ஆலங்காயம் மற்றும் குறி பாக ஜவ்வாதுமலை மையப் பகுதியிலே தீயணைப்புநிலையங்கள் வேண்டுமென்று நான் பல தடவை கேட்டுக் கொண்டிருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அன்றைக்கே அது ஏற்பாடு செய்யப்படும் என்றுகூட வாக்குறுதி தந்திருக்கிறார்கள். அதை தயவுசெய்து செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அத்தோடு நம்முடைய பூம்புகார் தொகுதியில் ஏதாவது ஒரு மையப் பகுதியிலே தரங்கம்பாடி போன்ற பகுதிகளிலே ஒரு தீயணைப்பு நிலையம் வேண்டுமென்று கடந்த ஆண்டே அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் பேசியிருக்கிறார். அதையும் தயவுசெய்து ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடலாடி, திருப்புள்ளாணி, சிக்கல் அல்லது ஏர்வாடி அல்லது கீழக்கரை ஆகிய ஏதாவது ஒரு பகுதியில் தீயணைப்பு நிலையம் வேண்டும். ஏனென்றால் கீழக்கரை ஓரத்தில் இருக்கின்ற பல ஊர்களில் குடிசைகள் தான் அதிகம். தீ ஏற்படுகின்ற சம்பவங்கள் அங்கே அடிக்கடி ஏற்படுகின்றன. எனவே குறிப்பாக மையப் பகுதியிலான அந்த கீழக்கரை அல்லது ஏர்வாடியில் ஒரு தீயணைப்பு நிலையத்தை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்

அடுத்து பேரணாம்பட்டு தொகுதி இருக்கிறது. பேரணாம்பட்டிற்கு இந்தப் பக்கம் வந்தால் ஆம்பூர் வந்தாக வேண்டும். அந்தப் பக்கம் போனால் குடியாத்தத்திற்குப் போக வேண்டும். அவர்களே சொல்லியிருக்கிறார்கள். அதிலே கெட்டான், இதிலே கெட்டான் பேரணாம்பட்டான் என்று உறுப்பினரே சொல்லி இருக்கிறார்கள். ஆகையால் தயவுசெய்து பேரணாம்பட்டிலேயும் ஒரு தீயணைப்பு நிலையம் ஏற்படுத்தினால் அதைச் சுற்றி அதிகமான கிராமங்கள் இருக்கின்றன. ஆகையால் தயவுசெய்து அதை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து எல்லோரும் ஒவ்வொருவரும் சொல்கிறார்கள். இல்லாத ஊர்களுக்கு எல்லாம் ஏற்படுத்திக் கொடுத்தால் நன்மை பயக்கும் என்பதை மட்டும் நான் சொல்லிக் கொண்டு நேரம் அதிகமாகி விட்டது என்று தலைவர் அவர்கள் சுட்டிக் காட்டுகிறார். அவருக்கு சிக்கலை ஏற்படுத்த விரும்பவில்லை. எனவே தயவுசெய்து இறுதியாக சொல்லிக் கொள்வது காவல்துறை மிக முக்கியமான துறை. அந்தத் துறையிலே இருப்பவர்கள் அந்தத் துறையிலே என்ன பொறுப்பு வகிக்கிறார்களோ அந்தப் பொறுப்போடுதான் இருக்க வேண்டும். இப்போது நான் சேப்பாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என்றால் எனக்கு மதம் இல்லை, மார்க்கம் இல்லை.

10-25 மணி

எம்.எல்.எக்களுக்கு மதமும் இல்லை, மார்க்கமும் இல்லை. அவர்கள் எல்லோருக்கும் பொதுவாக இருப்பவர்கள் அந்த மாதிரித் தான் நான் என்னுடைய அணுகு முறைகளை வைத்துக் கொண்டிருக்கிறேன். நான் எல்லா இடங்களுக்கும் போகிறேன். கோவில்களுக்கும் சென்று உபன்யாசம் கூட செய்கிறேன். கோவில்களுக்காகவும் பேசுகிறேன். கோவில்கள் வளர வேண்டும் என்பதற்காக நான் பாடுபடுகிறேன். அதே நேரத்தில் எல்லா மக்களுக்கும் அந்த நீதி கிடைக்க வேண்டுமென்று சொல்கிறேன். எனவே, தொகுதி மக்களுடைய பிரதிநிதியான நான் லத்தீப் முஸ்லீமாக இருக்கலாம். ஆனால் சேப்பாக்கம் தொகுதி எம்.எல்.ஏ.



முஸ்லீம் இல்லை என்ற உணர்வோடு நாங்கள் பணியாற்றக் கூடியவர்கள். அதுமாதிரியாகத்தான் துறையிலே வேலை செய்யக்கூடியவர்களும் அவர்கள் பொறுப்பிலேயுள்ள, காவல் துறையிலே மக்களுக்கு பரிகாரம் தேடிக் கொடுக்கக் கூடியவர்கள், மக்களிடத்திலே பரிகாரங்களை எதிர்பார்க்கக் கூடியவர்கள் அவர்கள் அல்ல என்ற ஒரு நிலையைப் போலீஸ் துறையிலே இருப்பவர்கள் ஏற்படுத்த வேண்டும்.

பல குற்றங்கள் இன்றைக்கு, ஜேப்படி, கள்ளச் சாராயம், திருட்டு, கொள்ளை, முகமூடிக் கொள்ளைக்காரர்கள், இப்படியெல்லாம் நடைபெறுவதிலேயே போலீஸ்காரர்களுக்கும் பங்குண்டு என்று மக்கள் நினைக்கின்ற அந்த நினைவை, அந்த எண்ணத்தைப் போக்குகின்ற அளவுக்கு இந்தத் துறையைத் தூய்மைப்படுத்திக் கொள்ளவும், செம்மைப்படுத்திக் கொள்ளவும் நடுநிலையிலிருந்து அவர்கள் பணியாற்றக் கூடியவர்களாகவும், மக்களுக்கு நாம் தான் பரிகாரங்களைக் கொடுக்க வேண்டும், மக்களிடத்திலிருந்து பரிகாரங்களை எதிர்பார்க்கக் கூடாது என்ற தூய எண்ணத்தோடு செயல்படக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும் என்று நாடு விரும்புகிறது, நாங்களும் விரும்புகிறோம். அதை இந்த அவையிலே சுட்டிக் காட்டி அமைகிறேன்.

*திரு. உ. ரா. வரதராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முக்கியமான மானியக் கோரிக்கைகள் மீது இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சியினுடைய சார்பிலே எங்களுடைய சில கருத்துக்களை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். மக்கள் நலம் பேணும் காவல் துறை என்று இந்த ஆய்வுரை தொடங்குகின்றது. ஒரு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு ஜனநாயக உரிமைகளை மதிக்கின்ற அரசாக செயல்படுவதனுடைய அளவுகோலே காவல் துறைதான் என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இந்த மக்களின் ஜனநாயக உரிமைகளுக்குத் தடை விதித்து, குரல் வளையை நெரிக்கின்ற ஒரு நடைமுறையை சென்னை மாநகரத்தில், சென்னை மாநகரத்தினுடைய காவல் துறை கையாண்டு வந்தது பற்றி, சென்ற ஆண்டும் இந்த ஆண்டும் இந்த மன்றத்திலேயும், வெளியிலேயும் தொடர்ந்து நாங்கள் குரல் எழுப்பியிருக்கிறோம். இன்று அதிலே ஒரு மாற்றம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. போலீஸ் சட்டப் பிரிவு 41 தளர்த்தப்பட்டிருக்கிறது. இதை வரவேற்கிறோம். வாயார, மனதாரப் பாராட்டுகிறோம்.

இந்த 41-வது பிரிவு தொடர்ந்து நீடிக்கப்படுகின்ற பகுதிகள் சில அறிவிக்கப்பட்டிருக்கின்றன. காமராஜர் சாலை, அண்ணா சாலை போன்றவையெல்லாம், இந்தப் பகுதியிலேயும் ஏராள

[திரு. உ. ரா. வரதராசன்]

மான ஊழியர்கள், தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். அலுவல கங்கள், தொழிலகங்கள் எல்லாம் உள்ளன. அவர்களுக்கும் ஜனநாயக உரிமைகள் தேவைப்படுகின்றன. அரசினுடைய நோக்கம் பிரதான சாலைகளிலே போக்குவரத்து தடைபடக் கூடாது என்பதாகத்தான் இருக்குமென்று நான் நம்புகிறேன். இந்த சாலைகளிலே ஊழியர்கள், உழைப்பாளிகள் அவர வர்களது நிர்வாகத்துக்கு எதிராகத் தங்கள் பிரச்சினையை வலியுறுத்த, ஆர்ப்பாட்டம், உண்ணாவிரதம் போன்றவற்றை நடத்துவதற்கு அனுமதிக்க வேண்டும். அதைத் தடுக்கிற நோக் கம் இந்த அரசுக்கு இருக்காது என நான் நம்புகிறேன். எனவே இந்தப் பகுதிகளிலும், காவல் துறைக்குத் தெரிவித்துவிட்டு இயக்கங்கள் நடத்தலாமென்று அறிவிக்க வேண்டும். காவல் துறை, போக்குவரத்தை அனுமதிக்கத் தேவையான அளவுக்கு இந்த இயக்கங்களைத் தடை செய்யாமல் ஒழுங்குபடுத்தவேண்டும். இதற்கான விளக்கத்தையும் முதல்வர் அவர்கள் அளிக்க வேண்டுமென்று நான் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். இது தொடர்பாக இந்த அறிவிப்புக்கு முன்பு, 19—4—1990 அன்று சென்னை மாநகரத்தினுடைய காவல் துறை ஆணையர் அவர்களுடைய பேட்டி, சில தீங்கான கருத்துக்களை உள்ளடக்கி உள்ளதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

பாமர மக்களுடைய உரிமைகளைப் பற்றி 'காமன் மேன்' பற்றி 'கமிஷனர்' மிகவும் கவலைப்பட்டிருக்கிறார். " The liberty to stretch my arm ends at the tip of the other man's nose " என் கையை நீட்டுவதற்கு எனக்குள்ள சுதந்திரம் அடுத்தவரின் மூக்கின் நுனியோடு முடிவடைகிறது என்று அவர் சொல்லி யிருக்கிறார். Where does the liberty of the Police Commissioner to wield his stick end? தடியைச் சுழற்றுகின்ற காவல் துறை ஆணையருடைய சுதந்திரம் எங்கே முடிகிறது? அதற்கு ஏதேனும் முடிவு இருக்கிறதா? அது பாமர மக்களின் மண்டையையும் உடைத்தெறியும் அளவுக்கு அல்லவா அந்தச் சுதந்திரத்தைத் தேடுகிறது? ஊர்வலம் போகும் உழைப்பாளிகள் என்ன பாமர மனிதர்கள் அல்லவா? உண்ணாவிரதம் இருக்கிற 'காண்ட்ராக்ட்' அத்துக் கூலிக் கொத் தடிமைகளைவிட வேறு யார் பாமர மனிதன்? நமது 'கமிஷனர்' பாமர மனிதர்களைப் பற்றி உதட்டளவில் உச்சரித்தாலும், அவரது அக்கறையெல்லாம் சொகுசாக குஷன் நாற்காலிகளிலே காலாட்டி அமர்ந்து, குளு குளு காரிலே பவனி வரும் மேட்டுக் குடிமகனைப் பற்றியதாகத் தான் இருக்கிறது. He is more con- cerned about the liberty of the high society gentry sitting in cosy cushions and roving in air-conditioned cars. இன்னொன்றையும் அவர் சொல்லியிருக்கிறார். கல்லூரி நிலைய வளாகத்திற்குள்ளே



[திரு. உ. ரா. வரதராசன்]

காவல் துறை நுழைவதைப் பற்றிய கருத்து அது. கற்பழிப்பு போன்ற குற்றங்கள் கல்லூரி வளாகத்திற்குள் நடந்தால், கல்லூரி முதல்வருடைய அனுமதிக்குக் காத்திராமல் நுழை வோம் என்று சொல்லியுள்ளார்.

10-30 மணி

இது ஆபத்தான கருத்து மட்டும் அல்ல. மாணவ சமுதாயத்தின் மீது ஒரு அபாண்டமான குற்றச் சாட்டு, அவதூறு. சென்னை யிலோ, தமிழ்நாட்டிலோ எனக்கு நினைவு தெரிந்த வரையிலே எந்தக் கல்வி நிலைய வளாகத்திலும் கற்பழிப்பு சம்பவம் நடந்து, கல்லூரி முதல்வர் அனுமதிக்குக் காத்திராமல் காவல் துறை நுழைய வேண்டிய கட்டாயம் என்றைக்கும் ஏற்படவில்லை. கமிஷனர் தன்னுடைய நிலைக்கு நியாயம் தேட கற்பனைகளைப் புனைய முற்படுவது சரியல்ல. இந்தக் கருத்து கடும் கண்டனத் திற்குரிய கருத்து. கல்லூரி நிலைய வளாகங்களுக்குள்ளே கல்லூரி முதல்வரின் அனுமதி இல்லாமல் காவல்துறை நுழையக் கூடாது என்பதைக் கண்டிப்பாக இந்த அரசு காவல் துறைக்கு அறிவுறுத்த வேண்டும். சென்னை மாநகரக் கமிஷனர், அரசு இன்றைக்கு அறிவித்திருக்கின்ற— அவர் மூலமாகத்தான் அந்த அறிவிப்பும் வந்து இருக்கிறது— கொள்கைக்கு ஏற்ப காவல்துறை யினுடைய நடைமுறையை மாற்றிக் கொள்வார் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

தமிழகக் காவல் துறையினுடைய செயல்பாட்டிலே கவலை அளிக்கக் கூடிய ஓர் அம்சம் கள்ளச் சாராயத்திற்கும் காவல் துறைக்கும் உள்ள நீக்கமற்ற நெருக்கம். இதை முதலமைச்சர் அவர்களே உணர்வார். கடந்த ஆண்டு இதே மன்றத்திலே பேசுகின்ற போது ''சாராய சாம்ராஜ்ய அதிபர்கள் ஒருபுறம், போலீஸ் ஸ்டேஷன்களிலே மாமூல் மன்னர்கள் ஒருபுறம் என்ற அளவிற்கு அந்த மன்னர்களுடைய தொகை பெருகிக் கொண் டிருக்கிறது'' என்று வேதனையோடு சுட்டிக்காட்டிய முதலமைச் சர் "எனவே திருத்திக் கொள்ள வேண்டு"மென்று வேண்டுகோளாக விட்டார். பின்னர் ஒரு முறை இதே அவையிலே "கள்ளச் சாரா யத்திற்குத் துணை போகும் காவலர் மீதே குண்டர் சட்டம் பாயும்'' என்று அவர் கடுமையாகவே எச்சரித்தார். ஆனாலும் கூட நிதிநிலை அறிக்கையிலே, வேலியே பயிரை மேய்வது போல, சமூக விரோதிகளுக்கு எதிர்பாராத இடங்களிலேயிருந்து கை குலுக்கல் கிடைப்பதை வேதனையோடு முதல்வரே சுட்டிக் காட்டியிருக்கிறார். மலிவு விலை மது ஒருவேளை கள்ளச் சாராயத்திற்கு இரையாகி உயிரிழக்கின்ற அப்பாவிக் குடிமகனுக்கு 'அப் பாவி குடி மகனுக்கு' ஒரு பாதுகாப்பு, அவ்வளவு தான். ஆனால் கள்ளச் சாராயத்தைக்

கட்டுப்படுத்துவது என்பது வேறு. காவல்துறையில் தவறு நடப்பதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். சமூக விரோதிகளோடு கைகுலுக்குகின்ற காக்கிச் சட்டைக்கரங்கள் தண்டிக்கப்பட வேண்டும்- துண்டிக்கப்பட வேண்டும் என்று நான் சொல்ல மாட்டேன்- தண்டிக்கப்பட வேண்டும்.

எனக்கு ஏற்பட்ட ஒரு வேதனையான அனுபவத்தை நான் சொல்ல விரும்புகிறேன். எனக்கு ஒரு பெற்றோர் ஃபோன் செய்தார்கள், 'ஊரிலே நடந்த ஒரு தகராறுக்காக சில பேரைக் கொண்டு போன போது, என்னுடைய மகனை காவல் நிலையத் திலே கொண்டுபோய் வைத்திருக்கிறார்கள். அவனுக்கு நாளைக்கு ஒரு என்ட்ரன்ஸ் எக்ஸாமினேஷன். வேலைக்கான ஒரு தேர்வு. அதற்கு ஹால் டிக்கெட் கூட இருக்கிறது. அவனை எப்படியாவது வெளியே அனுப்பச் சொல்லுங்கள்' என்று. நான் ஃபோன் செய்கிறேன். எஸ்.ஐ. இல்லை, இன்ஸ்பெக்டர் இல்லை என்று பதில். மற்ற காவல் நிலையங்களிலும் இப்படித் தான் பதில். டி.ஜி.பி. உட்பட, யாராக இருந்தாலும், உயர் அதிகாரிகளே கூட அவரவருடைய பணியிடத்திலே இல்லை யென்று சொன்னால், அவருடைய லொக்கேஷன்— எங்கேயிருக் கிறார் என்கிற விவரம்--அவருடைய அலுவலகத்திலே சொல்லிப் போக வேண்டும் என்பது நடைமுறை. ஆனால் கீழே உள்ள காவல் நிலையங்களிலே இந்த நடைமுறை கிஞ்சிற்றும் கடைப் பிடிக்கப்படுவது இல்லை. அதற்குப் பிறகு அங்கே இருக்கக் கூடிய ஊராட்சித் தலைவரிடமே நான் சொல்லியனுப்புகிறேன், ''போங்கள், எப்படியாவது நீங்களாவது ஜாமீன் கொடுத்து அந்தப் பையனை வெளியே கொண்டுவாருங்கள்'' என்று. 'முடியாது' என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டார்கள். அந்த ஊராட்சித் தலைவரும் வேதனையோடு, சலிப்போடு "நான் முயன்று பார்த்து விட்டேன், முடியவில்லை'' என்று எனக்கு 8 மணிக்கு ஃபோன் செய்கிறார். இரவு 11 மணிக்கு அதே ஊராட்சித் தலைவர் ஃபோன் செய்கிறார் "வெளியே வந்து விட்டான்'! என்று. "மகிழ்ச்சி தானே, ஒருவேளை எம்.எல்.ஏ. சொல்லி கேட்காவிட்டால் யாராவது மந்திரி சொல்லியிருப்பார் கள், அல்லது முதலமைச்சர் அலுவலகத்திலேயிருந்து ஃபோன் செய்திருப்பார்கள்''என்று நான் சொல்கிறபோது அவர் வேதனை யோடு சொன்னது ''இல்லை, இல்லை, எங்களுக்கெல்லாம் தலைக் குனிவை ஏற்படுத்தக் கூடியது, எங்கள் ஊர் பேட்டை சாராய ரௌடி போய் அந்தப் பையனை அழைத்து வந்து விட்டான்'' என்றார். அவன் வெளியே வந்ததிலே மகிழ்ச்சிதான் என்றாலும் கூட-- இதை நான் யாரையும் குறை சொல்வதற்காகச் சொல்லவில்லை-- கீழே எந்த அளவிற்கு அந்த நெருக்கம் நிறைந் திருக்கிறது என்பதற்கு ஒரு வேதனையான அனுபவம் என்பது தான்.



மாலை மயங்கினாலே நம்முடைய காவல் நிலையங்கள் தள் ளாட ஆரம்பித்து விடுகின்றன. அப்படிப்பட்ட நிலைமைகள் பல இடங்களிலே இருப்பதை நானே நேரில பார்த்துருக்கிறேன். பெண் காவலர்களுககே மாலை நேரத்துற்குப் பின்னாலே அவர் களுடைய காவல் நிலையப் பணியிடத்துலே பணி புரிவதற்கே பயமாக இருக்கிறது. பாதுகாப்பு இல்லை என்கிற அளவிற்கு நிலைமைகள் மோசமாகப் போய் இருககின்றன. சென்னையிலே சாராய கோஷ்டிகள் பட்டப்பகலிலே வன்முறைத்தாக்குதல்களிலே ஈடுபடுகிறார்கள. கொலைகள் எலலாம் நடக்கின்றன. இதைத் தடுத்து நிறுத்துவதற்கு ஏன் காவல் துறையால் முடிய வில்லை என்ற பிரச்சினையை கொஞ்சம் அழுத்தமாக, ஆழமாக சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று நான் நினைக்கிறேன். எனக்கு ஏசுநாதர் சொன்னதுதான் ஞாபகம் வருகிறது. ஒரு பெண்ணைக் கல்லால் அடித்து அவள் விபச்சாரி என்று சொன்ன போது அவர் சொன்னாராம், 'பாவம் செய்யாதவன் யாராவது இருந்தால் கல்லெடுத்து அடியுங்கள்' என்று. அந்த அளவிற்கு கள்ளச் சாராயம் சம்பந்தப்பட்ட விஷயத்திலே காவல் துறையில் பாவம் செய்யாதவர்கள் யாருமே இல்லையோ என்கின்ற அளவிற்கு போயிருக்கிறதோ என்கின்ற சந்தேகம் புரையோடிப் போயிருக் கிறது. அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். இது சம்பந்தமாக இன்னொரு பிரச்சினை. ஆயத் தீர்வையோடு சம்பந்தப்பட்ட விஷயம். ஆந்திராவிலிருந்து லாரிகளிலே சாரா யங்கள் அந்த பாலித்தின் கவர்களிலே வருகின்றன. கொளத் தூருக்குப் பக்கத்திலே அந்த நெல்லூர் சாலையிலே இங்கே அல்லது அங்கே என்று இடம் மாற்றி ஆட்டோக்கள் வரிசையாக நிறுத்தப்பட்டு நகரத்தினுடைய பல பகுதிகளுக்கும் பிரித்து அனுப்பப்படுவது என்பது வாரந்தோறும் நடைபெறுகிற ஒரு நிகழ்ச்சி. அந்த இடத்தைத் தான் இங்கே, அங்கே என்று மாற்று வார்கள். அந்த இன்னர் ரிங் ரோடுக்கு இந்தப் பக்கமா, அந்தப் பக்கமா என்பது தான் பிரச்சினை.

(10-35 மணி.)

அதேபோல் அண்டை மாநிலத்திலே நமது மாநிலத்தை விட மதுபான விலை குறைவு. அங்கே புதுவையில் மட்டும் தான் காரைக்காலில் இருந்து மதுபானம் கடத்தப் பாண்டியிலிருந்து, பட்டுக் கொண்டு வந்து தமிழ்நாட்டுக்குள்ளே விற்கிறது. இது நம்முடைய அரசுக்கு வருவாயைக் குறைப்பது மட்டும் அல்ல. இதையும் சேர்த்துக் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன்.

இன்னும் ஒன்றை இப்போது அமல் செய்து இருக்கிறார்கள். முகமூடிக்கொள்ளை எல்லாம் தடுக்கப்பட வேண்டும் என்பதற்காக டீக் கடைகள், பெட்டிக் கடைகள் எல்லாம் கூட இரவு 10 மணி, 10-30 மணிக்குள் மூடச் சொல்லி காவலர்கள்

[திரு. உ. ரா. வரதராசன்]

துன்புறுத்துகிறார்கள். ஆனால் மதுபானக் கடைகள் விற்பனை மட்டும் விடிய விடிய நடக்கிறது. பார் போல ஊற்றிக் கொடுக்கிற வியாபாரம் அனுமதிக்கப்படுகிறது. நேற்று ஒரு விவரத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் அவர்கள் சொன்னார்கள். மேலும் சில விவரத்தை இங்கே சொன்னால் அதற்குள் உஷார்படுத்தப்படுகிற நிலை எல்லாம் வந்து விடும் என்பதற்காக நான் தனியாக எழுதிக் கொடுக்கலாம் என்பதாக இருக்கிறேன். கேட்டால் ஐ.எம்.எப்.-இன் விற்பனை தமிழ்நாட்டில் குறைந்து விட்டது, அரசுக்கு வருவாய் குறைகிறது எனவே கண்டுகொள்ள வேண்டாம் என்று காவல் துறைக்கு சொல்லப்பட்டுள்ளது என்று ஒரு செய்தி. இந்த செய்தி தவறாக இருந்தால் நான் மகிழ்ச்சி அடைவேன். உண்மையாக இருந்தால் அது மாற்றப்பட வேண்டும்.

இதே போல் தான் சமூக விரோதிகளுக்கும் காவலர்களுக்கும் உள்ள தொடர்பு. சென்னையில் கடந்த 27-4-90 அன்று தாடண்டர் நகரிலே ஒரு சம்பவம். சாலை மறியல் நடந்து அசிஸ்டெண்ட் கமிஷனர் அங்கே ஸ்தலத்திற்கு விரைந்து அதிலே ஒரு முடிவு வந்திருக்கிறது. நல்லது. ஆனால் அங்கே குடியிருப்பவர்களை வந்து தாக்கியவர்களிலே சிலரை போலீசார் கைது செய்து காவல் நிலையத்திற்குக் கொண்டு போனார்கள். ஒரு சமூக விரோதி அங்கே ஸ்தலத்திற்கு வந்து கொக்கரிக்கிறான், பலர் முன்னிலையிலே போலீஸ்காரர்கள் இருக்கும் போது 'எந்த நாயடா எங்கள் ஆட்களை ஸ்டேஷனுக்கு கொண்டு போனது' என்று, அப்படி கொக்கரித்தது மட்டும் அல்ல' அடுத்த 2 மணி நேரத்திற்குள் அங்கே ஸ்டேஷனுக்குப் போனவர்கள் மீண்டும் வெளியே வந்து அந்தக் குடியிருப்புகளிலே உலவுகிறார்கள். இந்த அளவுக்கு சில சமூக விரோதிகளுக்கும் காவல் துறைக்கும் தொடர்பு இருக்கிறது என்பது அக்கறையோடு பார்க்க வேண்டிய விஷயம்.

சில சமூக விரோதிகளுக்கு எதிராக காவல் நிலையத்திலே புகார் கொடுத்தால் புகார் கொடுத்தவர் வீடுபோய்ச் சேருவதற்கு முன்பாகவே அங்கே அந்த சமூக விரோதிகளைச் சேர்ந்தவர்கள் வந்து மிரட்டுகிறார்கள், 'எனக்கு எதிராகவா புகார் கொடுத்தாய்' உன்னை உயிரோடு விடுகிறேனா பார்' என்று. இது ஊழலை விடக் கொடுமையானது. இந்த சமூக விரோதிகளுக்கும் காவல் துறைக்கும் இருக்கக் கூடிய தொடர்பு பற்றி எல்லாம் சொல்லுகிற போது ஒட்டுமொத்தமாகக் காவல்துறையைப் பழிக்கிறேன் என்று யாரும் நினைக்கக் கூடாது. அதிலே ஒரு மூலையில் ஒரு ஊனம் ஏற்பட்டாலும் கூட அது காவல்துறை முழுவதையும், காவல் துறையை நடத்துகிற அரசையும், முதலமைச்சரையும் அந்தப் பழி போய்ச் சேரக்கூடிய தன்மை இருக்கிறது என்பதால் தான் சொல்கிறேன்.



[திரு. உ. ரா. வரதராசன்]

நான் சிறுவனாக இருக்கும்போது பார்த்து இருக்கிறேன். இதே சென்னையில் சைனா பஜாரில்—அப்போது காவலர்களுக்கு எல்லாம் ஒரு நீண்ட தொப்பி உண்டு—அங்கே நடைபாதையில் வியாபாரம் செய்யக்கூடிய பெண்களிடத்திலே பழங்களை வாங்கி அந்தத் தொப்பிக்குள்ளே வைத்து தொப்பியைத் தலையில் போட்டுக் கொண்டு போவார்கள். அது சர்வ சாதாரணமாக நடக்கக் கூடியது. ஆனால் இப்போது அதெல்லாம் ஒன்றும் இல்லை என்று சொல்லக் கூடிய முறையிலே சமூக விரோதிகளோடு சேர்ந்து காவல் துறையினுடைய ஒரு பகுதியினர் நடத்தும் வேட்டைகள் பெருகி உள்ளன. ஆட்டோ சங்கர் விவகாரம் ஒரு தனிப்பட்ட நிகழ்வு அல்ல. It is not an isolated incident.

போலீஸ் நிலையத்தில் செல்வதற்கே சாதாரண மக்கள் பயப்படுகிற நிலை வந்து விட்டது. இன்றைக்கு அல்ல, இது பல ஆண்டுகளாகவே நீடிக்கிறது. இதை மாற்றுவதற்கு உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். காவல் துறை இன்றைக்கு மக்கள் முன்னால் மதிப்பு இழந்து கிடக்கிறது. Our Police force has lost its credibility. இதை, குற்றம் சொல்வதற்காக அல்ல, மிகுந்த கவலை உணர்வோடு நான் சொல்கிறேன். ஆகவே, இதை சீர் செய்ய போர்க்கால உணர்வோடு நடவடிக்கை எடுக்க வேண்டும். என்று நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

அடுத்து, காவல்துறையும் தொழில் அமைதியும் பற்றிய இந்த அரசினுடைய கண்ணோட்டம் பற்றிய சில கருத்துக்கள். 'மாநிலத்தின் எதிர்கால பொருளாதார ஆய்வு அறிக்கையில் வளர்ச்சிக்கு அமைதியான சூழ்நிலையும் தொழில் அமைதியும் மிகவும் அவசியமானது, இதற்குக் காவல்துறை துணை நிற்கிறது' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதோடு 105, 106 பத்திகளிலே சில வேலை நிறுத்தங்கள் பற்றிய குறிப்புகள் எல்லாம் கொடுக்கப்பட்டுள்ளன. நான் ஒன்றைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். பொருளாதார வளர்ச்சிக்குத் தொழில் அமைதியை உத்திரவாதம் செய்வது என்பதை தொழிலாளர் துறையினுடைய திறமையான செயல்பாட்டால் பெற முடியுமே தவிர காவல் துறை துணை நிற்பதன் மூலம் பெற முடியாது. தொழில் உறவுப் பிரச்சினையை ஒரு சட்டம் ஒழுங்குப் பிரச்சினையாகப் பார்க்கிற காவல்துறையினுடைய கண்ணோட்டம் மாற வேண்டும். வேலை நிறுத்தம் என்றால் பலாத்காரம், போராட்டம் என்றால் வன்முறை என்று சித்தரிக்கக்கூடிய போக்கு சரியல்ல. காவல்துறை, தொழிலாளர்களுக்கு சாதகமாக தலையிடாமல் இருந்தாலும் பாதகமாக தலையிட்டு ஊறு விளைவிக்காமல் நடுநிலைமையாக நின்றாலே போதும், தொழில் அமைதி நிச்சயமாக வரும். ஆனால் நம்முடைய அனுபவம் என்ன?

[திரு. உ.ரா. வரதராசன்]

தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் ஒப்பந்தத் தொழிலாளர்
கள் போராட்டம், அமைதியான உள்ளிருப்பு வேலை நிறுத்தத்
தில் போலீஸ் நுழைந்து தொழிலாளர்களை வெளியேற்றி
போராட்டத்தை நசுக்கும் நடவடிக்கைகளில் துணை நிற்கிறது
என்ற குற்றச்சாட்டு.

இப்போது புகளூர் காகித ஆலையிலே இதே அனுபவம்தான்.
பல்லடம் ஜெகநாதா டெக்ஸ்டைல்சிலும் உள்ளிருப்பு வேலை
நிறுத்தம் செய்தவர்களை வெளியேற்றி காவல்துறை நிர்வாகத்
திற்குத் துணை செய்தது. மணலி காண்ட்ராக்ட் தொழிலாளர்
கள் பிரச்சினை 2 ஆண்டுகளாகத் தீரவில்லை, அப்போதே ஏற்
பட்ட பிரச்சினைதான். ஆனால் இதனுடைய ஆரம்பம்
என்ன? உயர்நீதிமன்றம் தடை விதித்த போது, அந்தத்
தடை உத்தரவை கொண்டு போய்க் கொடுத்துப் பேச
வேண்டும் என்று போன தொழிற் சங்கத் தலைவர்களை போலீஸ்
தாக்கியது. அந்தத் தொழிலாளர்கள் மீது ஆளுநர் ஆட்சிக்
காலத்திலே போடப்பட்ட வழக்குகள் தொடர்கின்றன. இங்கே
இருக்கிற வழக்கு இல்லாமல் இப்போது செங்கற்பட்டு செஷன்ஸ்
கோர்ட்டுக்கு அதை 'கமிட்' செய்து அந்தத் தொழிலாளர்களை
மேலும் இழுத்தடிப்பதற்கு, தொல்லைக்கு உள்ளாக்குவதற்
கான முயற்சி எல்லாம் நடக்கிறது. இந்த வழக்குகளை
எல்லாம் வாபஸ் பெறுங்கள், தீர்வு காண்பதற்கு மாண்புமிகு
முதலமைச்சர் அவர்களே தலையிட்டுப் பேச்சுவார்த்தை நடத்துங்
கள் என்பது எங்களுடைய வேண்டுகோள்.

இன்றைக்கு, தொழில் அமைதிக் குறைவுக்கு என்ன காரணம்?
தமிழ்நாட்டில் மட்டும் அல்ல, இந்தியா முழுவதிலும் இன்
றைக்கு வேலை நிறுத்தங்களை விட கதவடைப்புகள் தான்
அதிகம்.

(10-40 மணி)

தொழிலாளிகளின் கோரிக்கைகள் காரணமாக உற்பத்தி
பாதிப்பதைவிட முதலாளிகளின் லே-ஆப், ஆட்குறைப்பு,
ஆலை மூடல், கதவடைப்பு காரணமாக இழக்கப்படும்
உற்பத்திதான் அதிகம் என்று புள்ளிவிவரங்கள், அரசாங்க
தரப்பினுடைய புள்ளி விவரங்கள் கூறுகின்றன. அது மைய
அரசானாலும் சரி, மாநிலங்கள் அரசானாலும் சரி, சொல்லி
வருகின்றன. தொழிலாளர் நலச் சட்டங்களை
அமல் செய்யாமல், குறைந்த பட்சக் கூலியைக்கூடக்
கொடுக்க மறுத்து, நிர்வாகங்கள் செயல்படுவதை சட்ட
விரோத, சட்ட ஒழுங்குப் பிரச்சினையாகக் காவல்
துறை எடுத்துக்கொள்வதில்லை. ஆனால் 'சட்டத்தை
அமல்படுத்து, குறைந்த பட்சக் கூலியைக் கொடு'



[திரு. உ. ரா. வரதராசன்]

என்று தொழிலாளர்கள் கூறினால், அது மட்டும்
சட்ட ஒழுங்குப் பிரச்சினையாக மாறி விடுவது ஏன்?
கிராமப்புறத்திலே எந்த ஆதரவும் இல்லாமல், விவசாயத்
தொழிலாளி, சட்டப் படியான குறைந்த பட்ச
விவசாயக் கூலியைக் கேட்டுப் போராடினால்
அதை முறியடிப்பதற்கு வெளியூர்களிலேயிருந்து ஆட்களைக்
கொண்டு வருகிறார்கள் முதலாளிகள். அப்படி கொண்டு
வருகின்ற நேரங்களிலே அந்த முதலாளிக்கு, நில முதலாளிக்கு,
நிலப் பிரபுவுக்கு துணையாக காவல்துறை நிற்கலாமா? நிற்கக்
கூடாது என்ற அந்தக் கருத்தை வலியுறுத்த விரும்புகிறேன்.

இங்கேதான் எங்களுடைய மாற்று அணுகுமுறையை நான்
சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கேரளத்திலே, மேற்கு வங்கத்
திலே எங்களுடைய ஆட்சி நடக்கிற மாநிலங்களிலே,
மேற்கு வங்கத்திலே ஜோதிபாசு முதலமைச்சராக இருக்கிறார்,
அன்றைக்கு ஒரு நாள், இங்கே நண்பர் ராஜேந்திரன் அவர்கள்
என்று நினைக்கிறேன், அவர் பேசுகின்றபோது சொன்னார்,
அங்கே தொழில் அமைதி சிறப்பாக இருக்கிறது, முதலாளி
களெல்லாம் பாராட்டுகிறார்கள் என்று. அங்கே அரசு என்ன
செய்கிறது? முதலமைச்சர் ஜோதிபாசுவே சொல்கிறார்;
''எனக்காகக்கூட, என்னுடைய ஆட்சி இருக்கிறதே என்பதற்காகக்
கூட, தொழிலாளி, நீ, உன்னுடைய வேலை நிறுத்தம் என்கிற
ஆயுதத்தைக் கீழே போட்டு விடாதே'' என்று சொல்லக்கூடிய
ஒரு முதலமைச்சராக அவர் இருக்கிறார். அதுமட்டுமல்ல,
தொழில் தகராறிலே போலீஸ்துறை தலையிடாது என்கின்ற
அறிவிப்பு அமல்படுத்தப்படுகிறது. கிராமப்புறத்திலே, 'இதுதான்
அரசாங்கம் உனக்கு நிர்ணயித்து இருக்கக்கூடிய விவசாயக்கூலி,
குறைந்த பட்சக்கூலி, இதற்குக் குறைவாகக் கொடுத்தால்
நீ புகார் செய், உன்னைப் பாதுகாக்கிறோம்' என்று அறிவிக்கிற
அரசாங்க சுவரொட்டியை போலீஸ்கொண்டுபோய் அங்கேயுள்ள
கிராமங்களிலே ஒட்டுகிறது. இத்தகைய விவசாயியை, குத்தகை
விவசாயியை....

திரு. பி.வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்
வரதராசன் அவர்கள் குறிப்பிடுகின்ற மேற்கு வங்காளத்தி
னுடைய தொழில் அமைதி, காங்கிரஸ் தொழிலாளர்களுக்கு
மட்டும் மறுக்கப்படுகிறது. அங்கே காங்கிரஸ் தொழிலாளர்
கள், ஐ.என்.டி.யு.சி. தொழிலாளர்களுடைய மண்டையை
மேற்கு வங்கப் போலீசாருடைய கைத்தடிகள் பிளந்துகொண்டு
இருக்கின்றன. அதற்கான ஆதாரங்களை பத்திரிக்கைகளி
லேயே நீங்கள் பார்க்கலாம்.

**திரு. உ.ரா. வரதராசன் :** மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, காங்கிரஸ் தொழிலாளர்கள்
அல்ல. காங்கிரஸ் கட்சிக்காரர்கள் டைம் பாம்-களையும் ஆசிட்
பல்பு-களையும் துப்பாக்கிகளையெல்லாம் வைத்துக் கொண்டு
தலைமைச் செயலகம் இருக்கிற ரைட்டர்ஸ் பில்டிங் வரையி
லேயும் போய் போராட்டம் நடத்துவதற்குக்கூட அங்கே உரிமை
இருந்திருக்கிறது என்பதை பத்திரிகைச் செய்திகள் பகிரங்க
மாகச் சொல்லியிருக்கின்றன. எந்த உரிமையும் அங்கே
புள்ள ஐ.என்.டி.யு.சி. தொழிலாளிக்கு உட்பட மறுக்கப்பட
வில்லை என்பதுதான் யதார்த்தமான உண்மை. குத்தகை
விவசாயியை நிலத்தைவிட்டு வெளியேற்ற போலீஸ் துணை
நிற்காது என்று அந்த அரசு உறுதியாகச் செயல்படுகிறது. இதை
நான் சொல்கிறபோது, ஏதோ நாங்கள் ஒரு உச்சாணிக்கொம்
பிலே, உயர்ந்த பீடத்திலே நின்றுகொண்டு உபதேசம் செய்வ
தாக, தயவுசெய்து தவறாக எண்ணி விடாதீர்கள். மேற்கு
வங்கத்திலேயும் கேரளாவிலேயும் இந்த அணுகு முறை,
இந்தக் கொள்கை, தந்திருக்கிற நல்ல பலனை எங்கள்
அனுபவமாக உங்கள் முன்னாலே வைக்கிறோம். இந்த
அனுபவம் நமது மாநிலத்திற்கு உதவியாக இருக்கும் என்ப
தால்தான் பணிவன்போடு சொல்லிக்கொள்கிறோம்.
தொழில் அமைதி என்பது தொழிலாளர்களை மன நிறைவுற்ற
வர்களாக, மன நிறைவு பெற்றவர்களாக ஆக்குவதன் மூலமாக
மட்டுமே காக்கப்பட முடியும் என்கிற அடிப்படையில் காவல்
துறையினுடைய கொள்கையை மாற்றுங்கள் என்று நான்
பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இந்த ஆய்வு உரையிலே இருப்பதை
மீண்டும் மீண்டும் படித்துப் பார்த்தேன். எவ்வளவோ வழக்கு
களைப்பற்றியெல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் ஒரு
...டத்திலாவது இராமநாதபுரம் சோதனைச் சாவடியில் நடை
பெற்ற அந்த கோர சம்பவம் பற்றி, இலங்கைப் போராளிகள்
...ரிலே வந்து, வழிநெடுக சுட்டுவிட்டு சென்ற நிகழ்ச்சி இடம்
...றவே இல்லை. தமிழகத்தினுடைய அமைதி சீர்குலை
...திலே, இங்கே, இலங்கைப் போராளிக் குழுக்கள் ஆயுதங்க
...ோடு உலவுவது என்பது ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது என்பது
...துரதிருஷ்டமான உண்மை. இதில் பிரதான பங்கு எல்.டி.டி.இ.
...னருக்கு உண்டு என்ற எண்ணம், சந்தேகம் நியாயமாக எழுந்
...திருக்கிறது. எல்.டி.டி.இ.யினரை விமர்சனம் செய்து யாரும்
...தையும் தமிழ்நாட்டிலேயே பேச முடியாது என்கிற அளவிற்கு
...நிலைமைகள் போவது சரியல்ல என்பதை நான் சுட்டிக்காட்ட
...நம்புகிறேன். இந்த அரசு இலங்கைத் தமிழரை ஆதரிக்
...து, அவர்களுக்குத் துணை நிற்கிறது என்பது நல்லது;
...ராட்டத்தக்கது. அந்த உணர்வோடு நிச்சயமாக
...ங்களும் ஒன்றியிருக்கிறோம். ஆனால், தமிழ்நாட்டிலே



இலங்கைப் போராளிகள், அது யாராக இருந்தாலும் எந்தக்
குழுவாக இருந்தாலும் வன்முறையிலே, சமூக விரோதச்
செயல்களிலே ஈடுபட்டால் அதை ஒடுக்க அரசு உறுதியாக நட
வடிக்கை எடுக்க வேண்டுமென்பதை நான் வலியுறுத்திச் சொல்ல
விரும்புகிறேன். இந்த விஷயத்திலே காவல்துறையினருடைய
கைகள் கட்டப்பட்டு விட்டனவோ என்ற சந்தேகம் எழக்கூடிய
நிலைமை இன்றைக்கு வந்திருக்கிறது. இலங்கைத் தமிழர்களு
டைய ஆயுதச் சண்டைகள், பங்காளிச் சண்டைகள் இந்த
மண்ணிலே வேண்டாம், இந்தத் தமிழ்நாட்டு மண்ணை அந்த
ஆயுதங்கள் ரத்தக்களரி ஆக்க அனுமதிக்க வேண்டாம் என்று
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் இந்த அரசையும்
நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தமிழ்நாட்டிலே முகமூடிக் கொள்ளைகள்
பெருகிவருவது நமக்கெல்லாம் கவலையளிக்கக்கூடிய ஒன்று.
1989-ஆம் வருட ஆய்வு உரையைப் பார்க்கிறபோது, இந்தக்
கொள்ளைகள் பெருகி இருக்கின்றன. ஆனால், இது ஏதோ
கிராமப்புற மக்கள் நகரங்களுக்கு வருவதால் நடப்பது போல
இந்த ஆய்வு உரையிலே சொல்லப்பட்டிருப்பது சரியல்ல.

(10-45 மணி)

சென்னை புறநகர் பகுதியில் குறிப்பாக மதுரவாயல், வலசர
வாக்கம், அண்ணாநகர் போன்ற பகுதிகளில், அதாவது
புறநகர் விரிவாக்கப் பகுதிகளில் மற்றும் கோவையிலே, திருச்சி
யிலே முகமூடிக் கொள்ளைகள் நடந்திருக்கின்றன. இது திட்ட
மிட்டு ஆயுதம் தாங்கிய ஒரு திறமையான பயிற்சி பெற்றவர்கள்
நடத்தக்கூடிய கொள்ளையாகத்தான் இருந்து கொண்டிருக்கிறது
என்பது தெரிகிறது. 25 சனவரி 1990-லே கோவை
திருமூர்த்தி லே-அவுட்டிலே நடந்த கொள்ளை தொடர்பான
விவரங்கள் அதிர்ச்சி அளிக்கக்கூடியதாக அமைந்திருக்கின்றன.
தோழர் எஸ்.ஆர்.பி. அவர்களும் அதைக் குறிப்பிட்டார்கள்.
போலீஸ் உடனே வந்திருந்தால் கொள்ளையர்கள் பிடிபட்டி
ருப்பார்கள். ஆனால் காலை 5 1/4 மணிக்குப் பிறகுதான்
போலீஸ் போய்ச் சேர்ந்திருக்கிறது. இந்த முகமூடிக்கொள்
ளைக்கு முற்றுப்புள்ளிவைக்கஒரு உறுதியான நடவடிக்கை தேவை.
அதற்குத் தேவையான போலீஸ் பிரிவை உருவாக்கவேண்டும்
என்று நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஜாதிய வகுப்புக் கலவரங்கள், அமைதியாக இருந்த
தமிழகத்தில் இன்றைக்குப் பெருகி வருவது மிகுந்த கவலை
அளிக்கக்கூடிய ஒன்றாக இருக்கிறது. அதனுடைய விவரங்
களுக்குள் நான் போக விரும்பவில்லை. எவ்வளவோ சம்ப

வங்கள் இன்றளவில் நடந்திருக்கின்றன. ஆனால் ஆய்வுரையிலே குறிப்பிடுகிற தடுப்பப்பணிகளைப் பொறுத்தவரையில், முன்கூட்டியே தகவல் சேகரித்தல், அமைதி காத்திட நடவடிக்கை என்பவற்றில் காவல் துறை முன்கை எடுத்துச் செயல்பட்டதா என்பது நிறைவளிக்கக் கூடியதாக இல்லை. அந்த அளவுக்கு அவர்கள் செயல்படவில்லை என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். இதிலே ஒரு அபாயகரமான போக்கு, இத்தகைய ஜாதீய வகுப்பு வாத அமைப்புகளிலேயும் அதனுடைய செயல்பாட்டிலேயும் காவல் துறையைச் சேர்ந்தவர்கள் பங்கேற்பது, தொடர்பு கொள்வது என்பதாகும்.

குமரி மாவட்டத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்களாகிய எங்களுக்கு எதிராக ஆர். எஸ். எஸ். ஊழியர்கள் நடந்துகொண்டது பற்றி இங்கே நாங்கள் எடுத்து வைத்திருக்கிறோம். அந்த ஆர்.எஸ்.எஸ்-சுக்கு ஆதரவாக அங்கே அருமனையிலே இருக்கக்கூடிய போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் சத்தியதாஸ் என்பவர் செயல்பட்டதாக நாங்கள் சுட்டிக்காட்டியிருக்கிறோம். அவருடைய காலத்தில்தான் சுதாகரன் என்ற எங்களுடைய அருமைத் தோழர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் நடந்திருக்கிறது. இதே சட்டமன்றத்தில் அந்த சப்-இன்ஸ்பெக்டர் இட மாற்றம் செய்யப்படுவார் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். ஆனால் அதே சத்தியதாஸ் அதே அருமனை காவல் நிலையத்திற்கு மீண்டும் அனுப்பப்பட்டிருக்கிறார். இது எப்படி நிகழ்கிறது என்பது எங்களுக்குப் புரியவில்லை. அவர் அங்கே மீண்டும் சென்றதற்குப் பிறகு 19, ஏப்ரல் 1990-இல் தோட்டத் தொழிலாளி கிருஷ்ணன் என்பவர் ஆர்.எஸ்.எஸ். காரர்களால் குத்தி படுகாயப்படுத்தப்பட்டு இருக்கிறார். 26, ஏப்ரல் 1990-இல் புலியூர் சாலையிலே முத்தம்மாள் என்ற 70 வயது பெண் கொலை செய்யப்பட்டு இருக்கிறார். அவரது மகளும் தாக்கப்பட்டிருக்கிறார். அப்படிப்பட்ட சம்பவங்கள் நடந்திருக்கின்றன.

இதுமட்டுமல்ல, இன்னொன்றும் நடந்திருக்கிறது. அமிர்தலிங்கம் என்ற ஹெட் கான்ஸ்டபிள் குலசேகரம் ஸ்டேஷனிலே இருந்தபோது இந்த மன்றத்திலே சட்டமன்ற உறுப்பினராக இருந்த திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்களை நேரடியாகக் கொலை செய்வதாக பிரகடனம் எல்லாம் படுத்தினார். அவர் பிறகு இடமாற்றம் எல்லாம் கூட செய்யப்பட்டார். ஆனால், அவர் இப்போது குலசேகரத்திற்கு அருகிலே உள்ள தக்கலைக்கு அனுப்பப்பட்டு இருக்கிறார். இப்படி பிரச்சினைகள் வந்து, சிக்கல்களும் வந்த பிறகும் கூட அவர்களை எல்லாம் அங்கே அனுப்புவது என்பது எப்படி நிகழ்கிறது என்பது எங்களுக்குப் புரியாத புதிராக இருக்கிறது.



காவல்துறை இந்த வகுப்புவாத சக்தியோடு சேர்ந்து இருப்பதைத் தடுப்பதற்கு உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்திக்கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். ரு மதச் சார்பற்ற ஜனநாயக அரசினுடைய காவல் துறையும் மதச் சார்பற்றதாக ஜாதிக்கு அப்பாற்பட்டதாக ஜனநாயக உணர்வு கொண்டதாகச் செயல்பட வேண்டும் என்று நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். எனவே இதற்கு ஒரு உறுதியான அரசியல் நெறிபடுத்துதல் (Politic direction) தேவைபபடுகிறது. இதை உறுதி செய்யுங்கள் இல்லாவிட்டால் தமிழ்நாட்டின் நிலைமை இன்னும் சீரழியக்கூடியதாக ஆகிவிடும்.

வகுப்புக் கலவரங்களைத் தடுக்க அவ்வப்போது நாம் அமைதிக் குழுக்களைப போடுகிறோம். அதெல்லாம் போதாது இதை ஒரு இடையீடு இல்லாத தொடர்ச்சியான முயற்சியாக அமைத்துக்கொள்ளவேண்டும். அந்த அமைதியைப் பாதுகாக்கிற பணியில் நாமெல்லாம் சேர்ந்து செயல்படுவதற்கான வாய்ப்பை அரசும், முதலமைச்சர் அவர்களும் உறுதி செய்யவேண்டும்.

குடியுரிமைச் சட்டத்தை அமல்படுத்துவது என்பது காவல் துறையினுடைய பணிகளில் ஒன்றாகச் சொல்லப்படுகிறது. ஆனால் ஏழை மக்களுடைய குடியிருப்புகளைப் பறிக்கிற கொடுமைகளுக்கு காவல் துறை துணையாக நிற்பதை பல நிகழ்வுகளில் நாம் பார்க்க முடிகிறது. தர்மபுரி மாவட்டம் அரூர் வட்டத்திலே காதர் வலசை, வாழைத்தோட்டம் போன்ற பகுதிகளில். அந்த மலைப் பகுதி மக்கள் கோவில் நிலத்தில் காலம் காலமாக இருந்தவர்களைச் சில சமூக விரோத சக்திகள் சுயநல சக்திகள் அப்புறபடுத்துகின்ற நிலைமைக்குப் போய் இருக்கிறார்கள். அது பற்றிய விவரம் எல்லாம் என்னிடத்திலே இருக்கிறது. நான் தரத் தயாராக இருக்கிறேன். அங்கேயும் போலீஸ் அவர்களுக்குத் துணையாக நிற்கிறது அந்த மக்களை வெளியேற்றுவதற்கு . அதேபோல் திண்டுக்கல் வட்டம் சிக்களம்பட்டியில் 90 தாழ்த்தப்பட்ட குடும்பங்கள் வெளியேற்றப்படுகிற நிலைமை ஏற்பட்டுஇருக்கிறது. வில்லிவாக்கம் ஒன்றியத்தில் பொத்தூர் என்ற கிராமத்தில் காலம் காலமாக விவசாயம் செயது கொண்டிருந்த குடும்பங்களை வெளியேற்ற சிலர் முற்பட்ட நிலைமைகள் எல்லாம் ஏற்பட்டன. இவற்றுக்கு எல்லாம் போலீஸ் துணை நிற்பது என்கிற போக்கு சரியல்ல. அங்கே குடிசை வாழ் மக்களை தாழ்த்தப்பட்டவர்களை விவசாயத் தொழிலாளர்கள், குத்தகை விவசாயிகளை, குடியிருப்பைப் பறித்துக்கொண்டு விரட்டும் சக்திகளுக்குக் காவல் துறை துணை போகாமல் தடுத்து நிறுத்த வேண்டும் என்று நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து காவலர் நலன் பற்றிய ஒரு சில கருத்துக்கள். காவலர் களின் எண்ணிக்கை.....................................

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒரு மணித் துளியில் முடித்துவிடுங்கள்.

திரு. உ. ரா. வரதராசன் : துணைத் தலைவர் அவர்களே, காவலர்களின் எண்ணிக்கை என்பது போதாததாக இருக்கிறது. தமிழகத்தில் இன்றைக்குப் பெருகி வரக்கூடிய நிலைமைக்கு அது ஏற்றதாக இல்லை. அது உயர்த்தப்பட வேண்டும். தேவைக் கேற்ப அந்த நியமனத்தை அதிகப்படுத்துங்கள். காவலர்களுக் கான வீட்டு வசதியைப் பொறுத்த வரையில் இன்றைக்கு இருக் கிற நிலைமை போதுமானதாக இல்லை. 80 சதவீதம் இலக்கு என்று சொல்லப்படுகிறது. ஆனால் எட்டியதோ 30 சதவீதம் ஒரு பகுதியிலும் 40 இன்னொரு பகுதியிலும், அவ்வளவுதான். இந்த இலக்கை எட்டுவதற்கு மத்திய அரசிடமிருந்து நிதியுதவி யும் பெற்று மற்ற நிதி நிறுவனங்களிடமிருந்து நிதியுதவியும் பெற்று விரைவாகச் செயல்படுங்கள்.

(10-50 மணி)

காவல் துறையில் கேட்டகிரி 1, மற்றும் 2 என்று பிரித்து இருக்கிறார்கள். அந்த கேட்டகிரி 1-ல் 65,000 பேரும், கேட்டகிரி 2-ல் 400 பேரும் இருக்கிறார்கள். இந்த 400 பேரையும் சட்டப் பயிற்சி அளித்து, ஒரே கேட்டகிரியாக உரு வாக்க வேண்டுமென்பது அவர்களது நீண்டநாளைய கோரிக்கை. அவர்களுடைய அந்தக் கோரிக்கையை பரிசீலிக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். காவல் துறையில் ஆர்டர்லி முறை ஒழிக்கப்பட்டு விட்டது என்று சொல்லப்படுகிறது. அப்படி ஆர்டர்லி இல்லாமல், அந்தப் பணிகளை நடத்து வதற்கு அந்த அதிகாரிகளுக்கு 300 ரூபாய் உதவித் தொகை அளிக்கப்படுகிறது. அப்படி அந்தப் பணத்தை வாங்கிக்கொண்ட அதிகாரிகள் கூட, காவல்துறையின் காவலர்களை ஆர்டர்லியாக வைத்துக்கொண்டு பயன்படுத்துகிறார்கள் என்பது இன்றைக்கும் நடக்கிறது.

சிறப்புக் காவல் பிரிவினருக்கு சில குறைகள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அவர்கள் பெயர்தான் சிறப்பே தவிர, நிலைமைகள் அவலம் நிறைந்தது. அப்படி அவலம் நிறைந்த ஊழியர்களாக அவர்கள் இருக்கிறார்கள். கடந்த கால ஆட்சி யின் நடைமுறைகள் காரணமாக அவர்கள் பதவி உயர்வு இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய குறைகளை நிறைவேற்றுவதற்கு—நிவர்த்தி செய்வதற்கு—நட வடிக்கை எடுங்கள். சிறப்புக் காவலர்களின் பயணப்படி பற்றி



குறிப்பிடும்போது, அடிப்படைச் சம்பளத்தில் 40 சதவீதம் இருக்க லாம் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அவர்கள் போக்குவரத்துக்குப் பயணம் செய்யும் போது, வாரண்ட் டைப் பயன்படுத்தினால், அந்த வாரண்டுக்கான பணம் அதிலிருந்து கழிக்கப்படுகிறது. அதைக் கழிக்காமல் அந்த பயணப் படியை முழுமையாகக் கொடுக்க ஏற்பாடு செய்யுங்கள். காவல்துறையில் காவலர்களுக்கும், தலைமைக் காவலர்களுக்கும் அடிப்படைச் சம்பளத்தில் இடையில் இடைவெளி அதிகமாக இருக்கிறது. அந்த ஊதியக் குறைபாட்டைச் சரி செய்யுங்கள்.

1987-ல் தேர்வு செய்யப்பட்ட காவலர்கள் பயிற்சிக்கு அனுப்பப்படவோ, பணியமர்த்தப்படவோ இல்லை. அவர் களுக்குப் பணி அமர்வு கிடைக்க நடவடிக்கை எடுங்கள் . கிரேடு 1 காவலர்களைப் பற்றி 26, ஜூலை 1971-ல் போடப்பட்ட அரசாணை 1154. அது இன்னமும் செயல்படுத்தப்படவில்லை. அதை அமல்படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காவலர்களுக்கு 5 நாள் வேலை என்பது இல்லை. ஆனால் வாரம் 5 நாள் என்று வேலைநாளாக வந்தபோது, அவர்களுக்கு 20 நாள் தற்செயல் விடுப்பு எடுத்துக்கொள்ள அனுமதிக்கப் பட்டது. பிறகு 12 நாளாக குறைக்கப்பட்டது. அவர்களுக்கு வாரம் 2 நாள் இருப்பதை விடுமுறையாகக் கொடுக்கவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அந்த நாட்களில் அவர்கள் வேலைக்கு அழைக்கப்பட்டால் 10 ரூபாய் வழங்கப்படுகிறது. அதை முழுச் சம்பளமாக வழங்குவதற்கு ஏற்பாடு செய்யுங்கள். ஒரு நாளைக்கு 8 மணி நேரம் அரசு வேலை நேரம் என்று நிர்ணயித்திருந்தாலும் அவர்கள் 12மணி நேரத்திற்குமேல்வேலை வாங்கப்படுகிறார்கள். அதற்கு முற்றுப்புள்ளி வைத்து ஒரு வாரத்தில் மொத்த வேலை நேரத்தை நிர்ணயம் செய்து, வேலை வாங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். முக்கிய மான காலங்களில் அவர்களை மொபிலைஸ்—அதாவது திரட்டு கிறார்கள். அப்படி திரட்டப்படுகிறபோது, அன்றைக்கு எல் லாம் அவர்கள் 24 மணி நேரம் கூட தொடர்ந்து பணியாற்ற வேண்டிய நிலை ஏற்படுகிறது. அப்படி வேலை செய்கிறபோது அவர்களுக்கு உணவுக் கட்டணமாக 6ரூபாய் மட்டும் கொடுக்கப் படுகிறது. அதை மாற்றுங்கள், அவர்களுக்கு குறைந்தபட்ச மாக உணவுக் கட்டணமாக 20 ரூபாயாவது கொடுக்க அந்த நாட்களில் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கி றேன்.

1980 ஆம் வருடம் எடுக்கப்பட்ட இரண்டாம் நிலைக் காவலர்கள் இன்னமும் முதல்நிலைக் காவலர்களாக்கப்பட வில்லை. அதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்

கொள்கிறேன். அதேபோல, சப்-இன்ஸ்பெக்டர்கள், டிபுடி இன்ஸ்பெக்டர்கள், இன்ஸ்பெக்டர்கள் என்று மூன்று அடுக்கு முன்பு இருந்தது. அது 1982-ல் குறைக்கப்பட்டு, டிபுடி இன்ஸ்பெக்டர் பதவிகள் ஒழிக்கப்பட்டு இரண்டு அடுக்குகளானது. அந்த டிபுடி இன்ஸ்பெக்டர் பதவிக் காலத்தோடு சேர்த்துக் கணக்கிட்டால் அவர்களுக்கு செலக்ஷன் கிரேடு ஊதியம் கிடைக்கும் என்று சொல்லப்படுகிறது. இதேமாதிரி ஃபாரன்சிக்—தடய அறிவியல் துறையில் எம்.எஸ்.சி. படித்தவர்கள் உதவியாளர்களாக இருக்கிறார்கள் தற்காலிகமாக. அவர்கள் நிரந்தரப்படுத்தப்படாமல் இருக்கிறார்கள். இப்போது மதுவிலக்குப் பிரிவு காவல்துறையில் இணைக்கப்பட்டுவிட்டதால், மதுவிலக்குப் பிரிவுக்கு என்று ஏற்படுத்தப்பட்ட அடிஷனல் சூப்பிரெண்ட்டெண்ட் ஆப் போலீஸ் பதவி போன்றவைகள், அந்த அதிகாரிகள் பதவியில் இருக்கும் வரைதான் நீடிக்கும் என்றும், இனி மாறாக, அந்தப் பதவிகளுக்கு பதவி உயர்வு கிடைக்காது என்றும் சொல்லப்படுகிறது. அதை மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காவல்துறைக்கு சங்கம் அமைக்கும் உரிமை வழங்கப்பட வேண்டுமென்பது எங்களுடைய நீண்ட நாளைய கோரிக்கை. கடந்த ஆண்டு கூட பேசும்போது, நானே அதற்கு தலைவராக இருந்து அந்த சங்கத்தை நடத்துகிறேன் என்று முதலமைச்சர் அவர்களே சொன்னார்கள். அன்று ராஜேந்திரன் வயது ஆகி விட்டதால் வேலையை குறைத்துக்கொள்ளுங்கள் என்றதுபோல நான் சொல்லமாட்டேன். காவல்துறையில் காவலர்கள் அவர்களாகவே சங்கம் அமைத்து நடத்துவதற்கு நீங்கள் ஏறபாடு செய்ய அனுமதி வழங்குங்கள். அவர்களில் பழிவாங்கப்பட்டவர்கள் மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படுவார்கள் என்ற அறிவிப்பில் இதுவரை 9 பேர்தான் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். இன்னும் பலர் எடுத்துக்கொள்ளப்படாமல் இருக்கிறார்கள். இறுதியாக..................

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்தது திரு. குமரி அனந்தன். (குறுக்கீடு) எவ்வளவு நேரம் கொடுத்திருக்கிறேன். (குறுக்கீடு). ஒரு மணித்துளியில் முடித்து விடுங்கள்.

**திரு. உ. ரா. வரதராசன் :** இந்த ஆய்வுரையில் வழிமுறைகள் எல்லாம் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றன. நல்ல வழிமுறைகள். ஆனால், அந்த வழி முறைகளின்படி, டி.ஜி.பி. முதல் கடைசிக் காவலர் வரை நடைமுறைப்படுத்துகின்றார்களா என்று பார்த்தால், பெருமூச்சுதான் விட முடிகிறது. நேற்று கூட திருமதி பாப்பா உமாநாத் அவர்கள் கூட சொன்னார்கள். ஒரு குற்றம் செய்தவர் கிடைக்கவில்லை என்று சொன்னால்,



அவரைச் சார்ந்தவர்களையெல்லாம் துன்புறுத்துவதாகச் சொன்னார்கள். இப்போது கூட, சென்னை நகருக்குப் பக்கத்தில் இருக்கிற தாம்பரம் காவல் நிலையத்தில் கூட, புதுப்பெருங்களத்தூரைச் சேர்ந்த பிரேமா என்ற பெண் 27, ஏப்ரல் 1990 முதல் அங்கே காவல் நிலையத்தில் எந்த ரிக்கார்டுகளும் இல்லாமல் வைக்கப்பட்டிருக்கிறார். தெருவில் வைத்து அடிப்பது, தேர்ட் டிகிரி மெத்தட் போன்றவைகள் எல்லாம் செய்கிறார்கள். இப்படியெல்லாம் காவல் நிலையங்களில் தவறுகள் நடப்பதற்கு என்ன காரணம் என்றால், போலீசுக்குக் கொடுக்கப்படுகிற பயிற்சிதான். அதில் அடிப்படை மாற்றம் செய்யப்படவேண்டும். பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் அடிமைகளை அடக்கி ஆள்வதற்கு ஏற்ற வகையில் (Syllabus) பாடத்திட்டங்கள் உருவாக்கப்பட்டன.

(10-55 மணி)

அந்தப் போலீஸ் சிலபஸே இன்று வரை நீடிக்கிற நிலைமை மாற்றப்பட வேண்டும். தேவையானால் மத்திய அரசைக் கலந்து இதிலே மாற்றம் செய்கிற நடைமுறையைக் கடைப் பிடிக்க வேண்டும்.

காவல் துறை அரசுக்குப் பெருமை சேர்க்கிற துறையாக இருக்க வேண்டும். அது அரசுக்கு இழுக்கையும், களங்கத்தையும் ஏற்படுத்துகின்ற துறையாக செயல்படுவதற்கு அனுமதிக்கக்கூடாது. காவல் துறையினுடைய கடிவாளம், லெகான் அரசினுடைய கையில்தான் இருக்க வேண்டும்.* இன்றைக்குக் காவல் துறையைப் பொறுத்தவரையிலும் வேறு நிலைமை ஏற்பட்டுவிடக்கூடாது என்று பணிவுடன் சொல்லி, வாய்ப்பு அளித்தமைக்கு உங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன், நன்றி வணக்கம்.

**திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்பொழுது நம்முடைய சட்டமன்றத்திற்கு வர வேண்டுமென்று சொன்னால்கூட, சாலைப் போக்குவரத்தைப் பார்க்கும்போது, எவ்வளவு தூரத்திற்கு இடையூறுகள் இருக்கின்றன என்பதை நீங்கள் அறிவீர்கள். உண்மையிலே ஒரு நாள் சட்டமன்றத்தை நோக்கி வந்துகொண்டிருந்த போது, ஒரு சிறு கூட்டம் நின்று கொண்டிருந்தது. பார்த்தால், இரண்டு சக்கர வண்டியில் வந்த ஒருவர் அடிபட்டு, அங்கே விழுந்துகிடந்த காட்சியை தான் நான் கண்டேன். இந்தப் போக்குவரத்துத்

---

*—மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

துறையைப் பொறுத்தவரையில், போக்குவரத்துத் துறை என்றால் நமது மரியாதைக்குரிய நெடுந்தூரம் பயணம் செய்கின்ற துறையை நான் சொல்லவில்லை. டிராபிக் என்று சொல்லுகின்ற போக்குவரத்தை ஒழுங்குப்படுத்துகின்ற துறையினை சொல்கிறேன். அதை இன்னும் சரியான முறையிலே கண்காணிக்கவில்லையென்று சொன்னால், சென்னையிலே போவது என்பது, வீட்டை விட்டு புறப்படுவது என்பது உறுதியாக இருக்குமே தவிர மீண்டும் வீடு வருவது என்பது உறுதியாக இருக்குமா என்பது ஐயப்பாடு ஆகிவிடும். இதைப் பற்றி பல அறிஞர்கள் பல கட்டுரைகளையே எழுதியிருக்கிறார்கள். உதாரணத்திற்கு அந்த வல்லுநர்களுடைய கருத்தை நான் இங்கே சொன்னால் அது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு போகும் என்பதால் இங்கே நான் அதை சொல்கிறேன். ஏற்கெனவே டி.ஜி.பி. ஆக இருந்த ராதாகிருஷ்ணன் அவர்கள் அருமையான ஒரு கட்டுரையை எழுதியுள்ளார்கள். 1989 ஆகஸ்ட் 6 ஆம் தேதியன்று அதை எழுதியிருக்கிறார்கள். அதை நான் இங்கே குறிப்புக்காக தருகிறேன்.

அதிலே பல கருத்துக்களை அவர் சொன்னாலும் கூட, பல்வேறு அதிகாரிகளைச் சந்திக்கின்ற வாய்ப்பு கிடைக்கிற நேரத்தில் எல்லாம், அவர்களுடன் கலந்து உரையாடுகின்ற நேரத்தில் எல்லாம், டிராபிக் பிளானிங் அதாரிட்டி என்று சொல்லப்படுகின்ற ஓர் அமைப்பை உருவாக்கி, செம்மையாக இந்த டிராபிக் பணியை செய்தால்தான் சென்னை மாநகரத்தின் போக்குவரத்துக்களை ஒழுங்கு படுத்த முடியும். சென்னை மாநகரம் மட்டுமல்லாமல், டிராபிக் பிளானிங் அதாரிட்டி என்று சொல்லப்படுகின்ற ஒரு அமைப்பு இருக்குமேயானால் அது சென்னையிலே ஓர் உச்ச அமைப்பாக, ஒரு அபக்ஸ் பாடியாக இருந்து, மாவட்டம் தோறும் இதே ரீதியாக இப்படிப்பட்ட அமைப்புகளை உருவாக்கி எதிர்காலத்திலே கிராமங்களிலிருந்து சென்னை நகரம் வரை போக்குவரத்துக்களை எப்படி ஒழுங்கு படுத்த வேண்டுமென்ற ஒரு வழியை உருவாக்கி, முறைப்படுத்தி கட்டுப்படுத்த வேண்டும். அது ஒரு சாதாரண பிரிவு போல இருக்காமல் தனிப் பிரிவாக அமைக்கப்பட வேண்டும். அப்படி அமைத்து கோவார்டினேசன் என்கிற ஒருங்கிணைப்பு முறையிலே ஒரு பாதையின்கீழ், ஒரு பாலத்தின்கீழ் இதனைக் கொண்டுவந்து, மற்ற எல்லா பிரிவுகளையும் விட மிகப் பொறுப்புள்ள பிரிவாக இந்த ''டிராபிக்''-ஐ ஆக்க வேண்டும் என்பது என்னுடைய பணிவன்பான கருத்து.

இன்றைக்கு சாலைகளில் அதிகமான வண்டிகள் ஓட ஆரம்பித்துவிட்ட காரணத்தால் நீர் வழி போக்குவரத்தை நடைமுறைக்குக்கொண்டு வர வேண்டும். இடையிலே இத்துறைக்கு



சம்பந்தமில்லாத துறையாக இருந்தாலும் கூட இத்துறைக்கு உதவியாக இருக்கும் என்பதால் சொல்கிறேன். இன்றைக்கு வெளிநாடுகளில் எல்லாம் கால்வாய், ஆறுகள் ஓடுகின்றன என்றால் ஆற்றுக்கு மேலே சாலைகள் போடுகிறார்கள். காரணம் ஆறுகள் என்று வந்தால் மேலே எந்தவிதமான என்க்ரோச்மென்டும் இருக்காது. என்க்ரோச்மென்ட் இல்லாமல் இருக்கும் இடத்துலே இடைஞ்சல் இல்லாமல் சாலை போடலாம் என்று பல இடங்களில் திட்டம் போடுகிறார்கள். சில இடங்களில் ஆறுகள் போகின்ற இடங்களில் ஆற்றுக்குக் கீழே சாலைகள் போடுகிறார்கள். அந்த அளவுக்கு நாம் இங்கே உடனடியாக அதைச் செய்ய இயலவில்லையென்றாலும்கூட இது வருங்கால கனவாக இருந்தாலும், இப்போது கால்வாய்கள், ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கின்ற ஆறுகளின், கால்வாய்களின் ஓரங்களிலாவது சாலைகள் போட்டாவது போக்குவரத்து நெரிசலைப் போக்க வழி தேட முடியுமா என்று ஆராய்ந்துப் பார்க்க வேண்டுமென்று நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்த செய்தி என்னவென்றால், இப்போது கார் ஓட்டுகிறவர்களைக் கூட போதையில் போகிறார்களா என்று பார்க்கக் கூடாது என்று எழுத்து மூலம் உத்தரவு கொடுக்கப்பட்டிருக்கிறதா? அல்லது வாய்மொழி மூலம் வாயை ஊதச் சொல்லாதே என்று உத்தரவு போடப்பட்டிருக்கிறதா என்று தெரியவில்லை. குடி போதையிலே கார் ஓட்டுகிறவர்களுடைய எண்ணிக்கை மிக அதிகமாகி, விபத்துக்கள் மிக மிக அதிகமாகிக்கொண்டிருக்கிறது. ஒவ்வொரு நாளும் பத்திரிகைகளைப் பார்த்தால் விபத்துக்கள் இல்லாத நாளே இல்லை என்று சொல்கிற சூழ்நிலையிலே புது மாப்பிள்ளை மரணம், புதுப்பெண் மரணம் குழந்தை மரணம், அதிகாரி மரணம் என்று செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. இப்படிப்பட்ட செய்திகள் மிக்க துன்பத்தை தருவதாக இருக்கின்றன. ஆகவே, தயவுசெய்து அதிகாரிகள் கவனம் இதிலே செல்ல வேண்டும்.

அடுத்து, இரண்டொரு கார் பார்க்குகளை, ஏதோ சென்னையில் 20, 21 இடங்களில் இனிமேல் நாங்கள் கார்களை நிறுத்த இடம் அமைக்கிறோம் என்று சொல்கிறார்கள். ஒரு காலத்தில் பிராட்வேயில், லோன்ஸ் ஸ்கொயர் இருக்கிற இடத்திலே பல மாடிக் கட்டிடங்களைக் கட்டி அங்கே அடுக்கு அடுக்காக கார்களை நிறுத்துகின்ற அளவுக்கு கார் பார்க்குகளைக் கட்டுகின்ற திட்டம் இருந்ததே, அது என்ன ஆயிற்று? அது எங்கேயாவது கிடந்தால்கூட அதனை தூசி துடைத்து மீண்டும் எடுத்துப் பார்த்து அதனை ஏற்படுத்துவது நல்லது என்ற காரணத்திற்காக நான் இதனை இங்கே சொல்ல ஆசைப்படுகிறேன்.

(11-00 மணி.)

11-00 மணி

அடுத்து சில கட்டுப்பாடுகள்— மாசுக் கட்டுப்பாடு குறித்து நாம் மசோதா கொண்டு வந்தோம். தண்ணீர் மாசுக் கட்டுப்பாடு என்று சொல்லி கொண்டு வந்தோம். காற்று மாசுக் கட்டுப்பாடு என்று சொல்லி கொண்டு வந்தோம். ஆனால் நாய்ஸ் பொல்யூஷன் பற்றி நாம் சொல்லவேயில்லை. இப்போது விஞ்ஞானிகள் என்ன சொல்கிறார்கள் என்றால், இப்போது இருந்து கொண்டிருக்கிற சத்தம் தொடர்ந்து அப்படியே இருக்குமானால் வருகின்ற 2050-லே அனேகமாக பெருவாரி மக்களுக்கு காது செவிடாகப் போகுமென்று சொல்கிறார்கள். எனவே நமது பேரன்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கோ அல்லது நமது பேரக் குழந்தைகளுக்கோ காது செவிடாக இருந்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை. சொன்னபடி கேட்கமாட்டான் என்று பையனைச் சொல்வதற்குப் பதிலாக எது சொன்னாலும் கேட்காது என்று சொல்லும் நிலை உருவாகி விடக் கூடாது என்பதற்காக இதை நான் சொல்ல ஆசைப்படுகிறேன்.

சத்தம் என்று சொன்னால் வேறு சத்தம் இல்லையா என்று நீங்கள் கேட்கக்கூடும். இந்தத் துறைக்கு சம்பந்தப்பட்ட ஒரு சத்தம் பஸ் ஹாரன். பாஷ் ஹாரன் அடிக்கக்கூடாது என்று தடை செய்யப்பட்டிருக்கிறது. அப்படி எல்லா நகர எல்லைகளிலும் போடப்பட்டிருக்கிறதே தவிர, பாஷ், ஹாரன் அடிக்காமல் இருக்கிறார்களா என்றால் இல்லை. அரசாங்கப் பேருந்துகளில் அதைப் பொருத்தாமல் இருக்கிறார்களா? இவைகளை எல்லாம் சிந்திக்கக்கூடாதா? இராமநாதபுரம் மாவட்டத்தில், உத்திரகோசமங்கை என்று ஒரு இடம் இருக்கிறது. அங்கே உள்ள மகரந்த சிவலிங்கத்திற்கு சந்தனம் பூசி இருப்பார்கள். ஏனென்றால் மேளம் அடித்தால் அந்த மகரந்தச் சிவலிங்கம் உடைந்துவிடும். அதனாலே சந்தனத்தைப்பூசி வைத்திருக்கிறார்கள். அங்கே மேளம் வாசிக்கக்கூடாது. சத்தத்திற்கு அவ்வளவு ஆற்றல் உண்டு.

கிருத்து பிறப்பதற்கு முன்பு, 3-ஆம் நூற்றாண்டிலே சீனாவிலே ஒரு தண்டனையாகக்கூட இந்தச் சத்தத்தைக் கொடுத்தார்கள். ஒரு கைதியைக் கொண்டு வந்து வைத்துவிட்டு, கடுமையான சத்தத்தை அவனுடைய காதிலே விழுகின்ற அளவுக்கு வைத்துவிட்டால், அவன் பைத்தியம் பிடித்தவன்போல் ஆகிவிடுவான் என்று தண்டனைக்குரிய அதை சாதாரணமாக ஆக்கிக் கொண்டு இருக்கிறார்களே என்பதை நீங்கள் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து கண் கூசுகின்ற அளவுக்கு வெளிச்சம். முன்பெல்லாம் அரைப் பகுதியாவது கறுப்பு பூசி வர வேண்டும் அல்லது நடுவிலே ஒரு கறுப்பு புள்ளி இருக்க



வேண்டும். இப்போது எதுவுமே இல்லை. காரை ஓட்டுகின்றபோது மிகுந்த அச்சத்தோடு ஓட்ட வேண்டியிருக்கிறது. கண்ணைப் பறிக்கக்கூடிய அளவுக்கு 'பளிச்' என்று வெளிச்சம் வந்து கொண்டிருக்கிறது. அவைகளைப் பார்க்க வேண்டுமென்று சொன்னால், சாலைக்கு நடுவிலே உள்ள 'டிவைடர்' இருக்கிறதே அதிலே $3\frac{1}{2}$ அடி உயரத்திற்கு ஏதாவது தடுப்பு வேண்டுமென்று சொல்லுகிறார்கள். வெளி நாடுகளிலே எல்லாம் $3\frac{1}{2}$ அடி உயரத்திற்கு அதிலே செடி கொடிகளை நட்டு விடுகிறார்கள். அந்த அளவுக்கு அகலச் சாலைகள் இருப்பதால் அங்கே வாய்ப்பு இருக்கிறது. $3\frac{1}{2}$ அடி என்று சொல்லுவதற்குக் காரணம், எதிரே வருகின்ற டிரைவருடைய கண்களிலே வெளிச்சம் படாது. ஆக $3\frac{1}{2}$ அடி உயரத்திற்கு வேண்டுமென்று வெளி நாடுகளிலே வைத்திருக்கிறார்கள். அவைகளை எல்லாம் பார்த்து, பரிசீலித்து, டிராபிக் பற்றி நீங்கள் அதிகமாக கவனம் செலுத்த வேண்டுமென்று உங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்தலைமை)

அடுத்து தீ அணைப்புப் படை. வெய்யில் காலம் வந்துவிட்டது. தீ பிடித்து விட்டதென்றால் உடனே அணைக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். இப்போது தண்ணீர் முன்பு போல எல்லா இடங்களிலும் எடுக்க முடியாது: முன்பு 10 அடியிலே தண்ணீர் கிடைத்துக் கொண்டிருந்த கிணறுகளிலே இப்போது 70 அடி, 80 அடியில் தண்ணீர் இருக்கிறது. எனவே அவைகளிலே குழாய்களைப் போட்டு தண்ணீர் எடுப்பது என்பதோ அல்லது இந்தத் தண்ணீர் எடுப்பதற்கென்று வைக்கப்பட்டுள்ள இடங்களிலிருந்து தண்ணீர் எடுக்க, அங்கே தண்ணீர் கிடைக்குமா என்பதே ஐயப்பாடாக இருக்கிறது. இப்போது இருக்கும் தீ அணைக்கும் வண்டிகளிலே எல்லாம் ஆயிரம் காலன் கொள்ளளவு கொண்ட டாங்கர்கள்தான் இருக்கின்றன. ஆனால் ஆயிரம் காலன் என்று சொன்னால். 20 நிமிடங்களுக்கு மேலே அது வராது என்று சொல்லுகிறார்கள். அதனாலே குறைந்தபட்சம் 4,000 காலன் பிடிக்கும் அளவுக்காவது அந்த டாங்குகளைக் கொண்ட பெரிய வண்டிகளை நாம் செய்ய வேண்டும். அந்த வண்டிகளை நாம் அங்கே வைத்திருக்கவேண்டுமென்று தெளிவாக வல்லுநர்கள் சொல்கிறார்கள்.

இந்த நேரத்தில் ஒரு சின்ன உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். 5 பெரிய வண்டிகளை நாம் வெளி நாடுகளிலே இருந்து வாங்கினோம். அந்த வண்டியினுடைய பெயர் சைமன்ஸ் ஸ்னார்க்கல் என்பதாகும். அந்த 5 வண்டிகளும் எப்படிப்பட்டவை என்றால் 130 அடி உயரத்தில் தீ அணைக்கும் ஆற்றல் கொண்ட இயந்திரங்கள் கொண்டவை. அதில் ஒன்று பம்பாய்க்குப் போயிற்று, ஒன்று டெல்லிக்குப் போயிற்று, இன்னும் ஒன்று கல்கத்தாவுக்குப் போயிற்று. நாக்பூரில் ட்ரெயினிங்

ஸ்கூல் இருப்பதால் மற்றொன்று நாக்பூருக்குப் போயிற்று; இன்னும் ஒன்று சென்னைக்கு வந்தது. ஆனால் சென்னைக்கு வந்து, அது எங்கே கிடக்கிறது என்றால் தேனாம்பேட்டையில ஒரு வளாகத்திலே கிடக்கிறது. பல லட்சம் ரூபாய் பெறுமானம் உள்ள வண்டி அது. எல்.ஐ.சி. போன்ற கட்டிடங்களிலே கூட தீ அணைக்கும் ஆற்றல் பெற்ற வண்டி. இங்கிலாந்திலிருந்து வாங்கிய வண்டி. இப்போது தேனாம்பேட்டையிலே ஒரு வளாகத்திலே இருக்கின்றதை நாம் கவனத்திலே கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். என்ன காரணம் சொல்லுகிறார்கள் என்றால், அதற்கு டையர் இல்லை. எம்.ஆர்.எஃப்-லோ அல்லது டன்லப்பிலோ சொன்னால் அவர்கள் செய்தே கொடுப்பார்கள். டையர் இல்லை என்பதால் அவ்வளவு பெரிய வண்டி அங்கே இருக்க வேண்டுமா என்பதை நாம் ஆலோசிக்கும்போது, சின்னச் சின்ன காரியங்களிலே கவனம் தேவை என்பதற்காகச் சொல்லவில்லை, பெரிய அளவில் பணம் போட்டு வாங்கியது டையர் இல்லாத காரணத்தால் பயனற்றுப் போவதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்றுதான் சொல்லுகிறேன்.

அடுத்தாற்போல் தண்ணீர் பிடிக்க வேண்டுமென்றால் எங்கே போகிறார்கள்? கீழ்ப்பாக்கத்திற்கு அடுத்தாற்போல் உள்ள தண்ணீர் கொடுக்கும் இடத்திற்குப் போகிறார்கள்.

11-05 மணி

குடி தண்ணீர் எடுத்துக்கொண்டு போகின்ற வண்டிகள் எல்லாம் வரிசையாக நிற்கின்றபோது, தீயணைப்புப் படை வண்டி போனால் அதற்கு முன்னுரிமை கிடையாது. இவர்களும் வரிசையில் நிற்க வேண்டும். இவர்கள் வரிசையிலே நின்று தண்ணீர் பிடிப்பதற்குள்ளே எந்தெந்த இடங்களிலே தீ பிடிக்குமோ தெரியாது. இவர்கள் நீர் பிடித்து முடிப்பதற்குள்ளே, தீ பிடித்து முடிந்து விடும் என்பதற்காகச் சொல்கிறேன். இப்படிப் பட்டவர்கள் போனால் அவர்களுக்கு முன்னுரிமை உடனே கொடுக்கப்பட வேண்டும் என்பதற்காக இதை உங்களுக்கு குறிப்பாகத் தருகிறேன்.

அடுத்து இந்த தீ அணைக்கும் படை வீரர்களுக்கு பணி புரிகின்ற நேரத்தில் எத்தனையோ இன்னல்களும், இடையூறுகளும் வருவதற்கு வாய்ப்பு உண்டு. அதற்காக ரிஸ்க் அலவன்ஸ் கொடுக்கிறார்கள். அந்த ரிஸ்க் அலவன்ஸ் எவ்வளவு கொடுக்கிறார்கள் என்று சொன்னால் 20 ரூபாய் தான். ஆனால் அனிமல் ஹஸ்பென்டரி துறையிலே இருக்கிறவர்களுக்கு ரிஸ்க் அலவன்ஸ் அதைவிட அதிகமாகக் கொடுக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். கால்நடைத் துறையிலே இருக்கின்ற ஆபத்தைவிட அதிகமாக ஆபத்து தான் தீயணைப்புத் துறையிலே இருக்கிற வீரர்களுக்கு இருக்கிறது. அப்படிப் பட்டவர்களுக்கு ரிஸ்க் அலவன்ஸ் என்று சொல்கின்ற, இடையூறு அலவன்ஸ் என்று சொல்கின்ற அந்த அலவன்ஸை நீங்கள் அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.



இன்னொரு செய்தி, முக்கியமான செய்தி, சென்னையை சுற்றிலும் இப்போது எண்ணெயை மூலப் பொருளாகக்கொண்டு பல தொழிற்சாலைகள் வந்துவிட்டன. எண்ணெய் சுத்திகரிக்கின்ற ஆலை கூட இங்கே இருக்கின்றது. ஆனால் தீயணைப்பு நிலையங்களில் எல்லாம் வெறும் தண்ணீரை வைத்து அணைக்கின்ற வசதிதான் இருக்கிறது என்று சொல்கிறார்கள். நுரையையும், தண்ணீரையும் கலந்து ஒரே சீராக போனால்தான் அந்த நெருப்பை அணைக்க முடியும். எண்ணெயோடு பற்றிக் கொண்டு இருக்கிற நெருப்பை அணைக்க வேண்டுமென்று சொன்னால் வெறும் நீரை மட்டும் விட்டால் போதாது. நுரையோடு கூடியதாக அது இருக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அதற்கு உரிய வசதிகள் தீயணைப்பு நிலையங்களிலே இல்லை என்று சொல்லப்படுகிறது. இங்கே குறிப்பாகச் சொல்கிறேன். காங்கிரசு ஆட்சிக் காலத்திலே ஒவ்வொரு தீயணைப்பு நிலையத்திலும் நுரையோடு கூடிய தீ அணைக்கின்ற கருவிகள் வைக்கப் பட்டு இருந்தன என்று குறிப்புகள் இருக்கின்றன. இப்போது அந்த வசதிகளே இல்லை என்று சொல்கிறார்கள். அந்த வசதி ஏர்-போர்ட்டிலே இருக்கிறது; துறைமுகத்திலே இருக்கிறது. ஆனால் மற்ற தீயணைப்பு நிலையங்களிலே இல்லாத காரணத்தினால் மிகுந்த ஆபத்து வரக்கூடும் என்கின்ற காரணத்தினாலே இவைகளை காலதாமதம் இல்லாமல் கொண்டுவந்து கொடுக்க வேண்டும்.

அடுத்து பாதாள சாக்கடையிலே இறங்குபவர்களுக்கு தனிக் கருவிகள் எதுவும் இல்லாத காரணத்தினால் அவர்களுடைய உயிருக்கு ஆபத்து அதிகமாக வருகிறது. வெளி நாடுகளில் எல்லாம் அவர்களுக்காக விஞ்ஞான முன்னேற்றத்தின் காரணமாக பல கருவிகள் வந்துவிட்டன. அவர்கள் அந்தக் கருவிகளைப் பொருத்திக்கொண்டு இறங்குகிற நேரத்திலே ஆபத்து வருவதற்கு வாய்ப்பே இல்லை. அப்படிப்பட்ட கருவிகளை எல்லாம் சென்னை நகரத்திற்கு வாங்க வேண்டும் என்பது மட்டுமல்லாமல், சில கிராமங்களிலேகூட பாழடைந்து இருக்கின்ற கிணறுகளைத் தூர் எடுக்கின்ற நேரத்தில், உள்ளே சகதியை வாரப் போகின்ற நேரத்தில் அவர்களுக்குத் தப்பும்

வருகிற காரணத்தினால், எல்லா இடங்களிலும் அப்படிப்பட்ட கருவிகளை அவைகள் பஞ்சாயத்து ரீதியிலே கிடைக்கின்ற அளவுக்கு அவைகளை வாங்கி வைக்க வேண்டும் என்று நான் உங்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல் இந்தத் துறை சிறந்த துறையாக இருந்து பணியாற்ற வேண்டும் என்று சொன்னால் இந்தத் துறையின் தொழில் நுட்பங்களை எல்லாம் தெரிந்தவர்கள் இருக்கவேண்டும். அதற்குப் பதிலாக பொதுவான காவல் துறையிலே இருக்கின்ற அதிகாரிகளே இதற்கு டைரக்டர்களாக வருகின்ற காரணத்தினால் தீயணைப்புத் துறையினுடைய நுணுக்கங்களை எல்லாம் அவர்கள் தெரிந்துகொள்வதற்கு முன்னால் அவர்கள் இன்னொரு இடத்திற்கு மாற்றப்படக்கூடிய வாய்ப்புகளும் இருக்கிற காரணத்தினால், அவர்கள் அந்த நுணுக்கங்களைப் படித்து முடிப்பதற்குள்ளேயே மாற்றப்படக்கூடிய வாய்ப்புகள் இருக்கிற காரணத்தினால், தீயணைப்புத் துறையிலே பல நல்ல காரியங்களை, புதுப் புதுப் திட்டங்களைக் கொண்டு வருவதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கின்ற காரணத்தினால், இந்தத் துறையிலே பயிற்சி பெற்றவர்கள், தொழில் நுட்பம் தெரிந்தவர்கள் இயக்குநர்களாக வருகிற சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற தீயணைப்பு நிலையங்களைப் பற்றி நான் இப்போது பேசுவதற்கு காலம் இல்லை என்று சொன்னாலும், குறிப்பாக நான் சென்னையைப்பற்றி சொல்ல விரும்புகிறேன். சென்னையிலே மட்டும் டிரைவர்கள், தீ அணைக்கின்ற வீரர்கள்—இப்படிப்பட்டவர்களின் பதவிகள் எவ்வளவு காலியாக இருக்கின்றது என்றால் 117 வேலையிடங்கள் காலியாக இருக்கின்றது. 117 வேலைகள் காலியாக இருக்கின்றது என்றால் அதற்குத் தகுந்தவாறு பணி தடைபடுகிறது; அதற்குத் தகுந்தவாறு பணி தடைபடுகிறது என்பதோடு மட்டுமல்ல, வேலை இல்லாத் திண்டாட்டம் இருந்து கொண்டிருக்கிற இந்த நேரத்திலே, சென்னையிலே மட்டும் 117 வேலைகள் காலியாக இருக்கிறது என்று சொன்னால், தமிழ்நாடு முழுவதும் எவ்வளவு இருக்கிறது என்று அரசு கணக்குப்பார்த்து ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தீயணைப்பு நிலையங்களில் இருக்கும் வண்டிகள் உடனுக்குடன் செப்பனிடப்பட்டு, உடனே வேலை செய்வதற்கு தயார் நிலையில் வைக்கப்பட்டு இருக்க வேண்டும். அந்த வண்டிகளைப் பார்த்த உடனே எல்லோரும் ஒதுங்குகின்ற அளவுக்கு எண்ணம் நாட்டு மக்களுடைய உள்ளத்திலேயே ஊட்டப்பட்டு இருக்கிறது. அந்த வண்டியின் மணி ஒலித்துவிட்டாலே காரை எல்லாம் நாம் ஓரமாக நிறுத்திவிடுகிறோம். ஆனால்



அப்படிப்பட்ட வண்டிகள் ரிபேர் ஆகிவிட்டது என்றால், சென்னை மாநகரத்திலே மட்டும் ஏறத்தாழ 15 வண்டிகள் இன்று ரிப்பேர் என்ற நிலையிலே நின்றுகொண்டு இருக்கிறது. ஆனால் சில வண்டிகள் ராயபுரத்தில் இருக்கின்ற, தண்ணீர் எடுத்துப் போகின்ற வண்டி எண் 4166, 1989 ஆம் ஆண்டிலிருந்தே ரிப்பேர் ஷாப்பில் நிற்கிறது. 1989 ஆம் ஆண்டு 3-வது மாதத்தில் இருந்து ஓராண்டு இப்போது நிறைவு பெற்றுவிட்டது. அது என்ன காரணத்திற்காக தெரியுமா? ஸ்டார்ட்டிங் டிரபிளுக்காக ஒரு ஸ்டார்ட்டிங் டிரபிளுக்காக ஒரு வருட காலம் ஒரு தீ அணைக்கின்ற, தண்ணீர் எடுத்துப் போகின்ற வண்டி அங்கே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் அந்தந்தப் பகுதியில் இருக்கின்ற அதிகாரிகள் அதிலே கவனம் செலுத்தவில்லையா? அல்லது அந்த முறையே அந்த System itself is not good? என்பதை நாம் சிந்தித்து பார்க்க வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். எந்தெந்த வகையிலே வண்டிகளிலே ரிப்பேர் செய்ய வேண்டும் என்று ஒரு சிஸ்டம் வைத்து இருக்கிறீர்கள். அந்த சிஸ்டமே நல்லதாக இல்லையா?

11-10 மணி

ஒரு வேளை இது சீர்திருத்தப்பட வேண்டுமா என்பதை நீங்கள் தான் பார்க்க வேண்டுமென்று உங்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

போலீஸ் இலாக்காவைப் பொறுத்தவரையிலே, மூன்று முறையாக அதைப் பிரிக்க வேண்டும். ஒன்று, வருமுன் காப்போனாக இருப்பது; இன்னொன்று வருங்கால் காப்போனாக இருப்பது; இன்னொன்று, வந்தபின் காப்பதாக இருப்பது. கூடிய மட்டிலும் இப்பொழுது பல இடங்களிலே நடப்பது, வந்தபின் பார்ப்பதும், வரும்போது காப்பதும், வருமுன் பார்ப்பது என்பது இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறதோ? நான் முற்றிலும் இல்லை என்று சொல்லவில்லை. ஆனால், வருமுன் காப்பது என்பதை நாம் எண்ணிச் செயல்பட்டோமானால், பலயிடங்களிலே இருக்கின்ற சில communal clash என்று சொல்கிறார்களே Caste clash என்று சொல்கிறார்களே, Religious clash என்று சொல்கிறார்களே, நம்நாடு முன்னேறாமல் போய் இருப்பதற்கே இந்த மூன்றும் தான் காரணம். ஜப்பான் முன்னேறி இருக்கிறது என்று சொன்னால், ஜாதிச் சண்டை போட்டான் என்ற வரலாறே இப்பொழுது அண்மைக் காலத்திலே இல்லை. ஆனால், நமக்குத்தான் ஜாதிச் சண்டை வருகிறது. நமக்குத்தான் மதச் சண்டை வருகிறது, இத்தனை சண்டைகளும் வருகின்றன என்று சொன்னால், திடீரென்று வருவது இல்லை.

மாண்புமிகு முதல்வரவர்களும், நானும் ஒரு இடத்திலே, மற்றவர்களோடு பேசிக்கொண்டிருந்தபொழுது, இப்பொழுது பறக்கும் படை என்று வைத்திருக்கிறார்கள், எல்லோருமே வைத்திருக்கிறார்கள். ஒவ்வொரு ஜாதிக்காரர்களும் பறக்கும் படை வைத்திருக்கிறார்கள். பறக்கும்படை அவர்களுக்குப் பாதுகாப்பையும் தருகிறது என்று அவர்கள் எண்ணுகிறார்கள். அப்படி பாதுகாப்பு தருகிறது என்கிற காரணத்திற்காக அவர்கள் தேடி வைத்திருக்கிற பணத்தை இவன் பணம் சம்பாதிக்க வேண்டியது; அவன் படையிலே போய் சேர வேண்டியது; இவனைப் பாதுகாக்கிறேன் என்ற பெயரிலே அவன் பணம் வாங்க வேண்டியது; இப்படி ஒவ்வொருவரும் வைத்திருக்கிறார்கள் என்று சொன்னால், அந்தப் படைகள் மோதுகின்றன என்றால், பிறகு படைகளுக்கு அடுத்தப்படியாக இவர்களே மோதுகிறார்கள் என்று சொன்னால் தமிழ்ச் சமுதாயம் ஒன்றையொன்று மோதிக் கொண்டிருக்கிறது என்று பொருள்.

நான் இங்கே பணிவோடு தெரிவித்துக் கொள்வது, மாண்புமிகு முதலமைச்சரவர்களுடைய பொறுப்பிலே இது இருக்கின்ற காரணத்தினாலும், யாருக்கும், தமிழ்நாட்டிலே வாழ்ந்துகொண்டிருக்கின்ற ஒவ்வொருவருக்கும், எனக்கும் இருக்கிற படை போலீஸ் படைதான்; எனக்கு நீதி கிடைக்கும்; நேர்மையான தீர்ப்பு எனக்குக் கிடைக்கும் என்ற எண்ணம் அவர்களுக்கு வருகின்ற வகையிலே, அதனை ஊக்க வேண்டாமா? அதனை ஊக்கி விட்டால், இந்தப் படைக்குத் தேவை இருக்குமா? பறக்கும் படை இருக்கின்ற இடத்திலேயிருந்து பறந்துபோய் விடாதா? அல்லது இந்தத் திட்டமே இறந்து போய் விடாதா? அதற்காக நாம் செய்ய வேண்டிய காரியத்தை உடனடியாக செய்வித்து ஆவன செய்ய வேண்டாமா? இப்படிப்பட்ட காரியத்தை ஒரு ஜாதி என்பது இல்லை, எல்லா ஜாதிகளும் செய்கின்றன. ஒருவர் செய்து முடித்தவுடனேயே அவருடைய படையிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காக தனக்கு என்று படை வேண்டுமென்று இவர்கள் நினைக்கின்றார்கள். Self-defence-க்காவது வேண்டுமென்று நினைக்கின்றார்கள். ஆகையால் இது ஒரு vicious circle ஆகப் போய்க் கொண்டிருக்கிறது. ஒரு முடிவுறாத கெட்ட வளையமாகச் சுற்றிச்சுற்றி வந்து கொண்டிருக்கிறது. இதனை முறியடித்து, அதை நேர்ப்படுத்துவது எப்போது? அப்படிப்பட்ட வளையத்தை இழுத்து நீட்டி செம்மைபடுத்தி நேராகப் போட்டு விடுவது எப்போது என்பதனை நாம் சிந்திக்க வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன். இந்தப் படைகள் இல்லாமல் இருக்க வேண்டுமென்று சொன்னால், இந்தக் காக்கிச் சட்டை உடையிலே வருகிறவர்தான் எனது படை என்று அந்த உடைக்கே ஒரு மரியாதை வந்து விட வேண்டும். எப்படிப் போராட்டக்



காலத்திலே, காங்கிரஸ் என்று சொன்னாலே ஒரு கதர்ச்சட்டைக்கு ஒரு மரியாதை வந்து விட்டதோ, அது அதனுடைய தத்துவத்தின் அடிப்படையிலே வந்ததோ, அவர்கள் இப்படி இருப்பார்கள் என்று சிந்தனையைத் தூண்டுவதற்கு வந்து விட்டதோ அதைப் போலவே காவல்துறை என்று சொன்னால், அந்தச் சட்டை வந்துவிட்டது என்று சொன்னால், எனக்கு நீதி வந்து விட்டது என்ற எண்ணமே அவனுக்கு வர வேண்டும். ஒரு சின்ன உதாரணத்தைச் சொல்கிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : தலைவரவர்களே......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீதி எழுந்து இருக்கிறது. (சிரிப்பு).

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : பாயின்ட் ஆப் ஆர்டர். காங்கிரஸ் துணைத்தலைவரவர்கள் ஒவ்வொரு மதத்தினரும் தனிப்படைகள்—பறக்கும் படையாம் அது பெயர்—வெறும் படை அல்ல—பறக்கும் படை எந்த மதத்திலே அந்தப் பறக்கும் படை என்று இவருக்குத் தகவல் வந்திருக்கிறது என்று தெரியவில்லை. அப்படி அதை உன்னிப்பாக எல்லா மதத்திலும் பறக்கும் படை இருக்கிறதா என்று அந்தக் கட்சியிலே உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டு இருக்கிறாரா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

திரு. குமரி அனந்தன் : நான் ஒரு சமுதாயத் தொண்டன். மாதத்திற்கு இருபது நாட்களுக்கு மேலே கிராமம் கிராமமாகச் சென்றுவிட்டு மக்களைச் சந்தித்துவிட்டு வருகின்றவன். நானே என்னென்ன படைகள் இருக்கின்றன என்பதைப் பார்த்துத்தான் வருகிறேன். அந்தப் படைகளையெல்லாம் உடைக்க வேண்டுமென்றால் என்ன செய்ய வேண்டுமென்பதையும் சிந்தித்துக் கொண்டிருக்கிறவன். அதற்குத் தீட்சதர் அவர்களுடைய துணையும் வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன் ஆக, இப்படிப்பட்ட நிலை இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் நான் இங்கே சொல்ல வந்தேன். இரண்டாவது செய்தியாக, உங்கள் முன்னாலே எடுத்து வைக்க விரும்புவது ஒன்று, இந்த டி.ஐ.ஜி. பற்றி சொல்கிறேன். Political interference என்பது முற்றிலும் தவிர்க்க முடியாததாக இருக்கலாம். தவிர்க்கப்பட வேண்டுமென்பது நிச்சயம். சில நேரங்களிலே அந்தக்குறைகளை நாம் களைவது என்பது முற்றுமையாக, பரிபூர்ணமாக இயலாததாக இருக்கலாம். ஆனால் ஓரளவுக்கேனும் செம்மையாக நடைபெற வேண்டுமென்றால் political interference என்று சொல்லுகின்ற அரசியல் தலையீடு இருக்கக்கூடாது.

ஒரு டி. ஐ. ஜி யிடம் ஒருவர் போனார். எனக்கு இந்த இடத்திலே போஸ்டிங் வேண்டுமென்று அந்த இன்ஸ்பெக்டர் கேட்டார். அவருடைய நடைமுறைகளை வைத்துக்கொண்டு அந்த இடத்திற்கு அவர் போவது நல்லது அல்ல என்று இவர் முடிவு செய்தார். முடிவு செய்து, உனக்கு இல்லை அப்பா என்று சொல்லிவிட்டார். அவர் மேலே வந்தார். சிலரைப் பார்த்தார். அவர் எந்த இடம் வேண்டுமென்று கருதினாரோ அவர் அந்த இடத்திற்கே போய்விட்டார்.

நான் இதை எதற்காக உதாரணம் சொல்கிறேன் என்றால், நாளைக்கு அந்த டி.ஐ.ஜி. அந்த இடத்திலே அந்த இன்ஸ்பெக்டரைப் பார்க்கின்ற பொழுது அவருக்கு எப்படி இருக்கும் என்பதுதான். உன்னை மீறி நான் வந்து விட்டேன் அல்லவா ? உன் தோளுக்கு மேலே எனக்கு ஆள் இருக்கிறது அல்லவா என்ற எண்ணம் வரக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். அது காங்கிரசாக இருக்கட்டும், A.I.A.D.M.K. ஆக இருக்கட்டும், D.M.K. ஆக இருக்கட்டும். பொதுவான செய்திகளையே நான் சொல்லிப் போகிறேனே தவிர, வேறு குற்றச்சாட்டுகளாக இதனை நான் சொல்லவில்லை. இப்படிப்பட்ட எண்ணம் வராமல் இருக்க வேண்டும்.

*11-15 மணி*

உதாரணமாக, ஒருவரை ஒரு பெரிய பொறுப்பிற்கு அனுப்புகிறோம். அது டி.ஜி.பி. யாக இருக்கட்டும், கமிஷனராக இருக்கட்டும் இன்னொருவராக இருக்கட்டும் அந்த பெரிய பொறுப்பிற்குஅனுப்புகிறபோது கடந்த 15ஆண்டுகளிலாவது அவருடைய 'எபிஷயன்சி' கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். கடந்த 15 ஆண்டுகளிலாவது அவருடைய 'மெரிடோரியல் சர்வீஸ்' என்ன என்று கணக்கில் எடுத்துப் பார்க்க வேண்டும். இவைகளைப் பார்க்கவில்லை என்று சொன்னால், இவருக்கு வேண்டியவர் அவர், அவருக்கு வேண்டியவர் இவர் என்று பார்க்கத் தொடங்கி விட்டோம் என்று சொன்னால், நான் எனக்கு வேண்டியவரைப் பார்க்க, உடனே அந்தப் பகுதியில் இருப்பவர் அவருக்கு வேண்டியவரைப் பார்க்க, எனக்கும் அவருக்கும் விரோதம் என்று சொன்னால், பிறகு போலீசே ஒன்றோடு ஒன்று மோதுமா ? இது என்ன சண்டையா? எனவே, தமிழக மக்களுக்கு நியாயம் கிடைக்கும் என்ற எண்ணம் வர வேண்டும். நான் ஒன்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அருமைக்குரிய பெருமக்களே, அந்த நியாயம் கிடைக்க வேண்டுமென்றால், 'நான் உழைப்பேன், உயர்வேன்' என்று போலீஸ்காரர்கள் ஒரு 'மோட்டோ' ஒரு



கோட்பாட்டுடன் இருந்து, அவர்கள் சித்தாந்தத்தில் 'நான் உழைப்பேன், எனவே உயர்வேன்' என்று சொல்கிற சிந்தனை அவர்களுக்கு வருகிற அளவிற்கு இந்த இலாக்கா கண்காணிக்கப்பட்டு, சரியாக செயல்படுத்தப்பட வேண்டுமென்று சொல்கிற என்னுடைய வேண்டுகோளை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொரு செய்தி, கான்ஸ்டபிள் டெஸ்ட்-கான்ஸ்டேபிளாக இருந்து, ஹெட் கான்ஸ்டேபிளாக வந்து, கிரேடு ஒன்றாக மாறி, பிறகு சப்-இன்ஸ்பெக்டராக வருகிற வாய்ப்பு 1981ஆம் ஆண்டு வரையில் சில தேர்வுகள் எழுதி கிடைத்தது. 1981 ஆம் ஆண்டிற்கு பிறகு அந்தத் தேர்வு நடத்தப்படவில்லை. எனவே, ஹெட்-கான்ஸ்டேபிள் சப்-இன்ஸ்பெக்டராக வர வேண்டுமென்றால் அந்தத் தேர்வு எழுதி வெற்றி பெற்று விட்டால் போதும் என்ற நிலை மாறி, 1981-ம் ஆண்டிற்கு பிறகு 1982-ல் இல்லை, 1983-ல் இல்லை, 1984-ல் இல்லை, பிறகு 1985-ல் மீண்டும் அந்தத் தேர்வு நிலை வந்தது. கான்ஸ்டபிளிலிருந்து சிலர் சப்-இன்ஸ்பெக்டராகி வந்தார்கள். இவ்வளவு நாள் நான் கான்ஸ்டேபிளாக இருந்து, ஹெட் கான்ஸ்டபிளாக வந்து, ஒழுங்காகப் பணி புரிந்தேன். தேர்வில் இப்போது வெற்றி பெற்று விட்டேன். நான் இப்போது சப்-இன்ஸ்பெக்டர் என்று சொல்கிற மரியாதை இவர்களுக்கு வந்தது. 1985-ல், மீண்டும் வந்தது. 1986-ல் இல்லை, 1987-ல் இல்லை, 1988-ல் இல்லை, 1989-ல் இல்லை, 1990-ல் இல்லை. அந்தத் தேர்வு எழுதுகிற வாய்ப்பு இப்போது இல்லையென்று சொல்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதைப் பார்வையிட்டு, அந்த ஹெட்-கான்ஸ்டேபிளுக்கு ———காரணம் என்னதென்று சொன்னால், நேரிடையாக சப்-இன்ஸ்பெக்டரை தேர்ந்தெடுப்பது அதிகப்படுகிறது. நேரிடையாக எடுக்க வேண்டாம் என்று சொல்லவில்லை. அப்படி எடுக்கவேண்டும். ஆனால்———There must be a proportion. இவர்களுக்கு இவ்வளவு, அவர்களுக்கு இவ்வளவு என்று சொல்கிற ratio அங்கே இருக்க வேண்டும். கீழே இருந்து படிப்படியாக வருபவர்கள், உழைப்பாலே இவ்வளவு பேர் உயரலாம், படிப்பில், திறமையால் இவ்வளவு பேர் வரலாம் என்று இந்த இரண்டுக்கும் ஒரு பங்கீடு கொடுப்பீர்களானால் மனக்குறை இல்லாத ஒரு இலாக்காவாக இது இருக்கும் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

சில இடங்களில் இருக்கிற சில பிரச்சினைகளை எங்களிடம் கொண்டு வந்து தருகிறார்கள். தவறாக நினைக்கக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். ஆலங்குளம் என்று நெல்லை மாவட்டத்திலே இருக்கிற ஒரு ஊர்.

நம்முடைய எம். எல். ஏ. கூட அங்கே இருக்கிறார். அங்கே சிவனார்குளம் என்று சொல்கிற ஒரு ஊரில் இருக்கிற ஒரு குடும்பம். சுற்று வட்டாரத்தை எல்லாம் அடக்கி, ஒடுக்கி, அரட்டி, உருட்டி, வைத்துக் கொண்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். இது 10 ஆண்டுக் காலமாக நடக்கிறது. ஏன் இந்த மனுவை என்னிடம் கொண்டு வந்து தருகிறீர்கள் என்று கேட்டால் அவர்கள் சொல்கிறார்கள்——விளக்கமாக அதிலே 10 பக்கத்திலே எழுதி இருக்கிறோம். எந்தெந்த இடங்களில், என்னென்ன நடந்தது என்று எழுதி இருக்கிறோம் என்று. நான் உடனே சொன்னேன், அவைகளை எல்லாம் நான் குறிப்பிட மாட்டேன். நடக்கிறது என்பதை வேண்டுமானால் நான் சொல்கிறேன். அதன்மூலம் முதலமைச்சருடைய பார்வைக்குப் போய், நியாயம் கிடைக்கும் என்று சொல்கிற அளவிற்கு சொல்லி, அதற்கு மேலே இதை நான் பேச விரும்பவில்லை. எல்லா எம். எல். ஏ.க்களுக்கும் ஓரளவிற்கு தெரிந்த விஷயமாக இருக்கிற காரணத்தால் அதற்கு மேலே நான் பேச விரும்பவில்லை.

அடுத்து, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் வரதராசன் அவர்கள் பேசுகிற நேரத்தில் தாடண்டர் நகரைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். கவர்ன்மென்ட் சர்வெண்ட் குவார்ட்டர்ஸ் இந்தியாவிலேயே முதல் முதலாக கட்டப்பட்டது அதுதானாம். 1924-ம் ஆண்டில் கட்டப்பட்டது என்று சொல்கிறார்கள். அங்கே ஒரு சுவர் எழுப்புவதில் கூட இவ்வளவு பெரிய தகராறு வந்து, பிறகு சாலை மறியலுக்கு வர வேண்டிய நிலை இருக்கிறது என்றால், பிரச்சினையை நீங்கள் சற்று ஆய்ந்து பார்க்க வேண்டும். ஒரு சுவர் எழுப்புவதில் அங்கே தகராறு. ஒருவர் வந்து, எவனடா சுவர் எழுப்பினான் என்று கேட்கிறார். யாரடா பிடித்துப் போவது என்று கேட்கிறார். அவரே சொன்னார். இவ்வளவும் கேட்டுவிட்டு, பிறகு நியாயம் கிடைக்க வேண்டுமென்று சொல்லி அதிகாரிகள் எல்லாம் சாலையில் உட்கார்ந்து இருக்கிற அளவிற்கு ஒரு நிலைமை உருவாகி இருக்கிறது என்றால், எல்லா இடங்களிலும் திடீர் திடீரென்று சாலை மறியல் வர வேண்டுமா ? ஒருவருடைய பிரச்சினைக்காக சாலை மறியல் வருகிறது என்று சொன்னால், ஊரிலே இருக்கிற மக்களுக்கு எல்லாம் துன்பம் வருகிறது அல்லவா? நாங்கள் எல்லாம் சாலை மறியலில் ஈடுபடுகிறோம். முதலமைச்சர் அவர்கள் திரும்ப என்னைக் கேட்பார்கள் என்பதற்காகச் சொல்கிறேன். குறைகள் அங்கங்கே தீர்க்கப்படாத காரணத்தால், அங்கங்கே புண்ணிற்கு சிறியதாக மருந்து தடவுகிற நேரத்தில் குணமாக்குகிற காரியத்தைச் செய்யாத காரணத்தால், ஆப்ரேஷன் செய்யவேண்டிய சூழ்நிலை உருவாகிறது என்பதை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன்.



பொதுவாகவே சொல்ல விரும்புகிறேன். எனவே அவர்கள் இதைச் சொன்ன காரணத்தாலே, அதற்கு மேலே சொல்ல விரும்பவில்லை.

11-20 மணி.

இன்னொரு மனக்குறையை என்னிடம் மனுவாகக் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் எம். ஜி. ஆர். அவர்கள் இங்கே தமிழகத்திலே பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறபோது, 500-க்கும் மேற்பட்ட இன்ஸ்பெக்டர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்றும் அவர்களுடைய புரோபேசன் பீரியட் பலருக்கு, மிக அதிகமான பேருக்கு நீட்டித்துக் கொண்டே போகிறது என்றும், எக்ஸ்டன்சன் கொடுத்துக் கொண்டே போகிறார்கள் என்றும் கொஞ்ச நாள் புரபேசனிலே இரு, இரு, இரு என்று சொல்லிக் கொண்டேயிருக்கிறார்கள் என்றும், அதை ரெகுலரைஸ் பண்ணவில்லை என்றும் சொல்கிறார்கள். எனவே இதை நீங்கள் கவனித்துப் பார்த்து, வேண்டுவது செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

நீதிமன்றத்தினுடைய தீர்ப்புகள் சில நேரங்களில் போலீஸ் இலாக்காவாலே நிறைவேற்றித் தரப்படுகின்றனவா? நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு வந்துவிட்டது என்று சொன்னவுடனே, பொதுமக்கள் அந்தக் காரியத்தை தாங்களாகவே செய்துவிட முடியாது. காவல்துறையினுடைய அனுமதியோடுதான், மன்னிக்கவேண்டும், காவல்துறையினுடைய அனுசரணையோடுதான், காவல் துறையினுடைய துணையோடுதான் நீதிமன்றத் தீர்ப்புக்கள் கூட நிறைவேற்றப் படவேண்டும். ஏன் என்றால், நீதிமன்றத் தீர்ப்புக்கள் வந்துவிட்டது; எனவே நான் கட்டுப்படுகிறேன் என்று சொல்கிறவர்கள் வெகு சிலராகவே இருக்கக் கூடும். அந்த நீதிமன்றத்தினுடைய தீர்ப்பை நிறைவேற்றுவதற்கு துணை நிற்கவேண்டியது இந்த போலீஸ் இலாக்காதான். ஒரு சிறிய உதாரணத்தைச் சொல்கிறேன். திரு-வொற்றியூரிலே அரிசனங்களுக்கு என்று பட்டா போட்டுக் கொடுக்கப்பட்ட இடம், அந்த இடத்தினுடைய நடுப்பகுதியிலே இராப்பள்ளி என்று சொல்கிற ஒரு இடம், இரவுப் பள்ளியாக அவர்கள் வைத்திருக்கிறார்கள். அரசியல் கட்சியைச் சேர்ந்த சிலர் சாலையோரத்திலே தங்களுடைய அரசியல் கட்சிக்கு என்று சொல்லி, அலுவலகத்தைத் திறந்திருக்கிறார்கள். இது ஹைவேசிலே இருக்கிற காரணத்தாலே உடைக்கப்படுகிறது. சிலர், இது அரசாங்க அதிகாரிகளால் உடைக்கப்பட்டது என்று சொல்கிறார்கள்.

சிலர், இல்லை, அவர்களே ஒரு லாரியை வைத்துக் கொண்டு உடைத்துக் கொண்டார்கள் என்று சொல்கிறார்கள். அதற்குள்ளே நான் போகவில்லை. அங்கே கட்டடம் இல்லை என்ற நிலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இவ்வளவு நாளும் அரசியல் கட்சிக்கு இருந்த, சாலையோரத்தில் இருந்த அலுவலகம் இல்லை என்ற நிலையை அங்கே உண்டாக்கிக் கொண்டு, அந்த அரிசனங்களுக்கு என்று கொடுக்கப்பட்டு இருக்கிற இரவுப் பள்ளிக்கூடத்தையே தங்களுடைய அலுவலகமாக ஆக்கிக் கொள்கிறார்கள். அதை அலுவலகமாக ஆக்கிக் கொண்டவுடனே, அவர்கள் நீதிமன்றத்திற்குப் போகிறார்கள். நீதிமன்றத்திலே இது தவறு என்று சுட்டிக் காட்டப்படுகிறது. ஆனால் இன்று வரை உள்ளே போனவர்களை வெளியேற்ற முடியவில்லை. நான் குறிப்பைத்தான் சொல்கிறேன். இப்படி எங்கெங்கே நீதிமன்றத்தினுடைய தீர்ப்புகளை நிறைவேற்ற முடியாமல், தமிழ் மக்கள் துன்பப்படுகிறார்கள் என்று பார்க்க முடியாதா? ஒரு புள்ளி விவரம் எடுக்க முடியாதா? நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன், புள்ளிவிவரம் எடுங்களேன். எங்கெங்கு நீதிமன்றத்தின் தீர்ப்புக்கள் நிறைவேற்றப்படவில்லை, அதற்கு காரணம் என்ன, அதைத் தடுத்து நிறுத்துகிற பெரிய மனிதர்கள் யார் யார் பெயரைச் சொல்லி, ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள், என்பதை எல்லாம் நாம் தெரிந்து கொள்ளலாம் அல்லவா? அதன்மூலம் ஒரு சரியான பாதையை எடுத்துக் கொடுப்பதற்கு, நீதிக்கும் காவல் துறைக்கும், மக்களுக்கும் ஒரு இணைப்பு வருகிற சூழ்நிலையை உருவாக்கலாம் அல்லவா? இதை நீங்கள் பார்க்க வேண்டும் என்று நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பல்லாவரத்திலே ஒரு தகராறு நடந்தது. பல செய்திகளை நான் சொல்லக்கூடாது. ஆனால் எந்தத் துணிச்சல் வந்திருக்கிறது என்று சொன்னால், குற்றவாளி என்று சொல்லப்படுகின்றவர்களுக்கு பதிலாகவே, இன்னொரு ஆளைக் கொண்டு போகிற முயற்சி நடந்திருக்கிறது. தேர்விலே ஆள்மாறாட்டம் செய்வதைப் போல, இந்த வழக்கிலேகூட ஒரு ஆளை, ஆள்மாறாட்டம் செய்துவிடலாமா என்ற எண்ணம் எல்லாம் எப்படி ஏற்படுகிறது. அவர்களுக்கு ஏற்பட்டது அல்லது ஏற்படாததைப் பற்றி நான் பேசவில்லை—அவர்களுக்கு ஒரு துணிச்சல் எப்படி ஏற்படுகிறது என்று சொன்னால், ஏதோ நாம் சமாளித்துவிடலாம் என்று நினைக்கிறார்கள். இதைச் சமாளித்துவிடலாம் என்ற எண்ணம் வரக்கூடாது. நீதி என்பது ஒன்றுதான், தமிழகத்தில் இருக்கிற மக்களுக்கு நிலையாக வந்துக்கொண்டிருக்கிற தத்துவம். பாசமும் பக்தியும் இரண்டாவதுதான். ஏன்



பாசமும் பக்தியும் இரண்டாவது என்று சொல்கிறேன் என்று சொன்னால், சோழமன்னன் தேர்க்காலின் கீழே தன்னுடைய மகனைப் போட்டுக் கொன்றான் என்று சொன்னால், பாசத்தை நீதி வென்றது. அதைப்போலவே நக்கீரன் சிவனை எதிர்த்துச் சொன்னான் என்று சொன்னால், பக்தியை நீதி வென்றது. எனவே பாசத்தையும் நீதி வெல்லவேண்டும், பக்தியையும் நீதி வெல்லவேண்டும் என்று சொன்னால், யார் தவறு செய்கிறார்கள் என்று இருந்தாலும், எப்படிப்பட்டவர் தவறு செய்வதாக இருந்தாலும், நடவடிக்கை எடுக்கவேண்டும். — அளவுகோலை சரியாக வைத்திருப்பவர்கள், துணிக்கடையிலே, கதர்ச் சட்டையை அளக்கின்ற அதே அளவுகோலில்தான் பட்டுத் துணியையும் அளப்பார்கள். பட்டுத் துணி என்பதற்காக அளவு கோல் மடங்கிவிடும் என்று சொன்னால், அது அளவுகோலே அல்ல. அதனால்தான் சொல்கிறேன்.

இப்போது வீரப்பனை எடுத்துக் கொள்வோம். ஒரு செய்தியைச் சொல்லிவிட்டு ஓடிவிடுகிறேன். வீரப்பனை எடுத்துக் கொண்டால், (குறுக்கீடு). ஆமாம், ஹெலிகாப்டரிலேயிருந்து ஓடுகிறவனை நானும் ஓடித்தானே பிடிக்க வேண்டும். அதற்காக, அங்கே ஹெலிகாப்டரிலிருந்து.....
.............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் எந்தக் காரணம் கொண்டும் ஓடிவிடக்கூடாது என்று நாங்கள் ரொம்ப அக்கறையோடு இருக்கிறோம். (சிரிப்பு)

திரு. குமரி அனந்தன் : எனக்கு ரொம்ப மகிழ்ச்சி என்னை இந்த இடத்திலே தொடர்ந்து வைக்கவேண்டும் என்று நீங்கள் ஆசைப்படுகிறீர்கள், என்பதிலே மகிழ்ச்சி. தேர்தல் நேரத்திலே வந்து சொன்னால் நன்றாக இருக்கும்,

வீரப்பனைப் பொறுத்தவரையில் இவ்வளவு படைகள் போனபிறகும், அவன் தப்பித்துப் போவதற்கு காரணம் என்ன? நம்முடைய போலீசுக்கு போதிய எக்குவிப்மென்ட்கள் இல்லை. நான் தர்மபுரி போயிருந்த நேரத்திலே கேட்டேன், அங்கே ஒகனேக்கல் பக்கத்திலே உட்கார்ந்து கொண்டு, அந்தக் கர்நாடகத்திலேயிருந்து வந்த அதிகாரிகள், இந்த டியூட்டி முடிந்து அடுத்தவர்கள் வருகிறார்கள் பாருங்கள், ஷிப்ட், இந்த ஷிப்டிலே அடுத்தவர்கள் வரவேண்டும். இவர்கள், பொறுப்பை ஒப்படைத்துவிட்டு புறப்பட்டுப் போகிறவர்கள்தான் செத்தார்கள். பொறுப்புக்கு வந்தவர்கள் சாகவில்லை. அதிலே ஒருவன் எனக்கு மிக வேண்டியவன்.

அவன் கல்லூரியிலே படித்துக் கொண்டிருக்கிற நேரத்திலே ஆணழகன் என்று புகழ் பெற்றவன், காதலித்து திருமணம் செய்தவன். 1½ வயதிலே அவனுக்கு ஒரு குழந்தை இருக்கிறது. யானையைச் சுடுகிற துப்பாக்கியாலே சுட்ட காரணத்தாலோ என்னவோ. குடல் எல்லாம் போய் ஆளே தெரியாத அளவுக்கு, ஒன்றுமே இல்லாத அளவிற்கு போய் விட்டான். மேலே இருந்து சுட்டார்களாம். மரத்திற்கு மேலேயிருந்து இந்த ஜீப் கீழே போய்க் கொண்டிருக்கிறபோது சுட்டார்களாம். இதை நான் விசாரித்தபோது சொல்கிறார்கள். ஒகனேக்கல்லிலே அவர்கள் எல்லாம் என்ன பேசிக்கொண்டிருந்தார்களாம், போகிற போக்கிலே எவனாவது கிடைத்தால், நல்லதுதானே என்று, அந்த டீக்கடையிலே பேசிக்கொண்டிருந்தது இந்த வீரப்பனுக்குத் தெரிகிறது. 11.25மணி ஒகனேகல்லில் இருக்கிற டீக்கடையில் பேசிக்கொண்டிருப்பது வீரப்பனுக்குத் தெரிகிறது என்று சொல்கிறேன். எப்படிப்பட்ட 'நெட் ஒர்க்' அவனிடம் இருக்றதோ எனக்குத் தெரியாது. ஆள் மூலம் போகிறதா, அல்லது வாக்கி டாக்கி மூலம் போகிறதா, தெரியாது. அவனை ஹெலிகாப்டர் வைத்து தேடவேண்டியிருக்கிறது. அதற்கு ஒரு காரணம் என்ன சொல்கிறார்கள் தெரியுமா? அவன் ஏற்கெனவே லேபர் கான்ட்ராக்டரிடம் ஒர்க் பண்ணியவன். அங்கே மரங்கள் வெட்டுகின்ற அந்த பெரிய கான்ட்ராக்டரிடம் வேலை செய்ததினாலே காடுகளில் இருக்கின்ற மூலை முடுக்குகள் எல்லாம் அவனுக்குத் தெரியும். நமது அதிகாரிகளுக்குத் தெரியாது. போகின்ற அளவிற்கு பயிற்சி கொடுக்கவில்லை.

1983-லே திருப்பத்தூரிலே அதிரடிப் படைக்கு என்று ஒரு பயிற்சி கொடுக்கப்பட்டது. 1983-ல் அதிரடிப் படைக்கு பயிற்சி கொடுக்கப்பட்டதே தவிர, பயிற்சியை எல்லாம் பயன்படுத்தவேயில்லை. அந்த பயிற்சி கொடுக்கின்ற பழக்கத்தை நிறுத்திவிட்டோம். ஏன்? அங்கே தான் காடுகளுக்குள்ளே புகுந்து இப்படி எல்லாம் நாம் செயல்படவேண்டுமென்று சொல்கின்ற பயிற்சியைக் கொடுத்தோம். அப்படிக் கொடுத்த பயிற்சியை நிறுத்துவதற்கு என்ன காரணம் ? அதனால் தானே வீரப்பன்கள் எல்லாம் வாலாட்டிக் கொண்டிருக்கிறார்கள் ? அதனாலே அப்படிப்பட்ட பயிற்சிகளைக் கொடுத்து காடுகளிலே வாகனங்கள் போக முடியாத இடத்திலே நமது போலீஸ் அதிகாரிகள் எப்படிப் போக வேண்டும் என்ற அளவிலே பயிற்சியைக் கொடுங்கள். காடுகளுக்குள்ளே மறைந்திருப்பவர்களை சாதாரணமாகப் பிடித்துவிட முடியாது. ஏனென்றால் அவர்கள் இருப்பது நமக்குத் தெரியாது. நாம் போவது அவர்களுக்குத் தெரியும். நாம் சுடுவதற்கு முடியும். ஆதலாலே அதற்கேற்ப



பயிற்சிகளைக் கொடுத்து அதற்கேற்ப நவீன கருவிகளைக் கொடுத்து அவர்களுக்கு ஊக்கம் கொடுக்கவேண்டுமென்று உங்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்த ஒரு செய்தி, ஒரே ஒரு முக்கியமான செய்தியை இங்கே சொல்ல விரும்புகிறேன். சென்னையில் சி-2 என்று சொல்கின்ற அந்த போலீஸ் ஸ்டேஷனிலே இரண்டு வாரத்திற்கு லாக்-அப்பிலே இருந்த ஒரு கைதி அடித்துக் கொல்லப்பட்டிருக்கிறான். அது அமுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. தீர விசாரியுங்கள். அவ்வளவுதான். என்னிடம் தகவல் இருக்கின்ற காரணத்தினால் சொல்கிறேன்.

அடுத்து சில நலத் திட்டங்களை மட்டும் சொல்ல விரும்புகிறேன். போலீஸ்காரர்களுக்கு போலீஸ் லைன் என்ற ஒன்று கட்டிவைத்திருக்கிறார்கள். ரொம்பக் காலத்திற்கு முன் கட்டிய வீடுகள். அது போலீஸ் லைன் என்று மொத்தமாக ஒரு வரிசையில் இருக்கின்ற காரணத்தினால், உள்ளே போய்ப் பார்த்தால் உண்மையிலேயே அது போலீஸ் லைன் என்று தெரியும். ஒவ்வொரு சுவரிலும் கோடுகள் கிழிந்து பிளவுகள் இருக்கின்ற காரணத்தினாலே அது போலீஸ் லைன் தான் என்று சொல்கின்ற அளவிற்கு ஓட்டையாகிக் கொண்டிருக்கிறது. புதுப் புது வீடுகளைக் கட்டிக் கொடுக்கின்ற நேரத்தில் பழைய வீடுகளையும் செம்மைப்படுத்துவதற்குரிய முயற்சிகளுக்கு நாம் போக வேண்டும்.

அதைப்போலவே பெட்ரோல் என்பதிலே கன்ட்ரோல் இருக்கிறது. ஒவ்வொரு இலாக்காவிற்கும் ஒரு அதிகாரி இவ்வளவுதான் பெட்ரோல் செலவு செய்யவேண்டுமென்றிருக்கிறது. ஆனால் போலீஸ் இலாக்காவிலே நீங்கள் இவ்வளவு கண்டிப்பாக இருக்கக் கூடாது. எனக்குத் தெரிந்த அளவிற்கு நான் சொல்கிறேன். ஒரு போலீஸ் சப்-இன்ஸ்பெக்டருக்கு மாதத்திற்கு 40 லிட்டர் என்று வையுங்கள் முன்பு போல் அல்ல. நாற்பதோ அல்லது ஐம்பதோ இருக்கலாம். அந்த எண்ணிக்கையில் தவறு செய்தால் அதைத் திருத்திக் கொள்ளுங்கள். 40 லிட்டர் அல்லது 50 லிட்டர் என்று வையுங்கள். முன்பெல்லாம் ஒரு கிராமத்திலே போய் நாட்டாமைக்காரரைப் பிடித்து, ஏய் எங்காவது கள்ளச் சாராயம் காய்ச்சினால் நீ தான் பொறுப்பு என்று சொல்லிவிட்டு வந்து விடலாம். இப்போது எங்கே நாட்டாமைக்காரன் இருக்கிறான்? யார் நாட்டாமைக்காரன் ? யார் இடத்தில் இருப்பான்? அவனை தேடிப் போக வேண்டியிருக்கும். அதற்கு 'பிரிக்வென்ட்'

ட்ரிப் தேவைப்படும். அதற்கு 40 லிட்டர் பெட்ரோல் போதாது. 40 லிட்டர் போதவில்லை என்றால் வேறு என்ன செய்வான்? நாளைக்கு ஒருவர் புகார் கொடுக்கின்ற நேரத்தில் நீ பெட்ரோல் போடு என்று சொல்வான், அவருடைய கருணைக்கு இவர் உட்படுகிறார். இவருடைய கடமைக்கு அவர் உட்படுவதற்கு பதிலாக கருணைக்கு உட்படுகிற சூழ்நிலை வருகிறது பாருங்கள். அதுதான். அதுபோல் எந்த அரசியல் கட்சியாக இருந்தாலும் சரி, போராட்டம் நடத்துகின்ற ஆட்களின் எண்ணிக்கையைக் குறைத்துக் காட்ட வேண்டுமென்ற முயற்சியிலே இருக்கக் கூடாது. இந்த அரசாங்கத்தை எந்தக் கட்சி நடத்தினாலும் சரி. ஏன் தெரியுமா ? 5,000 பேர் ஒரு இடத்திலே கைதாகிறார்கள். நீ 2,000 என்று சொல் என்று சொன்னால், மீதி இருக்கின்ற 3,000 பேருக்கு சாப்பாடு யார் வாங்கிக் கொடுப்பது ? சாப்பாடு வாங்கிக் கொடுக்கவேண்டும் அல்லவா ? அங்கேயும் ஊழல் முளைக்கிறது அல்லவா ? ஆகவே அரசியல் கட்சி எதுவாக இருந்தாலும், எந்தக் கட்சி ஆட்சி நடந்தாலும், உண்மையிலே எத்தனை தொண்டர்கள் போனார்கள் என்பதை கணக்கிலே வைப்பதற்குரிய ஒரு சூழ்நிலையை உருவாக்கவேண்டும். அது மிக முக்கியம் என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

அதைப்போலவே ஹோம் கார்டு பற்றிச் சொன்னார்கள். ' ஆர்டினரி கால் அவுட் ' என்று சொல்லுகின்ற இந்த ஹோம் கார்டு இருக்கிறார்களே, அவர்களுக்கு 6 மணி நேரத்திற்கு ரூ. 6 தான். 6 மணி நேரத்திற்கு மேல் போனால் அது ரூ. 10 ஆகிறது. அவர்களுக்கு கொஞ்சம் மேலேயே அதிகமாக நீங்கள் கொடுக்கவேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். இந்த வீரப்பனைச் பற்றிச் சொல்கின்றபோது ஒரு குறிப்பை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். 'காட்டிலாகா' போலீசோடு சரியாக ஒத்துழைக்கவில்லை என்ற தகவல் வந்திருக்கிறது. எனவே அதனை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பார்க்கவேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன்.

இந்த ஒரே ஒரு செய்தி தான் நிறைவு செய்கின்ற செய்தி. 22-2-1955-லே நெல்லை மாவட்டத்தில் தண்டப்பட்டு என்ற இடத்தில் தொண்டர் ஆறுமுக நயினார் ஞாபகார்த்த வாசகசாலை சென்னை ராஜ்யத்தின் முதன் மந்திரி கனம் ஸ்ரீ காமராஜர் அவர்களால் அஸ்திவாரக்கல் நாட்டப்பட்டது. 22-2-1955 ஒரு தொண்டர், ஆறுமுக நயினார் என்பவர் போலிசாலே அடிபட்டு, சுதந்திரப் போராட்டத் தியாகியாக



இருக்கின்ற காரணத்தினாலே உயிரைத் துச்சமாக மதித்துப் போராடிய காரணத்தினாலே ஒரு காங்கிரஸ் தொண்டனாக இருந்து போராடி அடிபட்டு, அந்த அடியின் காரணமாக இறந்தே போய்விட்டார்.

(11-30 மணி)

அவருடைய நினைவாக சிதம்பர நாடார் என்கிறவர், அங்கே ஒரு ஞாபகார்த்த வாசக சாலை— ' நினைவு படிப்பகம் ' ஒன்று கட்டித் தந்தார். அதற்கு அடிக்கல் நாட்டியவர் பெருந்தலைவர் காமராஜர். நான் இங்கே உங்களுக்கு தேவையைச் சொன்னேன். இதன் பக்கத்திலே ஒருவர் கல்யாண மண்டபம் கட்டவேண்டுமென்று விரும்பி, அது கல்யாண மண்டபத்தை மறைக்கிறது என்று சொல்லி, அதனைப் போய் இடிக்கச் சொல்லி, அந்தக் கல்லெல்லாம் கீழே கிடக்கின்ற நிலையைச் சொல்கிறேன். அப்படி செல்வாக்கு பெற்ற பெரிய மனிதர் என்ற காரணத்தினாலே, போலீசும் செயலாற்றாமல் நின்றுவிட்டதாக சொல்லப்படுகிறது. இங்கேதான் நான் சொல்கிறேன். யார் எப்படி இருந்தாலும்— அமைச்சர் பதவியிலே இருந்தாலும் சரி, அனந்தனைப் போல எம்.எல்.ஏ. பதவியில் இருந்தாலும் சரி, ஒன்றும் இல்லாதவராக இருந்தாலும் சரி, ' நேச்சுரல் ஜஸ்டிஸ் ' அவர்களுக்குக் கிடைக்க வேண்டும் : ' ரூல் ஆப்-லா ' அவர்களுக்குக் கிடைக்க வேண்டும். எனக்கு இருக்கிற வேதனையெல்லாம், ஒருவருடைய கல்யாண மண்டபம் கட்டுவதற்காக, எங்கள் பெருந்தலைவர் காமராஜ் அவர்களின் கையால் அடிக்கல் நாட்டப்பட்ட பொதுமக்களுக்கு பயன்பட்ட, ஒரு தியாகிக்காகக் கட்டப்பட்ட அந்த வாசகசாலை இடிக்கப்பட வேண்டுமா ? நெல்லை மாவட்டத்திலே அப்படிப்பட்ட சக்தி வாய்ந்த ஒருவர் தலையிட்டு, '' நீ, இடி ; நான் பார்க்கிறேன் '' என்று சொல்லக்கூடிய அளவுக்குக் காரியம் நடந்திருக்கிறது. அதை முதலமைச்சர் அவர்கள் கவனத்திலே கொள்ள வேண்டும் என்பதற்காகக் கையிலே வைத்திருக்கிறேன். அதை எந்த நேரத்திலே கேட்டாலும், கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறேன் என்று சொல்லி, இன்று சில செய்திகளை உங்கள் மத்தியிலே வைத்தேன். நீதிபதியினுடைய ஆணை தெரிவிக்கப்பட வேண்டும் என்று சொல்கிற நேரத்தில், இன்று பத்திரிகையிலே வந்திருக்கிறது ; நேற்று, சேலம் மேஜிஸ்ட்ரேட் கோர்ட்டிலே, சாட்சி சொல்ல வந்த 24 வயது இளைஞனை, அந்த மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டிலே இழுத்துப் போட்டு கொன்றிருக்கிறார்கள். அந்த துணிச்சல் எப்படியோ வருகிறது. அந்த துணிச்சலிலே இருப்பதற்கு எல்லோரும்

ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறார்கள். தமிழ்நாட்டிலே அது கூடாது, கூடாது என்பதற்காக, ' கூடாது ' என்று சொன்னால், அப்படிப்பட்ட காரியத்தை நிறைவேற்றுவதற்கு காவல்துறை துணையாக இருக்க வேண்டாம் என்பதற்காக, விருப்பு வெறுப்பிலிருந்து, '' சமன்செய்து சீர்தூக்கும் கோல் போல் '' ஒரு தராசு போல நடந்துகொள்ள வேண்டுமென்ற முறையிலே, அவர்கள் நிச்சயமாக அதைக் கடைப் பிடிக்க வேண்டுமென்றும் அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பார்த்துக் கொள்ளவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டு அமைகிறேன். வணக்கம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல்துறை குறித்த விவாதத்திற்கு பதில் அளிப்பதற்கு முன்பு, இந்த மாமன்றத்திற்கு ஒரு மகிழ்ச்சிகரமான செய்தியைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

The Supreme Court have directed the Government of India to constitute a Trib..nal within one month from to day. (மேசையைத் தட்டும் ஒலி).

தஞ்சை விவசாயிகளின் சார்பாகத் தொடரப்பட்ட வழக்கில், தமிழக அரசும் இணைந்து சிறந்த வழக்கறிஞர் களை வைத்து வாதாடியது உங்களுக்குத் தெரியும். கர்நாடக மாநிலம் இன்னமும் பேச்சுவார்த்தையை நடத்தலாம் என்று கூறியபோது, இனிமேல் பேச்சுவார்த்தைக்கு இடமே இல்லை என்கிற தீர்மானத்தை, எல்லாக் கட்சிகளின் சார்பிலேயும், அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அந்த வழக்கிலே வாதாடுகின்ற வழக்கறிஞர்களுக்கு மேலும் உறுதுணையாக இருக்கும் விதத்தில் நிறைவேற்றிக் கொடுத்திருக்கிறீர்கள். அந்த உறுப்பினர்கள் அனைவருக்கும் இந்த வெற்றியிலே பங்குண்டு என்பதைத் தெரிவித்து, அவர்களுக்கெல்லாம் என்னுடைய உளமார்ந்த நன்றியை இந்த நேரத்திலே தெரி வித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இங்கே உரை நிகழ்த்தியபோது, இறுதியிலே, அந்த கடிகாரத்தினுடைய வேகத்திற்கும் மணி யினுடைய ஓசைக்கும் இடையே, நான் சொல்லிய கருத்துக் களுக்கு இயல்புடையதாக இருந்தாலும் கூட, ஒரு பழ மொழியைச் சொன்னேன். அந்தப் பழமொழி, அவைக் குறிப்பிலே இடம் பெறுவது எனக்கும் அழகல்ல ; இந்த அவைக்கும் அழகல்ல என்பதனால், அதனை நீக்கி விடுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவருடைய வேண்டு கோளுக்கிணங்க, அந்தப் பழமொழி, அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . . (குறுக்கீடு).

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமான மகிழ்ச்சிகரமான ஒரு தீர்ப்பை, சுப்ரீம் கோர்ட் அளித்து, அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவைக்கு அளித்திருக்கிறார்கள். அவையின் சார்பாக, அவையின் உறுப்பினர்களின் சார்பாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்ட இந்த நல்ல முயற்சிக்கு, அதிலே நமக்குக் கிடைத்த வெற்றிக்கு, முதலமைச்சர் அவர்களே முழு முழு காரணம் என்ற கார ணத்தினால், அவருக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப் பட்டிருக் கிறோம்.

(மேசையைத் தட்டும் ஒலி.)

(11-35 மணி.)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்த மகிழ்ச்சியிலே நம்மோடு இருந்து கொண்டாடுவதற்கு பிரதான எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இங்கில்லை என்கின்ற வேதனை என்னுடைய இதயத்தை ஒருபுறம் குடைந்து கொண்டிருந்தாலும் கூட, வெளியில் இருந்தாலும் அவர்களும் மகிழ்ச்சி அடைவார்கள் என்ற நம்பிக்கையோடு என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன்.

காவல் துறை குறித்த ஆய்வுரை, தீயணைப்புத் துறை குறித்த விளக்கக் குறிப்புகள், அதைப்போல ஆயத் தீர்வை குறித்த விளக்கக் குறிப்புகள் இவைகளின் மீது நேற்றும், இன்றும் மாண்புமிகு உறுப்பினர்கள், கட்சிகளின் தலைவர்கள் அரிய கருத்துக்களையெல்லாம் எடுத்து வழங்கியிருக்கிறார்கள். குறிப்பாக இறுதியாகப் பேசிய, காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் மிகவும் பொதுவான அறிவுரைகளை, கண்டிக்கின்ற நேரத்திலே கண்டித்து, திருத்திக் கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தோடு, பொதுவான அறிவுரைகள் பலவற்றை இங்கே எடுத்துக் கூறியமைக்காக அவர்களை நான் பாராட்டவும், நன்றி கூறவும் கடமைப் பட்டவனாக இருக்கின்றேன். காவல்துறை, எந்த ஒரு கட் சிக்கும் எதிரான, விரோதமான, பகைவரான ஒரு துறை அல்ல, அப்படிப்பட்ட அந்தத் துறை குறித்து, இங்கே பேசப் பட்ட எல்லாக் கட்சித் தலைவர்களுடைய பேச்சுக்களும்,

[டாக்டர் மு. கருணாநிதி] [1990 மே 4

உறுப்பினர்களுடைய கருத்துக்களும், ஒரு விரோத மனப்பான்மையோடு கூறப்பட்டவை என்று நான் எடுத்துக் கொள்ளவில்லை. இன்னும் நல்ல முறையில் காவல் துறை பணியாற்ற வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு எடுத்து வைக்கப்பட்ட கருத்துக்கள் என்றே நான் அவைகளை ஏற்றுக் கொள்கின்றேன். அந்தத் துறையினுடைய பொறுப்பை நான் சேர்த்து வகிக்கிறேன் என்ற காரணத்தினாலே இங்கே நீங்கள் சொன்ன எல்லாக் கருத்துக்களையும் ஏற்று, அந்தக் கருத்துக்களில் ஒன்றிரண்டு தவறானவைகளாக இருந்தாலும் கூட, அவைகளைப் பற்றிய விளக்கங்களை உங்களுக்குக் கூறி, நீங்கள் சுட்டிக்காட்டியதைப் போல் தவறு இந்தக் காவல் துறையின்பால் இருந்தால், எந்த முறையிலே அந்தத் திருத்தத்தை செய்வதற்கு என்னென்ன முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமோ, அந்த முயற்சிகளையெல்லாம் மேற்கொள்வேன் என்று உறுதியளிக்கின்றேன்.

நேற்றைய தினம் மிக முக்கியமாக இந்த ஆய்வுரையிலே ஒரு பிரச்சினை கிளப்பப்பட்டு, நேற்றைக்கு தாங்களும் நானும் அவை முன்னவரும் எவ்வளவோ எடுத்துக் கூறியும் கூட ஆய்வுரையிலே உள்ள ஒரு வாக்கியத்தை அகற்றா விட்டால், இந்த அவையிலே, விவாதத்திலே கலந்து கொள்ள மாட்டோம் என்று பிரதான எதிர்க்கட்சி வெளி நடப்புச்செய்து, தங்களுடைய கண்டனத்தை அத்தோடு நிறுத்தாமல், மீண்டும் உள்ளே வந்து அவை நடப்பதற்கு குறுக்கே சில செயல்களைப் புரிந்த காரணத்தினாலே வெளி யேற்றப்பட வேண்டிய வேதனையான நிலை உருவாகி, தொடர்ந்து இன்றும் அதே நிலை ஏற்பட்டு, பிறகு தாங்களும் நானும் எவ்வளவோ முயன்றும் கூட, அதற்குப்பிறகு நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் திரு. குமரி அனந்தன், கொறடா திரு. பாலசுப்பிரமணியம் அவர்களும் முயன்றும் கூட அந்தத் தூதும் பயனளிக்காமல் போய்விட்டது என்று கருதுகிறேன். அவர்கள் இந்த விவாதத்தில் கலந்து கொள்ளாதது வருத்தப்படத் தக்கது. அவர்களும் இருந்து தாக்கியோ அல்லது வேகமாகப் பேசியோ குற்றம் குறைகளை எடுத்துச் சொல்வார்களேயானால், அது எனக்கு மெத்தவும் பயன்படக் கூடும். ஏனென்றால் மக்களைப் பாதுகாக்க, சட்டம் ஒழுங்கு அமைதி, ஆகியவற்றை நிலைநாட்ட, மிக முக்கியமான பொறுப்பைக் கையிலே ஏந்தியிருக்கிற ஒரு மாபெரும் இலாக்கா காவல் துறை என்ற காரணத்தினால் எல்லோருடைய கருத்துக்களும் அதற்குத் தேவைப்படுகின்றன. ஆனால் மிகச் சாதாரண ஒரு காரணத்தைக் காட்டி அவர்கள் இந்த விவாதத்தில் கலந்து கொள்ளாமலேயே போயிருக்கிறார்கள்.



1990 மே 4] [டாக்டர் மு. கருணாநிதி]

நான் காலையிலே சொன்னேன், ஆய்வுரையில் இது போன்று வாக்கியங்கள் இன்று நேற்றல்ல, அ. தி. மு. க. ஆட்சிக் காலத்திலேயிருந்து நிறைய இடம் பெற்றிருக்கின்றன என்று நான் குறிப்பிட்டேன். 1980-81ஆம் ஆண்டு இந்த அவையிலே வைக்கப்பட்ட காவல் துறை ஆய்வுரையில், 23 ஆம் பக்கத்தில் வந்திருக்கின்ற அந்த வாசகம்.......

(11-40 மணி)

'' 23-12-1980-லேயிருந்து நாராயணசாமி நாயுடு தலைமையிலான சங்கம் இன்றியமையாப் பொருள்களை எடுத்துச் செல்வதைத் தடுத்து நிறுத்தும் போராட்டத்தைத் தொடங்கி மாநில அளவிலான முழு அடைப்புப் போராட்டத்தை நடத்தி அப்போராட்டத்தில் பாலங்களை வெடி வைத்துத் தகர்த்தல், பேருந்துகளையும், லாரிகளையும் கொளுத்துதல், மின் கம்பிகளை வெட்டி நெடுஞ்சாலைகளின் குறுக்காகப் போடுதல், நீர் வழங்கும் குழாய்ப் பாதைகளை சேதப்படுத்துதல் போன்ற பல்வேறு வன்முறைச் செயல்களில் ஈடுபட்டார்கள் '' என்று விவசாய சங்கத்தினுடைய தலைவர் அவர்களைப் பற்றியே 1980-81ஆம் ஆண்டு காவல் துறை ஆய்வு உரையிலே கூறப்பட்டு இருக்கிறது. அதை எடுக்க வேண்டும் என்று எதிர்க் கட்சியினர் யாரும் கூறி வெளிநடப்பு கூட செய்யவில்லை. ஆனால் அந்தக் கருத்துக்கு மாறான கருத்துக்களை விவாதத்திலே எடுத்து வைக்கின்ற பொறுப்பை ஏற்றுக்கொண்டு அதற்கு எதிர்கட்சியினர் வாதிட்டிருக்கிறார்கள். ஆனால், அதே 1980-81-ல் 27-ஆம் பக்கத்தில் '' ஆத்தூர் கடைத் தெருவிலே உள்ள ஜாதி இந்துக்களின் கூரைவேய்ந்த கடைகளுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸத்தைச் சேர்ந்த ஆதிதிராவிட விவசாயிகள் தீயிட்டார்கள் '' என்றே கூட அவர்கள் ஒரு வாக்கியத்தைப் பதித்து இருக்கிறார்கள். அதற்காக இதுபோன்ற எந்த ஒரு முடிவையும் எந்த ஒரு நிலையையும் அன்றைக்கு இருந்த எதிர்க்கட்சியினர் எடுக்கவில்லை. மாறாக, ஆய்வு உரையிலே வந்திருக்கின்ற அந்தக் கூற்று தவறானது என்று சுட்டிக் காட்ட வாய்ப்பு அன்றைக்கு பயன்படுத்திக்கொள்ளப்பட்டது.

மற்றொன்று, 42-ஆம் பக்கத்தில் 1980-81ஆம் ஆண்டு ஆய்வு உரையில் '' மயில்சாமி என்பவர் தன் மீது காறி உமிழ்ந்து செருப்பால் அடித்துவிட்டதாகக் குற்றஞ்சாட்டி ஆசிரியர் ஒருவர் கொடுத்த புகாரின் மேல் விசாரணை நடந்தது '' என்று இருக்கிறது. எவ்வளவு இழிவான வார்த்தைகள் எல்லாம் அதிலே இடம் பெற்று, ஒரு ஆசிரியர் கொடுத்த புகாரைப் பற்றி மயில்சாமி என்பவருடைய பெயரும் குறிப்பிடப்பட்டு வெளிவந்திருப்பதற்காகத்தான் இதைச்

சொல்கிறேன். இவைகள் எல்லாம் கூட நீதிமன்ற விசாரணையிலே இருந்த நேரத்திலே தான் இந்த ஆய்வு உரைகள் இந்த மன்றத்திலே வைக்கப்பட்டன என்பதையும் நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

மற்றொன்று, 1982-83-ஆம் ஆண்டு ஆய்வு உரையில் 65-ஆம் பக்கத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நடத்திய ஒரு போராட்டத்தைக் குறிப்பிடும்போது, ''தடை உத்திரவை மீறி அழகர்சாமி, எம்.எல்.ஏ., சிவசாமி, வரதராஜன், சின்னச்சாமி கவுண்டர், முத்துச்சாமி கவுண்டர் உட்பட 322 பேர் கைது செய்யப்பட்டார்கள்'' என்று அதன் காரணமாக எழுந்த விளைவுகள் அந்த ஆய்வு உரையிலே குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அந்த ஆய்வு உரை வெளிவந்த நேரத்திலே, இங்கிருந்த அழகர்சாமி அவர்கள் அதற்கு பதில் அளித்தார்களே அல்லாமல், அந்த ஆய்வு உரையிலேயிருந்து அந்தக் கருத்தை எடுத்துவிட வேண்டும் என்று சொல்லவில்லை. ஆய்வு உரையிலே அப்படிப்பட்ட கருத்துக்கள் இடம் பெறுகின்ற காரணத்தால், அதை உறுப்பினர்கள் ஒரு வாய்ப்பாக பயன்படுத்திக் கொண்டு அதைப்பற்றி பேசவே கூட ஒரு சந்தர்ப்பத்தைப் பெற்று தங்களுடைய கருத்துக்களை அவைக்கும் நாட்டுக்கும் அறிவிக்க அதை பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

அதே பக்கத்தில் இன்னொரு இடத்தில், ''22—11—1982 அன்று மதுரை மேலூரில் பெரியாறு பனிரெண்டாம் கால்வாய் ஆயக்கட்டுப் பகுதியைச் சேர்ந்த சுமார் 3,000 விவசாயிகள் பாசனத்திற்கு தண்ணீர் விடக் கோரி வீரண்ண அம்பலம், எம்.எல்.ஏ., தலைமையிலே மேலூர் வட்டாட்சி அலுவலகத்திற்கு ஊர்வலமாகச் சென்று மனு கொடுத்தார்கள். ஊர்வலத்தினர் கலைந்து செல்லும்போது மேலூர் எல்லையிலே திருச்சிராப்பள்ளி சாலையில் சென்றுக் கொண்டிருந்த பாண்டியன் போக்குவரத்துக் கழகம், சேரன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளின் மீது கல்லெறிந்தார்கள்'' என்று ஒரு எல்.எல்.ஏ-வை சம்பந்தப்படுத்தியே அன்றைக்கு ஆய்வு உரை வைக்கப்பட்டிருக்கிறது. இந்த எழுத்துக்கள் அகற்றப்பட வேண்டும் என்று அன்றைக்கு யாரும் கோரவில்லை. அதற்கு மாறாக, அந்த ஆய்வு உரையில் இருந்த கருத்தை எதிர்த்து அன்றைய தினம் பேசப்பட்டு இருக்கிறது.

1984-85-ல் 85-ஆம் பக்கத்தில் ஆய்வு உரையில் ஒரு சம்பவத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது, ''இச்சம்பவம் தொடர்பாக கோட்டை காவல் நிலைய குற்ற எண். 1240-ல் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது. பொதுக்கூட்டத்தில்



மூஸ்லீம் இனத்தவரையும், அவர்களது தலைவர் காயிதேமில்லத் பற்றியும் தரக்குறைவாகப் பேசியதாக ராமகோபாலன் மீது கோட்டை காவல் நிலையக் குற்ற எண். 1240/84-ல் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. காலையிலே கூட நம்முடைய காங்கிரஸ் கட்சி துணைத் தலைவர், ''எம்.எல்.ஏ. மாத்திரம் அல்ல; அவர்களுடைய தலைவர்'' என்று சொன்னார்கள். காயிதேமில்லத் அவர்கள் எவ்வளவு பெரிய தலைவர் என்பதை நம்முடைய இலக்கியச் செல்வர் உணராதவர் அல்ல. அவருடைய பெயரைப் போட்டு அவரைப் பற்றி இழிவாகப் பேசியதும் இதிலே குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அதைப் போலவே இப்பொழுது வெளியிடப்பட்டுள்ள இந்த ஆய்வு உரையிலே கூட எம்.எல்.ஏ-வை ஆளும் கட்சியோ அல்லது காவல்துறையோ, முதலமைச்சரோ குறை கூறி அந்த ஆய்வு உரையிலே எந்த வாக்கியமும் இடம்பெறவில்லை.

(11-45 மணி)

அதிலே இடம் பெற்றிருப்பதெல்லாம், பேசிய ஒரு நபர், இதுபோன்ற வன்முறைகளைத் தூண்டுகின்ற வகையிலே பேசிய காரணத்தாலே, எம்.எல்.ஏ.-வைப்பற்றி மாத்திரமல்ல, அந்த ஊர் ஒன்றியத் தலைவரைப் பற்றியும் பேசிய காரணத்தால், அங்கே இத்தகைய விளைவுகள் எழுந்தன என்று, ஒரு கலவரம் உருவானதற்கான சூழ்நிலை எப்படி அங்கே ஆரம்பமாயிற்று என்பதற்குத்தான் அந்த ஆய்வுரையிலே அதைக் குறிப்பிட்டிருக்கிறார்களே அல்லாமல் வேறல்ல. யாரையும் வேண்டுமென்றே இழிவுபடுத்துவதற்காக அல்ல. நான் காலையிலே சொன்னதைப் போல், பெயரைக் கூட போடவில்லை, நான் இங்கே படித்துக் காட்டியவைகளில் எல்லாம் பெயர்களையும் அதிலே அச்சடித்து இருக்கிறார்கள். இதிலே பெயரைக் கூடப் போடவில்லை. ஒரு எம்.எல்.ஏ., என்று தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதைக் குறை கூறிப் பேசினார் அந்த நபர் என்று தான் இருக்கிறதே அல்லாமல் வேறல்ல. இதை ஒரு பெரிய காரணமாக எடுத்துக்காட்டி, இரண்டு நாள் இந்த அவையிலே காவல்துறை மானியத்திலே எடுத்துச் சொல்லவேண்டிய கருத்துக்களையெல்லாம் சொல்கின்ற வாய்ப்பை அவர்களாகவே தவறவிட்டுக் கொண்டு நம் மீது பழி போடுவதை நான் உள்ளபடியே மெத்த வேதனையோடு கண்டிக்க வேண்டியவனாக இருக்கின்றேன். வேறு வழியில்லை, இத்தகைய செயல்களைக் கண்டிப்பதைத் தவிர என்றும் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்,

காவல்துறை எந்த அளவிற்கு எல்லாம் மக்களோடு தொடர்பு கொண்ட துறை என்பதனை இங்கே பேசிய நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்களும் மற்றும் அப்துல் லத்தீப் அவர்களும் மற்றும் வரதராசன் அவர்களும் இங்கே எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். சட்டம் ஒழுங்கை நிலைநாட்டவும் உயிருக்கும் உடைமைக்கும் மக்களுக்கு உரிய பாதுகாப்பைத் தரவும், குற்றங்களைக் கண்டுபிடிக்கவும், புலன் விசாரணையிலே ஈடுபடவும் கண்டுபிடிக்கப்பட்ட குற்றங்களிலே குற்றவாளிகளுக்குத் தண்டனை பெற்றுத் தர நீதிமன்றங்களுக்கு வழக்கை எடுத்துச் செல்லவும், போக்குவரத்தை ஒழுங்கு செய்யவும் குற்றங்கள் தோன்றுவதற்கு முன்பே, அவர்கள் எடுத்துக்காட்டியதைப் போல, புலனாய்வின் மூலமாக செய்திகளை அறிந்து, முன்னெச்சரிக்கையாக நடவடிக்கைகளை எடுக்கவும் இவை போன்ற சமுதாயப் பணிகளிலே காவல் துறையினர் ஈடுபடுகிறார்கள்.

அத்தகைய காவல் துறையிலே உள்ள கேடுபாடுகளை, ஒரு சிலர் செய்கின்ற தவறுகளை, இதே இடத்தில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த நானும் சுட்டிக் காட்டி இருக்கின்றேன். குறிப்பிட்ட சம்பவங்களை அன்றிருந்த ஆளுங்கட்சிக்கு எடுத்துக் காட்டியிருக்கின்றேன். ஆனாலும் காவல் துறைக்கு என்று உள்ள மாண்பினையும் அதனுடைய கடமைகளையும் என்றைக்கும் நான் குறைத்து மதிப்பிட்டவன் அல்ல. இன்றைக்கு நம்முடைய வரதராசன் அவர்கள் பேசும்போது, கடைசியாக போனால் போகிறது என்று காவல் துறையிலே உள்ள அலுவலாளர்களுடைய நலன்களைப் பற்றி பேசினார்கள் என்றாலும்கூட, அவர்களுடைய மொத்தப் பேச்சைக் கவனிக்கும்போது காவல்துறை மீதே ஒரு வெறுப்பை அவர் மனதிலே தேக்கி வைத்துக்கொண்டிருக்கிறாரோ, அந்த அளவிற்குக் காவல்துறை அவரைப் போன்றவர்களுடைய உள்ளத்தைக் கெடுத்து வைத்திருக்கிறதோ, அப்படிப்பட்ட நினைவு அவருக்கு ஏற்படுவதற்குக் காவல் துறை காரணமாக இருந்திருக்கிறதோ என்று கூட நான் எண்ணியதுண்டு. ஆனால் நானும் சரி, மற்றவர்களும் சரி, காவல்துறையை இன்றைக்கும் காணுகின்ற நேரத்தில், இதிலே உள்ளவர்களும் நம்மைப் போன்ற மனிதர்கள் தான் என்பதையும் எப்படி அரசு அலுவலாளர்களுக்காக நாம் இன்றைக்கு வாதாடுகிறோம். அரசு அலுவலாளர்கள் அனைவருமே நூற்றுக்கு நூறு பேர் நல்லவர்கள் என்று சொல்லி நாம் வாதாடவில்லை. ஆசிரியர்களுக்காக நாம் வாதாடுகிறோம், ஆசிரியர்கள் அத்தனை இலட்சம் பேருமே நல்லவர்கள் என்று சொல்லி அவர்களுக்காக நாம் வாதாடவில்லை.





தொழிலாளர்களுக்காக நாம் வாதாடுகின்றோம். அந்தத் தொழிலாளர்களிலே ஒரு 10 சதவீதம் பேர், 20 சதவீதம் பேர் இன்றைக்கு தனிப்பட்ட முறையிலே அவர்கள் கடமை மறந்தவர்களாக, கண்ணியமற்றவர்களாக இருக்கக் கூடும். இருந்தாலும் மொத்த சமுதாயத்திற்காக, பாட்டாளி சமுதாயத்திற்காக, வாதாடுகிறோம். அதைப்போலத்தான், ஆசிரியர்களிலே சில பேர் தவறானவர்கள் இருப்பதைப் போல, தொழிலாளர்களிலே சில பேர் தவறானவர்கள் இருப்பயைப் போல, அரசு அலுவலாளர்களிலே சில பேர் தவறானவர்கள் இருப்பதைப் போல, காவல் துறையிலும் சில பேர் தவறானவர்கள் இருக்கக்கூடும். நான் இல்லேயென்று மறுக்கவில்லை. அதை மறுக்காத காரணத்தினாலே தான், வரதராசன் அவர்களே இங்கே எடுத்துக்காட்டிய பல சான்றுகளை, நானே சொன்ன பல சான்றுகளை இங்கே நான் மறுக்கவில்லை. காரணம், இதே அவையிலே நானே கூறிய ஒப்புக்கொண்ட குற்றச்சாட்டுக்கள் அவை. இவைகளையெல்லாம் திருத்துவதற்கு நாம் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். நான் ஒன்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். நம்முடைய தமிழ்நாட்டில் சாதிக் கலவரம், மதக் கலவரம், வேறு சில வகுப்புக் கலவரங்கள் அங்கொன்றும், இங்கொன்றுமாக நடைபெறுகின்றன. என்றாலும் கூட, அண்மையிலே, டெல்லியிலே 2 மாநாடுகள் நடைபெற்றன. ஒரு மாநாட்டில் இந்தியாவினுடைய ஒருமைப்பாடு குறித்து விவாதிக்கப்பட்டது. அந்த மாநாட்டுக்குத் தமிழக அரசின் சார்பாக நம்முடைய வருவாய்த்துறை அமைச்சர் நாஞ்சிலார் அவர்கள் சென்று இருந்தார்கள். அங்கே எடுத்து வைக்கப்பட்ட கருத்துக்களில் இந்தியாவிலே இன்றைக்குப் பரவலாக நடைபெறுகிற அளவுக்கு கலவரங்கள் தமிழ்நாட்டிலே இல்லை என்கின்ற புள்ளி விவரம் அங்கே தரப்பட்டது.

(11-50 மணி.)

இதற்கு அடுத்து அண்மையிலே டெல்லியிலே இன்னொரு மாநாடு இந்தியப் பிரதமர் திரு. வி. பி. சிங் அவர்கள் கூட கலந்து கொண்டு உரையாற்றிய மாநாடு. எல்லா மாநிலங்களிலும் உள்ள காவல்துறைத் தலைவர்களுடைய கலந்துரையாடல் மாநாடு, அந்த மாநாட்டை ஒட்டி ஒரு புத்தகம் வெளியிடப்பட்டிருக்கிறது. Director General - Inspectors-General of police Conference 1990. என்று, அந்த புத்தகத்தினுடைய முதல் வரியிலேயே "During 1989 the law and order situation in the country remains under severe strain;".
என்றுதான் அந்தப் புத்தகம் ஆரம்பம் ஆகிறது. இந்தியா

முழுவதும் சட்டம் ஒழுங்கு அமைதி இவைகளைக் காப்பாற்றுவதில் மிகுந்த சோதனையான நிலை, கஷ்டமான நிலை சிரமமான நிலை இருப்பதை அந்தப் புத்தகம் எடுத்துக் காட்டுகிறது. அப்படி காட்டப்படுகின்ற அந்தப் புத்தகத்திலே கூட இந்தியாவில் காவல் துறையினுடைய திறமை தமிழ்நாட்டிலே எப்படி இருக்கிறது என்பதை விளக்குகின்ற வகையிலே ஒரு தனி பாராவே இதிலே அமைந்து இருக்கிறது. There is a sharp decline in the convictions in major offences in some States. It is not possible to discuss the subject at length. To cite only a few, convictions in murder cases came down from 2,463 in 1987 to 2,072 in 1988 and 922 in 1989. This would not include the figures of Karnataka as already mentioned elsewhere. In 1989, of the 922 convictions secured in murder cases, 707 were convicted in Tamil Nadu itself இந்தியா முழுவதும் 922 வழக்குகளிலே கன்விக்ஷன் வாங்கி கொடுத்த காவல் துறை இந்தியா முழுமையும் 922 கொலை வழக்குகளிலே கன்விக்ஷன் வாங்கித் தந்தது; அந்த 922ல் 707 வழக்குகளில் தமிழ்நாட்டில் தான் கன்விக்ஷன் வாங்கித் தரப்பட்டது என்று இந்தப் பெரிய புத்தகத்தில் மிகப் பெருமையோடு அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். நாட்டின் பல்வேறு மாநிலங்களிலே உள்ள சட்டம் ஒழுங்கு நிலைமையை விரிவாக விவரிக்கின்ற இந்த அறிக்கையில் ஜம்மு, காஷ்மீர், பஞ்சாப், மத்திய பிரதேசம், ஆந்திரப் பிரதேசம் பீகார், மராட்டியம் ஆகிய மாநிலங்களிலே சட்டம் ஒழுங்கினுடைய தன்மை மிகக் கடுமையாக இருக்கிறது என்பதைக் குறிப்பிட்டு விட்டு இதனைச் சொல்கிறார்கள்.

அது மாத்திரம் அல்ல, அதே அறிக்கையில் ஜாதிக் கலவரத்தை அவர்கள் ஆராய்ந்து இருக்கின்றார்கள். அதனால் ஏற்பட்ட உயிர் இழப்புகளைச் சொல்லும்போது 1985ஆம் ஆண்டு 555 நிகழ்ச்சிகள், 332 பேர் உயிர் இழப்பு; 1986-ல் 764 நிகழ்ச்சிகள், 418 பேர் உயிர் இழப்பு; 1987-ல் 911 நிகழ்ச்சிகள், 383 பேர் உயிர் இழப்பு; 1988-ல் 720 நிகழ்ச்சிகள், 259 பேர் உயிர் இழப்பு; 1989-ல் 706 நிகழ்ச்சிகள், 802 பேர் உயிர் இழப்பு; என்கின்ற புள்ளி விவரத்தைத் தந்து இருக்கிறார்கள். அந்தக் காலக் கட்டத்திலே தமிழ்நாட்டிலே போடியிலும் மற்றும் சில இடங்களிலும் ஒரு 29-லிருந்து 30, 35 உயிர் இழப்புகள். இந்தியா முழுவதும் பார்க்கிற நேரத்திலே ஆங்காங்கே சட்டம் ஒழுங்கு அமைதி கெட்டுள்ள ஒரு சூழ்நிலையோடு தமிழ்நாட்டை நாம் ஒப்பிட்டுப் பார்க்கிற நேரத்தில் குறைவானதுதான். ஆனாலும் கூட குறைவாக இருந்தாலும் கூட இது கூட இருக்கத் தேவையா



என்கின்ற எண்ணம்தான் ஆளும்கட்சிக்கும், எதிர்க்கட்சியில் உள்ளவர்களுக்கும் இருக்கிறது என்பதை நான் மறைத்திட விரும்பவில்லை.

(11-55 மணி.)

1987-லேயிருந்து 1989-க்குள் மிகவும் குறைந்து விட்டதாகவும் 922 பேர்களுக்குத்தான் கொலை வழக்கிலே தண்டனை இந்தியா முழுவதும் கிடைத்தது என்றும், அதில் 707 வழக்குகளிலே .கொலைகாரர்களுக்கு தண்டனை வாங்கிக் .கொடுத்தது தமிழ்நாடுதான் என்றும் குறிப்பிட்ட அந்தப் புத்தகத்தில், இந்தியா முழுமையும் ஆண்டுதோறும் சுமார் 27 ஆயிரம் கொலை வழக்குகள் பதிவாகின்றன என்ற புள்ளி விவரத்தையும் தந்திருக்கிறது. அந்த 27 ஆயிரம் கொலை வழக்குகளில் தமிழ்நாட்டில் சுமார் ஏறத்தாழ 1,400 கொலை வழக்குகள் ஆண்டுதோறும் பதிவாகின்றன. இந்தியா முழுமையும் 27 ஆயிரம் கொலை வழக்குகள் : அதிலே, தமிழ்நாட்டிலே ஆண்டுதோறும் சுமார் 1,400 கொலை வழக்குகள். இந்த 1,400 கொலை வழக்குகளில் 707 கொலை வழக்குகளில் குற்றவாளிகளுக்குத் தண்டனை வாங்கித் தந்தால் அது 50 சதவீதம். தமிழ்நாட்டிலே 50 சதவீதம் பேருக்குத் தண்டனை வாங்கித் தந்திருக்கிறோம். 1,400 கொலை வழக்குகளில் 707 பேருக்குத் தண்டனை வாங்கிக் கொடுத்திருக்கிறோம். ஆனால், தமிழகத்தைத் தவிர, இந்தியாவிலுள்ள மற்ற இடங்களில் மீதமுள்ள 26 ஆயிரம் வழக்குகளில் தண்டனை வழங்கப்பட்டது 215 பேருக்குத்தான். 1,400-ல் 707 பேருக்கு தண்டனை வாங்கிக் கொடுத்தது தமிழ்நாடு ; ஆனால் 26 ஆயிரம் வழக்குகளில் 215 பேருக்குத்தான் தண்டனை வழங்கப்பட்டு இருக்கிறது என்றால், இந்தியர முழுமைக்கும் அது 1 சதவீதமாக இருக்க, தமிழ்நாட்டிலே மாத்திரம் தண்டனை வாங்கித் தருகின்ற அந்தச் செயல் 50 சதவீதமாக ஆகியிருக்கிறது என்றால், அது தமிழ்நாட்டினுடைய காவல் துறையினருடைய முயற்சிக்கு, அவர்களுடைய ஆர்வத்திற்கு, அவர்களுடைய கடமையுணர்வுக்கு ஒரு எடுத்துக்காட்டு என்றுதான் சொல்ல வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி).

நம்முடைய நண்பர் நிக்லி அவர்கள் இங்கே பேசும்போது ஒன்றைச் சொன்னார்கள். அதாவது 'இண்டியன் எக்ஸ்பிரஸ்.' -ல் வந்துள்ள ஒரு கட்டுரையைக் குறித்து. அதிலே முக்கியமாக மூன்று கருத்துக்கள். அந்தப் பத்திரிகையிலே நேற்றையதினம் இடம் பெற்றுள்ளன. அவர்களும் ஆர்வத்தோடு காவல்துறை மானியத்திலே கலந்துகொண்டு சில கருத்துக்களைப் பத்திரிக்கை வாயிலாகத் தெரிவித்து இருக்கின்றார்கள். அதிலே அவர்கள்

சொல்லுகிறார்கள். 1965-ஆம் ஆண்டு நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உதவி ஆய்வாளர்கள் இப்போது டி.எஸ்.பி.,களாக உள்ளார்கள். அதுபோலவே 1976-லே தேர்ந்தெடுக்கப்பட்ட உதவி ஆய்வாளர்கள் இப்போது இன்ஸ்பெக்டர்களாக உள்ளார்கள். ஆக, நேரடியாக, உதவி ஆய்வாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், இன்ஸ்பெக்டராக 10 ஆண்டுகளும்: டி.எஸ்.பி.-யாக 22 ஆண்டுகளும் ஆகிறது. இந்த நிலையில் மதுவிலக்குப் பிரிவை காவல் துறையிலே இணைத்து விட்டதால் பதவி உயர்வு பாதிக்கப்படும் என்று 'இண்டியன் எக்ஸ்பிரஸ்' எழுதியுள்ளது. இது மிகத் தவறான கருத்து. ஏனென்றால், மதுவிலக்குத் துறை .போலீசார், அந்தத் துறையிலே இருந்தபொழுதும், சட்ட ஒழுங்கு அமைதியைப் பாதுகாக்கின்ற போலீசார் இன்னொரு பிரிவாக இருந்தபொழுதும் பணி, ப்ரமோசன்ஸ், பதவி உயர்வுகளெல்லாம் இருபாலாரையும் ஒன்றாகச் சேர்த்துத்தான் வழங்கப்பட்டது. எனவே அவர்கள் தனித்தனியாக இருந்தாலும் பதவி உயர்வு வழங்குவதிலே இருவரையும் ஒன்றாகச் சேர்த்துத்தான், அப்படி எண்ணிப்பார்த்துத்தான் வழங்கப்படும். அவர்கள் ஒன்றாக இணைந்தால் அதற்காக அந்தப் பதவி உயர்வு அவர்களுக்குப் பாதிக்கப்பட மாட்டாது. மதுவிலக்குப் பணி இப்போது காவல்துறையோடு சேர்க்கப்பட்டதே தவிர இதற்கு முன்பே மதுவிலக்குத் துறையிலே பணிபுரிந்து கொண்டிருந்தவர்களும், காவல்துறையிலே பணிபுரிந்து கொண்டிருந்தவர்களும், சீனியாரிட்டியைப் பொறுத்தவரையில் பதவி உயர்வுக்கு ஒட்டு மொத்தமாகக் கணக்கிலே .எடுத்துக் கொள்ளப்படுகிறார்கள். எனவே இரண்டு பிரிவுகளையும் ஒன்றாக்குவதால் பதவி உயர்வு எந்தவகையிலும் பாதிக்காது.

அதே ஏட்டில் இன்னொரு கருத்து, 1976-ல் நியமனம் செய்யப்பட்ட உதவி ஆய்வாளர்கள் 1989-ல் தான் பதவி உயர்வு பெற்றார்கள் என்றும், 1979-ல் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு பதவி உயர்வு இன்னும் தரப்படவில்லை என்றும் 'இண்டியன் எக்ஸ்பிரஸ்'-லே கூறப்பட்டுள்ளது. மேலும் 1980 முதல் 87 வரை உதவி ஆய்வாளர் நேரடி நியமனம் நிறுத்தப்பட்டது என்றும் அந்தப் பத்திரிகை எழுதியுள்ளது. 1979-லே தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு இந்த ஆண்டு பதவி உயர்வு கிடைக்கும் என்பதை இந்த மன்றத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 1980-ஆம் ஆண்டு முதல் 1987-ஆம் ஆண்டுவரை நேரடித் தேர்வு நடத்தாததற்கு நாங்கள் பொறுப்பல்ல. காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் கூட சொன்னார். ஒரு விகிதாச்சாரம் வைக்க வேண்டுமென்று. ஏற்கெனவே இருக்கிறது. 70 : 30 என்று, நேரடியாகத் தேர்ந்தெடுப்பதற்கும், ப்ரமோசன் மூலம் வருவ



தற்கும் 70 : 30 என்று விகிதாச்சாரம் இருக்கிறது. அது ஏழாண்டு காலமாக கடைப்பிடிக்கப்படவில்லை. ஒருவேளை, அப்பொழுதெல்லாம் காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் போலீஸ் மானியத்திலே பேசினாரோ, என்னவோ எனக்குத் தெரியாது. இந்த விகிதாச்சாரம் அப்போது கடைப்பிடிக்கப்பட வில்லை. நேரடித் தேர்வு அப்போதெல்லாம் நடத்தப்படவில்லை. அதற்கு நாங்கள் பொறுப்பாளி அல்ல.

(12-00 மணி)

இதைத்தான் நான் அந்தப் பத்திரிகையினுடைய கட்டுரைக்கு விளக்கமாக அளிக்க விரும்புகிறேன். மிக முக்கியமாக கடந்த 20 அல்லது 25 நாட்களுக்கும் மேலாக இந்த மாமன்றத்தில் நேற்றும், இன்றும்தான் போலீஸ் மானியம் என்ற பெயரிலே விவாதம் நடைபெறுகிறதே அல்லாமல்,—ஒவ்வொரு நாளும் கேள்வி நேரம் முடிந்த பிறகு ஒரு அரை மணி நேரம் போலீஸ் மானிய விவாதம் நடைபெற்று இருக்கிறது என்பதை யாரும் மறந்துவிடுவதற்கில்லை. அதனால்தான் பலபேருடைய பேச்சில் அதிக விஷயங்கள் கூட இல்லாமல் போய்விட்டது. காரணம், எல்லாவற்றுக்கும் ஒத்திவைப்புத் தீர்மானம். திண்டுக்கல்லா? ஒத்திவைப்பு. ஆம்பூரா ? ஒத்திவைப்பு. அதேபோல் இராஜ் பாளையமா ? ஒத்திவைப்பு. சாத்தூரா ? ஒத்திவைப்பு, இராஜபாளையத்தின் முதல் பாகம் ஒத்திவைப்புத் தீர்மானம். இரண்டாம் பாகம் தான் மிச்சம் இருக்கிறது எனக்கு இப்போது, அந்த இரண்டாம் பாகத்தைச் சொல்ல விரும்புகிறேன். அதை விவரமாகச் சொல்லவேண்டும் என்பதால் அதைப் படித்துக்காட்ட விரும்புகிறேன்.

காமராஜர் மாவட்டம் சேத்தூர் காவல் நிலைய சரகத்தில் கிருஷ்ணாபுரம், சுந்தரராஜபுரம், போன்ற கிராமங்களில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், ஜாதி இந்துக்களுக்கும் இடையே ஏற்பட்ட கலவரங்கள் குறித்து இதே அவையில் ஏப்ரல், 23-ஆம் தேதி விளக்கமான குறிப்புகள் வழங்கப்பட்டன. அதற்குப் பிறகும் அந்தப் பகுதியில் வன்முறைச் சம்பவங்கள் ஒரு சில நாட்கள் தொடர்ந்து .நடைபெற்றுள்ளன. இதே போன்று கடந்த 1987-ஆம் ஆண்டு ஒரு கலவரம், இராஜபாளையம் பகுதியில் ஏற்பட்டு 10 பேர் அப்போது கொலையுண்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. 1987-லே இதே பகுதியிலே, இதே மக்களுக்கிடையே கலவரம் ஏற்பட்டு 10 பேர் அப்போது இறந்தார்கள். அன்றைக்கு ஏற்பட்ட மனப்புகைச்சல் இன்றளவும் நீங்காமல்

அப்படியே நீடித்து வருகிறது. அதன் காரணமாகத்தான் இரு சாராருமே பறக்கும் படைகளை உருவாக்கிக்கொண்டு பறந்து கொண்டிருக்கிறார்கள். நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் மிகுந்த பதட்டத்தோடு ஜாதிக்கு ஜாதி பறக்கும் படைகளை வைத்துக் கொள்ளலாமா.என்று கேட்டார்கள். நான் நிச்சயமாக இந்த மன்றத்தில் உறுதி கூறுகிறேன், துறையின் அமைச்சர் என்ற முறையில், ஆளும் கட்சியினுடைய தலைவன் என்ற முறையில், ஆணவத்தோடு அல்ல : நாட்டில் ஏற்பட்டுவிட்ட இந்த ஜாதிக் கொடுமைகளால் விளைகிற இது போன்ற போராட்டங்களைத் தவிர்த்திட வேண்டும் : தடுத்திட வேண்டும். யாரோ என்றைக்கோ உருவாக்கிய இந்த நிலை: வருணாசிரமம் என்ற பெயரால் தமிழகத்திலே இன்றைக்கு வேர் ஊன்றிப் போய், யாரோ.செய்த சதிக்குக் கால் முளைத்து, அந்த சதி இன்றைய தினம் நாட்டிலே ரத்த வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிற ஒரு பயங்கா நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. அதை மேலும் தூண்டிவிடுகிற வகையில் ஜாதிக்கு ஜாதி.பறக்கும் படைகளை ஏற்படுத்திக் கொண்டு மேலும் நாட்டிலே அமளி ஏற்படுத்த யார் முன் வந்தாலும் அரசு அதைப் பார்த்துக் கொண்டிருக்காது,

பறக்கும் படை என்ற பெயரால் அது யாருடைய பெயரால் அந்தப் படை வைக்கப்பட்டு இருந்தாலும், எந்த ஜாதியின் பெயரால் அந்தப் படைகள் இயங்கினாலும் அவைகள் அத்தனையும் தடை செய்யப்படும் என்பதை இந்த மாமன்றத்தில் நான் உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தப்பகை வளர்ந்து வளர்ந்து, கிருஷ்ணாபுரம் பகுதியில்.தொடங்கிய ஜாதிக் கலவரம் இராஜபாளையம் மற்றும் ஸ்ரீவில்லிபுத்தூருக்குப் பாவி.மொத்தம் 11 பேர் மரணம் அடைந்திருக்கிறார்கள். அதிலே எந்தெந்த வகுப்பிலே எவ்வளவு எவ்வளவு என்று சொல்லக்கூட நான் விரும்பவில்லை. அதன் காரணமாக, ''ஓகோ, இன்னும் நான்கைந்து பாக்கி இருக்கிறது'' என்று .அதை ஈடுகட்ட யாராவது முயற்சித்தால் என்ன செய்வது என்ற இதய வேதனையோடு நான் அதை மறைக்க விரும்புகிறேன். 11 பேர் அங்கே இறந்து இருக்கிறார்கள். எந்த வகுப்பு என்றால் இரண்டுபேரும் தமிழர்கள்தான். தமிழர்கள் 11 பேர் ஒருவரை ஒருவர் வெட்டிச் சாய்த்துக் கொண்டு அங்கே மாணம் அடைந்திருக்கிறார்கள். அமைதியை நிலைநாட்ட உடனடியாக .டி.ஜி.பி. மற்றும் ஐ.ஜி, (லா அண்ட் ஆர்டர்) மூலமும், கலெக்டர் மூலமும் பல்வேறு விதமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தற்போது 2 காவல் துறை துணைத் தலைவர்கள், 4 மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர்கள் தலைமையில் சுமார் 1,000 போலீசார் பாதிக்கப்பட்ட பகுதியில் காவல் பணிக்காக நியமிக்கப்பட்டுள்ளார்கள். தேவையான இடங்களில் பாதுகாப்புக்காக போலீசார் நிறுத்தப்பட்டு இருக்கிறார்கள். தீவிர போலீஸ் ரோந்துக்கும்



ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. குற்றங்கள் சம்பந்தமாக அவ்வப்போது வழக்குகள் பதிவு செயயபபட்டுள்ளன. இதுவரையில் 43 புகார்கள்.பெறப்பட்டு வழக்குகள் பதியப்பட்டுளளன. இரு தரப்பிலும் 439 பேர் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். மேலும் 253 பேர் முன்னெச்சரிக்கையாகக் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். 1987-ல் நடந்த ஜாதிக் கலவரத்தின் போது பல கொலை வழக்குகளில் சம்பந்தப்பட்ட முக்கியமான எதிரிகளும் தற்போது முன்கூட்டியே கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள் சி.ஆர்.பி.சி. 144 பிரிவின் கீழ் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டு அமல்படுத்தப்பட்டது. மதுபானக் கடைகளை மூடுதல் வெடி மருந்துக் கடைகளை மூடுதல் போன்ற நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தனியார் வைத்திருந்த 143 துப்பாக்கிகள் காவல் நிலையங்களில் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. வீச்சரிவாள் போன்ற பயங்கரமான ஆயுதங்கள் 150-க்கு மேல் கைப்பற்றப்பட்டுள்ளன, பறக்கும் படை என்ற பெயரால சமூக விரோதிகள் சிலர் வன்முறையில் ஈடுபடுவது கண்டுபிடிக்கப்பட்டு: அந்தப் படையை ஒழிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கள்ளச் சாராய வியாபாரமும் இத்தகைய வன்முறைக்கும், கலவரத்திற்கும் அடிகோலுவதாக இருப்பதாலும், அந்தப் பகுதியில் கள்ளச் சாராயத்தை அடியோடு ஒழிக்க தீவிர நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது.

(12-05 மணி)

இதற்கிடையே நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் தொலைபேசி மூலம் என்னிடத்திலே தொடர்பு கொண்டார்கள். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தனலவர்களில் ஒருவரான திரு. வீரையன் அவர்கள் என்னிடம் தொடர்பு கொண்டு இதுபற்றி கவலையோடு விசாரித்தார்கள். அவர்கள் எல்லாம் சொன்ன யோசனைப்படி, ஒரு அமைதிக் குழு அங்கே அமைக்கப்பட்டு, அதற்குத் தலைவராக ராம சுப்பிரமணிய ராஜா நியமிக்கப்பட்டிருக்கிறார். அந்த அமைதிக் குழுவில், ராமசுப்ரமணிய ராஜாவும், திருவேட்டை என்ற ஆதிதிராவிடர் பெருமக்களுடைய தலைவரும், கங்காராம் துரைராஜ் அவர்களும் அடங்கிய ஒரு அமைதிக் குழு அங்கே அமைக்கப்பட்டு, இப்போது அங்கே அமைதி நிலவுகிறது. கலவரத்தில் மரணம் அடைந்தவர்களுக்கு ரூ. 10,000 வீதம், அரசின் சார்பில் நிதி வழங்கப்பட்டிருக்கிறது. காயம் உற்றவர்கள் சிகிச்சை செலவுகளுக்காக ரூ. 500 வீதம் வழங்கப்பட்டிருக்கிறது. 78 பேர்களுக்குரிய சொத்து மதிப்பு ரூ. 5.4 லட்சத்திற்கு பனைமரங்களும், தென்னை மரங்களும், கரும்புப் பயிர்களும் நாசமாக்கப்பட்டுள்ளதாக மாவட்ட

ஆட்சித் தலைவர் அவர்கள் அறிக்கையிலே தெரிவித்திருக்கிறார். அங்கே நஷ்ட ஈடு தருவது பற்றி வருகின்ற கோரிக்கைகளைப் பெற்று அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் கூறிக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

நம்முடைய நண்பர் திரு. லத்தீப் அவர்கள் பெரம்பலூரில் விகளத்தூரில் நடைபெற்ற கலவரத்தைப் பற்றிக் குறிப்பிட்டு: அதிலே மாவட்ட அதிகாரிகள் சரியாக நடந்து கொள்ளவில்லை. அவர்களுடைய அறிக்கைகள் ஒருதலைப் பட்சமாக இருந்தன என்று குறிப்பிட்டார்கள். நான் திரு. லத்தீப் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த அரசு சிறுபான்மை சமுதாய மக்களுக்கு ஒரு பாதுகாப்பாக இருக்கிறது என்பதை அவர்கள் மறுககமாட்டார்கள். சிறுபான்மை மக்களிடத்திலே அன்பு காட்டுகிற காரணத்தால், ஒருசிலர் அதையே சாக்காக வைத்து இந்த அரசின் மீது குறை கூறி வருவதையும் அவர்கள் உணரவில்லை. ஆனால் மத்தளத்திற்கு இருபுறமும் இடி என்பதைப் போல, இன்றையதினம் திரு. லத்தீப் அவர்கள் பேச்சைப் பார்க்கும்போது, உரலாக இருந்த நாம் இன்று மத்தளமாக மாறி விட்டோம் போலும் என்ற எண்ணம் தான் எனக்கு ஏற்பட்டது. பரவாயில்லை. உரலில் இருந்து எழும்புகின்ற ஓசையைவிட, மத்தள ஓசை இனிமையாக இருக்கிற காரணத்தால், அதை நான் ஏற்றுக்கொள்கிறேன்..

அவர்கள் சொனனார்கள்—முஸ்லீம்களுக்கு இந்த அரசிலே சரியான பிரதிநிதித்துவம் தரப்படவில்லை என்று சொன்னார்கள். நான் சரியாக இத்தனை பர்செண்ட் என்று அந்தக் கணக்கை எடுத்துச் சொல்ல விரும்பவில்லை—அது இயலாது. என்ற காரணத்தால். ஏனென்றால், ஆட்சிக்கு வந்து இன்னும் இரண்டாண்டுக் காலம் கூட சரியாக முடியாமல், சிறுபான்மை மக்களுக்கு எப்படி, எப்படி அளிக்கப்பட்டிருக்கிறது, யார், யார் இருக்கிறார்கள் என்றெல்லாம் அறுதியிட்டுக் கூற இயலாது ஆனால் இந்தஅரசினுடைய உள்ளுணர்வைப் புரிந்து கொள்ளவேண்டும்.

மாவட்டங்களில் ஒரு கலெக்டரை முஸ்லீம் இனத்தைச் சேர்ந்தவராகப் போட வேண்டுமென்றுதான், திரு. ஜலால் அவர்களை திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவராக நியமித்தோம். அவர் அகால மரணம் அடைந்துவிட்டார். அவர் மரணம் அடைந்த பிறகு, திருச்சி மாவட்டத்திற்கு வேறு ஆட்சித் தலைவர் நியமிக்கப்பட்டாலும் கூட, ஒரு மூஸ்லீம் கலெக்டர் இல்லையென்ற அந்தக் குறையைத் தீர்க்க, தர்மபுரி மாவட்டத்தின் ஆட்சித் தலைவராக திரு. அலாவுதீன், ஐ.ஏ.எஸ். அவர்களை அங்கே அனுப்பிய பெருமை இந்த ஆட்சிக்கு உண்டு என்பதை திரு. லத்தீப் அவர்கள் மறந்துவிடக் கூடாது.



அது மாத்திரமல்ல, இங்கே நம்முடைய நண்பர் திரு. ராஜேந்திரன் அவர்களோ திரு. சொக்கர் அவர்களோ குறிப்பிட்டதைப் போல, டி.ஐ.ஜி. (சி.ஐ.டி.) ஒற்றர்களின் தலைவராக, காவல் துறை நுண்ணறிவுப்பிரிவுத் தலைவராக இருக்கின்றவரே இஸ்லாமிய சமுதாயத்தைச் சார்ந்தவர்தான் என்பதை திரு. லத்தீப் ஏற்றுக் கொள்ள மறுக்கிறாரா என்று எனக்குப் புரியவில்லை. ஏனென்றால் அவர் அடிக்கடி குல்லாய் போடுகிற ஆபீசர் அல்ல. (சிரிப்பு) அதனால் ஒருவேளை, அவரை அவர் இஸ்லாமியர் அல்ல என்று மறுக்கிறாரா என்று எனக்குப் புரியவில்லை. எனவே எல்லா வகையிலும், இஸ்லாமியர்களுக்கு சிறுபான்மை மக்களுக்குத் தரவேண்டிய இடத்தைத் தரவேண்டுமென்ற உள்ளுணர்வு என்பது இந்த அரசுக்கு இருக்கிறது. அதைப்போலவே திண்டுக்கல் சம்பவத்தில், எங்கே நியாயம் இருந்ததோ அந்த நியாயத்திற்காக வாதாடியிருக்கிறோம். திண்டுக்கல் சட்டமன்ற.. (குறுக்கீடு)

(12-10 மணி.)

**திரு. எம். அப்துல் லத்தீப் ;** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நாட்டிலுள்ள பொதுவான நிலைமைகளை குறித்த பொதுக் கருத்தைத் தான் தெரிவித்தேன். குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இப்போது தான் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறது என்பதும் எனக்குத் தெரியும். தி.மு.க. ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதற்கு பிறகுதான் ரகசிய துறைக்கு ஒரு முஸ்லீம் நியமிக்கப்பட்டிருக்கிறார். பழைய நிலை மாறி புதிய நிலை உருவாகியிருக்கிறது என்பதையும் நான் சுட்டிக்காட்டியிருக்கிறேன். அரசாங்கத்தை மட்டும் நான் சுட்டிக்காட்ட வில்லை. பொதுவாக நாட்டிலுள்ள நிலையைத்தான் பொதுவாகச் சொல்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி.

**திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னேன். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசும்போதுகூட ஒரு முஸ்லீமை தேடிப் பிடித்து கலெக்டராக நியமனம் செய்தோம் என்று சொன்னார்கள். மாவட்டத்தில் பொறுப்பில் இருக்கிற அதிகாரிகளை, ஜாதி, மதம் ஆகிய நோக்கில் பார்க்கக் கூடிய ஒரு கலாச்சாரத்தை நாம் புகுத்தக்கூடாது. இந்தக் கருத்துக்களை வெளியே பேசும்போது நாம் வேண்டுமானால் முதலமைச்சரிடம் நேரில் சொல்லலாம். நான்கூட ஒரு சிறுபான்மை சமூகத்தைச் சார்ந்தவன். இதிலே கோளாறு இருக்கிறது என்று வேண்டுமானால் சொல்லலாம். ஆனால்

[திரு. சா. பீட்டர், ஆல்போன்ஸ்] [1990 மே 4

இந்த அவையிலே நாம் பேசும்போது ஓகோ இப்படி எல்லாம் பெரிய அதிகாரிகளை நியமிக்கிறார்களோ என்ற கருத்து மக்கள் மத்தியிலே வரும் என்று சொன்னால், இந்த அவை மீதும் இந்த அவையிலே மிகப் பெரிய பொறுப்பிலே இருக்கிற நம் மீதும் மக்களுக்கு ஒரு சந்தேகம் வரும் என்பதை நான் இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பதில் சொல்லியதற்குக் காரணம், மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்கள் பேசியதால்தான். அது அவைக் குறிப்பில் இருக்கிறது. அதைத் தலைவர் எடுக்கவில்லை. அது அவைக் குறிப்பிலே இருக்கிறது. அவர் பேசியது பத்திரிக்கையில் வந்து ஓகோ, பெரிய பதவிகளில் நம்மவர் யாரும் நியமிக்கப்படுவதில்லையோ '' என்று இஸ்லாமியர் கருதிவிடக் கூடாது என்பதற்காகத்தான், இந்தப் பதவியிலே ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார் என்று சொல்ல வேண்டிய தவிர்க்க முடியாத நிலை எனக்கு ஏற்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் ஆல்போன்ஸ் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அதுபோல, இந்த அரசு வந்ததற்கு பிறகு இப்படிச் செய்திருப்பதாக சொன்னார்கள். அது மாத்திரமல்ல. சிறுபான்மை நலக் குழு இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் அமைக்கப்பட்டிருக்கிறது. சிறுபான்மை நலக் குழுத் தலைவராக ஒரு கிறிஸ்தவரை, அவரும் சிறுபான்மையினர்தான், நாம் போடவில்லை அல்லது மொழி என்ற அடிப்படையில் ஒரு மலையாளியைத் தலைவராக போடவில்லை. அல்லது ஒரு தெலுங்கரைத் தலைவராக போடவில்லை. அதிலே கொட்டாரக்கரா என்கிற மலையாளி இருக்கிறார். ஒபுல் ரெட்டி என்கிற தெலுங்கர் இருக்கிறார். அதுபோல கன்னட மொழி பேசுகிற ஷெட்டி என்கிற கோவையைச் சேர்ந்தவர் இருக்கிறார். அதுபோல கிறிஸ்தவர் மரியநல்லு என்பவர் துணைத் தலைவராக இருக்கிறார். அதுபோல ஜைன மதத்தைச் சார்ந்த சாந்திலால் ஜெயின் என்பவர் இடம் பெற்றிருக்கிறார். இவ்வளவு பேரும் இடம் பெற்றிருந்தாலும் கூட, அதற்கு அப்துல் ஜப்பார் என்கிற எக்ஸ் எம்.எல்.ஏ., அவர்கள் தான் தலைவராக அங்கே இருக்கிறார் என்பதை ஏனோ மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் மறந்துவிட்டார். அது ஏன் என்று எனக்குத் தெரியவில்லை. அவரையே போட்டால்தான் அவருக்கு ஞாபகம் இருக்குமோ என்னவோ ? (சிரிப்பு).

**திரு. எம். அப்துல் லத்தீப் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதை எல்லாம் மறந்து பேசவில்லை. நான் ஒவ்வொன்றையும் நினைவில் வைத்துக் கொள்ளக் கூடியவன். எனவே, நான் மாண்புமிகு முதலமைச்சருக்கு ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன் நான் பொத்தாம் பொதுவாக கீழ் மட்டத்தில் இருப்பவர்களை சொல்கிறேன். மேல்மட்டத்தில் என்னை



[1990 மே 4 [திரு. அப்துல் லத்தீப்]

போன்ற ஒரு சிலர் இங்கே வந்து உட்கார்ந்துவிடலாம். ஆனால் கீழ் மட்டத்திலே, நடு மட்டத்தில் இருக்கக்கூடியவர்களைப் பொறுத்தவரையிலும் எல்லா துறைகளிலும் ஒரு நியாய உணர்வுடன் நடந்துகொள்ள வேண்டும். இந்த அரசு என்று நான் சொல்லவேயில்லை. பொதுவாக நாட்டினுடைய நிலைமை அந்த வகையில் இருக்க வேண்டும் என்பது என்னுடைய கருத்து. இந்த அரசு என்று நான் சுட்டிக்காட்டவே இல்லை. இந்த அரசு செய்திருக்கிறது. அது இப்போது தான் ஆட்சிப் பொறுப்புக்கு வந்திருக்கிறது. வந்த 3 மாதத்திலேயே செய்திருக்கிறது. அதற்கு முன்பும் செய்திருக்கிறது. இங்கே நான் அதைக் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. நான் ஏதோ இந்த அரசை குற்றஞ்சாட்டுகிறேன் என்பதுபோல மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதற்காக சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூட சொன்னார்கள். இந்தமாதிரி உணர்வு வரக்கூடாது. ஒரு குறிப்பிட்ட ஜாதிக்குதான் போட்டார்கள் என்ற உணர்வு வரக்கூடாது என்று சொன்னதை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் அதே நேரத்தில் குறிப்பிட்ட ஜாதி என்று கருதி விட்டுவிடவும், தள்ளிவிடவும் கூடாது. அது கடந்தக் காலத்தில் நடந்து வந்தது. அது இந்த ஆட்சிக் காலத்தில் மாற்றப்பட்டிருக்கிறது. ஆக, கடந்த கால நிலைமைகளை நான் இங்கே சுட்டிக் காட்டியாக வேண்டும் என்பதற்காக தான் எனது கருத்துக்களை சொன்னேனேயல்லாமல் வேறு ஒன்றும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, வி.களத்தூரைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு.அப்துல் லத்தீப் அவர்கள் இங்கே சொன்னார்கள். அதிலே, மாவட்ட ஆட்சித் தலைவர், மற்ற அதிகாரிகள் எல்லாம் நடந்து கொண்ட நிலை சரியில்லை. அவர்களுடைய அறிக்கையை நாம் ஏற்றுக்கொள்ள இயலாது என்று குறிப்பிட்டார்கள். அந்த அறிக்கையை நான் படித்துப் பார்த்தேன். 28—4—1990 அன்று திருச்சியிலே வெளியான—'மாலை மலர் '' பத்திரிக்கையிலே வெளிவந்த செய்தியும், அறிக்கையும். அதில் ' பெரம்பலூர் அருகே, வி.களத்தூரில் நடந்த சம்பவத்தில் குண்டு வீச்சு மற்றும் தாக்குதலில் காயமடைந்தவர்கள் திருச்சி மற்றும் பெரம்பலூர் அரசு ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள், திருச்சி பெரிய ஆஸ்பத்திரியில் அப்துல் காதர், வயது 60, அப்துல் முத்தலிப் வயது 58, அமானுல்லா, வயது 17, மற்றும் கிருஷ்ணமூர்த்தி, ஆகிய 4 பேர்களும் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைப் பெற்று வருகிறார்கள். அதில் முதல் 3 பேர்கள் ஆண்கள் பிரிவிலே உள்ள படுக்கைகளிலே கிடத்தப்பட்டுள்ளார்கள். கிருஷ்ணமூர்த்தி வெளியிலே உள்ள வராண்டா திண்ணையில் படுக்க வைக்கப்பட்டிருந்தார். இந்தச் சூழ்நிலையில் திருச்சி மாவட்ட கலெக்டர் டி.ஆர்.ஸ்ரீ. சரவண பெருமாள், மாவட்ட வருவாய் அதிகாரி, ஜீவரெத்தினம், டி.எஸ்.பி. கல்யாணசுந்தரம், உதவிக் கலெக்டர்

(12-15 மணி.)

சவுந்திரராஜன் ஆகியோர் திடீரென்று ஆஸ்பத்திரிக்குள் நுழைந்தார்கள். தலையில் படுகாயம் பட்டு, திண்ணையில் படுத்திருந்த கிருஷ்ணமூர்த்தியைப் பார்த்ததும் கலெக்டரும் டி.ஐ.ஜி.யும் திடுக்கிட்டார்கள். அவருக்கு ஏன் படுக்கை வசதி செய்து கொடுக்கவில்லை என்று கேட்டார்கள். மாவட்ட உதவி மருத்துவ அதிகாரி சிவசுப்பிரமணியத்தைக் கூப்பிட்டு, உடனே படுக்கை வசதி செய்து கொடுக்குமாறு கண்டித்தார், அதுவரையில் செய்து கொடுக்கக்கூடிய சூழ்நிலை இருந்தும் செய்து கொடுக்கப்படாமல் இருக்கிறது. கலெக்டர் போய் சொன்னவுடன் உடனடியாக செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை மறந்து விடக்கூடாது. அதன் பிறகு சிகிச்சை பெற்று வரும் நான்கு பேரையும் சந்தித்து கலெக்டர் ஆறுதல் கூறினார். அவர்களுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்கப்படுமென்றும் தெரிவித்தார். அங்கே மாலை மலர் நிருபரிடம் கலெக்டர் நிலவரம் குறித்துக் கூறியது— அதைப் பற்றித்தான் திரு. லத்தீப் அவர்கள் தவறான ஸ்டேட்மெண்ட் என்று சொன்னார். அது என்ன என்று படித்துக்காட்ட விரும்புகிறேன்.

'2, 3 இளைஞர்களாதான் இந்தச் சம்பவம் நடந்திருக்கிறது. பாதையில் போகாமல், மைதானம் வழியாக முஸ்லீம்கள் நடந்து வந்ததால் இந்துக்கள் எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்கள். வழக்கமாக அந்தப் பாதையிலே முஸ்லீம்கள் நடப்பதில்லை. நேற்று தொழுகை முடிந்து சுமார் 500 பேர் வரை அதில் நடந்து வந்திருக்கிறார்கள். இதில் தடுப்பான எண்ணம் யாருக்கும் இல்லை. கலெக்டர் நடுநிலையோடு சொல்லியிருக்கிறார்.— இதில் தப்பான எண்ணம் யாருக்கும் இல்லை. இரண்டு பேர் தரப்பிலும் ஏன் இப்படி நடந்து கொண்டோம் என்ற எண்ணம் தான் ஏற்பட்டிருக்கிறது, இதனால் மக்களுக்குப் பாதிப்பு இல்லை' என்று அவர் அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார், ஒரு சமரச உணர்வோடு அந்த அறிக்கை இருக்கிறதே அல்லாமல் ஏதோ இஸ்லாமியப் பெரு மக்களுக்கு விரோதமாக வெளியிடப்பட்ட அறிக்கையாகத் தெரியவில்லை. அவர் நிருபரிடத்திலே சொல்லிவிட்டு மேலும் சொல்லியிருக்கிறார். இந்தச் சம்பவம் தொடர்பாக தமிழக அரசுக்கு 3 மணிக்கு ஒரு தடவை தகவல் சொல்லிக் கொண்டிருக்கிறோம், இது பற்றிய அறிக்கை அரசுக்கு தாக்கல் செய்யப்படும் என்று குறிப்பிட்டு, அங்கே சென்றிருந்த ஹோம் செக்ரட்டரியைச் சந்தித்து, அங்கே நடைபெற்ற சம்பவங்களை விவரித்து அவரிடத்திலே அளித்திருக்கிறார். எனவே இதில் அரசு அதிகாரிகள் சிறுபான்மை மக்களுக்கு எதிராக நடந்து கொள்கிறார்கள் என்ற எண்ணம் இருக்கத் தேவையில்லை. குறிப்பிட்டு அப்படி நடந்துகொண்ட சம்பவங்கள் எனக்கு வழங்கப்படுமே யானால் நிச்சயமாக யாராகயிருந்தாலும் தயவு தாட்சண்யம் பார்க்காமல் நடவடிக்கை எடுக்கப்படுமென்பதை மாத்திரம்



நான் தெரிவித்துக் கொள்கிறேன். பல குறைபாடுகள், பல்வேறு பிரச்சினைகள் மாண்புமிகு உறுப்பினர்களால் இந்த மன்றத்திலே காவல் துறை ஆய்வுரை குறித்து செய்திகள் வெளியிடப்பட்டிருக்கின்றன.

நம்முடைய திருமதி பாப்பா உமாநாத் அவர்கள் மிகுந்த ஆவேசத்தோடு நேற்றைய தினம் உரையாற்றி இருக்கிறார்கள். அவர்கள் என்னிடத்திலே கொடுக்கின்ற முறையீடுகள் எல்லாம் கேட்பாரற்றுப்போய் விடுவது போலவும் முதலமைச்சரே இப்படிப் பேசலாமா என்பது போலவும் நேற்றைக்கு ஆவேசமாகக் கேட்டார்கள். இப்போது என்னை எதிர்த்து வருகின்ற ஆவேசப் பேச்சுகளுக்கோ, கோபமான பேச்சுக்களுக்கோ நான் அதிகமாக வருத்தப்படுவதில்லை. ஏனென்றால் ஒரு 25, 30 ஆண்டுகளாக இதே இடத்திலிருந்து அப்படிக் கேட்டு, கேட்டு, வெளியிலே அப்படிக் கேட்டு, கேட்டு. உடம்பு மரத்துப் போய் விட்ட காரணத்தால், நான் அவ்வளவாக அதை எடுத்துக்கொள்ளவில்லை. ஆனாலும் திருமதி பாப்பா உமாநாத் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன், நீங்கள் ஒரு பத்து காரியங்கள் சொன்னால் நான்கு காரியங்களிலே உடனடியாக அக்கறை செலுத்தப்பட்டு, அந்தக் காரியங்களை இந்த அரசின் சார்பில் நாங்கள் நிறைவேற்றித் தருகிறோம்.

திரு. ரா. சொக்கர் : பேரவைத் தலைவரவர்களே, 20, 30 ஆண்டுகளாக அந்தப் பேச்சைக் கேட்டு, கேட்டு உடம்பு மரத்துப் போய்விட்டது என்று முதல்வரவர்கள் கூறினார்கள், மனம் பக்குவப்பட்டுவிட்டது என்றே நாங்கள் நினைக்கிறோம். ஆக அப்படி இருப்பதே பொருத்தமாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்குக் காரணம் இருக்கிறது. '' செவி கைப்பச் சொற்பொறுத்தல் '' என்பதுதான் அதற்கு விடை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : 2 தினங்களுக்கு முன்புகூட அம்மையார் அவர்கள் அவருடைய ஜனநாயக மாதர் அணியை அழைத்துக் கொண்டு வந்து, என்னிடத்திலே வந்து, மண்டபத்திலே அமர்ந்து, என்னிடத்திலே பேச வேண்டுமென்று சொன்னார்கள். அப்போது ஒரு கொலை வழக்கு பற்றிச் சொன்னார்கள். கற்பழிக்கப்பட்டு, கொலை செய்யப்பட்ட ஒரு பெண், கமலா தேவி என்பது அவருடைய பெயர், அவர் கொலை செய்யப்பட்டது 9—6—1988-ல் கொண்டதற்குக் காரணமாக

D
V211,31'N90
N90.32·1
143979

இருந்தவர்கள் என்று குற்றம் சாட்டப்பட்ட அவருடைய கணவன் ரமேஷ், கமலா தேவியின் மைத்துனன் சுரேஷ், பணியாளர் குணாம்சிங் ஆகிய மூவர் மீதும். குற்றம் பதிவு செய்யப்பட்டு, 10—6—1987லே விசாரணை தொடங்கிற்று. கீழ் கோர்ட்டில் 21—9—1989-ல் குற்றவாளி 2 மற்றும் குற்றவாளி 3 ஆகியோருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. குற்றவாளி 1, கணவர் விடுதலை செய்யப்பட்டு விட்டார்,

(12-20 மணி.)

அதற்குப் பிறகு உயர்நீதி மன்றத்திலே மேல்முறையீடு குற்றவாளிகளாலும் அரசாலும் செய்யப்பட்டது. 1989-லே இந்த வழக்கு தீர்ப்பு வழங்கப்பட்ட பிறகு, அரசு சும்மா இராமல் 2, 3, 4 மற்றும் 5, ஜனவரி 1990-ல் உயர்நீதி மன்றத்திலே மேல் முறையீடு செய்யப்பட்டு, உயர்நீதி மன்றத்திலே 8—2—1990-ல் அனைவரும் விடுதலை ஆகிவிட்டார்கள். ஒரு பெண் கணவர் ஊரில் இல்லாத நேரத்தில் மைத்துனரால் வம்புக்கு இழுக்கப்பட்டு, வேலைக்காரர்கள் உதவியோடு கொலை செய்யப்பட்டு: கணவனேதான் அதற்குத் தூண்டினார் என்கிற அளவுக்கு அந்த வழக்கிலே புலன் விசாரிக்கப்பட்டு, அந்த வழக்கு நடைபெற்று: கீழ்க் கோர்ட்டிலே கணவன் விடுதலை செய்யப்பட்டு, மற்ற இரண்டு பேர்களுக்கும் தண்டனை விதிக்கப்பட்டு, உயர்நீதி மன்றத்திலே இந்த வழக்கு நடைபெற்று, 8—2—1990-ல் அனைவரும் விடுதலை ஆகிவிட்டார்கள்.

பொதுவாக ஹைகோர்ட்டோடு அரசாங்க வழக்குகள் நின்று விடுவது வழக்கம். ஆனால் அம்மையார் அவர்கள் அவர்களுடைய ஜனநாயக மாதர் சங்கத்தினுடைய தோழியர்களை அழைத்து வந்து என்னிடத்திலே பேசி, 8—6—1990 வரையிலேதான் மேல் முறையீட்டுக்கான தேதி இருக்கிறது ஹைக்கோர்ட்டிற்கு. ஆகவே நீங்கள் மேல்முறையீடு செய்ய வேண்டுமென்று கேட்டார்கள். உடனடியாக அதிகாரிகளை அழைத்து உச்ச நீதிமன்றத்திற்கு அந்த வழக்கிலே மேல்முறையீடு செய்ய அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது என்பதை நான் அம்மையார் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம், சென்ற கால ஆட்சியின்போது பதிலே வரவில்லை; இப்போது முதலமைச்சருக்கு அனுப்பப்பட்டதில் பலருக்கு பதில் வருகிறது என்று நான் குறிப்பிட்டிருக்கிறேன் என்பதைக் கூறி. காவல் நிலையத்தில் பெண்களை பணயக் கைதிகளாக வைப்பதால்தான் நான் அதைக் குறிப்பிட்டு ஆவேசத்தோடு நீங்கள் சொன்ன மொழியிலே பேசியிருக்கிறேன் என்பதை இங்கே தெளிவு படுத்த விரும்புகிறேன்.



மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதைப் போலவே இங்கே பலவற்றைத் திரும்பச் சொன்னார்கள். ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக இங்கே ‘சீரோ அவர்’ என்று சொல்லப்படுகிற அந்தநேரத்தில் பேசப்பட்டது. எல்லம்மாள் பற்றி, கன்னியாகுமரி மாவட்டத்தில் தனம் என்ற சிறுமியைப்பற்றி, இராதாபுரம் தொகுதியிலே விமலா என்ற பெண் இறந்தது குறித்து அம்மையார் அவர்களும் நம்முடைய ரமணி நல்லதம்பி அவர்களும்— இரண்டு பேர்களும் பேசி, நான் மறு விசாரணைக்கு உத்தரவிட்டிருக்கிறேன். எனவே, போலீசார் சார்பாக நான் அதை எதிர்க்கவில்லை. குற்றங்கள் சாட்டப்பட்டால் அதை மேலும் விசாரிக்க மறுவிசாரணை செய்ய வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

மங்களம் தனராஜ் என்ற ஒரு போலீஸ் அதிகாரி பற்றி அம்மையார் அவர்கள் சொன்னார்கள். அவர் மீது திருநெல்வேலி மாவட்டம், நாங்குனேரி வட்டம், நாகல்குளம் என்ற கிராமத்தைச் சேர்ந்த சுப்புலட்சுமி என்பவர் புகார் செய்கிறார். தன்னை காவல்துறை ஆய்வாளர் மங்களம் தனராஜ் 7—6—1984 அன்று நடு இரவில் தன்னுடைய கற்புக்குப் பங்கம் விளைவித்துவிட்டார் என்று அவர் கொடுத்த புகாரின் பேரில் 31—8—1984-ல் விசாரணை நடத்தி, சேரன்மாதேவி சார் ஆட்சியர் விசாரணை நடத்தி, தனது அறிக்கையை அரசாங்கத்திற்கு 1984ஆம் ஆண்டு தருகிறார். இந்தச் சம்பவம் நடைபெற்றது 1984-ல். அறிக்கை தரப்பட்டது 31—8—1984-ல். இரண்டு மாதங்களுக்குள் அறிக்கை தரப்பட்டது. அவர்களுடைய விசாரணை அறிக்கையின் பேரிலும் உயர்நீதிமன்ற உத்தரவின் பேரிலும் அவர்மீது வழக்குத் தொடர இப்போது நாம் ஆணையிட்டிருக்கிறோம்.

இடையில் இருந்த அரசு டிபார்ட்மென்ட் நடவடிக்கை மாத்திரம்தான் எடுத்தது. அந்த டிபார்ட்மென்ட் நடவடிக்கையை எதிர்த்து அவர் நீதிமன்றத்திற்குச் சென்று மீண்டும் வேலைக்கு வந்துவிட்டார். அவரைப்பற்றிய புகார்கள் வந்தபிறகு 27—6—89-ல் அவர்மீது கிரிமினல் வழக்குத் தொடர இந்த அரசு ஆணையிட்டது. அவரைத் தற்காலிகப் பணி நீக்கம் இந்த அரசு செய்தது. செய்த பிறகு என்ன ஆனது? ஏனென்றால் 26—2—1990-ல் அவரைப் பணி நீக்கம் செய்ய உத்தரவிட்டோம். 1989-லே 6 மாதத்திலேயே கிரிமினல் வழக்கு அவர்மீது தொடர்ந்தோம். இதற்கு இடையிலே உயர் நீதிமன்றத்திற்கும் மேற்படி காவல் துறை கண்காணிப்பாளரால் தொடரப்பட்ட குற்ற வழக்கை 6—3—1990 வரை நிறுத்தி வைத்து ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஸ்டே வாங்கி விட்டார்கள். ஸ்டே வாங்கியது மாத்திரமல்ல; அங்கே வாங்கிய அந்த ஸ்டே ஆர்டரை கையிலே வைத்துக் கொண்டு, தமிழ்நாடு மாநில பணியாளர் தீர்ப்பாயம் இருக்கிறதே

டி.ஏ.டி. அங்கே சென்று பணிநீக்க உத்தரவை நிறுத்தி வைத்து அங்கே ஒரு தீர்ப்பு வாங்கிவிட்டார். ஆக, ஒரு இடத்திலே ஸ்டே அதைப்போலவே அந்த மன்றத்திலே அவர்களுடைய பணிநீக்க உத்தரவை நிறுத்திவைத்து ஒரு உத்தரவும் பிறப்பிக்கப்பட்டது. எனவே தான் நீதிமன்றத்தினுடைய குறுக்கீடு, டி. ஏ. டி. யினுடைய குறுக்கீடு— இவைகளின் காரணமாகத்தான 17—4—1990-ல் அவரை மீண்டும் பணிக்கு அமர்த்த வேண்டிய நிலை அரசுக்கு ஏற்பட்டு இருக்கிறது என்பதையும், பணிக்கு அமர்த்திவிட்ட காரணத்தால், இடைக்காலத் தடை உத்திரவு தான் அது என்பதைப் புரியாத அரசு அல்ல இது. எனவே ஏற்ற நடவடிக்கையை இந்த அரசு நிச்சயமாக எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(12-25 மணி.)

அப்படி எடுத்தது என்பதற்கு உதாரணமாக வையம்பட்டி நிகழ்ச்சி உங்களிலே பலருக்குத் தெரியும். வையம்பட்டியிலே போலீஸ் 'லாக்-அப்-'லே ஒருவர் இறந்து விடுகிறார். அப்படி இறந்துவிட்டதை முதலிலே போலீசார், அங்கு இருந்தவர்கள் மறைக்க விரும்புகிறார்கள். ஆனால் பொது மக்கள் அந்தக் குற்றத்தைக் கண்டுபிடித்து அறிவித்த உடன், உடனடியாக அதிகாரிகள் தலையிட்டு நடவடிக்கை எடுக்குமாறு கோரப்பட்டார்கள். அப்படி நடவடிக்கை எடுத்ததில் வையம்பட்டி உதவி ஆய்வாளர் வடிவேலு, மணப்பாறை உதவி ஆய்வாளர் நடராஜன், காவலர் 852 எண்ணுள்ள இராமச்சந்திரன், காவலர் 652 எண்ணுள்ள இராஜகோபால், காவலர் 2197 எண்ணுள்ள நடேசன் ஆகியோர் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டார்கள். அது மாத்திரமல்ல, மேலும் மணப்பாறை ஆய்வாளர் சந்திரன், மாப்பாளை ஆய்வாளர் ஆதீனம் ஆகியோர் இட மாற்றம் செய்யப்பட்டார்கள். அதுவன்றி, ஆய்வாளர்கள் எஸ். ஆர். நடராஜன், எஸ். வடிவேல் மற்றும் காவலர் பி. ஜெபமணி ஆகியோர் மீது கொலை வழக்கு பதிவு செய்யப்பட்டு அவர்கள் கைது செய்யப்பட்டு நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது. 'லாக்-அப்'-லே ஒருவர் இறந்ததற்காக இப்படி போலீசாரையே கைது செய்து நடவடிக்கை எடுக்கின்ற அரசு திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதை நான் இங்கே ஞாபகப்படுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

நம்முடைய நண்பர் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் அவர்கள் இங்கே பேசும்போது காவல் துறையை நவீனமயமாக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். காவல்



துறையை நவீனமயமாக்குகின்ற அந்தத் திட்டம், அதற்கான முயற்சி 1974-ல் தான் தமிழ்நாட்டில் முதன் முதலாகத் தொடங்கப்பட்டது. அப்போது தகவல் தொடர்புகளைத் துரிதப்படுத்த நுண்ணலைக் கருவிகளையும், தொலைபேசி வசதிகளையும், போக்குவரத்துக்கு அதிகமான ஜீப்புகளையும் மோட்டார் சைக்கிள்களையும் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தோடு தொடர்புகொள்ள மைக்ரோவேவ் சிஸ்டத்தையும் அப்போது தான் அறிமுகப்படுத்தினோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டம் தொடர்ந்து அமல்படுத்தப்பட்டு கடந்த 16 ஆண்டுகளில் காவல் துறை, மற்ற தென் மாநிலங்களிலே உள்ள துறைகளை விட தமிழ்நாடு காவல் துறை மிகுந்த சிறப்போடு முன்னிலையில் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த ஆண்டு கூட 55 இலட்ச ரூபாய் இதை நவீனப்படுத்துகின்ற காரியத்துக்காக ஒதுக்கப்பட்டு அது செலவழிக்கப்பட்டு இருக்கிறது. தொடர்ந்து நவீனப்படுத்துகின்ற திட்டத்தை நிறைவேற்ற மத்திய அரசிடம் உதவி கேட்டு, அதற்கான திட்டங்களையும் அனுப்பி வைத்து இருக்கின்றோம். மத்திய அரசிடமிருந்து கிடைக்கும் நிதி உதவியை வைத்து அந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நண்பர் திரு. பாலசுப்பிரமணியம் பேசும்போது மேலும் சொன்னார். கோவையில் நடைபெற்ற கொள்ளை பற்றிச் சொன்னார். அதைக் காங்கிரஸ் கட்சி துணைத் தலைவர் அவர்களும், நம்முடைய திரு. வரதராசன் அவர்களும் கூட இங்கே சுட்டிக் காட்டினார்கள். அந்தக் கொள்ளை வழக்கில் இரண்டு பேர் தாமதமாகச் சென்றார்கள் என்பதற்காக அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அதிலே ஏற்பட்ட விபரீதம் என்னவென்றால், முதலிலே அவர்கள் அந்த டெலிபோனை ரிசீவ் செய்யத் தவறிவிட்டது உண்மை. கொஞ்சம் காலம் கடந்து டெலிபோனை அவர்கள் எடுத்து இருக்கிறார்கள். எடுத்த உடனே அவர்கள் சொன்ன விலாசத்துக்கு இவர்கள் செல்லவில்லை. பக்தவச்சலம் காலனி என்று ஒன்று உண்டு; பக்தவச்சலம் சாலை என்றும் ஒன்று உண்டு. இந்தக் குழப்பத்தில் அவர்கள் காலனிக்கு செல்வதற்குப் பதிலாக சாலைக்குச் சென்றுவிட்டார்கள், அல்லது சாலைக்கு செல்வதற்கு பதிலாக காலனிக்குச் சென்றுவிட்டார்கள். அங்கே சென்று திருத்திக் கொண்டு அந்த இடத்திற்குச் செல்வதற்கு முன்பாக கொள்ளைக்காரர்கள் வெளியேறிவிட்டார்கள். இருந்தாலும் கூட அவர்களுடைய தாமதத்துக்கும், அலட்சியத்துக்கும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

டி.ஜி.பி. எண்ணிக்கை தமிழ்நாட்டில் ரொம்ப அதிகமாகிறது என்று ஒரு குறை சொல்லப்பட்டது. நமமுடைய தமிழகத்தில 3 டி. ஜி. பி. தான். கர்நாடகத்தல 4 டி. ஜி. பி. ; ஆந்திராவில் 5 டி.ஜி.பி. கேரளாவில 4 டி.ஜி.பி. இருக்கிறார்கள். எனவே அந்த எண்ணிக்கை ஒன்றும் அதிகமல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பாலசுப்பிரமணியம் இன்னொரு குற்றச்சாட்டைச் சொன்னார். சேத்துப்பட்டு பாலத்துக்கு அருகிலே குடிசைபோட்டு 'கோல்டு பீர்' குளிர்ந்த பானம் வெளியே வைத்து வியாபாரம் செய்கிறார்கள்; அங்கே போய் எல்லோரும் குடிக்கிறார்கள் என்று சொன்னார். அதை விசாரித்தேன். இருந்தது உண்மை. ஆனால் 12-2-1990-லேயே வழக்குப் பதிவு செய்யப்பட்டு, அதை நடத்திய கௌரி என்பவர் கைது செய்யப்பட்டு, 800 ரூபாய் அவருக்கு அபராதம் விதிக்கப்பட்டு அந்த இடம் பிரித்து எரியப்பட்டு இருக்கிறது. அங்கே உட்கார்ந்து மது அருந்திய 5 பேருக்கு தலைக்கு 150 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டு இருக்கிறது; நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. இது 2 மாதத்திற்கு முன்னால், பிப்ரவரி மாதத்தில் நடந்து இருக்கிறது. ஆனால் அடிக்கடி அங்கே போகக்கூடிய வழக்கம் அவருக்கு இல்லாத காரணத்தால் (சிரிப்பு), போகத் தேவையும் இல்லாத காரணத்தால், இன்னும் இருப்பதாகக் கருதிக் கொண்டு, அவர் சொல்லியிருக்கக்கூடும். அது பிப்ரவரி மாதத்திலேயே எடுக்கப்பட்டுவிட்டது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(12-30 மணி.)

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. நேற்றுகூட அந்த இடத்திலே இருந்தது ; ஆனால் இன்றைய தினம் அது அகற்றப்பட்டுவிட்டது என்பதை நான் முதல்வருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். (சிரிப்பு.)

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அப்படியானால் அங்கே போயிருக்கிறார் என்று தெரிய வருகிறது. (சிரிப்பு.)

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் :** நான் பச்சையப்பன் கல்லூரியிலே படித்தவன் என்றாலும் சேத்துப்பட்டு பக்கம் போய் நீண்ட நாட்களாகிவிட்டன.





**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இன்னொரு குறையைக் கூடச் சொன்னார்கள். தீயணைப்புத் துறையைச் சேர்ந்தவர்களுக்கு மலிவு விலையிலே உணவுப் பொருள் வழங்குவதில் கடந்த ஆண்டில் 20 இலட்சம், 21 இலட்சம் என்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு 17.31 இலட்சம்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஏன் இந்தக் குறைவு என்று கேட்டார்கள். அந்தப் பக்கத்திலேயே வளைவுக் கோடுக்குள் போடப்பட்டிருக்கிறது. ஜனவரி மாதம் முடிய என்று போடப்பட்டிருக்கிறது. எனவே, ஜனவரி மாதம் முடியத்தான் 17.31 இலட்சம் : மார்ச் 1990 முடிய 26.01 இலட்சம் செலவு செய்யப்பட்டிருக்கிறது என்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கழக அரசு காவல் துறையிலே மாத்திரம் அல்ல, எல்லாத் துறைகளிலும் சொன்னதைச் செய்து வருகிறது என்பதை திரு. பீட்டர் ஆல்போன்ஸ் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால் அவர்தான் அடிக்கடி சொன்னதைச் செய்தார்களா என்று இங்கே கேட்டுக் கொண்டிருப்பவர். கடந்த ஆண்டு காவல் துறை மானியம் விவாதிக்கப்படும்போது, 10 காவல் நிலையங்கள் தமிழ்நாட்டில் அமைக்கப்படும் என்று சொன்னேன். இப்பொழுது நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். 11 காவல் நிலையங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன என்பதை. (மேசையைத் தட்டும் ஒலி), குமரி மாவட்டத்திலே வெள்ளிச்சந்தை, குமரி மாவட்டத்திலே கதம்பமூடு, நெல்லை-கட்டபொம்மன் மாவட்டத்திலே கூடங்குளம், சிதம்பரனார் மாவட்டத்தில் தட்டார் மடம், செங்கை அண்ணா மாவட்டத்தில் காதங்கரை, தஞ்சை மாவட்டத்தில் மருகூர், வட ஆற்காடு மாவட்டத்தில் அம்பலூர், காமராஜர் மாவட்டத்தில் கம்மாபட்டி, திருச்சி மாவட்டத்தில் சிந்தாமணிபட்டி, பசும்பொன் தேவர் மாவட்டத்தில் சிப்காட் காம்பிளெக்ஸ், சேலம் மாவட்டத்தில் மவுசி, இவை தவிர, புறக்காவல் நிலையங்கள், காவல் நிலையங்களாக மாற்றப்பட்டவை, இராமநாதபுரம் மாவட்டத்திலே உத்தரகோசமங்கை, குமரி மாவட்டத்தில் ஆசாரி பள்ளம், மதுரை மாவட்டத்தில் உத்தரமங்கலம், புதிய புறக் காவல் நிலையங்கள். செங்கை அண்ணா மாவட்டத்தில் பெரியகுப்பம், தஞ்சை மாவட்டத்தில் பட்டீஸ்வரம், மேலும் குமரி மாவட்டத்திலே குலசேகரம் காவல் நிலையம், வட்டக் காவல் நிலையமாகத் தரம் உயர்த்தப்பட்டிருக்கிறது. இவை அனைத்தும் கடந்த ஆண்டில் நிறைவேற்றப்பட்டுவிட்டன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, செங்கை அண்ணா மாவட்டத்திலே எல்லையிலே இருக்கும் 9 காவல் நிலையங்கள் சென்னைப் பெருநகர்ச் சரகக் காவல் நிர்வாகத்தின்கீழ் கொண்டு வரப்படும்

என்று கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்டது. வில்லிவாக்கம், விருகம்பாக்கம், திருவான்மியூர், வேளச்சேரி, கருணாநிதி நகர் ஆகிய இவை பெருநகரக் காவல் சரகத்தோடு இணைக்கப்பட்டு விட்டன. இராஜமங்கலம், மீனம்பாக்கம், பரங்கிமலை, ஆதம்பாக்கம் இவை சென்னை மாநகராட்சி எல்லைக்குள் இன்னும் கொண்டு வரப்படவில்லை. அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

**திரு. உ. ரா. வரதராசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 9-இல் 4-ம் கொண்டு வரப்படுவது மட்டுமல்லாமல், சென்னை மாநகர எல்லைக்குள்ளே அமைந்திருக்கக்கூடிய திருமங்கலம், கொடுங்கையூர், மற்றும் திருவொற்றியூர், மணலி, அம்பத்தூர், கொரட்டூர், மதுரவாயல் ஆகிய இடங்கள் எல்லாம் முகமூடி கொள்ளைகள் நடக்கக்கூடிய பகுதி. ஆகவே, அவற்றையும் சேர்த்துக் கொண்டு வந்தால், கொள்ளையைத் தடுப்பதற்கு உதவிகரமாக இருக்கும். அதையும் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் பரிசீலிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இயன்றவரையில் பரிசீலிக்கப்படும்.

கடந்த ஆண்டு கூம்பு ஒலிபெருக்கி வைக்கக் கூடாது என்று தடை இருப்பதைச் சுட்டிக் காட்டினார்கள். அந்தத் தடை நீக்கப்படும் என்று அறிவித்தேன். அதற்கேற்ப 15—6—1989-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டு, கூம்பு ஒலிபெருக்கிகள் வைப்பதற்கு இருந்த தடை நீக்கப்பட்டது.

அதைப் போலவே டி.ஐ.ஜி. அலுவலகம் இராமநாதபுரத்திலே உள்ளதை எங்கே வைப்பது என்கின்ற ஒரு பிரச்சினை வந்தபொழுது, அதை நம்முடைய சொக்கர் அவர்களும், பெ. சீனிவாசன் அவர்களும் சேர்ந்து ஓரிடத்தைச் சொல்ல, நம்முடைய தென்னரசு அவர்களும் ஓரிடத்தைச் சொல்ல, அதற்குப் பிறகு மெஜாரிட்டி கருத்தை ஏற்றுக் கொள்வதாகக் கூறி, விருதுநகரிலே வைக்கப்படும் என்று சொன்னேன்.

(12-35 மணி.)

இருந்தாலும்கூட, அதற்குப் பிறகு, இராமநாதபுரத்திலே உள்ளவர்கள் அங்கிருந்து அந்த இடத்தை மாற்றக் கூடாது என்று சொன்னதன் காரணமாக ஒரு சமரச ஏற்பாடாக இராமநாதபுரத்திலே 4 நாளும், விருதுநகரிலே 3 நாளும் அந்த டி. ஐ. ஜி. அலுவலகம் இயங்குவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டு, அது இயங்கி வருகின்றது. இதுவும் அன்றைக்கு சொன்னது செய்யப்பட்ட ஒன்றாகும்.



அதைப்போலவே, தமிழ்நாடு ஸ்பெஷல் போலீஸ். இவர்கள் இன்றைக்கு 9 பட்டாலியன் இருக்கிறார்கள். ஆவடியில், திருச்சியில், பழனியில், கோவை புதூரில், மணிமுத்தாறில், டெல்லியில். 9 பட்டாலியன் இருக்கிறார்கள். ஒவ்வொரு பட்டாலியனும் சுமார் 1,000 பேர் வீதம் 9,000 பேர் அதிலே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

டெல்லியிலே இன்றைக்கு இருக்கின்ற அந்த திஹார் சிறைச்சாலையைக் காவல் காப்பதே நம்முடைய தமிழ்நாடு ஸ்பெஷல் போலீஸ்தான் என்பதை அறிந்தால் உறுப்பினர்களுக்கெல்லாம் மகிழ்ச்சி பொங்கும் என்றே நான் கருதுகின்றேன். அது மாத்திரமல்ல, அங்கே குடியரசுத் தலைவர், துணைத் தலைவர் இவர்களுக்கெல்லாம்கூட பாதுகாப்பாக இருப்பது நம்முடைய தமிழ்நாடு காவல் துறையைச் சேர்ந்தவர்கள்தான் என்பதை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அந்த வகையிலே, 9,000 பேர் 9 பட்டாலியனில் பல இடங்களில், நான் சொன்ன இடங்களிலெல்லாம் இன்றைக்குப் பரவிக் கிடக்கிறார்கள். அதிலே, உளுந்தூர்பேட்டையிலே ஒரு கேம்ப் அங்கே அமைக்க வேண்டுமென்ற கருத்தைக் கடந்த ஆண்டு நண்பர் தென்னரசு அவர்கள் இங்கே வெளியிட்டார்கள். அது ஏற்றுக்கொள்ளப்பட்டது என்று அப்பொழுது சொல்லப்பட்டது. அதற்கு நிலமற்றம் செய்வதற்கான ஆணை 19-4-1990-இலே பிறப்பிக்கப்பட்டு, அந்தப் பணிகள் இன்றைக்கு வேகமாக நடைபெறத் தொடங்கியிருக்கின்றன. அது கேம்பாகவோ அல்லது பில்டிங்காகவோ அமைக்கப்படும், அதிலே ஒரு ஆயிரம் பேர் வரையிலே தமிழ்நாடு ஸ்பெஷல் போலீஸ்காரர்கள் உளுந்தூர்பேட்டையிலே அந்தக் கேம்பிலே தங்கிப் பணியாற்றக் கூடும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மதுரையிலும், கோவையிலும் சென்னையைப்போல, கமிஷனர் அலுவலகம் அமைக்கப்படும் என்று கடந்த ஆண்டு தெரிவித்து இருந்தேன். இப்பொழுது கமிஷனர் அலுவலகம் மதுரை, கோவை, ஆகிய இரண்டு இடங்களிலும் அமைக்கப்பட்டாகிவிட்டது. அது மாத்திரம் அல்ல. இங்கே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்களாலும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்களாலும் எடுத்துக் கூறப்பட்ட இந்த 41வது பிரிவு அகற்றப்படவேண்டும்; அந்தத் தடை இருக்கக் கூடாது என்று அவர்கள் வைத்த கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. அது ஏற்றுக் கொள்ளப் பட முடியாது என்று நான் என்றைக்கும் சொல்லவில்லை.

இதே வரதராசன் அவர்கள்தான் நிதிநிலை அறிக்கையிலே கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு, மே தினப் பூங்கா வேண்டும் மே தின நினைவுச் சின்னம் வேண்டுமென்று இந்த அவையிலே பேசினார். அது ஏற்றுக்கொள்ளப்படும் என்று சொன்னேன். ஏற்றுக் கொள்ளப்பட்டு ஒரு மாதத்திலே அந்த விழா நடைபெற்று, அது ஒருவேளை நடந்ததா நடக்கவில்லையா என்று அவருக்குத் தெரியாமல் போய் விடக் கூடாது என்று அவரையும் அழைத்து அந்த விழாவிலே பேசச் செய்திருக்கின்றோம். எனவே, அவர் இங்கே பேசும் பொழுதே, அதைப்பற்றி அரசு யோசிக்கும் என்று சொல்லப்பட்டது. அதிகாரிகளோடு பேச்சுவார்த்தை நடத்தச் சொல்லி, அதற்கான ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால், அந்தப் பேச்சுவார்த்தையினுடைய முடிவு சரியாக எனக்குத் தெரிவிக்கப்படாத காரணத்தினால் இவ்வளவு தயக்கங்கள் ஏற்பட்டன. இப்பொழுது தெரிவிக்கப்பட்டு, அந்த ஆணைகள், அந்தத் தடைகள் இனிமேல் இருக்காது என்றும், எப்படி சென்னையிலே இருக்காதோ அதைப்போல மதுரையிலும், கோவையிலும் இருக்காது என்பதையும் நான் தொழிற்சங்கத் தலைவர்களுக்கு இந்தக் கருத்தின் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

போலீஸ் கமிஷன், இரண்டுமுறை தமிழ்நாட்டிலே அமைக்கப்பட்டிருக்கிறது. முதன்முறையாக 71-ஆம் ஆண்டு போலீஸ் கமிஷன் அமைக்கப்பட்டது. இப்பொழுது இரண்டாவது முறையாக அமைக்கப்பட்டிருக்கிறது. போலீஸ் கமிஷன் 71-இல் அமைக்கப்பட்ட பிறகுதான், 72-ஆம் ஆண்டு முதன் முதலாக காவல்துறையிலே உள்ளவர்களுக்கு அடிப்படைச் சம்பளம்—இரண்டாம் நிலைக் காவலர்களுக்கு 80 ரூபாய் என்று இருந்ததை முதன்முதலாக 200 ரூபாய், என்று ஒரேயடியாக உயர்த்தியது திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதை மறந்துவிடக் கூடாது. அந்த 200 ரூபாய்தான் இன்றைக்கு அடிப்படைச் சம்பளம் 825 ரூபாய் என்ற அளவிற்கு உயர்ந்திருக்கிறது. அஃதன்னியில், அவர்களுடைய படிகள்; இவைகளெல்லாம் வேறு. அடிப்படைச் சம்பளம் 80 ஆக இருந்ததை 200 ஆக உயர்த்தி இன்றைய தினம் 825 என்கின்ற அளவிற்கு இந்த அரசு அந்தப் போலீஸ் கமிஷன் போட்டதன் விளைவாக உருவாக்கியிருக்கிறது.

இப்பொழுது மீண்டும் திரு. சபாநாயகம் அவர்களுடைய தலைமையில்—முன்னாள் தலைமைச் செயலாளர் திரு. சபாநாயகம் அவர்களுடைய தலைமையிலே அந்தக் கமிஷன்



அமைக்கப்பட்டது. நம்முடைய நிக்லி அவர்கள்கூட சொல்வார்கள் தலைமைச் செயலாளர்— ஓய்வு பெற்றவர்களுடைய தலைமையிலே அமைப்பதைவிட ஓய்வு பெற்ற ஐ. பி. எஸ். அதிகாரி தலைமையிலே அமைக்கலாம் என்று சொன்னார்கள் அந்தக் கருத்தும் உள்ளத்திலே இருந்த காரணத்தால்தான் ஓய்வு பெற்ற ஐ. பி. எஸ். அதிகாரி திரு. ஷெனாய் அவர்கள் அந்தக் கமிஷனிலே ஒரு உறுப்பினராக ஆக்கப்பட்டிருக்கிறார். அஃதன்னியில் ரமணி நடராஜன், சிதம்பரம், ராஜகோபால், அண்மையில் மறைந்த நண்பர் டாக்டர் சந்தோஷம் இவர்களையெல்லாம் உறுப்பினர்களாகக் கொண்ட அந்தப் போலீஸ் கமிஷ்ன் வெகு விரைவில் இன்னும் இரண்டு மாதங்களுக்குள்— 31— 7—1990 க்குள் அரசுக்கு அறிக்கை தருவதாக ஏற்றுக்கொண்டிருக்கின்றது.

(12-40 மணி.)

அதைப்போலவே அண்ணா பதக்கம், 1969-ஆம் ஆண்டு அண்ணா மறைந்த பிறகு, அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட நேரத்தில், அண்ணா பிறந்த நாளில் அண்ணா பதக்கம், வீர விருதுகள் காவல் துறையினருக்கு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு, அது குடியரசுத் தலைவர். ஆட்சி 1976-ல் வந்தபோது நிறுத்தப்பட்டு, பிறகு அ.தி.மு.க ஆட்சியில் நினைவூட்டப்பட்டு, சில ஆண்டுகள் நடைபெற்று, பிறகு 1987-88-ல் அந்த நிகழ்ச்சிகள் நடைபெறாமல் முடங்கிப்போய், இப்போது மீண்டும் 1989-ம் ஆண்டில் நான் அறிவித்தவாறு செப்டம்பர் 15-ம் நாள் அண்ணா பதக்கம் 55-க்கும் மேற்பட்ட காவல் துறை நண்பர்களுக்கு, வீரவிருதுகள் வழங்கப்பட்டதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அதைப்போலவே பழிவாங்கப்பட்டவர்கள் 7, 8 பேர் பேர்களுக்குத் தான் வேலை கிடைத்து இருக்கிறது. மற்றவர்களுக்கு கிடைக்கவில்லை என்று சொல்லப்பட்டது. குறிப்பாக யார் யார் என்று எழுதி அனுப்பப்படுமானால், என்ன காரணத்திற்காக அவர்கள் பழி வாங்கப்பட்டார்கள் என்று எழுதி அனுப்பப்படுமானால் அரசு கவனிக்கத் தயாராக இருக்கிறது. அந்தப் போராட்டத்தில் கலந்து கொண்ட காவல் துறை அலுவலர்கள்—அந்தோணிசாமி— உதவி ஆய்வாளர், வி. நாகராஜன்— உதவி ஆய்வாளர், நைனார்தாஸ்— உதவி ஆய்வாளர், மானவயல் பூபால ராயர்— தலைமைக் காவலர், சுப்பையா— காவலர், சொக்கலிங்கம்— முதல்நிலைக் காவலர், பழனிச்சாமி— காவலர், ஆடியபாதம்— காவலர்,

பூதப்பன்— காவலர் ஆகிய ஒன்பது பேருக்கு இந்த அரசு கடந்த ஆண்டிலே மீண்டும் பதவி அளித்துவிட்டது என்பதை நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போல இறந்துவிட்ட காவலர்களுடைய வாரிசுகளுக்குப் பதவி தர வேண்டும், வேலை வாய்ப்புப் தர வேண்டுமென்ற வகையிலே— போதுமான இளநிலை உதவியாளர்கள் ஏற்கெனவே இருக்கிற காரணத்தால், அந்த இளநிலை உதவியாளர் பணிகளை அவர்களால் பெற இயலவில்லை என்று கோரிக்கை வைத்தார்கள். அந்த அடிப்படையில், கல்வித் தகுதி, மற்றும் உடற்கூறு தகுதி உள்ளவர்களுக்கு காவலராகவோ அல்லது உதவி ஆய்வாளராகவோ கருணை அடிப்படையில் பணிபுரிய வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்ட அந்தக் கோரிக்கை ஏற்கப்பட்டு, 1988 ஆம் ஆண்டு 73 பேர் வாரிசுதாரர்கள் நியமிக்கப்பட்டிருக்க, 1989ஆம் ஆண்டு 162 பேர் வாரிசுதாரர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதையும், அந்தப் பட்டியலில் சுமார் 220 பேர் இருக்கிறார்கள் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கடந்த ஆண்டு தான் சந்தேக கேஸ்கள், முக்காடு கேஸ்கள் ஒழிக்கப்படும் என்று நான் சொன்னேன். இல்லாவிட்டால் இராமலிங்க சுவாமிகள் தெருவில் நடந்தால் கூட பிடித்து விடுவார்கள். (சிரிப்பு) அப்படி முக்காடு கேஸ்களை பிடித்துக் கொண்டு இருந்தார்கள். அப்படி பிடிக்கப்பட்ட முக்காடு கேஸ்கள் ஆண்டு ஒன்றுக்கு 50,000 அல்லது 40.000 என்ற அளவில் இருந்தது. 1987ஆம் ஆண்டில் மாத்திரம் 46,000 முக்காடு கேஸ்கள், சந்தேக கேஸ்கள்: 1988ஆம் ஆண்டில் 50,370 முக்காடு கேஸ்கள், சந்தேக கேஸ்கள். இவைகள் எல்லாம் பிடிக்கப்பட்ட கேஸ்கள். வழக்கு வரையில் வந்தவை. வராமல் ஆங்காங்கு, அவர் இவரைப் பார்த்து, இவர் அவரைப் பார்த்து, போய்விட்ட வழக்குகள் 50,000 இருக்கும். எனவே, ஒரு லட்சம் பேர் இந்த முக்காடு கேஸ்களால் தொல்லைப்பட்டுக் கொண்டு இருந்தார்கள். இதை அதிகாரிகள் எல்லாம் கூட கொஞ்சம் தயக்கத்தோடு என்னிடத்தில் சொன்னாலும் கூட, அண்ணா காலத்திலிருந்து செய்யப்பட்ட முயற்சி, அதிகாரிகள் குறுக்கே நின்றார்கள் நான் இல்லையென்று சொல்லவில்லை. ஆனால், அதிகாரிகள் குறுக்கே நின்றாலும், அதை மீறி அரசு நல்ல காரியங்களைச் செய்யும் என்று திரு. வரதராசன் அவர்களுக்கு சொல்வதற்காகக் குறிப்பிடுகிறேன். எனவே, இந்தக் கேஸ்களை எல்லாம் ஒழித்ததன் மூலம் இன்றைக்கு லட்சம் பேர் 'அப்பாடா' **என்று பெருமூச்சு விட்டுக்கொண்டு தெருவில் நடமாட முடிகிறது.**



அடுத்து ஹெல்மெட், ஹெல்மெட் இனிமேல் அணியத் தேவையில்லை. அவர்களுடைய இஷ்டத்திற்கே விட்டுவிடுகிறோம் என்று சொன்னவுடன், இந்த அவையிலேயே அதிகமாக எகிறிக்குதித்தவர் தீட்சிதர் அவர்கள் தான் என்பது எல்லோருக்கும் தெரியும். (சிரிப்பு) ஹெல்மெட்டிற்கும் அவருக்கும் உள்ள தொடர்பு அந்த அளவிற்கு, ஹெல்மெட் அணிந்து ஒரு கல்லூரி மாணவனைப் போல அன்றைக்குத் துள்ளிக் குதித்தார். அவ்வளவு மகிழ்ச்சியைத் தெரிவித்தார். கட்டாயமாக அணிய வேண்டுமென்ற நிலையைத் தவிர்த்த காரணத்தால் பெரியதாக எந்த ஆபத்தும் ஏற்பட்டு விடவில்லை. ஹெல்மெட் அணிந்திருந்த காலத்தில், நாம் இந்த த்தரவைப் போடுவதற்கு முன்பு, ஜனவரி மாதத்தில் உஹல்மெட் அணிந்திருந்தும் விபத்திற்கு ஆளாகி இறந்தவர்கள் 95 பேர்,—இது ஜனவரியில், கடந்த ஆண்டில். பிப்ரவரியில் 58 பேர், மார்ச்சில் 66 பேர். ஏப்ரலில் 67 பேர், மே மாதத்தில் 74 பேர், ஜூனில் 76 பேர், ஆக மொத்தம் 436 பேர்.

12-45 மணி.

ஹெல்மெட் அணியத் தேவையில்லை, அது அவரவர்களுடைய இஷ்டத்தைப் பொறுத்தது என்று சொன்ன பிறகு— ஆனாலும் ஆங்காங்கு விளம்பரங்களிலே ஹெல்மெட்டை அணியுங்கள் என்று சொன்னோம், கட்டாயம் இல்லை, இருந்தாலும் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள ஹெல்மெட் தேவை என்றெல்லாம் விளம்பரப்படுத்தினோம், அதற்குப் பிறகு— ஜூலை 68, ஆகஸ்ட் 72, மரணம்; செப்டம்பர்-54, அக்டோபர்-75, நவம்பர்-56, டிசம்பர்-61, மொத்தம் 386. கட்டாயம் என்று இருந்தபோது 436. கட்டாயம் இல்லை என்று ஆக்கப்பட்ட பிறகு 386 தான்.

மேலும் போலீசாருக்குத் தேவையான வசதிகளைச் செய்வதில் மிக முக்கியமானது, அவர்களுக்கு தொலைப் பேசித் தேவை. சிலர் முணு முணுக்கக்கூடும். ஆம். தொலைபேசி கொடுத்து என்ன, எடுத்துப் பேசினால்தானே என்று சிலர் முணுமுணுக்கக்கூடும். இனிமேல் அவர்கள் பேசுவார்கள் என்ற உறுதியோடு, இப்போது தொலைபேசி வசதி அவர்களுக்குச் செய்து தரப்படுகிறது. தமிழ்நாட்டிலே உள்ள மொத்தக் காவல் நிலையங்கள் 1,034. அதிலே புறநகர்க் காவல் நிலையங்கள் அதோடு சேர்த்து 202. இரண்டும் இணைந்து 1,236 காவல் நிலையங்கள் இருக்கின்றன. அதிலே தொலைபேசி வசதி-செய்யப்பட்ட பெரிய, முழுக் காவல் நிலையங்கள் 966. தொலைபேசி வசதி இல்லாத காவல் நிலையம் 68.

புறநகர்க் காவல் நிலையம் 20. இந்த 88 காவல் நிலையங்களுக்கும் தொலைபேசி வசதி செய்து தரப்படும் என்று கடந்த ஆண்டு அறிவித்திருந்தேன். அதற்கு இணங்க 74 காவல் நிலையங்களுக்கு தொலைபேசி வசதி முழுமையாக செய்து தரப்பட்டு விட்டது, மீதமுள்ள 14-ல் தான் கடந்த ஆண்டு அறிவித்த 11 புதிய காவல் நிலையங்கள் இருக்கிற காரணத்தால், அதற்கும் சேர்த்து இந்த ஆண்டு தமிழ்நாட்டிலே உள்ள எல்லாக் காவல் நிலையங்களும் தொலைபேசி வசதியை முழுமையாகப் பெறும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் ஜீப் வசதி, தமிழ்நாட்டிலே உள்ள மொத்த சப்-டிவிசன், காவல் உட்கோட்டங்களில் 108 உட்கோட்டங்களில் இதுவரை ஜீப் வழங்கப்பட்ட உட்கோட்டங்கள் 103. இன்னும் 5 உட்கோட்டங்கள், சப்-டிவிசனுக்கு ஜீப் இல்லை. இந்தக் குறையும் இந்த ஆண்டு நீக்கப்பட்டு, 5 ஜீப்புகளும் வழங்கப்பட்டுவிடும்.

மோட்டார் சைக்கிள், 1,034 பெரிய காவல் நிலையங்களில் மோட்டார் சைக்கிள் வழங்கப்பட்ட காவல் நிலையம் இதுவரை 892. வழங்கப்படாத காவல் நிலையம் 142. வரும் ஆண்டில் இந்த 142 காவல் நிலையங்களுக்கும் மோட்டார் சைக்கிள் வழங்கப்பட்டுவிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மெஸ், காவல்துறை அதிகாரிகளுடைய மெஸ். வெளியூரிலேயிருந்து காவல் பணிக்காக வருகிற அதிகாரிகள், வேறு மாநிலங்களிலிருந்து இங்குள்ளவர்களைச் சந்திக்க பணி நிமித்தம் வருகிற அதிகாரிகள், இவர்கள் எல்லாம் ஓய்வு எடுக்கவும், உணவு அருந்தவும் ஒரு தங்குகின்ற இடம் அவர்களுக்குச் சென்னையில் இல்லை என்ற குறையைப் போக்க, காவல்துறை அதிகாரிகளால் முறையிடப்பட்டு, 1987-ஆம் ஆண்டு அன்றைக்கு இருந்த அரசு 35.60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு மையத்தைக் கட்டுவதற்கு ஆணை பிறப்பித்தது. 9—7—1987-ல். அதன்படி 30—10—1987-ல் செலவுக்காக ரூ. 2 லட்சம் அனுமதிக்கப்பட்டது. அதற்கு அடித்தளம் எல்லாம் கட்டப்பட்டது. அதற்குப் பிறகு பணம் ஒதுக்கப்படவில்லை. அரசாங்கம் பணம் ஒதுக்கும் என்று பொதுப்பணித்துறையும் எதிர்பார்த்து, மேலும் 7.2 லட்சம் ரூபாயைச் செலவழித்தது. அரசாங்கம் அந்தப் பணத்தையும் பொதுப்பணித்துறைக்குத் தரவில்லை. மேலும் ஒதுக்கவும் இல்லை. எனவே இந்தத் திட்டம் கைவிடப்படும் நிலைமைக்கு இப்போது வந்துவிட்டது. அதை மீண்டும் எடுத்து



நிறைவேற்ற, இந்த அரசு இப்போது பொறுப்பேற்றுக் கொண்டு, அதை உடனடியாக நிறைவேற்ற நடப்பாண்டில் 20 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து அந்தப் போலீஸ் மெஸ் சென்னையிலே அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போலவே சென்னை நகரத்தில் சட்டம்-ஒழுங்குப் பிரச்சினை எழுகிற நேரத்திலே வெளியூரிலேயிருந்து தருவிக்கப்படுகிற காவலர்கள்— நான் முதலிலே சொன்னது அதிகாரிகள்— காவலர்கள், அவர்கள் தங்கி ஓய்வு எடுக்க, உணவு அருந்த அதற்கு ஒரு இடம் சுமார் 200 பேரிலேயிருந்து 300 பேர்கள் வரையிலும் ஓய்வு எடுக்கக்கூடிய 'டார்மிட்டரிகள்' சென்னையிலே கட்டுவதற்கு 10 லட்சம் ரூபாய் இந்த ஆண்டு ஒதுக்கப்பட்டு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் முதலிலே குறிப்பிட்டதைப்போல, மொத்த சிறப்புக் காவல் அணிகள்— அதாவது தமிழ்நாடு ஸ்பெசல் போலீஸ்— 9 என்று சொன்னேன். ஒரு அணிக்கு ஆயிரம் பேர் வீதம் 9 ஆயிரம் பேர்கள் என்று சொன்னேன். இந்த அணிகள் செயல்படுகின்ற இடங்களில் எல்லாம், அவர்களுடைய சமையலுக்காக அடுப்பு எரிக்கப் பயன்படுத்துவது விறகுகளாகவே இதுவரையிலும் இருக்கிறது. இந்த விறகுகளை அதிக விலை கொடுத்து வாங்கவேண்டியதாக இருக்கிறது. இல்லாவிட்டால் பக்கத்திலேயிருக்கிற காடுகள் அழியநேரிடுகிறது. எனவே, அதற்குப் பதிலாக இந்த 9 அணிகள் தங்குகின்ற இடத்திற்கும் காஸ் அடுப்புகளை கொடுப்பதற்கு ஒரு செயற்குறிப்பு காவல்துறைத் தலைவரிடமிருந்து அரசு பெற்று, இந்த 9 அணிகளுக்கும் மற்றும் ஆவடியிலுள்ள ரிசர்வ் போலீஸ் படைக்குமாக, மொத்தம் 10 அணிகளுக்கும் 2 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் செலவில் எரிவாயு அடுப்புகளை வாங்கிக் கொடுக்க அரசு ஆணை பிறப்பிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

12-50 மணி

காமராஜர் மாவட்டத்தில் ராஜபாளையம் பகுதியில் அவர்கள் குறிப்பிட்ட ஜாதிக் கலவரங்கள் அடிக்கடி நிகழ்கின்றன. ராஜபாளையம் தற்போது சிவகாசி உட்கோட்டத்தில் சப்-டிவிஷனிலே இருக்கிறது. ஒரு நிரந்தரமான ஏற்பாடாக அங்கே அமைதியை ஏற்படுத்துவதற்காக இப்போது செய்யப்படுகிறது. சிவகாசிக்கும், ராஜபாளையத்திற்கும் இடையே 40 கிலோமீட்டர் தொலைவு. ராஜபாளையத்தில் இன்றைக்கு கலவரம் என்ற செய்தியை அறிந்து சிவகாசி சப்டிவிஷனிலிருந்து. உட்

கோட்டத்திலுள்ள துணைக் கண்காணிப்பாளர் ராஜபாளையத்திற்கு வருவதற்குள்ளாக நிலைமை கட்டுக்கு அடங்காமல் போய் விடுகிறது. அதனால்தான் முன்னேற்பாடாக போலீசார் செயல்படவில்லை என்ற குற்றச்சாட்டுகள் எல்லாம் இங்கே சொல்லப்பட்டதை நீங்கள் எல்லாம் அறிவீர்கள். எனவே, இந்த நிலைமையைச் சமாளிக்க ராஜபாளையத்தில் ஒரு துணைக் கண்காணிப்பாளர் நியமிக்கப்படுவது அவசியம் என்று கருதி ராஜபாளையத்தில் அமைக்கப்படும் அந்த உட்கோட்டத்தில் கீழ்க்காணும் காவல் வட்டங்கள், காவல் நிலையங்கள் அமையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ராஜபாளையம் சப்-டிவிஷன். அதிலே ராஜபாளையம் நகரம் தெற்கு சர்க்கிள் நிலையம். அதன் கீழே ராஜபாளையம் நகரம் தெற்கு காவல் நிலையம். அடுத்து ராஜபாளையம் ஊரக வடக்கு சர்க்கிள் ஸ்டேஷன் அதன் கீழே அடங்கும் காவல் நிலையங்கள் ராஜபாளையம் நகரம் வடக்கு கீழ்ராஜகுலராமன். சேத்தூர் தளவாய்புரம்.

ராஜபாளையத்தில் குற்றப்பிரிவு, 'கிரைம் பிரான்ச்' தனியாக இயங்கும். திருவில்லிபுத்தூர் நகரம், திருவில்லிபுத்தூர் தாலுக்கா, மம்சாபுரம் ஆகிய காவல் நிலையங்கள் அந்த சப்-டிவிஷனில் அடங்கும்.

வத்திராயிருப்பு சர்க்கிளில் வத்திராயிருப்பு, மாதம்பட்டி ஆகிய காவல் நிலையங்கள் இயங்கும். வத்திராயிருப்பு வட்டத்திலே உள்ள எம். புதுப்பட்டி காவல் நிலையத்தை சிவகாசிக்கு மிக அருகாமையிலுள்ள காரணத்தால் சிவகாசி காவல் வட்டத்தோடு சேர்க்கவும் ஆணையிடப்படுகிறது. இதைப் போலவே அந்தப் பகுதியிலுள்ள காவலர்களை எப்போதும் தயார் நிலையில் வைத்திருப்பது அவசியமான ஒன்றாக இப்போது இருக்கிறது. எனவே முதற் கட்டமாக 4 ஆர்ம்ட் ரிசர்வ் பிரிவுகளில் இரண்டு பிரிவுகளை ராஜபாளையத்தில் தற்காலிகமாக 6 மாதத்திற்கு நிறுத்தி வைப்பது அவசியமாகிறது. இந்த அறிவிப்பினைத் தொடர்ந்து அதற்கான ஆணை உடனடியாக பிறப்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ராஜபாளையத்தில் புதியதாக உட்கோட்டம் ஆரம்பிப்பதைப் போல இந்த ஆண்டு மேலும் புதிதாக ஆரம்பிக்கப்பட இருக்கின்ற உட்கோட்டங்கள் — மதுரை மாவட்டத்தில் போடிநாயக்கனூர், தர்மபுரி மாவட்டத்தில் அரூர், தஞ்சை கிழக்கு மாவட்டத்தில், திருவாரூர் புதிய சர்க்கிள் ஸ்டேஷன்கள், தஞ்சை மேற்கு மாவட்டத்தில் பேராவூரணி, தஞ்சை கிழக்கு மாவட்டத்தில் வேதாரண்யம், செங்கை-அண்ணா மாவட்டத்தில் செய்யூர், இங்கே சர்க்கிள் ஸ்டேஷன்கள் அமைக்கப்படும். இவைகள் எல்லாம் கட்சிச் சார்பில்லாமல், வேறுபாடு இல்லாமல் நடைபெறுகிற முயங்கள்.



புதிய காவல் நிலையங்கள் இந்த ஆண்டு இராமநாதபுரம் மாவட்டத்தில் கீழ்ப்பெருங்கரை, பசும்பொன் தேவர் மாவட்டத்தில் புழுதிப்பட்டி, திருச்சி மாவட்டத்தில் ராம்கி நகர், தர்மபுரி மாவட்டத்தில் எரியூர், வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் சத்துவாச்சேரி, திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தில் வடவணக்கம்பாடி, செங்கை-அண்ணா கிழக்கு மாவட்டத்தில் சாத்தான்காடு, திருச்சி மாவட்டத்தில் தில்லை நகர், மதுரை ஊரகத்தில் கம்பன்நகர், நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்தில் சுரண்டை,

புறக்காவல் நிலையங்களை காவல் நிலையங்களாக உயர்த்துதல் — திருச்சி மாவட்டத்தில் கைகலத்தூர், தஞ்சை மேற்கில் திருச்சிற்றம்பலம், மதுரை ஊரகத்தில் மயிலாடும்பாறை.

புதிய தீயணைப்பு நிலையங்கள் ஏற்படுத்துவதற்கு மக்கட் தொகை, தீ அபாயம் உள்ள இடம், அதனுடைய தொலைவு இவைகளை எல்லாம் கணக்கிட்டு ஏற்படுத்துகிறோம். அந்த அடிப்படையிலே இந்த ஆண்டு புதியதாக அமைக்கப்பட இருக்கின்ற தீயணைப்பு நிலையங்கள் — திருச்சி மாவட்டத்தில், இலுப்பூர், செங்கை-அண்ணா மாவட்டம்— திருத்தணி, புதுக்கோட்டை மாவட்டம்—கந்தர்வக்கோட்டை, தஞ்சை மாவட்டம்— திருவிடைமருதூர், தென்னாற்காடு மாவட்டம்— மரக்காணம், திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம்— ஜவ்வாது மலை, மதுரை மாவட்டம்— கடமலைக்குண்டு, காமராஜர் மாவட்டம் — திருச்சுழி, சிதம்பரனார் மாவட்டம்— கழுகுமலை, இராமநாதபுரம் மாவட்டம்— ஏர்வாடி (குறுக்கீடு). அவர் சொன்னதை அவரே மறந்துவிட்டார் போல் இருக்கிறது.

தலைவர் அவர்களே, காவலர்களுக்குக் குடியிருப்புகள் பற்றி நேற்றைக்கு நம்முடைய திரு. பாலசுப்பிரமணியம் அவர்களும், இன்றைக்கு நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் மற்றும் மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட்கட்சி சார்பாகவும், மற்றும் லத்தீப் அவர்களும் மற்றும் பேசிய எல்லா தலைவர்களும், உறுப்பினர்களும் இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

தலைமைக் காவலர்களுடைய மொத்த எண்ணிக்கை, 6,830, அதிலே குடியிருப்பு வசதி பெற்றவர்கள் 3,077, பெறாதவர்கள் 3,763; காவலர்களுடைய மொத்த எண்ணிக்கை 53,644, குடியிருப்பு வசதி பெற்றவர்கள் 22,433. வசதி

12-55 மணி

பெறாதவர்கள் 31,211. அதாவது இதுவரை 42 சதவிகிதம் பேர்தான் குடியிருப்பு வசதியைப் பெற்றிருக்கிறார்கள். அரசு 80 சதவீதம் என்று இலக்கு நிர்ணயித்திருக்கிறது. அதை

அடையவேண்டுமானால் 3,003 தலைமைக் காவலர்களுக்கும், 24 ஆயிரத்து தொள்ளாயிரத்து சொச்சம் காவலர்களுக்கும் குடியிருப்பு கட்டித்தர வேண்டும். அதிலே இப்போதுள்ள அந்த மதிப்பின்படி 1.15 இலட்சம் ரூபாய் ஒரு குடியிருப்புக்குச் செலவாகிறது. எனவே கட்டித்தரப்பட வேண்டிய மீதமுள்ள இந்தக் குடியிருப்புகளுக்கு 321.68 கோடி ரூபாய் தேவைப்படும். அதை ஓரளவு குறைத்து இன்னும் குறைந்த செலவிலே ஆனால் வசதி குறையாமல் கட்டித்தர ஆண்டு ஒன்றுக்கு 3,000 வீடுகள் வீதம் 10 ஆண்டுக் காலத்தில் கட்டி முடிக்க இந்த அரசு இந்த ஆண்டில் முயற்சிகளைத் தொடங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

காவல்துறை அமைச்சுப்பணியாளர்களுக்கு ஒரு கோரிக்கை இருந்தது. 1982 ஆம் ஆண்டு அரசு காவல்துறை அமைச்சுப் பணியாளர்களின் வேலைப் பளுவை ஆய்வு செய்ய ஒரு சிறப்புக் குழு நியமிக்கப்பட்டது. அதன்படி 2,150 கூடுதல் பதவிகளை அமைச்சுப் பணியிலே புதியதாக ஏற்படுத்த அந்தக் குழு சிபாரிசு செய்தது. உடனடியாக 1,075 பணியிடங்களை ஏற்படுத்த வேண்டும் என்று 1982 ஆம் ஆண்டிலேயே பரிந்துரை செய்யப்பட்டது. உடனடியாக அது செய்யப்படாமல் கடந்த 8 ஆண்டுகளில் 895 பதவிகளுக்குத்தான் அனுமதி வழங்கப்பட்டு இருக்கிறது. மீதம் உள்ள 180 பணிகளுக்கு இந்த ஆண்டு அனுமதி வேண்டும் என்று தமிழ்நாடு காவல்துறை அமைச்சுப் பணியாளர் சங்கம் ஒரு கோரிக்கை வைத்தது. அந்தக் கோரிக்கையை அரசு பரிசீலித்து இந்த 1990-91 ஆம் ஆண்டில் 180 பணியிடங்களில் 100 இடங்களைப் பூர்த்தி செய்வது என்று அரசு ஆணையிடும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போல காவல் நிலையக் கட்டிடங்களைப் பற்றியும் இங்கே எடுத்துக் கூறப்பட்டது. சொந்தக் கட்டிடம் காவல் நிலையத்திற்கு இன்றைக்கு 872 இருக்கின்றன. வாடகைக் கட்டிடம் 367 இருக்கின்றன. பெரு நகரத்திலே ஒரு காவல் நிலையம் அமைக்க 18 இலட்சம் ரூபாய் செலவாகிறது. மாவட்ட தலைநகரத்தில் 13 இலட்சம் ரூபாய் செலவாகிறது. வட்ட காவல் நிலையம் அமைக்க 8 இலட்சம் ரூபாய், ஊரக காவல் நிலையம் அமைக்க 7 இலட்சம் ரூபாய் செலவாகிறது. எனவே இந்த 367 காவல் நிலையத்திற்கும் 37 கோடி ரூபாய் தேவைப்படும். இதைக் கருத்தில் கொண்டு இந்த ஆண்டு 10 காவல் நிலையங்களுக்குக் கட்டிடங்கள் அமைப்பது என்றும் அடுத்த ஆண்டு நிதிநிலைக்கு ஏற்ப காவல் நிலையங்களுக்கான கட்டிடங்களை அமைக்க ஆணை பிறப்பிப்பது என்றும் அரசு முடிவு எடுத்திருக்கிறது.



மின் விசிறிகள் காவலர்களுக்கு வழங்கப்படும், அவர்களுடைய குடியிருப்புகளுக்கு வழங்கப்படும் என்று கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்டு 4,800 மின் விசிறிகள் வழங்கப்பட்டு இருக்கின்றன. இன்னும் 22,669 மின் விசிறிகள் வழங்கப்பட வேண்டியிருக்கிறது. நிதி ஆதாரமும் குறைவாக இருக்கிறது. எனினும் இந்த ஆண்டு 22,669 மின் விசிறிகளில் 10,000 குடியிருப்புகளுக்கு 10,000 மின் விசிறிகள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

காவலர் தேர்வு பற்றியெல்லாம் இங்கே பேசப்பட்டது. 1987 ஆம் ஆண்டில் இரண்டாம் நிலை காவலர் பதவிக்குத் தேர்வு நடைபெற்றது. இந்த காவலர் பதவித் தேர்வில் முதல் நிலை காவலர் பதவிக்கு ஆண்கள் தேர்வு செய்யப்படுவதில்லை. இரண்டாம் நிலையில் இருந்தால் முதல் நிலைக்கு, பிறகு அவர்கள் பதவி உயர்த்தப்படுகிறார்கள். பெண் காவலர்களைத்தான் முதல் நிலை பதவிக்குத் தேர்வு செய்கிறார்கள். அப்படி தேர்வு செய்ய விண்ணப்பித்தவர்கள், ஆண்கள் இரண்டாம் நிலை காவலர்களுக்கு விண்ணப்பித்தவர்கள் 14,379 பேர். அதிலே எல்லாப் பரிசோதனையும், விசாரணையும் முடிந்து நியமனம் செய்யப்பட்டவர்கள் 6,862 பேர். அதைப்போல சிறப்புக் காவல் பணிக்கு தமிழ்நாடு ஸ்பெஷல் போலீஸ் அதற்கு விண்ணப்பித்தவர்கள் 2,490 பேர். அதிலே தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் 1,210 பேர். கடந்த கால அரசில் இவர்களுடைய கல்வித் தகுதி எட்டாவது வகுப்பு வரை படித்து இருந்தால் போதும் என்று இருந்தது. ஆனால் இப்போது இந்த அரசு இனிமேல் இது போன்ற இரண்டாம் நிலை காவலர் பதவிக்கும் சிறப்புக் காவலர் பதவிக்கும், வளர்ச்சி அடைந்துள்ள கல்வி முறையைக் கணக்கிலே எடுத்துக்கொண்டு குறைந்த பட்சம் பத்தாம் வகுப்பு வரை படித்திருக்க வேண்டும். பாஸோ, ஃபெயிலோ கவலை இல்லை. 10-ஆம் வகுப்பு வரை படித்து இருக்க வேண்டும் என்று நிர்ணயித்து ஆணை பிறப்பித்திருக்கிறது. இந்த அடிப்படையில் இந்த ஆண்டு தமிழ்நாடு ஸ்பெஷல் போலீசுக்கு 2,000 பேர் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

அதுமாத்திரமல்ல. இன்னொரு குறைபாடும் இங்கே கூறப்பட்டது. சிறப்புக் காவல் படையில் இருப்பவர்கள் அங்கேயே இருந்து விடுகிறார்கள் என்று. நான் சொன்னேனே டெல்லியிலே இருக்கிறார்கள் என்று. அவர்கள் நான் வந்து பார்த்தால் மகிழ்ச்சியடைகிறார்கள். அவர்கள் இங்கே வருவதற்கே முடியவில்லை. சிறப்புக் காவல் படைக்கு என்று போகிறவர்கள் அங்கேயே தங்களுடைய பணிக்காலம். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் ஒப்புதலுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப் பெறுகிறது.

13-00 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அங்கேயே தங்களுடைய பணிக் காலம் முடிகிற வரையிலே இருந்து ஓய்வு பெறுகிறார்கள் அல்லது இயற்கை அடைகிறார்கள். இது நிலைமை. அதை மாற்றி, இனிமேல் சிறப்புக் காவல் படையிலே இருப்பவர்கள் சில ஆண்டுகளுக்குப் பிறகு சட்டம்-ஒழுங்கு காவல்துறைக்கு அனுப்பப்படுவார்கள் என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெண் காவலர்கள் 1973 ஆம் ஆண்டு கழக ஆட்சியிலேதான் முதன் முதலாக தமிழ்நாட்டில் நியமிக்கப்பட்டார்கள். இங்கே சொன்னார்கள். மொத்தமாக, காவலர்கள் மீதே குறை சொல்லிக்கூட சில பேர் பேசினார்கள். ஒரு சிலர் இப்படி இருப்பார்கள் என்பதற்கு உதாரணங்களும் உண்டு. பெண் காவலர்கள் நியமிக்கப்பட்டபோது 21 பேர் நியமிக்கப்பட்டார்கள். அந்த 21 பெண் காவலர்கள் நியமிக்கப்பட்டு பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். அப்போது அருள் அவர்கள் காவல் துறைத் தலைவர். நான் அண்ணா விருது வழங்குகிற விழாவிற்குச் சென்று இருந்தேன். அதிலே பெண் காவலர்கள் அணி வகுத்து வந்தார்கள். நான் அருள் அவர்களைப் பார்த்துக் கேட்டேன். என்ன 21 பேர் ஆயிற்றே, 20 பேர்தான் இருக்கிறார்கள்? என்று கேட்டேன். 'அது சார், ஒருவர் திருடிவிட்டார். அதனாலே விலக்கிவிட்டோம்', என்று சொன்னார். 'ஒரு பெண் காவலர் திருடிவிட்டார், அதனாலே விலக்கிவிட்டோம்' என்று சொன்னார். அதனாலே காவல்துறையிலே இருந்தாலும்கூட, குறையுடையவர்கள் இருப்பார்கள் என்பதற்கு ஒரு உதாரணம். அதற்காக அந்தக் காவலதுறையே தவறானது, பெண் காவலர்களை நியமிக்கக்கூடாது என்கிற முடிவிற்கு வரக்கூடாது. இருந்தாலும், அன்றைக்கு முதன் முதலாக தமிழகத்திலே தொடங்கப்பட்ட பெண் காவலர் படை இன்றைக்குப் பெருகி, 857 பேர் இப்போது பெண் போலீசார் இருக்கிறார்கள். இன்னும் அதிகம் பேரைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற கோரிக்கை இங்கே வைக்கப்பட்டது. அந்தக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு, இந்த ஆண்டு மேலும் 800 பெண் காவலர்கள், முதல் நிலைக் காவலர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)



இறுதியாக, ஆயத்தீர்வைத் துறையைப் பற்றி யாரும் அதிகமாகப் பேசவில்லை. ஒரு வேளை, பேசித் தீர்ந்துவிட்டது. இனிமேல் கேட்கவா போகிறார் என்று சலித்து போய்விட்டார் கள் என்று கருதுகிறேன். இருந்தாலும், பத்திரிகைகளில் வந் திருக்கிற தேதிகள் எல்லாம் சரியானவைகள் அல்ல. இன்னும் எந்தத் தேதியில் என்று நிர்ணயிக்கப்படவில்லை. உற்பத்தி முழுவதும் அரசின் சார்பிலே இருக்கின்ற 'டாஸ்கோ' மூலமாகத் தான் செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டு இருக்கிறது. அதி லும் எந்த மாற்றமும் கிடையாது. அதைப்போலவே டெண்டர் விடப்படும். நேற்றைக்குப் பேசிய அசேன் கூடக் குறிப்பிட்டார் கள். டெண்டர், ஏலம், இவைகளெல்லாம் கூடாது, ஆங்காங்கு நலிந்தவர்களுக்கு அந்தக் கடைகளைத் தர வேண்டும் என்று குறிப்பிட்டார். முன்பிருந்த ஆட்சியிலே அப்படித்தான் நலிந்தவர்கள் என்ற பெயரால் பல பேருக்குத் தந்தார்கள். முன்பிருந்த ஆட்சியில் சாராயக் கடை ஏலம் எடுத்தவர்கள் மாத்திரம் தரவேண்டிய பாக்கி 1988-லே அவர் கள் ஆட்சியை விட்டுப் போகிற நேரத்தில் 33 கோடியே சொச்சம் ரூபாய். சாராயக் கடை ஏலம் எடுத்தவர்கள் மூலமாக வர வேண்டிய பாக்கி 33 கோடியே சொச்சம் ரூபாய். அதை இந்த ஆட்சி வந்த பிறகு, அதிலே இரண்டு கோடிதான் வசூலித்து இருக் கிறது. மேலும் வசூலிப்பதற்கான தீவிரமான நடவடிக்கை களை அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது.

அதுமாத்திரமல்ல, அப்போதிருந்த ஆட்சியில் அந்தக் கடை கள் எல்லாம் ஏலம் விடப்படாமல்— முதலிலே ஏலம் விடப்பட்டது அன்றைக்கு இருந்த அந்தத் துறையினுடைய அமைச்சர் எஸ்.டி.எஸ். அவர்கள் தனியாருக்குத் தரமாட்டோம், ஏலம் தான் விடுவோம், தனித்தனியாகக் கொடுத்தால் கட்சிக்காரர் களுக்குக் கொடுத்து விட்டோம் என்கின்ற கெட்ட பெயர் வரும், ஆகவே தரமாட்டோம் என்று இந்த அவையிலே முழக்கம் செய் தார். அதற்குப்பிறகு ஏலத்தை நிறுத்திவிட்டு, தனித்தனியாக எல்லோருக்கும் கொடுத்தார்கள். கொடுத்த பிறகு சில பேர் உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று வழக்குப் போட்டார்கள், கட்சிக்காரர்களுக்கே கொடுத்துவிட்டார்கள், எனவே, அதை யெல்லாம் ரத்துச் செய்து ஏலம் விடவேண்டும் என்று வழக்குப் போட்டார்கள். உச்ச நீதிமன்றத்திலே வழக்கு வருகிற நேரத் தில் அரசு அவசரம், அவசரமாக, தன்னுடைய வழக்கறிஞர்களை எல்லாம் கலந்தாலோசித்து. ஃபைல் இருக்கிறது, படித்துப் பார்த்துவிட்டுத்தான் சொல்கிறேன்.

வழக்கறிஞர்களும், அரசுத் துறை அதிகாரிகளும் சொன் னார்கள், அமைச்சருக்குச் சொன்னார்கள், அன்றைக்கு இருந்த துறையினுடைய அமைச்சருக்குச் சொன்னார்கள். அதில் நமக்குக் கெட்ட பெயர் வரும், கட்சிகாரனுக்குக் கொடுத்துவிட்டோம்,

என்று சுப்ரீம் கோர்ட்டிலே வழக்குப் போட்டிருக்கிறார்கள்,
சுப்ரீம் கோர்ட் அதை ஒத்துக்கொண்டு தீர்ப்பளிக்கும், எனவே,
அரசிற்குக் கெட்ட பெயர் வரும் என்று சொன்னதை ஏற்றுக்
கொண்டு, அந்த அமைச்சர் உடனடியாக இனிமேல் ஏலம்
விடப்படும் என்கின்ற குறிப்பை எழுதி, தனித்தனியாகக் கொடுக்
கப்பட்ட நிலையை அன்றைக்கே மாற்றியிருக்கிறார். அசேன்
சொன்ன யோசனையைக் கேட்டால், மறுபடியும் சுப்ரீம்
கோர்ட் தான். அதுமாத்திரமல்ல, சுப்ரீம் கோர்ட்டிற்காக
நான் பயப்படவில்லை. இதிலே யாருக்கும், கட்சிக்காரர்
களுக்கு ஆதாயம் தருவதற்காக இந்தக் காரியம் நடைபெறக்
கூடாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். கேட்கலாம்,
அசேன் போன்றவர்கள். மற்றவர்கள் கேட்கலாம். 'கட்சிக்
காரர்கள் பிழைக்கவே வேண்டாமா' என்று கேட்கலாம் உங்களுக்கு
நல்ல சந்தர்ப்பம். காங்கிரஸ்காரர்கள் ஏலம் எடுக்கப்போவ
தில்லை, என்று அவர்களே அறிவித்து விட்டார்கள். அ.தி.மு.க.
வினரும் ஏலம் எடுக்கப்போவது இல்லை என்று அவர்களே
அறிவித்து விட்டார்கள். எனவே, (குறுக்கீடு) மார்க்சிஸ்ட்டு
கம்யூனிஸ்டும் கிடையாதா? உண்மையா அது? திருமதி பாப்பா
உமாநாத் அவர்கள் திரு. ரமணி சார்பிலே சொல்லுகிறார்களோ
என்னவோ தெரியாது, அவர்களும் எடுக்கப்போவது இல்லை
என்று. (குறுக்கீடு).

13-05 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் எடுக்கப்போகி
றீர்களா?

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, ஜனதா தளத்துக்காரர்களும் ஏலம்
எடுக்கப் போவது இல்லை. அதைச் சொல்ல தவறிவிட்டார்.
ஜனதா தளத்துக்காரர்களும் ஏலம் எடுக்கப்போவது இல்லை.
(சிரிப்பு) (குறுக்கீடு) உங்களோடு சேர்ந்த ஜனதா தளத்துக்
காரர்களும் ஏலம் எடுப்பதில் சம்மதம் இல்லை. ஏலம்
எடுக்கவும் போவது இல்லை என்பதை நான் கூறிக்
கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : வேறு மாநிலங்களில்
எடுப்பதாகக் கேள்வி. (சிரிப்பு.)

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : வேறு மாநிலத்தில்
எடுக்கிறார்கள். நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். (சிரிப்பு)



மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதனால் இது ஏலம் எடுக்கிற வாய்ப்பு கட்சிக்காரர்களுக்கு இல்லாமல் போய் விடும் என்று யாரும் கவலைப்படத் தேவையில்லை. அவர்கள் எல்லாம் தங்களுடைய கொள்கையில் நிச்சயம் உறுதியாக இருப்பார்கள். நிச்சயமாக ஏலம் எடுக்க மாட்டார்கள். பினாமி வைத்து எடுத்தால்கூட நிச்சயமாகக் கண்டுபிடித்து இந்த அவையில் வெளியிடுவேன் என்பதைத் தெரிவித்துக் கொண்டு (சிரிப்பு) இந்த அளவிலே என்னுடைய உரையை முடிக்கிறேன்.

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த மானியத்தின் மீது நடந்த விவாதத்தில் அவர்களுடைய தெளிவான, நல்ல பல சலுகைகளோடு பல விவரங்களோடு நமக்கு பதில் அளித்து இருக்கிறார்கள். காவலர்களைப் பற்றி வேலையிலிருந்து நீக்கப்பட்டவர்கள் பற்றி போன தடவை இந்தச் சட்டமன்றத்திலே நான் எடுத்துச் சொன்ன போது வேலையிலிருந்து நீக்கப்பட்டவர்கள் அத்தனை பேர்களையும் வேலைக்கு வந்து சேரும்படி நான் அழைக்கிறேன் என்று அவர் அழைப்பு விடுத்தார்கள். அனேகமாக பலர் இன்று வேலைக்கு வந்து சேர்ந்து இருக்கிறார்கள். இந்தத் தடவை அவர் இப்போது ஒரு பட்டியலைச் சொன்னபோது 9 பேர்களுடைய பெயரைக் கொடுத்தார்கள். இன்னும் சிலர் வேலை கிடைக்காமல் இருக்கிறார்கள் என்ற செய்தி இருக்கிறது. அவர்களும் விண்ணப்பித்தால் அவர்களுக்கு பரிந்து நியாயமான முறையிலே அந்த வேலையைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, காவலர்கள் தங்களுடைய சங்கத்தை உருவாக்குவதற்கு அவர்களுக்கு உரிமைக்கொடுக்கவேண்டும். அவர்கள் சங்கம் எப்படி இயங்கவேண்டும் என்பதற்கு எல்லாம் விதிமுறைகள் இருக்கின்றன. அதை செய்யவேண்டும் என்று நான் போன தடவை கேட்டபோது அவர் நானே அவர்களுக்கு தலைவனாக நின்று செயல்படுகிறேனே என்று சொன்னார்கள். நான் நம்பினேன் அவர்களுக்கு சங்கம் வைக்க உரிமையைக் கொடுத்து விடுவார் என்று. ஆனால் இதுவரைக்கும் அவர்கள் சங்கம் வைக்க உரிமைக் கொடுத்தார்களா கொடுக்கவில்லையா என்று இரண்டும் எனக்குத் தெரியவில்லை. அவர்களுக்கு சங்கம் வைக்க உரிமைக் கொடுக்க வேண்டும். ஏன் என்றால் அவர்கள் பிரச்சினையை அவர்களே கூடி கலந்து பேசி அதை வேறு விதமாக மேல் அதிகாரிகளின் தலையீடு இல்லாமல் பயப்படாமல் அவர்கள் அரசுக்கு முன்னால் தெரிவிப்பதற்கு அது தான் சிறந்த முறை. அந்த முறைக்கு அவர் ஏற்பாடு செய்து தரவேண்டும் என்பது என்னுடைய கோரிக்கை. அதைப்பற்றி அவருடைய கருத்தை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைக்கு இதுவரையிலே சேர்ந்தவர்கள் போக எஞ்சியுள்ளோர் பலர் இருப்பதாக திரு. ரமணி அவர்கள் தெரிவித்தார்கள். அந்த விவரங்கள் எனக்கு அளிக்கப்படுமானால் அவர்களைச் சேர்த்துக்கொள்வதில் எந்தவிதமான தடையும் இந்த அரசுக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சங்கம் அமைப்பதைப் பற்றிச் சொன்னார்கள். நம்முடைய அவையில் உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களிடத்திலே கலந்துகொண்டு அதைப்பற்றிப் பரிசீலிப்போம்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, 11 காவல் நிலையங்கள் திறக்கப்பட்டதாக இங்கே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். என்னுடைய தொகுதியிலே தட்டார்மடம் என்ற இடத்திலே திறந்து இருக்கிறார்கள். நான் 1981-லேயே அதனைப்பற்றி இங்கே பேசியிருக்கிறேன். இப்போது நிறைவேறியிருக்கிறது. பாராட்டு. ஆனால் அதற்குப் பக்கத்திலே இருக்கின்ற பல பகுதிகளைச் சேர்த்து ஒரு புது காவல் நிலையம் அல்லது காவல் நிலையத்திற்கு உட்பட்ட பகுதிகள்- ஜுரீஸ்டிக்ஷன் என்று ஆங்கிலத்திலே சொல்கிறார்களே அது- வருவது நியாயம்தான். ஆனால் சுப்பராயபுரம் என்று சொல்லுகின்ற சாத்தான்குளத்திற்கு மிக பக்கத்தில் இருக்கின்ற ஒரு ஊர் இந்த தட்டார்மடத்திலே சேர்க்கப்பட்டிருக்கிறது. அந்த ஊர் மக்கள் அனைவருமே ஒரு மகஜர் இங்கே அனுப்பியிருக்கிறார்கள். நாங்கள் தொடர்ந்து சாத்தான்குளத்திலேயே இருக்கிறோம் என்று. எனவே அதனை உங்கள் மூலம் அதிகாரிகள் பரிசீலித்து அவர்கள் தொடர்ந்து சாத்தான்குளத்திலேயே இருக்கட்டும் என்ற உத்தரவைப் போடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

13-10 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்களுடைய கோரிக்கையை பகிரங்கமாக ஏற்க விரும்பவில்லை. காரணம் இங்கே ஏற்றுக்கொண்டால், ஒவ்வொருவரும் எழுந்து ஒரு போலீஸ் ஸ்டேஷன் கேட்பார்கள். ரகசியமாக நமக்குள்ளே வைத்துக்கொள்வோம். (சிரிப்பு).

திரு. பெ. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இவ்வளவு நேரம் பேசியதற்குப் பின்னாலும், அவரை டிரில் வாங்குவதைப்



போல ஒவ்வொருவரும் எழுந்து, திரும்பத் திரும்ப கேள்வி கேட்பது நல்லதல்ல. இதற்கெல்லாம் பெட்டிஷனை நேரடியாகக் கொடுத்துவிடலாம். இவையெல்லாம் சாதாரணப் பிரச்சினைகள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு மிகச் சிறப்பான வேலையைச் செய்திருக்கிறார்கள். அதாவது கடந்த 1947 ஆவது ஆண்டிலேயிருந்து அடைய முடியாத ஒரு சிறப்பான இடத்தை, இன்றைக்கு ஒரு தாழ்ந்த சமுதாயத்தைச் சேர்ந்த, அதிலும் எல்லா தகுதியும் உடைய, படிப்பு நிர்வாகம், எந்த விதமான தப்பு தவறும் செய்யாமல், கமிஷனராக இருக்கும்போது, பேனா மன்னன் என்றே பெயர் எடுத்தவர், அப்படிப்பட்ட ஒருவரை இன்றைக்கு உயர்ந்த நிலைக்கு அதிலும் போலீஸ் துறையிலே நீங்கள் ஆக்கிக்கொடுத்ததற்கு நான் எங்களுடைய சமுதாயத்தின் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அப்பேர்ப்பட்ட ஒருவரை முதல்வர் அவர்களே பார்த்து, அலசி, ஆராய்ந்து தேர்ந்தெடுத்து இருக்கிறார் என்றால் அதிலே சோடை இருக்கும் என்று நான் நினைக்கவில்லை. அப்பேர்ப்பட்ட ஒருவரைப் பற்றி துண்டுப் பிரசுரம் அடித்து, எல்லா எம்.எல்.ஏ.-க்களுக்கும் அவர் புரோக்கர் வைத்து இருக்கிறார். அவருடைய நிர்வாகம் சரியில்லை என்று சொல்லியிருக்கிறார்கள் என்றால் உங்களுடைய சாமர்த்தியத்தினால் நீங்கள் அவர்களைக் கண்டுபிடித்து அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுப்பீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, யார் என்ன துண்டுப் பிரசுரம் வழங்கினாலும் அவர் காவல் துறை என்பதால், காவல்துறைக்குத் தலைவராக இருக்கிறார்.

*திரு. ஜெ. அசேன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது எல்லா கட்சிகளும் ஏலம் எடுப்பதில்லை, ஏதோ ஒரு கட்சி மட்டும் ஏலம் எடுப்பதற்கு வழி வகுப்பதாகச் சொன்னார்கள். உள்ளபடியே அந்தக் கட்சிக்காரர்களும் ஆர்வம் காட்டவில்லை என்பதை முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொண்டு, ஏலம் விடுவதால், நீங்களே சொல்லியிருக்கிறீர்கள் 33 கோடி ரூபாய் வரவு நின்று இருக்கிறது என்று. எனவே, இந்தக் கடைகளை அரசே ஒவ்வொரு ஊரிலும் நடத்தி அங்கே இருக்கிற வேலையற்ற இளைஞர்களுக்கு ஒரு வாய்ப்பு தருவதற்கு முன்வருவார்களா என்று தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அசேன் அவர்களுக்கு ஆர்வம் இல்லாமல் இருக்கலாம். ஆர்வம் எப்படிப் பொங்கி வழிகிறது என்று நான் அறிவேன்.

திரு. பி. என். வல்லரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பல்வேறு துறைகளில் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற கடைநிலை ஊழியர்கள், துப்புறவுத் தொழிலாளர்கள், வனத் துறை ஊழியர்கள், ஹோம் கார்ட்ஸ், நமது சட்டசபை மெய்க்காப்பாளர்கள் உள்ளிட்ட அனைவருமே காவல்துறை ஊழியர்கள் அணிந்திருக்கின்ற அதே காக்கிச் சட்டையை அணிந்து இருக்கின்ற காரணத்தினால், தமிழக மக்களால் ஒரு வேறுபட்ட சூழ்நிலையை காணமுடியாமல் இருக்கின்ற காரணத்தால், மேலே கண்ட அரசு ஊழியர்களையும், காவல்துறை ஊழியர்களையும் வேறு படுத்துகின்ற அளவிற்கு உடையில் ஒரு புதிய மாற்றத்தைச் செய்ய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இவைகளெல்லாம் திர யோசித்துச் செய்ய வேண்டிய காரியங்கள்.

திரு. என். கணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்தமுறை டாக்டர் கலைஞர் அவர்கள் முதல்வர் பொறுப்பு ஏற்றிருந்த நேரத்தில் 1972 ஆம் ஆண்டில் ஏறக்குறைய 1,200 பேரை முதல் நிலைக் காவலர்களாக நியமித்தார்கள். ஆட்சி மாற்றத்திற்குப் பிறகு, அவர்களுடைய முதல் நிலை காவலர் என்பதைச் சுருக்கி மு.க. காவலர்கள் என்று சென்ற அ.தி.மு.க. ஆட்சி அவர்களைக் கருதி, அவர்களுக்கு எந்தவித பதவி உயர்வோ வேறு சலுகைகளோ காட்டவில்லை, இதைப்பற்றி, எங்கள் இளைஞர் தளபதி ஸ்டாலின் கூட சென்ற காவல்துறை மானியத்திலே பேசும்போது குறிப்பிட்டு, அவர்களுக்கு வழிவகை காணவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். எனவே, இந்த 1,200 பேருக்கு பதவி உயர்வு மற்றும் சலுகைகள் காட்டுவதற்கு இந்த அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, யாராவது, வேண்டுமென்று பாதிக்கப்பட்டு இருந்தால் நிச்சயமாக இந்த அரசு அதை கவனிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது இப்போது வாக்கெடுப்பு.



(அ) கோரிக்கை எண். 2— மாநில ஆயத் தீர்வைத் துறை.

திரு. எஸ். டி. உகம்சந்த் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றதாகக் கருதப் பெற்றது.

திரு. கோ. வீரையன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி ;

"மானியக் கோரிக்கை எண். 2— மாநில ஆயத் தீர்வைத் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 5,14,82,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

13-15 மணி.

(ஆ) கோரிக்கை எண். 15— காவல் துறை.

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி மற்றும் பேராசிரியர் க. பொன்னுசாமி ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால், அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றனவாகக் கருதப் பெற்றன.

திருவாளர்கள் ரெ. பிச்சைமுத்து மற்றும் ஆர். நடேசன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"மானியக் கோரிக்கை எண். 15— காவல்துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,14,56,96,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

(இ) கோரிக்கை எண். 16— இயைணப்புப் பணிகள்.

திரு. என். பழனிவேல் மற்றும் பேராசிரியர் க. பொன்னுசாமி ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால், அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றனவாகக் கருதப் பெற்றன.

திருவாளர்கள் ஜி. பழனிச்சாமி மற்றும் ஆர். சிங்காரம் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"மானியக் கோரிக்கை எண். 16— இயைணப்புப் பணிகள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 16,66,73,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை, பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 5—5—1990 சனிக்கிழமை காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை 13-16 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.



## 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

88. ஆமணக்கைப் பொறுத்தமட்டில் பெரியார் மாவட்டத்தினை அறிவிக்கப்பெற்ற அங்காடிப் பகுதியாக அறிவிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 2—1—1990 ஆம் நாளிட்ட 6-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

166. சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் ஆறாவது அறிக்கை 1989-90.

சென்னை-600 008
143979
D
V211,31'N90
N90:321